வரு.75 இல. 06

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2023 பெப்ரவரி 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

February 05 Sunday, 2023

24 பக்கங்கள் 100/-

இலங்கையின் 75ஆவது கோலாகல சுதந்திர தின விழா 02

இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதி உறுதி! 09

மைத்திரிபால சிறிசேன சொல்ல மறந்த கதை 12

தேர்வுக் குழுவை தேர்வு செய்வது எப்படி? 24

சில அரசியல் கட்சிகள் கூறுவதுபோல குறுக்குவழிகளில் தீர்வு காண முடியாது

அராஜக அரசியல் சக்திகளுக்கு அடிபணியப் போவதில்லை

நாட்டை நேசிக்கும் மக்களுடன் இணைந்து பயணிப்பதே எமது இலக்கு

காணிகள் விடுவிப்பு, கைதிகள் விடுதலைக்கு முன்னுரிமை

ஒற்றையாட்சி அரசில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்சினைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்காக ஏற்கனவே அமைக்கப் பட்ட அமைச்சரவை உபகுழுவில்.எடுக்கப்படும் தீர்மானங்கள், நடைமுறைப்ப டுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தெரிவித்தார்.

காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம். அது போன்றே ஒற் றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும்

06

26,000 பட்டதாரிகள், 8,000 கல்வியியற் கல்லூரி பயிலுனர்கள்;

அடுத்த தவணைக்கு முன் 34,000 புதிய ஆசிரியர்கள்

கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த் உறுதி

லோரன்ஸ் செல்வநாயகம்

மார்ச் மாதம் புதிய தவணை ஆரம்பிப்பதற்கு முன்பதாக 34,000 ஆசிரிய நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்வியமைச் சர் சுசில் பிரேம ஜயந்த் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க 26,000 பட்டதாரி ஆசிரியர்கள், 8,000 கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறும்

06

சர்வதேச நாணய நிதியத்திற்கு

கடன் வழங்குநர்கள் வழங்கிய உத்தரவாதம்

அரசாங்கம் வரவேற்றுள்ளது

சர்வதேச நாணய நிதியத் துக்கு இலங் கைக்கான கடன் வழங்குநர்கள் வழங்கிய உறுதி மொழியை அர சாங்கம் வரவேற் றுள்ளது.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை அடைய உதவும் ஒரு தீர்வைக் காண்பதற்கு அர சாங்கம் தனியாருடன் பேச்சுவார்த்தை யிலும் ஈடுபட்டுள்ளது. அவர்களுடன் தொடர்ந்தும் உறவுகளை பேணிவ ருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த் தைகளில் இலங்கை அதிகாரிகளுடன் ஈடுபடத் தயாராக இருப்பதாக இலங் கையின் கடன் வழங்குநர்கள் குழு நேற்று அறிவித்தது. இந்தியா, சீனா மற்றும் பாரிஸ் கிளப்பிலுள்ள நாடுகள் உத்தரவாதம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கோலாகலமாக இடம்பெற்ற 75 ஆவது சுதந்திர தின நிகழ்வு

பல நாடுகளின் அமைச்சர்கள், அதிதிகளும் பங்கேற்பு

லோரன்ஸ் செல்வநாயகம்,ஸாதிக் ஷிஹான்

நாட்டின் 75ஆவது சுதந்திர தின பிரதான நிகழ்வு நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு காலிமுகத்திடலில் விமர்சையாக நடைபெற்றது.

நேற்றுக்காலை 8.00 மணிக்கு சுதந்திர தின நிகழ்வு கள் ஆரம்பமானதுடன் நாட்டுக்காக உயிர்நீத்த சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதல், தேசிய கொடியேற்றல், தேசிய கீதம் மற்றும் ஜயமங்கள கீதம் இசைத்தல் ஆகியவற்றுடன் சுதந்திர தின நிகழ்வுகள் ஆரம் பமாகின.

இம்முறை சுதந்திர தின பிரதான வைபவத்தில் பிரதமர் திநேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்தன, பிரதம நீதியரசர் மற்றும் சட்டமாஅதிபர், அமைச் சர்கள், கட்சித் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுடன் நாடுகள் சிலவற்றின் அமைச் சர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் விசேட அதிதிகளாக கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இந்தியா, ஜப்பான், பாகிஸ் தான், பூட்டான், நேபாளம், மாலைதீவு,

06

தாருல் அதர் பள்ளிவாசல் விவகாரம்;

காத்தான்குடியில் ஏற்பட்ட பதற்றமான சூழல் தணிவு

மு.கா.தலைவர் ஜனாதிபதியின் செயலாளருடன் பேசி தீர்வு

காத்தான்குடியில் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ள தாருல் அதர் பள் ளிவாசல் தொடர்பாக தற்போது அங்கு மக்கள் மத்தியில் ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பள்ளிவா சலை விடுவிப்பதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

06

நிதி வீண்விரயம் செய்யப்படுவதாக குற்றம்சாட்டி வரும்

எதிர்க்கட்சி தலைவரது அலுவலக செலவினங்களுக்கு ரூ.23 கோடி நிதி

இரு பிரதி அமைப்பாளர்களையும் நியமிக்க அமைச்சரவைப் பத்திரம்

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு இந்த வருட செலவினங்களுக்காக 23 கோடி ரூபா நிதி கோரப்பட் டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு கடந்த வரு டத்தில் 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது டன் இந்த வருட செலவினங்களுக்காக

06

வாணி ஜெயராம் காலமானார்

இந்தியளவின் பிர பலமான பின்னணி பாடகிகளில் ஒருவரான வாணி ஜெயராம் மரண மாகியுள்ளார்.

78 வயதாகும் பின்னணி பாடகி வாணி ஜெயராம், தனது படுக்கையறையில் கீழே விழுந்து நெற்றி யில் அடிபட்டதால் உயிரிழந்த தாக தகவல்கள்

06

தமிழ் மக்களது நலன்களை கவனிக்க

வடக்கு, கிழக்கிற்கு தனியான கர்தினால் நியமனம் அவசியம்

அருட்தந்தை ஜோசப் பத்திநாதர் ஜெபரத்தினம் கோரிக்கை

இலங்கையின் இரண்டு மாகாணங்களுக்கும் தனியான கர்தினால் ஒருவரை நியமிக்குமாறு வத்திக்கானிடம் வடக்கு, கிழக்கு மாகாண ஆயர்கள்

06

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

எங்கள் கருத்து...

நாகரிகமும், பக்குவமும் நிறைந்ததே அரசியல்!

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இலங் கைத் தேசம் விடுதலை பெற்றதன் 75 ஆவது ஆண்டு நிறைவான பவளவிழா நேற்று நாடெங்கும் விமரிசையா கக் கொண்டாடப்பட்டது. அந்நிய சக்திகளின் அடிமைத்த னத்திலிருந்து பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் பெறுமா னத்தை நன்கு உணர்ந்து கொண்டவர்களால் மட்டுமே நேற்றைய சுதந்திர பவளவிழாவின் மகிமையையும் புரிந்து கொள்ள முடியும்.

அந்நிய ஆக்கிரமிப்பின் கொடுமை எத்தகையதென் பதை இன்றைய தலைமுறையினர் அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. ஐரோப்பாவிலிருந்து எமது நாட்டில் அத் துமீறிக் காலடி பதித்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித் தானியர் ஆகிய நாட்டவர்கள் எமது மக்களை அடிமைப்ப டுத்தியது மாத்திரமன்றி, எமது நாட்டின் வளங்களையும் எவ்வாறு சுரண்டிச் சென்றனரென்பதை வரலாற்றின் மூலமே எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

எமது நாட்டை இறுதியாக ஆக்கிரமித்து ஆட்சி செய்த ஆங்கிலேயரிடமிருந்து நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரம் சாதாரணமானதன்று... அச்சுதந்திரம் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். எமது நாட்டவர்கள் ஐக்கியத்துடன் போரா டியதன் பயனாகவே அந்நியரிடமிருந்து இலங் கையை விடுவிக்க முடிந்தது.

06

கறுப்புக்கொடியேற்றி ஆர்ப்பரிப்பதால்

தமிழர் வாழ்வில் எதையும் சாதித்து விட முடியாது

தமிழ் மக்கள் புதிய தீர்மானம் ஏற்க வேண்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

நாம் இலங்கையராகவும் தமிழராகவும் வாழ்வதையே பெருபேறாகக் கருதுகின் றோம், அந்த விருப்பத்தை சுமந்து நிற்கும் ஒவ்வொருவருக்கும் 75ஆவது சுதந்திர தின வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

06

திருட்டு குற்றச்சாட்டில்

தே. மக்கள் சக்தி வேட்பாளர் கைதாகி விளக்கமறியலில்

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் பொரலஸ்கமுவ நகர சபைக்காக போட்டியிடும் வேட்பாளர் ஒருவர், திருட்டு சம்பவம் தொடர்பில் பொர லஸ்கமுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கங்கொடவில மாஜிஸ்திரேட் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில்

06

தேசியக்கொடிகள் மேள, தாளங்களுடன்

சுதந்திர தினத்துக்கு ஆதரவாக வவுனியாவில் வாகனப் பேரணி

வவுனியா விசேட நிருபர்

வவுனியா மாவட்டத் தில் சுதந்திர தினத்துக்கு ஆதரவு தெரிவித்து வன்னி மக்கள் ஒன்றி யம் அமைப்பினரினால் வாகனப் பேரணியொன்று நேற்று (04) காலை முன்னெடுக் கப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்க ளின் பெருமளவான பகுதிகளில் இலங்கையில்

06

இலங்கையின் 75 ஆவது கோலாகல சுதந்திர தின விழா

சுதத் மலவீர, ருக்மல் கமகே, சுலோச்சன கமகே, ருசைக் பாரூக், நிஸ்ஸங்க விஜேரட்ண, ஏ.எஸ்.எம். ஜாவீத்

கருக்குப்பனை, தமிழ் வித்தியாலயம்

வரலாற்றில் முதற் தடவையாக புலமை பரிசில் பரீட்சையில் சித்தி

சிலாபம் /கருக்குப்பனை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் வரலாற்றில் முதற்தடவையாக தரம் 05 புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் ஒருவர் 146 புள்ளிகளைப் பெற்று புலமைப் பரிசிலுக்கு தகுதி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

வித்தியாலயத்தின் அதிபர் பீ.ஏ. ஆர். மிராண்டாவின் ஆலோசனையின் பிரகாரம் வகுப்பாசிரியை எம்.பீ. ஹன்சா பர்வீனின் வழிகாட்டலுடன் ஆர்.சீ.மிஷேன் குரூஸ் என்ற மாணவனே இவ்வாறு பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மாணவன், சிலாபம், கருக்குப்பனையைச் சேர்ந்த ரொஷான் சமிந்த குரூஸ், மரிய டினிஷா குரூஸ் தம்பதிகளின் புதல்வராவார்.

சிலாபம் /கருக்குப்பனை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் 12 மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதுடன் இவர்களுள் 10 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். புத்தளம் மாவட்டத்துக்கான 142 வெட்டுப்புள்ளியை விட 146 புள்ளிகளைப் பெற்று இந்த ஒரு மாணவர் ஒருவரே புலமைப்பரிசிலுக்கு தகுதிபெற்றுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோரும் கனடா செல்லும் வாய்ப்பு

இலங்கையில் வசதிபடைத்த குடும்பங்கள் தமது பிள்ளைகளை கனடாவுக்கு அனுப்பி அங்கு பெற்றோருடன் தங்கி அவர்கள் கல்வி கற்பதற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்காக நுகேகொடையில் கடந்த 20 வருடங்களாக இயங்கி வரும் ஒரே ஒரு நிறுவனம் கொன்சோலிடெட் அகடமிக் லங்கா பிரைவட் லிமிடெட்டாகும். இக் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிளேமன்ட பெரேரா, அவ்வாறு கனடாவுக்கு பிள்ளைகளின் கற்றலுக்கான விசா பெறும் நடைமுறைகள் பற்றிக் கூறுகையில்,

இலங்கையில் உள்ள வசதி படைத்த பெற்றோர் தமது குழந்தைகளது கல்வியை மேம்படுத்த 4 வயது முதல் 17வயதுவரையுள்ள பிள்ளைகளை படிப்பிப்பதற்காக கனடாவுக்கு அனுப்பும் வசதிவாய்ப்புகள் உள்ளன. எமது நிறுவனம் பெற்றுத்தரும் விஸா நடைமுறைகளால் பெற்றோரும் தமது பிள்ளைகளுடன் தங்கி வாழமுடியும். அவர்கள் பிள்ளைகளுடன் 10 வருடங்கள் தங்கி வாழ்ந்தால் அவர்களுக்கு நிரந்தர, தொழில் விசாக்கள் வழங்கப்படும். கனடாவில் உள்ள பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், கல்விக்கான நிதி பெறும் வசதிகள் யாவும் எமது நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன என பெரேரா தெரிவித்தார்.

இதுவரையிலும் ஆயிரத்திற்கும் அதிகமான பெற்றோர் தமது குழந்தைகளுடன் கனடா சென்று அங்கு தங்கி வாழ்கின்றனர். அத்துடன் அவர்களும் விசா பெற்று தொழில்வாய்ப்புகளும் பெறுகின்றனர் என்று பெரேரா தெரிவித்தார். இம்மாதம் மட்டும் வடக்கு கிழக்கைச் சேர்ந்த, தமிழ் முஸ்லிம் பெற்றோர் விசா பெற உள்ளனர். ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட பின்னர் பாடசாலை அனுமதிக் கட்டணம், கல்விக்கான கட்டணம் என்பன செலுத்தப்பட்டவுடன் சகல பிரயாண ஒழுங்குகளும் செய்யப்படுகின்றன. எனது நிறுவனத்துடன் கனடா டொரண்டோவில் உள்ள பிய்யகோன் ஹவுஸ் சர்வதேச கல்லூரியுடன் மிக நீண்டகாலமாக ஒப்பந்தம் செய்துள்ளது. சாதாரணமாக 14ஆயிரம் கனடிய டொலரும் 12ஆயிரம் கனடிய டொலரும் விண்ணப்பத்துக்கும் விசாவுக்கும் செலவாகின்றது. ஓர் குழந்தைக்கு வருடத்திற்கு 30முதல் 45 இலட்சம் ரூபா செலவாகின்றதாக பெரேரா கூறினார். இதில் சகல கட்டணங்களும் அடங்குவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சீர்கேட்டின் பின்னர் கூடுதலான பெற்றோர் தமது குழந்தைகளுடன் கனடா செல்வதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். அத்துடன் பெற்றோருக்கும் அங்கு தொழில் செய்வதற்கும் வாய்ப்பு உள்ளது. இக் கல்லூரிகள் இலங்கையில் கல்வி நிலையத்தினை ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தும் இலங்கை அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை என்று பெரேரா தெரிவித்தார்.

குழந்தைகளுடன் உங்களுக்கும் கனடா செல்ல ஆர்வம் இருப்பின் இலங்கையில் நீதியாகவும் சட்டபூர்வமாகவும் நீண்ட அனுபவத்தினையும் கொண்ட இந் நிறுவனத்தின் ஊடாக பிள்ளைகளுடன் நீங்களும் கனடா செல்ல விரும்பினால், கிளைமன்ட் பெரேரா, முகாமைத்துவப் பணிப்பாளர், கொன்சொலிட்டேட் அகடமிக் லங்கா பிரைவட் லிமிட்டெட், 22 பி. புகையிரதநிலைய வீதி, நுகேகொட எனும் முகவரியில் 0112890692 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அஷ்ரப் ஏ சமத் ✍

சுபாஷினி ஜயரத்ன
தமிழில் – எம். எஸ். முஸப்பிர்

கடந்த ஜனவரி மாதத்தில் 367.8 பில்லியன் செலவு ஏற்பட் போதிலும் அரச வருமானமாகக் கிடைத்திருப்பது 158.7 பில்லியன் ரூபாய்கள் மாத்திரமே என அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும் அரச செலவுகளை மேலும் கட்டுப்படுத்துமாறு சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கு அறிவித்தார். இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலன்புரிச் சேவைகள், மருந்து மற்றும் கடன் தவணை செலுத்தல் போன்றவை தவிர ஏனைய செலவுகளை மேற்கொள்வதற்கு திறைசேரியினால் முடியாதிருப்பதால், வரித் திருத்தங்கள் மூலம் ஈட்டிக் கொள்வதற்கு திட்மிடப்பட்டுள்ள வருமானம் கிடைக்கும் வரைக்கும் அரச செலவுகளைக் குறைத்துக் கொள்ளவது அல்லது, பிற்போடும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார். பல்வேறு கட்சிகள் அரச வருமானம், செலவுகள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பில் பல்வேறுபட் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. நாம் பொதுவாகக் கேட் நான்கு கேள்விகளுக்கு அந்தந்த கட்சிகளின் பிரதிநிதிகள் தமது கட்சிகளின் கருத்துக்களை தினகரனுக்கு இவ்வாறு வழங்கினார்கள்.

அரச வருமானத்தை அதிகரிப்பது எவ்வாறு?

01 1. கடந்த ஜனவரி மாதத்தில் அரச வருமானம் 158.7 பில்லியனாக இருக்கும் நிலையில் அரச செலவுகள் 367.8 பில்லியனாக உயர்ந்துள்ளது. உங்களது கட்சி ஆட்சியிலிருந்திருந்தால் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக எடுக்கும் செயற்பாடுகள் என்ன?

02 2. கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தற்போது செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தேவையற்ற செலவுகளை நீக்குதல், அரச சுமைகளைக் குறைப்பதற்காக உங்கள் கட்சியிடம் இருக்கும் தீர்வுகள் என்ன?

03 3. வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துதல், வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் IMF கடனைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

04 4. அரச செலவுகளைக் குறைக்கும் ஒரு செயற்பாடாக பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8000 இருந்து 4000 ஆகக் குறைப்பதற்கு ஜனாதிபதி பிரேரணை முன்வைத்துள்ளார். இந்த பிரேரணை தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

இந்த நான்கு கேள்விகளுக்கும் பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைத் தொடர்பு கொள்வதற்கு முயன்ற போதும், அவர் இதற்காக தனது பிரதிநிதியாக வழங்கியது பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ச த. சில்வாவையேயாகும்.

வீண் விரயங்கள், மோசடிகளை ஒழிக்க வேண்டும்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்
ஹர்ச டி. சில்வா

01 1990ம் ஆண்டுகளில் அரச வருமானமானது மொத்த தேசிய உற்பத்தியோடு ஒப்பிடும் போது 22 வீதமாக இருந்தது. எனினும் பின்னர் வரிக் குறைப்பு, வரி அறவிடாமை, வற் வரி, சீனி வரி மோசடிகளுக்கு இடமளித்ததன் காரணமாக மொத்த தேசிய உற்பத்தியோடு ஒப்பிடும் போது குறைந்த வருமானத்தைக் கொண்ட நாடு என்ற நிலையை எமது நாடு கடந்த வருடத்தில் அடைந்தது. இதற்கு காரணமாக இருந்த விடயங்களுக்கு தீர்வுகளை வழங்க முடியுமாக இருந்தால் மீண்டும் முன்பிருந்த நிலைக்குச் செல்ல முடியும். கடந்த காலங்களில் வரிகள், கிடைக்க வேண்டிய வருமானங்கள் சரியான முறையில் அறவிடப்படவில்லை. இதனுள் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றன. டீல்களைப் போட்டு வரி செலுத்தாமல் விட்டார்கள். வரி அறவிடும் செயற்பாடுகள் சீர்குலைந்தன. எனவே வரி அறவிடுவது செயற்றிறன் மிக்கதாக அமைய வேண்டும். முதலில் சீனி வரி மோசடியை கணக்காய்வுக்குள் தள்ளியது நானே. இந்த மோசடியினால் 16 பில்லியன் ரூபாயை அரசாங்கம் இழந்துள்ளது. எனினும் இந்த பணம் அறவிடப்படவில்லை. சிலருக்கு 30 முதல் 50 வருடங்கள் வரை வரியிலிருந்து விடுவிப்பு அளிக்கப்பட்டுள்ளது. வரி விடுவிப்புக்கள் வரையறுத்த காலத்திற்கே வழங்கப்பட வேண்டும். இவ்வாறான நிலைகளை நாம் மாற்ற வேண்டும். வரிச் சலுகைகளுக்கு பதிலாக முதலீட்டுக்குச் சமனான வரிச் சலுகைகளை வழங்க வேண்டும். வரிகளை அதிகரிக்க வேண்டுமாயின் பாரிய மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

02 அரச செலவுகளைக் குறைக்க வேண்டுமாயின் வீண்விரயங்கள், மோசடிகளை இல்லாமல் ஒழிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஓரளவுக்கு மீதப்படுத்திக் கொள்ள முடியும். இன்று தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் பாரியளவில் பணம் செலவிடப் படுகின்றது. தாங்கிக் கொள்ள முடியாதளவுக்கு செலவு செய்யப்படுகின்றது. இலங்கையில் சம்பளம், ஓய்வூதியம் வழங்குவதற்காக 1.1 ட்ரில்லியன் தேவைப்படுகின்றது. எனினும் தேசிய கடனுக்கான வட்டி மாத்திரம் 2.2 ட்ரில்லியனாகும். சில சில விடயங்களை நீக்கி விளங்கக் கூடிய செலவுகளைக் குறைத்துக் கொள்ள முடியும் என யாராவது கூறுவார்களாயின் அது வெற்றுப் பேச்சுக்களே. நாட்டின் உண்மையான நிலையைப் பற்றிப் பேச வேண்டும். கடந்த வருடத்தில் வருமானம் 2.2 ட்ரில்லியனாகும். இவ்வருடத்தில் வட்டி செலவு மாத்திரம் 2.2 ட்ரில்லியனாகும். இதில் உள்நாட்டு வட்டி மாத்திரம் 2 ட்ரில்லியனாகும். எனினும் யாரும் இதைப் பற்றிப் பேசாதது கவலைக்குரிய விடயமாகும்.

03 IMF கடனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். IMF கடன் பெறாவிட்டால் உலக வங்கி அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஊடாக எமக்குத் தேவையான சலுகைக் கடன் முறைக்குள் எம்மால் செல்ல முடியாது. IMF வழங்கும் 2.9 பில்லியன் டொலர் என்பது சிறிய தொகையே. இவ்விடத்தில் முக்கியம் கடனல்ல. IMF உடன் இணக்கப்பாட்டுடன் மீண்டும் நிதி ஒழுக்கம் நாட்டில் ஏற்படும். இதன் மூலம் மாத்திரமே நம்பிக்கை கட்டியெழுப்பப்படும். இந்த நம்பிக்கையின் ஊடாகவே முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வருவார்கள். அவ்வாறு நடந்தால் மாத்திரமே நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும். எனினும் IMF ன் கட்டுப்பாடுகளுக்கு மக்களின் இணக்கப்பாடு இருக்க வேண்டும். இது அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். ஐக்கிய மக்கள் சக்தி என்ற வகையில் நாம் குறுகிய கால நாட்டை நிலைப்படுத்தும் வேலைத்திட்டத்தில் IMF இணக்கப்பாட்டிற்கு வரும் முக்கியத்துவத்தை தெரியப்படுத்தி இருக்கின்றோம். அதேபோன்று வருமான வரி விதிக்கும் அதிகூடிய வீதம் 24 ஆக இருக்க வேண்டும். நிறுவனங்கள் மீது விதிக்கும் இலாப வரிகளை முறைப்படி அதிகரிக்க வேண்டும்.

04 பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் எமக்கு எந்த ஆட்சேபனைகளுமில்லை. அதனைச் செய்யத்தான் வேண்டும்.

மக்களால் தாங்கிக் கொள்ள முடியுமான வகையிலேயே வரிகள் விதிக்கப்பட வேண்டும்.

சுதந்திர மக்கள் சபையின் சுயாதீன உறுப்பினர்கள் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்
பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்

01 அரச வருமானங்கள் வரிகளாலேயே அதிகரிக்கப்பட வேண்டும். எனினும் வரி விதிக்கப்பட வேண்டியது மக்களால் தாங்கிக் கொள்ளக் கூடிய வகையில் மாத்திரமேயாகும்.

ஒரு இலட்சம் ரூபாய் மாத வருமானத்தைப் பெறும் ஒருவர் 6 வீதத்திலிருந்து 36 வீதம் வரையில் வரி செலுத்த வேண்டும். வங்கி வட்டி அதிகம் என்பதால் வியாபாரங்களைச் செய்தும் வாழ்க்கை நடத்த முடியாது. 35 வீதம் வட்டியைச் செலுத்தி வியாபாரத்தில் இலாபம் ஈட்ட முடியாது. மின்சாரக் கட்டணங்கள் பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. பொருளாதாரம் வீழ்ச்சியடைகின்றது. இவ்வாறான நிலையில் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வது முடியாத காரியமாகும். நாம் ஆட்சிக்கு வந்தால் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக முதலீட்டுச் சபை நடைமுறைகளை ஒழுங்கு படுத்துவோம். ஊழல் மோசடிகளை ஒழிப்போம். வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வசதிகளை அதிகரிப்போம். பொருட்கள் ஏற்றுமதிக்கான வெளிநாட்டு சந்தையினை உருவாக்குவோம். சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவோம். மக்கள் வரி செலுத்த தயார். எனினும் நாட்டில் செலவுகள் அதிகமாகும். நாட்டில் அதிகளவான இராஜாங்க அமைச்சர்களைப் பராமரிக்கப்படுகின்றார்கள். வாகனங்கள் மாத்திரம் 340 உள்ளன. அவற்றைக் குறைப்போம். மக்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தில் வரி செலுத்துவார்களாயின் நாட்டில் ஊழல் மோசடிகள், வீண்விரயங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

02 இலாபமீட்டும் அரச நிறுவனங்களை விற்பதை நாம் எதிர்க்கின்றோம். அவை மறுசீரமைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற வேண்டும். அரசியலமைப்பில் அமைச்சரவையின் எண்ணிக்கை ஆகக்கூடியது 30 பேராகும். 40 பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட 70 பேர் வரையில் செல்வதற்கு நாட்டில் நிதிப் பலம் இல்லை. இதனைக் குறைக்க வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

03 IMF க்குச் செல்ல வேண்டும் என்றாலும், எமது தேவைகள் இதனை விடவும் பலமான முறையில் முன்வைக்கப்பட வேண்டும். பங்களாதேஷ் எமக்குப் பின்னரே கடனுக்காக விண்ணப்பித்தது. எனினும் எமக்கு முன்னர் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அவர்களால் இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு முடிந்திருக்கின்றது. இலங்கையில் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இன்னும் முடியவில்லை. IMF யோசனைகள் நெகிழ்வுத்தன்மையுடையதாக இருக்க வேண்டும். எமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள செலவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். மக்களால் தாங்கிக் கொள்ள முடியுமானவாறே இதனைச் செய்ய வேண்டும். மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில்தான் இந்தத் திருத்தங்களைச் செய்ய வேண்டும். IMF ஊழியர் மட்ட ஒப்பந்தத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த வேண்டும். இதற்கு கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் சலுகைக் காலத்தைப் பெற்று எமது வருமானத்தை அதிகப்படுத்திக் கொண்டு இந்தக் கடன்களைச் செலுத்த வேண்டும்.

04 பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது நல்லது என்றாலும், இவை அனைத்து கருத்துக்களும் முன்வைக்கப்படுவது உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நெருக்கியாகும். இதனால் நேர்மைத் தன்மை தொடர்பில் எண்ணத் தோன்றுகின்றது. உறுப்பினர் தொகையைக் குறைப்பதால் பெருமளவு பணத்தினை மீதப்படுத்திக் கொள்ள முடியும். எனினும் அதனை இந்தத் தேர்தலில் அல்லாமல் எதிர்காலத்தில் வரும் தேர்தல்களில் நடைமுறைப்படுத்த வேண்டும். 2018ம் ஆண்டிலிருந்தே 8000 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அந்நேரத்தில் பிரதமராக இருந்தவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகும். இந்த உறுப்பினர் தொகையை அதிகரிப்பதற்கான பிரேரணையைக் கொண்டு வந்தது தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவாகும்.

செலுத்தப்படாத வரிகளை அறவிடும் செயற்பாடு மிகவும் மோசமான நிலையில்!

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பிர்
வாசுதேவ நாணயக்கார

01 நாம் முதலில் செய்ய வேண்டியது அரச வருமானத்தைச் சரியாக மதிப்பிடுவதாகும். பிரச்சினையாகியிருப்பது அரச வருமானத்தைச் சரியான முறையில் அறவிடாமையேயாகும். எமது மதிப்பீடுகளுக்கு அமைய அரச வருமானம் இதனை விடவும் அதிகரிக்க வேண்டும். வருமான வரிகளைச் செலுத்தாதவர்களிடமிருந்து வரிகளை அறவிடும் செயற்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. வரி செலுத்தாதவர்கள் பல்வேறு முறைகளைக் கையாண்டு அதற்கு கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள். உயர் வகுப்பினர் வரி செலுத்தும் போது கடைப்பிடிக்கப்படும் இலகு நடைமுறைகளுக்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. அனைத்து அரச கூட்டுத்தாபனங்களிலும் அரச நிறுவனங்களில் பணியாளர் சபைகளை உருவாக்குவோம். பணியாளர் சபைகளில் முகாமைத்துவங்களை ஏற்படுத்துவதன் ஊடாக அவற்றின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம். வீண்விரயங்கள், மோசடிகளை இல்லாதொழிப்போம். இதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வோம். அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த அரசாங்கம் வறிய மக்களிடம் வரிகளை விதித்தது. பொது மக்களுக்கு மறைமுக வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகள் மக்கள் விரோதமானவை. நாம் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள மறைமுக வரிகளை முடியுமான வரைக்கும் குறைப்போம். நேரடி வரிகள் விதிப்பது ஒரு இலட்சம் ரூபா வருமானம் பெறுவோரிடமிருந்து அல்லாமல் ஐந்து இலட்சம் ரூபா வருமானம் பெறுவோரிடமிருந்து மாத்திரமேயாகும்.

02 அரச செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்கு முதலில் செய்ய வேண்டியது வெளிநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான செலவுகள், தூதரங்களின் செலவுகளைக் குறைப்பதாகும். இந்த வசதிகளை எமது நாட்டில் முன்னெடுத்துச் செல்ல முடியாது. இரண்டாவது அமைச்சரவை, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் செலவுகளைக் குறைக்க வேண்டும். திட்டமிடப்பட்ட செலவுகளுக்குப் புறம்பாகவும், அவசர, அத்தியவசிய செலவுகளுக்காகவும் மேலும் வரவு செலவுத் திட்டத்தில் வசதிகள் ஏற்படுத்திக் கொள்வோம். பொய்யான செலவுகளை இல்லாமலாக்க வேண்டும். தற்போது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு புதிய சபை அமர்வினை ஆரம்பிப்பதற்காக பெருமளவு பணம் செலவிடப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பில் எம்மிடம் திட்டங்கள் எதுவுமில்லை. அரச பணியாளர்கள் தேவை. சமுர்த்தி கொடுப்பனவுகளை நிறுத்த மாட்டோம்.

03 வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதை நாம் 5 வருடத்திற்கு ஒத்திவைப்போம். IMF கடனைப் பெறுவதற்கு நாம் செல்லமாட்டோம். நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு அவசரத் தேவைகள் இருந்தால் நெருக்கமான நாடுகளுடன் இருதரப்பு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டும். எமக்குள்ள அரச நட்புகளுக்கு அமைய அந்தந்த நாடுகளுடன் இருதரப்பு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

04 இது பாரிய நிதி குறைப்புக்கான ஒரு விடயமல்ல. இதனை விடவும் செய்ய வேண்டிய இன்னும் பல விடயங்கள் நிறைய உள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர் வளச் சபை போன்ற நிறுவனங்களின் செலவுகளை இன்னும் குறைக்க முடியும். 8000 பிரதேச சபை உறுப்பினர்கள் இருப்பது பாரியதொரு சுமையல்ல. எனினும் அந்த தொகையைக் குறைப்பதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால் அதற்கு முன்னர் அமைச்சரவை எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும். எமக்குத் தேவைப்படுவது செயற்றிறன்மிக்க அரச நடவடிக்கைப் பிரிவு மற்றும் திட்டமிடல் திணைக்களமுமாகும். வங்கிகளிலிருந்து நிதி தேவைக்குரிய விடயங்களுக்கு அனுப்பும் வகையில் அமைக்கப்பட வேண்டும். நாம் ஆட்சிக்கு வந்தால் அமைச்சரவையினை 10ஆகக் குறைத்து ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைப்போம். அவர்கள் அந்தப் பிரிவுகள், திணைக்களங்களின் வசதிகளை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலதிக வசதிகள் அவர்களுக்குத் தேவைப்படாது.

அரசின் பிரதான வருமானம் வரிதான் என நிறுவ மாட்டோம்

டில்வின் சில்வா பொதுச் செயலாளர், மக்கள் விடுதலை முன்னணி

01 எமது நாட்டின் அரச வருமானத்தை விட செலவுகள் அதிகமாக இருப்பது கடந்த 30, 40 வருட காலமாக இடம்பெற்று வரும் ஒன்றாகும். இதற்குக் காரணம் கடந்த காலங்களில் வருமானம் ஈட்டும் உற்பத்தி வழிகள் சரிவடைந்ததாகும். தென்னை, தேயிலை, இறப்பர் துறைகள் வீழ்ச்சியடைந்தன. புதிய உற்பத்தித் துறைகள் உருவாக்கப்படவில்லை. இதனால் அரசுக்கு வருமானம் குறைந்தது. உற்பத்தி மற்றும் நாட்டு மக்களின் வருமானத்தை அதிகரித்துக் கொண்டுதான் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும். எனவே எமது கொள்கையாக இருப்பது உற்பத்திப் பொருளாதாரத்தை ஆரம்பிப்பது மற்றும் அரசின் தேவையற்ற செலவுகளைக் குறைப்பதுமாகும். எந்த ஒரு அரசாங்கமும் வரி விதிப்புக்களைச் செய்வது வழமையே. ஆனால் அது மக்களால் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். புதிய வருமான வழிகளை உருவாக்கி வரிகளை அறவிட வேண்டும். வரிக்கு மேல் வரிகளை விதித்து மக்களைச் சுரண்டுவதை நிறுத்த வேண்டும். நாம் ஆட்சிக்கு வந்தால், வரியினை அரசின் பிரதான வருமான வழியாக ஆக்கிக் கொள்ள மாட்டோம். வரிக் கொள்கையினை வருமானத்திற்கு ஏற்றவாறு உருவாக்குவோம்.

02 இதனால் அரச சேவையில் ஒரு நெருக்கடி உள்ளது. செலவுகளைக் குறைக்கும் முன்மாதிரியை மேல் மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களுக்கான விடயங்களை நீக்கிக் கொண்டு, சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்காக 30 கோடிக்கும் மேல் செலவிடப்பட்டுள்ளது. இதனை ஏன் இலகுவாகச் செய்து காட்ட முடியாது? நிதி இல்லை எனக் கூறிக் கொண்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். எமது அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 25 ஆகவும், பிரதி அமைச்சர்கள் 25 ஆகவும் மட்டுப்படுத்துவோம். இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள். ஜனாதிபதி தனக்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் செலவுகளைக் குறைக்காது மக்கள் செலவுகளைக் குறைக்க வேண்டும் எனக் கூறுவது ஏமாற்று வேலையாகும்.

03 ஒரு நாடு கடன் பெறுவது குற்றமல்ல. எமது வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்காக கடன் பெற்றால், அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். எனினும் வருமான வழிகளை உருவாக்காததால் இந்தக் கடன்களைச் செலுத்த முடியாமல் போயுள்ளது. உலகை ஏமாற்றியுள்ளதால் தற்போது கடன் கிடைப்பதில்லை. இதனால்தான் IMF ன் பின்னால் ஓட வேண்டியேற்பட்டுள்ளது. நாம் கடன் வழங்கிய நாடுகளுடன் திட்டங்களை வகுத்து வருமானம் ஈட்டும் வழிகளைக் காட்டி கடனைச் செலுத்தும் முறைகளைக் காட்டினால் வெளிநாடுகள் அதனைச் செவிமடுக்கும். நாம் ஆட்சிக்கு வந்தால் உற்பத்தி தொடர்பான திட்டங்களை வகுப்போம். உலக சந்தையுடன் இணைந்து அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு முடியும் என பெரும் நம்பிக்கை எமக்குள்ளது. IMF உதவி தேவையென்றால் அந்த உதவியைப் பெறுவதில் பிரச்சினையில்லை. எமது நாட்டின் பிரச்சினைக்குரிய தீர்வு IMF யிடம் இல்லை.

04 பிரதேச சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் கதை பொய்யானது. அந்த எண்ணிக்கையை 8000 ஆக அதிகரித்ததும் இந்த ஜனாதிபதியின் காலத்திலேயாகும். இப்போது முயற்சி செய்வது தேர்தலைப் பிற்போடுவதற்காகும். உறுப்பினர் எண்ணிக்கையினைக் குறைப்பது தொடர்பில் எமக்குப் பிரச்சினையில்லை. ஆனால் அடுத்த தேர்தலில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளையும் குறைக்க வேண்டும். அதனை ஜனாதிபதி, பிரதமரிலிருந்து ஆரம்பித்து கொடுப்பனவுகளைக் குறைக்க வேண்டும். அமைச்சர்களின் சம்பளம், ஓய்வூதியம், வாகனங்கள் அனைத்தும் குறைக்கப்பட வேண்டும்.

நாட்டின் அவலங்கள் நீங்குவதற்கு தேர்தல் தீர்வு தரப் போவதில்லை

'நாட்டின் அவலங்கள் நீங்குவதற்கு தேர்தல் தீர்வைத் தரப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கிடையிலான வேறுபாடுகளை மறந்து நாட்டில் நிலைபேறு தன்மையை உறுதிப்படுத்த இணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் நாட்டின் தற்போதைய விடயங்கள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அரசாங்கமும் முயற்சிப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. அப்படி ஒரு முயற்சி இருக்கிறதா, அதற்கு என்ன காரணம்?

பதில்: இது எதிர்க்கட்சிகளினால் எப்பொழுதும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும். சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துமா என்ற சந்தேகம் எழுந்தது. எனினும், ஆணைக்குழு சுதந்திரமானதொரு அமைப்பாகும். அரசாங்கத்திற்கோ அல்லது பொதுஜன பெரமுனவுக்கோ இதில் எந்தச் செல்வாக்கும் இல்லை. அவர்கள் தேர்தல் திகதியை அறிவித்ததால், நாங்கள் வேட்புமனுக்களை கோருகிறோம், மேலும் 254 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பிக்க முடிந்தது. சில இடங்களில் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றோம்.

நாம் எந்த நேரத்திலும் தேர்தலில் போட்டியிடத் தயாராக உள்ளோம். தேர்தலில் போட்டியிட எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. 2015 ஆம் ஆண்டு கணிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தலில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த போது, அரசியல் விளையாட்டில் வெற்றி தோல்விகள் எப்பொழுதும் இருப்பதை நாம் அறிவோம். அப்போது நாம் வெளியே வந்து அதன் பின்னர் வந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என அனைத்திலும் வெற்றி பெற்றோம். எனவே, நாணயத்தின் இருபக்கத்தையும் ஏற்க தயாராக உள்ளோம்.

இப்போது தேர்தலைக் கண்டு பயப்படுகிறார்கள். மார்ச் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறுமானால், சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தின் பல பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தும் அறிகுறி தென்படுவதாக நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவும் பாராளுமன்றத்தில் கூறியது எனக்கு நினைவிருக்கிறது.

தேர்தலை தள்ளிப் போடப் போகிறோமா என்று கேட்டால், தேர்தலுக்கு தயாராக இல்லை என்று அர்த்தம். இருந்தாலும் பொதுமக்கள் தேர்தலுக்கு தயாராக இல்லை என்பதே எனது நிலைப்பாடாகும். மக்களுக்குத் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் தேர்தல் அவர்களின் முன்னுரிமைப் பட்டியலில் இல்லை.

கே: தேர்தல் நடத்தப்பட்டால் அதனைச் சந்திக்க பொதுஜன பெரமுன தயாரா?

பதில்: ஆம், நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று தேர்தலை எதிர்கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம். அதனால்தான் நாங்கள் வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு எங்கள் பிரசாரத்தை ஏற்கனவே தொடங்கி விட்டோம். உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிரசாரம் தேசிய பிரசாரம் அல்ல.

கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பல பிரிவுகளாகப் பிரிந்துள்ளது, இது பிரதான குழுவின் வாய்ப்பினைப் பாதிக்குமா?

பதில்: உண்மையில், பொதுஜன பெரமுனவில் பிளவு ஏற்படவில்லை. இதன் சார்பில் போட்டியிட்ட சில உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். உதாரணமாக, பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர். அவர்களில் எவரும் பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கவில்லை. எமது கூட்டணியில் போட்டியிட்டனர். இருந்த போதும் அவர்கள் பிரிந்து செல்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட போது நாங்கள் ஒன்றாக இருந்தோம். அவர்களுக்கு நம்முடன் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், அவர்களின் நடத்தையில் நமக்கும் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இது மிகவும் இயற்கையானது மற்றும் இது எல்லா நேரத்திலும் நடக்கும். SLPP பிரதான கட்சியாகும். எனவே, எங்கள் கோட்டைகள் எதுவும் விலகிச் செல்லவில்லை. ஆரம்பத்திலிருந்தே கூட, ஒரு நாள் இந்த இணைந்த அரசியல் பிரிவுகளில் சிலர் சில கோரிக்கைகளை முன்வைத்து வெளியேறுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

உதாரணமாக, பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச அல்லது வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் சில கோரிக்கைகளை எம்மால் நிறைவேற்ற முடியாமல் போகலாம். அந்த கோரிக்கைகள் நியாயமானவை அல்ல. உதாரணமாக, சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதைத் தவிர வேறு என்ன விருப்பம் உள்ளது? சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தினால் தாம் வெளிநடப்பு செய்வதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இல்லையெனில், நமக்கு என்ன விருப்பம்? எங்களுக்கு வேறு வழி இருக்கிறதா?

கே: சுயாதீன ஆணைக்குழுக்களை உடைத்து தற்போது உள்ள சில உறுப்பினர்களை நீக்கி தமது பக்கம் சாதகமாக அமையும் நபர்களை நியமிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியலமைப்புப் பேரவையினால் நியமிக்கப்படுபவையாகும். அரசியலமைப்புப் பேரவை பத்து உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, அவர்களில் மூன்று பேர் அதிகாரபூர்வ உறுப்பினர்களாக உள்ளனர், மீதமுள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர், மூன்று சிவில் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதி, பிரதமரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் எனப் பலரும் இதில் உள்ளனர். எனவே இதனால் எடுக்கப்படும் தீர்மானம் தனித்து எடுக்கப்படும் ஒன்றல்ல. அரசியலமைப்பின் 21வது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நிச்சயமாக தற்போதைய சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர். சபைகள் நீக்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்.

கே: இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா ஆகியவை கடன் மறுசீரமைப்புக்கான சாதகமான அறிகுறிகளை வழங்குவதால், குறைந்தபட்சம் ஏப்ரல் அல்லது மே மாதத்திற்கு முன்னதாக இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் வசதியைப் பெற முடியுமா?

பதில்: சர்வதேச நாணய நிதியம் சரியான நேரத்தில் வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏப்ரல் அல்லது மேமாதத்தில் இதற்கு சாதகமான பதில் கிடைக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

கே: உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்பார்த்துள்ள எதிர்க்கட்சிகள், தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணக் கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்துமாறும் கோருகின்றன. ஆனால் நாட்டின் தற்போதைய அவலங்களுக்கு இது ஒரு தீர்வா?

பதில்: ஜனநாயக அமைப்பில், தேர்தல் அதன் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். உள்ளூராட்சி முதல் ஜனாதிபதி வரையிலான ஆட்சியை யார் நடத்த வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்.

கடுமையான பொருளாதார சூழ்நிலையில் நாம் இந்த நாட்டில் தேர்தல்களை நடத்த முடியுமா என்பதே கேள்வி. உள்ளாட்சி அமைப்புகளை அவர்கள் முழுமையாகக் கைப்பற்றினாலும், அவர்களால் உள்ளூர் விவகாரங்களை மட்டுமே நடத்த முடியும். தேசிய, மத்திய அல்லது நிர்வாகத்தை அல்ல.

> **ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவுடன் சந்திப்பு**

> **பொதுமக்கள் தேர்தலுக்குத் தயாராக இல்லை. மக்களுக்குத் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் மக்களின் முன்னுரிமைப் பட்டியலில் தேர்தல் இல்லை!**

> **உள்ளூராட்சி சபைகள் முதல் ஜனாதிபதி வரையில் ஆட்சியை யார் நடத்த வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும்!**

உரிய வேளையில் சரியான முடிவுகள் எடுக்கப்படாததே சிக்கலுக்கு காரணம்!

சமீபகால வரலாற்றிலேயே இருண்ட காலத்தை நாம் தற்போது கடக்கின்றோம். நாம் பயணிப்பது இருளிலிருந்து இன்னும் இருளுக்கா, அவ்வாறு இல்லாவிட்டால் விடியல் ஏற்படுமா என்ற தெளிவும் இல்லாத நிலைமையே காணப்படுகிறது.

நாம் அனைவரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், கைவிடாமல் முன்னெடுத்துச் செல்கின்ற சரியான திட்டங்கள் நாட்டை மேம்படுத்தும். சுதந்திரம் பெற்று 75 வருட காலப் பகுதியில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பாதையில் பயணம் செய்துள்ளோம். வெற்றிகளை மாத்திரம் பெற்றுக் கொள்ளவில்லை. மோசமான தோல்விகளும் ஞாபகத்தில் உள்ளன. இறுதியில் நாட்டிற்கு கிடைத்தது தற்காலிக வசதியான சூழல் மட்டுமே. அனைத்துக் குடிமக்களும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மகிழ்ச்சியற்றவர்களாகவே உள்ளனர். நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தவிர, நாட்டிற்கு எதிர்காலம் இல்லை.

நாட்டின் மதிப்புமிக்க வளம் இளைஞர் சக்தியாகும். இளம் தொழிலாளர்களின் வீதம் உயர்ந்த மட்டத்தில் காணப்படும் போது சாதகமான நிலைமைகளை அடைய முடியும். இலங்கையின் சனத்தொகையை கருத்தில் கொள்ளும் போது இளைஞர் ஆற்றல் மிக உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட சந்தர்ப்பம் கடந்த காலத்திலேயே இணைந்துள்ளது. அவர்களின் சக்தி மட்டம் அதிகரித்த சந்தர்ப்பத்தில் பயங்கரவாதம் காணப்பட்டதோடு, நாடு அனைத்து தரப்பிலிருந்தும் இளைஞர்களையே இழந்தது.

உயிரிழப்பு மட்டுமல்ல நாட்டை விட்டு வெளியேறுவதும் குறிப்பிட்டளவு அதிகரித்திருந்தது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. சரியான முடிவை, சரியான நேரத்தில் நேரத்தில் எடுக்காததே பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணம்.

நாட்டில் குறைந்த வாய்ப்புகள் இருப்பதால் தொழில் வல்லுநர்கள் மற்றும் இளைஞர்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு இடம்பெற முயற்சி செய்கிறார்கள். சட்டரீதியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ வேறு நாடுகளுக்கு தப்பிச்செல்ல வேண்டும் என்ற எண்ணம் காணப்படுகின்றது. ஜுலை கலவரத்தின் பின்னர் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட மோதல்களால் மோதல்களுக்குள் அகப்பட்ட அப்பாவி மக்கள் இந்நாட்டிலிருந்து வெளியேறினார்கள் இலட்சக்கணக்கான மக்கள் உலகில் பல்வேறு நாடுகளிலும் வசித்து வருகின்றார்கள். தற்போதைய நிலைமையானது, பயங்கரவாதத்துக்கு பிந்திய சமாதான கால பகுதியில் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு கணிசமான இலங்கையர் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள்.

யுத்த மோதல், பயங்கரவாதம், சுனாமி, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் மக்கள் போராட்டங்களின் பின்னர் மோசமான பிரச்சினைக்குள் சிக்கியுள்ள இலங்கை தீர்வை நோக்கி நகர வேண்டியுள்ளது. சமூகத்தில் விவாதங்கள் அவசியமாகும். அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு பதிலாக ஒன்றிணைந்து அபிவிருத்தி அடைந்த நாடாக நிம்மதியான சமூகத்தை நோக்கி பயணிக்கும் பொறுப்புண்டு. தீவிரமான சம்பவங்களால் சோர்வடையும் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒன்றிணைந்து உருவாக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கள் பகிரப்பட்டாலும் மக்கள் சமூகமும் அல்லது தலைமையும் அதில் இணைந்து கொள்ளவில்லை. அவ்வாறான இணைவுக்காக வலுவான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க தவறிவிட்டார்கள்.

தற்போதுள்ள முக்கிய பிரச்சினை நாடு முகம் கொடுத்துள்ள மோசமான சந்தர்ப்பத்தை சரியான முறையில் அறிந்து கொள்ளாததாகும். அரசியல் கட்சிகள், நிபுணர்கள், மதத் தலைவர்கள், இனத்தைப் பற்றி பெரும் வேதனையுடன் கதைப்பவர்கள் பல கோணங்களிலும் தங்களுடைய இலக்கு மற்றும் பொருத்தமான இடங்களை மாத்திரம் தெரிவு செய்து கொண்டுள்ளார்கள்.

சமூக ஒற்றுமை மூலம் உருவான நாடுகள் எம்முன்னால் உள்ளன. இரண்டாவது உலக யுத்தத்தின் போது பூச்சியத்திற்கு சென்ற ஜப்பான், மலேசியா மற்றும் அதிலிருந்து பிரிந்து சென்ற சிங்கப்பூர் எம்மால் கூறக்கூடிய உதாரணங்களிடையே சிலவாகும். பொருளாதார வீழ்ச்சி அடைந்த பின்னர் கொரியா தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவிற்குள் நுழைந்து ஏற்படுத்திய மறு சீரமைப்பின் மூலம் மீண்டும் வளர்ச்சியடைந்த நாடாக மாறியது. இன, மத, அரசியல் மற்றும் வர்க்கபேதங்களை கைவிட்டு மனித வளங்களை சரியான முறையில் முதலீடு செய்ததன் மூலம் இந்த நாடுகள் தற்போது காணப்படும் நிலைமைக்கு வந்துள்ளன. நாடுகள் அபிவிருத்தி அடையும் போது தொழிலாளர்களின் தேவை அதிகரிப்பதால் வெளிநாடுகளில் இருந்தும் கூட தொழிலாளர்களை அழைக்கிறார்கள்.

மறுபுறம் இந்நாட்டில் அதிகாரம் மற்றும் பணபலம் உள்ளவர்கள் செயல்படும் விதத்தைப் பார்த்தால் மக்கள் மிகவும் துன்பப்படும் போது அவர்கள் உயர்மட்ட வாழ்க்கையை நடத்தி செல்கின்றார்கள். புதிய கட்டமைப்பை உருவாக்க உழைப்பவர்களுக்கு மகிழ்ச்சி அடையக் கூடிய நிலைமை உள்ளதா?

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...✍

மணிமேகலை பிரசுரத்தின் 32 நூல்களின் அறிமுகவிழா

புரவலர் ஹாசிம் உமர் ஆரம்பித்து வைப்பார்

மணிமேகலை பிரசுரத்தின் 32 நூல்களின் அறிமுகவிழாவும் விற்பனைக் கண்காட்சியும் இன்று (05) இடம்பெறும். விற்பனைக் கண்காட்சி இன்று காலை 10 மணி முதல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறும். புரவலர் ஹாசிம் உமர் இதனை ஆரம்பித்து வைப்பார். தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், எழுத்தாளரும் மலையக மக்கள் முன்னணியின் உபதலைவருமான சதீஸ்குமார் சிவலிங்கம் ஆகியோர் இதில் கலந்து கொள்வார். இன்று மாலை 5 மணிக்கு குறிப்பிட்ட சில புதிய நூல்களின் அறிமுகவிழாவும் இடம்பெறும். இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள மணிமேகலை பிரசுரத்தின் தலைவர் ரவி தமிழ்வாணனின் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.



கண்டி கட்டுக்கலை ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் 75 ஆவது சுதந்திர தின நிகழ்வு பள்ளிவாசலின் செயலாளர் கே. ஆர். ஏ. சித்தீக் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது கண்டி மாவட்ட ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி உமர்தீன், கண்டி அல் புர்க்கானிய்யா அரபுக் கல்லூரியின் அதிபர் மற்றும் கண்டி மாவட்ட செயலயகத்தின் முஸ்லிம் கலாசார உத்தியோகஸ்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

படம் மாவத்தகம தினகரன் நிருபர்

கல்முனை பிரதேச செயகத்தில் 'உணவு வங்கி' செயற்திட்டத்தின் கீழ் உணவு பொதி வழங்கல்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்

ஜனாதிபதி செயலகத்தின் ஆலோசனைக்கிணங்க கல்முனை பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் கல்முனை பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபரின் வேண்டுகோளுக்கிணங்க, கல்முனைக்குடி 01 கிராம சேவகர் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ரீ.றினோஸா தலைமையில் உணவுப் பொதி வழங்கும் நிகழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தரின் அலுவலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் ஐ.எல்.ஏ.அஸீஸ், உணவு பாதுகாப்பு குழு அங்கத்தவர் மௌலவி ரீ.ஆர்.நௌபர், சிவில் பாதுகாப்பு குழு தலைவர் எஸ்.அஷ்ரப் என பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

தே. மக்கள் சக்தி...

வைக்கப்பட்டுள்ளார்.

கங்கொடவில மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் பதில் மாஜிஸ்திரேட் போகஹதெனிய, சந்தேக நபரை எதிர்வரும் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி..

23 கோடி ரூபா கோரப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்தாண்டு 19,90,80,000 நிதியும் 2023 ஆம் வருடத்திற்காக 23,52,00,000 மதிப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த வருடத்தைவிட 3,61,20,000 ரூபாவை அதிகமாக கோரியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் நிதி வீண் விரயம் செய்யப்படுவதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்துவரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரச நிதியை செலவிடுவதில் காட்டும் முன்னோடித் தன்மை என்னவென்றும் ஆளும் கட்சியினர் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

அதேவேளை, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதி பிரதம அமைப்பாளர் பதவிகள் இரண்டை உருவாக்கி அதற்காக எதிர்க்கட்சித் தலைவரினால் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியின் இரண்டு பிரதி அமைப்பாளர்களுக்கும் அமைச்சர்களுக்கு வழங்கப்படும் தனிப்பட்ட ஊழியர்கள் குழாம் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையை செலவினங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும்போது, புதிதாக அதற்கான ஊழியர்களை நியமிக்காமல் தற்போது சேவையிலுள்ள அரச ஊழியர்களை அதற்காக இணைத்துக் கொள்வது பொருத்தமானது என ஆளும் கட்சியினரால் அமைச்சரவைக்கு பரிந்துரை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாணி ஜெயராம் ...

வெளியாகியுள்ளன.

இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, உருது உள்ளிட்ட 19 மொழிகளில் 10 ஆயிரம் பாடல்களுக்கும் மேல் பாடியுள்ளார். மூன்று முறை தேசிய விருதும், பத்ம பூஷன் விருதும் பெற்றுள்ளார். இவர் தமிழில் பாடிய பல பாடல்கள் இன்னும் நம் மனதில் இருந்து நீங்கா இடத்தை பிடித்துள்ளது.

இவருடைய மறைவிற்கு திரையுலக சேர்ந்த பலரும் தங்களுடைய இரங்கலை தெரிவித்து வருகிறார்கள்.

சுதந்திர தினத்துக்கு ...

75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் புறக்கணிக்கப்பட்டு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கறுப்புக் கொடிகளையும் கட்டி தமது எதிர்ப்பை தெரிவித்த போதும் சுதந்திர தினத்துக்கு ஆதரவாக வாகனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து வாகனங்களிலும் தேசியக் கொடிகள் கட்டப்பட்டு, வாகனப்பேரணி வவுனியா நகரை வலம் வந்திருந்தமையுடன் மேளம் , இசை என்பனவற்றுடன் சென்றது.

அராஜக அரசியல் சக்திகளுக்கு...

அனுமதிக்க மாட்டோமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் காலி முகத்திடலில் நடைபெற்றதன் பின்னர் நேற்று மாலை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

இந்த உரையின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உரையின்போது,

நான் இன்று நிகழ்த்தப்போவது பாரம்பரிய சுதந்திர தின உரை அல்ல. சுதந்திரம் கிடைப்பதற்கு அர்ப்பணித்த, கடுமையாக உழைத்த டி.எஸ். சேனநாயக்க உள்ளிட்ட அனைவருக்கும் மரியாதை செலுத்தி, நான் பேசப்போவது எமக்குகிடைத்த சுதந்திரத்தைப்பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப்பெறுவது பற்றியே நான் பேசப்போகிறேன் என தனது உரையை ஜனாதிபதி ஆரம்பித்தார்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, புகழ்பெற்ற "லண்டன் டைம்ஸ்" நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு கூறியது:

"இலங்கை விரைவில் கீழத்தேயத்தின் சுவிட்சர்லாந்தாக மாறுவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்." வேறு எந்த கீழத்தேய நாட்டைப் பற்றியும் அவர்கள் அத்தகைய எதிர்பார்ப்பை கொண்டிருக்கவில்லை.

ஆனால் தற்பொழுது எமக்கு என்ன நேர்ந்துள்ளது?

இன்று நாம் வரலாற்றில் ஒருபோதும் கண்டிராத பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறானதொரு பாரதூரமான நிலையை நாம் எதிர்கொண்டதில்லை.

நமக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது? இந்த நிலைக்கு யார் பொறுப்பேற்க வேண்டும்?

உண்மையில், நாம் இப்போது அழிவு நிலையை நோக்கி சென்றுள்ளோம். இந்த காயத்தை தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்களுமுள்ளனர். ஆனால் நான் அதனை விரும்பவில்லை. ஒரு சத்திரசிகிச்சை செய்து இந்த காயத்தை சுகப்படுத்திக் கொள்வோம். இது கடினமானது. வேதனையானது. கஷ்டமானது. ஆனால் அந்த சோகத்தையும் வேதனையையும் சிறிது காலம் அனுபவித்தால், காயத்தை முழுமையாக குணப்படுத்த முடியும்.

சில அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டும் குறுக்குவழிகளால் இந்த நெருக்கடியிலிருந்து எமக்கு மீள முடியாது.நாம் உண்மையைப் பேசுவோம். இந்த நிலைக்கு நாம் அனைவரும் குறைவாகவோ அதிகமாகவோ பொறுப்புக் கூற வேண்டும். நாம் யாரும் விரல் நீட்டி ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது.

நாம் ஆரம்பத்திலிருந்தே தவறு செய்தோம். அந்த தவறை சரி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பாடுபட்டோம். ஆனால் நூறு சதவீதம் சரி செய்ய முடியவில்லை..

நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலக் காரணியை நிவர்த்தி செய்யவே முயற்சிக்கிறோம். அது சிரமமானது.மிகவும் கடினமானது. எனினும் நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான்.

வடக்கு, கிழக்கிற்கு தனியான...

கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையின் சிறுபான்மை தமிழ் கத்தோலிக்கர்கள் இலங்கை கத்தோலிக்க திருச்சபையால் வஞ்சிக்கப்படுவதாக உணர்ந்ததன் காரணமாகவே இந்த கோரிக்கையை முன்வைத்ததாக அருட் தந்தை ஜோசப் பத்திநாதர் ஜெபரத்தினம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்த மக்களுக்காக கொழும்பு பேராயர் நீதி கேட்பதில் தவறில்லை, ஆனால் வடக்கு, கிழக்கு யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு நீதி வழங்க எவரும் முன் வராத காரணத்தினால் தான் நீதியை நிலைநாட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலுள்ள நவாலி புனித பேதுரு தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 147 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 200 பேர் காயமடைந்தனர். அப்போது, வடக்கு மற்றும் கிழக்கு ஆயர்க ளின் கவனம் இந்த விடயத்தி ல் ஈர்க்கப்பட்டது, ஆனால் தெற்கிலிருந்து எந்த பதிலும் இல்லை. ஏழு பாதிரியார்கள் மற்றும் பல கன்னியாஸ்திரிகள் போரில் இறந்தனர். 1995 இல், வணக்கத்துக்குரிய மேரி பாஸ்டியன் தனது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தியா செல்வதற்கு முன்னர் அவர் பகிரங்கமாக கொல்லப்பட்டதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

யாழ்ப்பாணம் கன்னியாஸ்திரியின் தலைமையில் நடத்தப்பட்ட மேரி பாஸ்டியனின் நினைவு தினத்தில் கொழும்பு கன்னியாஸ்திரி ஒருவர் பங்கேற்க விரும்பவில்லையென தென்பகுதி ஆயர்கள் தெரிவித்திருந்தனர்.

வடக்கு கிழக்கில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பில் சர்வதேச தலையீடு தேவையற்றதென தென்னிலங்கை ஆயர்கள் கூறியுள்ளனர். வடக்கு, கிழக்கு ஆயர்கள் சர்வதேச தலையீட்டை கோருகின்றனர் என தெரிவித்துள்ளார்.

தமிழர் வாழ்வில் எதையும்...

கரிநாள் கதை கூறி வீண் விரையம் செய்வதும், கறுப்புக் கொடி ஏற்றுவோமென்று அர்த்தமற்ற ஆர்ப்பரிப்புக் காட்டுவதும் ஈழத் தமிழர் வாழ்வில் எதையும் சாதித்துவிடாது.

தேசத்தின் சுதந்திர தின நன்நாளை அவமதிப்பதும், அவதூறு சுமத்துவதும் அவரவரின் கொள்கை மீதான பலவீனத்தையும், அவரவர் கொண்டுள்ளதாகக் கருதும் ஆற்றல் மீதான நம்பிக்கையீனத்தையும் வெளிப்படுத்துவதாகவே அமையுமென்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தமிழ் மக்களை உரிமைகளுடனும், சமத்துவத்துடனும் முகமுயர்த்தி வாழச் செய்வதற்கு மாறாக, தொடர்ந்தும் தமிழர்கள் இருளில் தீராப்பிரச்சினைகளுடன் வாழ வேண்டுமென்று விரும்புகின்ற வீணர்களை தோற்கடிக்க தமிழ் மக்கள் புதிய தீர்மானம் ஏற்கவேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கோலாகலமாக இடம்பெற்ற...

பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் இவ்வாறு விசேட அதிதிகளாக நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். அத்துடன் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் பெற்றீசியா ஸ்கொட்லண்டும் நேற்றைய சுதந்திர தின நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

நேற்றைய தினம் கொண்டாடப்பட்ட சுதந்திர தின நிகழ்வுகளுக்கு முன்னோடியாக பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மத வழிபாட்டுத் தலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெற்றதுடன் நேற்றுக்காலை தேசபிதா டீ.எஸ். சேனநாயக்கவின் உருவச்சிலை அமைந்துள்ள கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அவருக்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ முன்னாள் அமைச்சரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய, கொழும்பு மாநகர சபை முதல்வர் ரோஸி சேனாநாயக்க, ஜனாதிபதியின் ஆலோசகர் முன்னாள் அமைச்சர் ருவன் விஜயவர்த்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

காலிமுகத்திடலில் நேற்றைய தினம் ஜனாதிபதியின் தலைமையில் இடம்பெற்ற சுதந்திரதின பிரதான நிகழ்வில் எதிர்க்கட்சி உட்பட சில கட்சிகள் பங்கேற்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க உட்பட பல கட்சிகளின் தலைவர்கள் நேற்றைய இந்த நிகழ்வை பகிஷ்கரித்திருந்தனர்.

இம்முறை சுதந்திரதின நிகழ்வு செலவுகள் மட்டுப்படுத்தப்பட்டு எளிமையாக நடத்தப்பட்ட போதும் அதன் சிறப்புக்கள் குறைவடையாத வகையில் அனைத்து நிகழ்வுகளும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. அபோன்று 24 மரியாதைவேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

வழமைபோன்று காலிமுகத்திடல் சுதந்திரதின நிகழ்வில் இராணுவ அணிவகுப்பு மட்டுப்படுத்தப்பட்ட விமான சாகசங்களுடன் பரசூட் சாகசங்களும் நிகழ்த்தப்பட்டன. முப்படையையும் சார்ந்த வீரர்கள் பல்லாயிரம் அடி தூரத்திலிருந்து பரசூட் மூலம் காலிமுகத்திடலை வந்தடைந்ததுடன் அவர்கள் ஜனாதிபதிக்கு கௌரவமளிக்கும் வகையில் ஒன்றிணைந்திருந்ததையும் காணமுடிந்தது.

இம்முறை சுதந்திர தின நிகழ்வில் வழமையாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரை இடம்பெற்றிருக்கவில்லை எனினும் அதற்குப் பதிலாக நேற்று மாலை ஜனாதிபதி தொலைக்காட்சியினூடாக நாட்டுமக்களுக்கு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. சுதந்திர தின நிகழ்வையொட்டி ஜனாதிபதி மாளிகை காலிமுகத்திடல் உள்ளிட்ட பகுதிகளில் தேசிய கொடி பறக்கவிடப்பட்டிருந்ததுடன் அப்பகுதியுட்பட கொழும்பின் பல்வேறு பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. பொலிஸாருடன் முப்படையினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. நேற்றைய நிகழ்வுகளை காண்பதற்காக பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

காலிமுகத்திடலில் சுதந்திர தின பிரதான நிகழ்வு இடம்பெற்ற அதேவேளை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சமகாலத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அடுத்த தவணைக்கு முன்...

ஆசிரியர்களையும் நியமிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தில் ஒரே தடவையில் 26,000 பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கல்வி அமைச்சரினால் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் செயலாளரின் தலைமையில் அமைச்சரவை மீளாய்வு குழுவுக்கு விடயங்களை சமர்ப்பித்து அதன் மூலம் அதற்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். மேற்படி 26,000 ஆசிரியர் நியமனங்களுக்காக தற்போது அரச சேவையிலுள்ள 40 வயதுக்குக் குறைந்த பட்டதாரிகளை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு பெப்ரவரி 10 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், கணிதம் உட்பட உயர் தர பாடங்களுக்காக இந்த ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அத்துடன் கல்வியியற் கல்லூரியிலிருந்து வெ ளியேறும் 8,000 ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்பிலிருந்து க.பொ.த சாதாரணதர வகுப்பு வரை கற்பிப்பதற்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையிலும் 60 வயது பூர்த்தியடைந்த ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுள்ள நிலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி 26,000 ஆசிரியர்களுள் 4,000 பேர் தேசிய பாடசாலைகளுக்கும் மேலும் 22,000 ஆசிரியர்கள் மாகாண பாடசாலைகளுக்கும் நியமிக்கப்படுவார்கள். தமிழ் மொழி மூல மேலதிக ஆசிரியர்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணப்படுமாயின் அதன்மூலம் மேல் மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு அவர்களை இணைத்துக் கொள்வதற்கும் கல்வியமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியில் ஏற்பட்ட ...

தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் துரித நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (03) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவையும் அவர் சந்தித்து அதுபற்றி உரையாடியுள்ளதாக தெரிவித்தார்.

காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமூடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை கையளித்திருந்ததுடன், சர்வகட்சி மாநாட்டின் போது அவர் ஜனாதிபதியிடம் அதன் அவசியம் பற்றி வலியுறுத்தி ஒரு இணக்கப்பாடு ஏற்பட்டிருந்தபோதும் அங்கு திடீரென பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டதையடுத்து மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

இந்த விடயம் ரவூப் ஹக்கீமின் உடனடிக் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, ஜனாதிபதி சுதந்திர தினம் முதலான அலுவல்களில் ஈடுபட்டுள்ளதால் அவரது செயலாளரை நேரில் சந்தித்து பிரஸ்தாப பள்ளிவாசலை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து முற்றாக விடுவித்து விடுமாறு கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர், முன்னர் கையளிக்கப்பட்ட காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் கடிதத்தை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ளதோடு, அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அதனை இரத்துச் செய்து மீண்டுமொரு வரத்தமானி அறிவித்தலை வெளியிட்ட பின்னரே உரிய முறையில் அதனை மக்கள் பாவனைக்கு விடுவிக்க முடியுமென ஹக்கீமிடம் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னதாக, தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்தில் அது பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் அதனையடுத்த கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் இந்த விடயத்தையும் இடம்பெறச் செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி இப்பள்ளிவாசலை தடை செய்வது முறையற்ற செயலெனச் சுட்டிக்காட்டியுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பயங்கரவாதி சஹ்ரான், தாருல் அதர் இயக்கத்திலிருந்து அவரது அதி தீவிரவாத செயற்பாடுகள் கருத்து முரண்பாடுகளின் பின்னர் விலக்கப்பட்டிருந்ததாகவும், அங்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்பது தடைசெய்யப்பட்டிருந்ததாகவும் இவ் இயக்கத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் ஆரம்பக் கட்டத்தில் பயங்கரவாதி சஹ்ரான் தொடர்புபட்டிருந்ததை மட்டும் அடிப்படையாக வைத்து, பயங்கரவாதத்துடன் எந்தத் தொடர்புமில்லாத இந்த பள்ளிவாயலை பொது மக்கள் தங்களது ஆன்மீக செயல்பாடுகளுக்கும் தொழுகைக்கு பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் பள்ளிவாசல் கைப்பற்றப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்படுவது கவலைக்குரியதென்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அங்கு நிலைகொண்டிருக்கும் பொலிஸாரை அவ்விடத்திலிருந்து அகற்றி, தாருல் அதர் பள்ளிவாசலை காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமா சபையினரின் நேரடி மேற்பார்வையில் அப்பிரதேச முஸ்லிம்களின் தொழுகை மற்றும் ஆன்மீக நடவடிக்கைகளுக்கு மீளக் கையளிப்பதே இன்றைய சூழ்நிலையில், நல்லிணக்க முயற்சிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்குமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ஜனாதிபதியின் செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

எங்கள் கருத்து...

நாகரிகமும், பக்குவமும் நிறைந்ததே அரசியல்!

அவ்வாறு போராடிப் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை எவருமே குறைத்து மதிப்பிடலாகாது. அதன் பெறுமானம் பெரியது. நாட்டின் சுதந்திரத்தைப் போற்றிக் கொண்டாடுவது இலங்கையர்கள் அனைவரினதும் கடமையாகும். நாம் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தையும், நாட்டின் ஜனநாயகத்தையும் தொடர்ந்தும் பேணிக் காப்பது எமக்குள்ள தலையாய பணி.

இவ்வாறான சுதந்திரத்தின் பெறுமானத்தை உணர்ந்து கொள்ளாத நிலையில் அவ்விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதும், அத்தினத்தை எதிர்ப்பு நாளாக அனுஷ்டிப்பதும் ஏற்புடையதல்ல.

நாட்டின் ஆட்சியதிகாரங்கள் மாற்றமடைந்து கொண்டே வருவது வழமை. அரசுகள் மாறலாம், அரசியல் கட்சிகள் மாறலாம். ஆனால் எமது தாய்நாட்டின் மகத்துவம் எக்காலமும் மாறாமல் கட்டிக்காக்கப்பட வேண்டுமென்பதை மறந்து விடலாகாது.

நாட்டின் சுதந்திரதின நிகழ்வுகளைப் புறக்கணிப்பதென்பது, நம் தாய்நாட்டையே புறக்கணிப்பதற்கு ஒப்பானதென்பதை கவனத்தில் கொள்வது அவசியம். அரசியல் என்பது மக்களை ஒன்றுதிரட்டி கோஷம் எழுப்புவது மாத்திரமல்ல! பக்குவமும், நாகரிகமும் அரசியலுடன் பின்னிப்பிணைந்திருப்பதே சிறப்பு.

இலங்கையை கடன்பொறிக்குள் தள்ள முயலும் சக்திகள்?

கருணாகரன்...

இலங்கை பொருளாதார ரீதியாக மீண்டெழுவது எப்பொழுது என்ற கேள்விக்கு இன்னும் பதில் இல்லை. ஆனால், ஐந்து தொடக்கம் பத்து ஆண்டுகளுக்குள் நாட்டில் யாருக்கும் அடிபணியாத பொருளாதார வலுவை உருவாக்குவேன் என்றிருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எதனை ஆதரமாகக் கொண்டு, எப்படி அந்தப் பொருளாதார வலுவை உருவாக்கப் போகிறேன் என்று அவர் சொல்லவில்லை. அவர் மட்டுமல்ல, வேறு எந்தப் பொருளாதார நிபுணர்களும் கூட இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான வழிகள் எப்படி அமைய வேண்டும்? எவ்வாறு அமைய முடியும் என்று சொல்லவில்லை.

ஆக மொத்தத்தில் இலங்கையின் பொருளாதார மீட்சியைக் குறித்து எவருக்கும் எதுவுமே தெரியாத நிலையே தொடர்கிறது. ஏதோ நடக்கிறது. போகிற வரையில் போகட்டும் என்ற அளவில் தான் பலரும் உள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நாடு எரிபொருளுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்குமாகத் தெருவில் நின்ற போது பலருக்கும் பொருளாதார நெருக்கடி பெரிதாகவே இருந்தது. இப்பொழுது விலை அதிகம் என்றாலும் எல்லாம் கிடைக்கிறது. ஆகவே எப்படியாவது சமாளித்துக்கொள்வோம் என்றே பலரும் கருதுகிறார்கள். இதனால்தான் எல்லோரும் பொருளாதார நெருக்கடியை விட அரசியல் நெருக்கடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், இந்த அரசியல் நெருக்கடி ஒரு போதும் தீரப்போவதில்லை. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எத்தனை தலைமைகள் மாறினாலும் இனவாத அரசியலில் மாற்றம் நிகழப் போவதில்லை. மக்கள் இனவாத அரசியலை ஆதரிக்கும் வரையில் மாற்றமோ மீட்சியோ ஏற்படாது. இதெல்லாம் நமக்குத் தெரியாமலே நடத்தப்படுகின்ற ஏகாதிபத்திய நாடுகளின் – வல்லரசுகளின் கூட்டுச் சதி என்பதைப் பற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அப்படித் தெரிந்தாலும் அதைப் பற்றியெல்லாம் அவர்கள் பேசுவதாக இல்லை. பதிலாக இந்த வல்லரசுகளின் அங்கீகாரத்தையும் அனுசரணையையும் நட்பையும் பேணிக் கொள்ளவே பலரும் முற்படுகின்றனர். அந்தளவுக்குத்தான் நம்முடைய புத்திஜீவிகளின் அறிவுத் தராதரம் உள்ளது. சனங்களின் மீதான, சமூகம் மீதான, நாடு மீதான பற்றுள்ளது.

அமெரிக்கா ஒரு பக்கம், இந்தியா இன்னொரு பக்கம், சீனா இன்னொரு பக்கம் என்று இலங்கையை மட்டுமல்ல, ஒவ்வொரு வல்லரசும் சுற்றி வளைத்துப் பிடிக்கப் பார்க்கிறது. இதற்காக இவை ஒவ்வொன்றும் நாட்டிலுள்ள புத்திஜீவிகள், ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், அரசியற் கட்சிகள், அரசியற் தலைமைகள் என தமக்குச் சாத்தியப்படக் கூடிய அனைத்துத் தரப்பையும் வளைத்துப் பிடிக்க முற்படுகின்றன. இதொரு பகிரங்கப் போட்டியாகவே நடக்கிறது.

இதனால் மாறி மாறி ஒவ்வொரு கட்சியையும் ஒவ்வொரு தரப்பையும் ஒவ்வொரு ஊடகவியலாளரையும் ஒவ்வொரு புத்திஜீவியையும் தூண்டில் போட்டுப் பிடிக்கின்றன வல்லாதிக்கச் சக்திகள். இந்த வல்லாதிக்கச் சக்திகள் லேசுப்பட்டவை அல்ல. சட்டைப் பின்னை (சட்டை ஊசியை), அப்பிளை விற்பதில் தொடக்கம் ஆயுதம், உணவு தொடக்கம் அனைத்தையும் நமக்கு விற்றுச் சம்பாதிப்பவை. நம்மைச் சுரண்டிப் பிழைப்பவை. வல்லரசுகள் இப்படி சட்டை ஊசியையும் விற்குமா என்று நீங்கள்

சிந்திக்கலாம். எதையும் விற்றுக் காசாக்குவதே சம்பாதிப்பதே அவற்றின் முதலாவது இலக்கு. அதனால்தான் அவை வல்லரசுகளாக இருக்கின்றன. அதனால்தான் அவை நம்முடைய ஊரில் உள்ள ஆட்களோடும் அவை கூட்டு வைக்கின்றன. இரகசியமாக தம்முடைய காரியங்களைச் செய்து கொள்கின்றன.

இப்படியாக இருக்கும் ஒரு நிலையில் தான் இலங்கையின் பொருளாதாரம் எப்படி அமையப் போகிறது என்று நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்று வகுக்கப்படாமல், பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்படாமல் அனைத்துத் தரப்பும் ஒன்று பட்டு உழைக்காமல் பொருளாதார மீட்சியையோ மறுமலர்ச்சியையோ எட்ட முடியாது.

ஐ.எம்.எவ் வின் கடனுதவி மூலமாக பொருளாதார மேம்பாட்டை எட்ட முடியும் என்றொரு அபிப்பிராயம் படித்தவர்கள் மட்டத்திற் கூட உண்டு. அதொரு மயக்கமே. ஐ.எம்.எவ் என்பது இன்னொரு கடன்பொறி. நாட்டின் இறைமையையே இல்லாதொழிக்கும் சதி என்பதைப் பலரும் புரிந்து கொள்ளவில்லை. இதே வேளை ஐ.எம்.எவ்விடம் மண்டியிடுவதைத் தவிர வேறு வழி இப்பொழுது இலங்கைக்கு இல்லை. ஆக சாத்தானிடம் வரம் கேட்கும் நிலையே இப்போதுள்ளது.

இதாவது பரவாயில்லை. இனி வரப்போகும் நிலைதான் மிகப் பயங்கரமானது. என்னதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டங்களைச் சொன்னாலும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதாக இருந்தால் அதற்கு சில வழிமுறைகளே உண்டு. ஒன்று, உற்பத்தியைப் பெருக்குவது. குறிப்பாக ஏற்றுமதியை அதிகரிப்பது. இது இலகுவானதல்ல. உடனடிச் சாத்தியமுடையதும் அல்ல. ஆனால், இதை எட்டியே தீர வேண்டும். அது இப்பொழுது முடியாது. இரண்டாவது, அந்நியச் செலாவணியைத் திரட்டக் கூடிய வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பது. இதில் முக்கியமானது வெளிநாடுகளில் உள்ள – வேலை வாய்ப்புக்காகச் சென்ற மக்கள் தமது பணத்தை இங்கே உரிய வழிமுறைகளுக்கு ஊடாக அனுப்புவது. இதற்கு புலம்பெயர் சமூகத்தினர் தயாரில்லை. அவர்கள் கறுப்புச் சந்தைக்கூடாகவே தமது பணப் பரிவர்த்தனைகளைச் செய்கின்றனர். ஆகவே அவர்களிடம் அதை நாம் எதிர்பார்க்க முடியாது. அதில் அவர்கள் பல வகையான லாபங்களைப் பெற்று ருசிப்பட்டவர்கள். எளிதில் அதிலிருந்து மீண்டு நாட்டின் நலனுக்காகச் செயற்படுவர் என்றில்லை. அதை விட முக்கியமானது, இன முரண்பாட்டு அரசியலை முடிவுக்குக் கொண்டு வராத வரையில் அவர்கள் அரசுக்கு எதிராகவே செயற்படுவர். அவர்களைப் பொறுத்தவரை இலங்கை அரசு என்பது எதிர்த்தரப்பு என்பதாகும். எனவே இதுவும் எதிர்பார்த்த அளவுக்குப் பெரிய நன்மைகளைத் தரும் என்றில்லை. அடுத்தது – மூன்றாவது, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதாகும். இதைச் செய்ய வேண்டும் என்றால் இதற்கு கதவுகளை அகலத் திறக்க வேண்டும்.

இந்தக் கதவு திறத்தல் என்பது சாதாரணமானதல்ல. ஏறக்குறைய தாய்லாந்தைப்போல ஒன்று அல்லது இரண்டு கொடிய தொற்று நோய் இலங்கையை மிகவும் பாரதூரமான முறையில் பாதிப்படையச் செய்துள்ளது. இங்கே தான் நாம் மிகவும் கவனமாக அவதானிக்க வேண்டும். முழு உலகப் பொருளாதாரமும் யாரும் எதிர்பாராத வகையில் பாரிய சவாலுக்கு முகம் கொடுத்தது. இந்தக் கொடிய நோயின் தாக்கம் அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வருகின்ற மற்றும் ஏனைய வளர்ச்சி குன்றிய நாடுகள் என்கின்ற பாகுபாடின்றி ஏதோ ஒரு வகையில் பலமாக சிந்திக்க வேண்டும். மற்றைய நாடுகள் போலல்லாமல் ஏன் இலங்கையினால் மீண்டும் சகஜ நிலைமைக்கு திரும்ப முடியாமல் முழுப்பொருளாதாரமுமே ஒரு சீரழிந்த நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமையை நாம் ஆராய்ந்து நோக்கின், நமது இலங்கை அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்ட பல கொள்கைகள் முன்னுக்குப் பின் முரணானதாக (Inconsistent Policies) அமைந்து காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது ஒரு சீரான திட்டமிடல் இன்மை (Poor Planning), சுமுகமான நடைமுறைப்படுத்தல் இல்லாமை (Inefficient Implementation) மற்றும் அதனால் ஏற்படுகின்ற சாதக பாதக விளைவுகளை சரியாக இனங்காணாமை (Lack of SWOT Analysis) போன்றவற்றை நாம் குறிப்பிடலாம். இதற்கு மிக முக்கிய காரணியாக அமைவது யாதெனில் இலங்கை அரசாங்கத்திடம் நிரந்தர "தேசிய கொள்கை" (National Policy) இன்மையே ஆகும். உதாரணமாக கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பாரிய அரச முதலீடுகளை அவதானிக்குமிடத்து புதிதாக அமைத்த துறைமுகம், விமான நிலையம் மற்றும் நெடுஞ்சாலைகளை குறிப்பிடலாம்.

> **இலங்கையின் பொருளாதார மீட்சியைக் குறித்து எவருக்கும் எதுவுமே தெரியாத நிலையே தொடர்கிறது. ஏதோ நடக்கிறது. போகிற வரையில் போகட்டும் என்ற அளவில் தான் பலரும் உள்ளனர். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நாடு எரிபொருளுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்குமாகத் தெருவில் நின்ற போது பலருக்கும் பொருளாதார நெருக்கடி பெரிதாகவே இருந்தது. இப்பொழுது விலை அதிகம் என்றாலும் எல்லாம் கிடைக்கிறது. ஆகவே எப்படியாவது சமாளித்துக்கொள்வோம் என்றே பலரும் கருதுகிறார்கள். இதனால்தான் எல்லோரும் பொருளாதார நெருக்கடியை விட அரசியல் நெருக்கடியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.**

நாட்டுக்கான தேசிய கொள்கையொன்றின் அவசியம்

உலகத்தில் உள்ள அனைத்து மக்களாலும் ஆசியாவின் முத்து என்று அழைக்கப்படுகின்ற ஒரு அழகிய வளமான நாடே நமது இலங்கை. இது வெறும் வார்த்தை அல்ல. இதற்கு காரணம் இலங்கை இயற்கையாகவே சகல வளங்களையும் சீரான காலநிலையையும் உலகத்தில் சிறந்த ஒரு அமைவிடத்தையும் (Strategic Location) பெற்றுள்ளமையே ஆகும். அந்நியருடைய வருகைக்கு அதாவது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்றோர் இந்நாட்டிலே காலடி வைப்பதற்கு, இலங்கை ஒரு வளமான செழிப்பான நாடாக இருந்தமையே மிக முக்கிய காரணமாகும்.

இலங்கை நாடு சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு சரியான, அதாவது சிறந்த பாதையில்தான் சென்றுகொண்டிருந்தது. இலங்கையின் சனத்தொகை படிப்படியாக கூடத் தொடங்குவதுடன் அவர்களுடைய தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்கின்ற தருணத்தில் நாட்டின் உள்நாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத ஒரு சந்தர்ப்பத்தை இலங்கையில் காணக்கூடியதாக இருந்தது.

1977ஆம் ஆண்டு வரை இலங்கை ஒரு மூடிய பொருளாதாரக் கொள்கையை (Closed Economy) கையாண்டு வந்தது. மக்களுடைய அதிகரித்த தேவைக்கு போதிய அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காத தருணத்தில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. இதனை முதன்மை காரணமாக வைத்து அந்த காலத்தில் ஆட்சியை பிடிப்பதற்காக காலகாலமாக இருந்தவந்த மூடிய பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்து புதிய திறந்த பொருளாதாரக் கொள்கையை (Open Economy) மக்களுக்கு வழங்குவோம் என்று கூறி புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றியது. அன்றிலிருந்து அதாவது 1977ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இலங்கை திறந்த பொருளாதார கொள்கையினை கடைப்பிடித்து வருவது நாம் அறிந்த விடயமே.

அதுவரையில் அமைதியாக இருந்த இலங்கை பெரும் புயலை சந்தித்தது போன்று இந்த திறந்த பொருளாதார கொள்கை அமைந்துவிட்டது. ஏனென்றால் அதுவரையில் இலங்கை மக்கள் அங்கு என்ன கிடைத்ததோ அதையே தமது தேவைக்கு பயன்படுத்தி மிகவும் ஒரு சுபீட்சமான முறையில் வாழ்க்கையை அமைத்தனர். அவ்வாறு முறையாகவும் சீராகவும் இருந்த நாட்டிற்கு எமது கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களுக்கு ஒவ்வாத பல பொருட்கள் மற்றும் சேவைகள் வரத்தொடங்கின. ஏதோவொரு வகையில் அந்த பொருட்களில் மக்களின் நாட்டம் அதிகமாகத் தான் காணப்பட்டது. அதுமட்டுமன்றி அதற்கே இலங்கை மக்களும் ஏதோ ஒரு வகையில் ஈர்க்கப்பட்டு அடிமையாக மாறியமை வருந்தத்தக்க விடயமாகும்.

இவ்வாறு புதிய சொகுசு வாழ்க்கைக்கு பழகிய இலங்கை மக்களை அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முதலை போன்று முழுமையாகவே விழுங்கிவிட்டதென்றே நான் கருதுகின்றேன். அதாவது சாதாரண மக்களுக்கு தேவையற்ற பல பொருட்களை இலங்கையில் இறக்குமதி செய்ய அனுமதித்ததும், அதேபோன்று அதிசொகுசு பொருட்களை சாதாரண முறையில் இறக்குமதி செய்ய இடம் கொடுத்ததும் பெரும் ஆபத்தாக மாறியது. இங்கே ஆபத்தென்று குறிப்பிடுவது யாதெனில் மக்களிடையே செல்வந்தர் – ஏழை (Rich & Poor People) என்ற ஒரு வர்க்கத்தை ஏற்படுத்தியதோடு மாத்திரமன்றி இலங்கையின் மொத்த தேசிய வருமானத்திற்கு மிஞ்சிய செலவை இது விளைவித்துள்ளது. புலிவாலை பிடித்தது போன்று சில தேவையற்ற வாழ்க்கை முறைமைக்கு பழக்கப்பட்ட இலங்கை மக்கள், அந்த பழக்கத்திலிருந்து விடுபடமுடியாமல் சிக்கித் தவித்த வண்ணம் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதில் மிகவும் வருந்தத்தக்க விடயம் என்னவென்றால் நமது நாட்டில் கிடைக்கின்ற சிறந்த வளங்களை அலட்சியம் செய்துவிட்டு வெளிநாட்டு பொருட்களுக்கு நாம் ஈர்க்கப்பட்டு அடிமையாக இருப்பதேயாகும்.

ஒரு தனி மனிதனோ, ஒரு சமூகமோ அல்லது ஒரு நாடோ தனது வருமானத்திற்கு மிதமிஞ்சிய செலவை தொடர் தேர்ச்சியாக செய்து வந்தால் அது பேரழிவை உண்டாக்கும். அதற்கு மிக சிறந்த உதாரணமாக தற்பொழுது இலங்கை காணப்படுகிறது. இலங்கையின் மொத்த தேசிய வருமானத்திற்கு மேலதிகமான செலவினங்கள் தொடர் தேர்ச்சையாக இலங்கையின் பாதீட்டில் பெரும் தாக்கத்தை (Budget Deficit) கொண்டுவந்தமையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. 30 வருடங்களாக நடந்த உள்நாட்டு பிரச்சினை, கடவுள் கிருபையால் முற்றுப்பெற்று மக்கள் தமது சகஜ வாழ்க்கைக்கு மெல்ல மெல்ல திரும்பி வந்தமையை நாம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யாரும் எதிர்பாராத விதமாக "உயிர்த்த ஞாயிறு" குண்டுத் தாக்குதல் ("Easter Sunday" Attack) முழு இலங்கை மக்களுக்கும் ஒரு பேரிடியாக அமைந்துவிட்டது. அது மட்டுமன்றி அதற்குப்பின் முழு உலகத்தையும் ஆட்டிப்படைத்த "கொரோனா" என்கின்ற அந்தந்த நாட்டு பொருளாதாரத்தை பாரிய அளவில் சீரழித்து சென்றுள்ளமையை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஏதோ முழு உலகிலுள்ள எல்லா நாடுகளும் எதிர்பாராத பல சவால்களை எதிர்நோக்கியமையை நாம் காணக்கூடியதாக இருந்தாலும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் உதாரணமாக அமெரிக்கா, கனடா, அவுதிரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, ஜப்பான், சீனா மற்றும் அபிவிருத்தி அடைந்து வருகின்ற இந்தியா போன்ற நாடுகளும் தங்களை சுதாகரித்துக் கொண்டு மீண்டும் சகஜ நிலைமைக்கு திரும்பியதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக எமது இலங்கை நாடு பாரிய பொருளாதார சிக்கலுக்கு முகம் கொடுத்து ஒரு வங்குரோத்து (Bankruptcy) நிலைமையை தற்போது அடைந்துள்ளது.

இங்குதான் நாம் சற்று துல்லியமாக அது மட்டுமன்றி இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு பாரிய கடனை அதிக உச்ச வட்டி வீதத்தில் பெற்று நாட்டினை மீள முடியாத கடனாளியாக மாற்றி இலங்கை பொருளாதாரத்தில் தோல்வியடைந்த (Economically Failed Country) மற்றும் (Bankrupt Country) பெற்றுக்கொண்ட கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நாடாக ஏனைய உலக நாடுகளின் மத்தியில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது.

இனி இலங்கை பொருளாதாரத்தினை சாதாரண நிலைமைக்கு கொண்டு வர வேண்டுமென்றால் இலங்கையில் உள்ள ஒவ்வொரு பிரஜையும், ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் ஒரு முகமாக சிந்திக்க வேண்டும். ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் நாம் எல்லோரும் இப்பொழுது உள்ளோம். அதாவது நமது நாட்டிற்கு "தேசிய கொள்கை" ஒன்றினை அமைப்பது மிகவும் அவசியமாக காணப்படுகின்றது.

அவ்வாறு அமைக்கப்படுகின்ற தேசியக் கொள்கைக்கு ஒத்த வகையில் நடுத்தர (Medium Term Policy) மற்றும் குறுகிய கால (Short Term Policy) திட்டங்கள் அமைவதனையும் நாம் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாக இருக்கின்றது. அவ்வாறு இலங்கையால் முன்மொழியப்படுகின்ற தேசிய கொள்கையின் இலக்கினை அடைவதற்கு இணைவான நீண்ட கால திட்டமிடல் கொள்கையும் அதற்கு பக்கபலமாக நடுத்தர திட்டமிடல் முறைமையும் அதற்கு அமைவாக நடைமுறை திட்டமிடலும் அமைவது மிகவும் முக்கியமாக உள்ளது.

இவ்வாறு தேசிய கொள்கையினை அமைக்கும் பொழுது இலங்கையில் காணப்படுகின்ற வளங்களை முழுமையாக கையாளக்கூடிய முறைமையிலும் நாட்டின் சுவாத்தியத்திற்கு ஏற்ற முறையான வாழ்க்கையை அமைக்க தேவையான பொருட்கள், சேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் சாலச்சிறந்தது. இலங்கை நாலா புறத்திலும் கடலினால் சூழப்பட்ட ஒரு அழகிய தீவு. அதற்கு அமைவாக மீன்பிடித்துறை மற்றும் விவசாயத்துறை, இரத்தினக் கல் அகழ்வு, சுற்றுலாத்துறை குறிப்பாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா செயல்பாடுகள் (inbound and outbound tourism), சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்துறை (SME Sector), இலங்கைக்கே உரித்தான (Spice) வாசனைத் திரவியங்கள் கறுவா, மிளகு, கிராம்பு, ஏலம் போன்றன மற்றும் சிறந்த கல்வி மட்டத்தினை கொண்ட நாடாக இலங்கை தொடர் தேர்ச்சையாக திகழ்வதனால் தொழில் சார் நிபுணத்துவம் (Skill Labour) ஈட்டிக் கொள்ளக்கூடிய முறைமை மற்றும் இலங்கை உலக பொருளாதாரத்திற்கு மிக முக்கியமாக விளங்குகின்ற ஒரு இடத்தில் அமைவதால் (Strategic Location) அதனை உள்வாங்க கூடிய முறையான சிறந்த திட்டங்கள், விளையாட்டு மற்றும் தொழில்நுட்பம் போன்றனவற்றை உள்ளடக்கியதாக இந்த தேசிய கொள்கை அமைவதன் வாயிலாக எம்மை ஒரு சிறந்த தேசியக் கொள்கை உள்ள நாடாக மாற்றி அமைக்கக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை இன்று பெற்றுள்ளோம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இனி வருகின்ற ஒவ்வொரு நிமிடமும் நம்மை நாமே தயார்செய்கின்ற நேரமாக அமையப் போகின்றது. இதை உணர்ந்து இலங்கை மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் எம்மிடையே வேறுபாடுகளை மறந்து ஒன்று சேர்ந்து தேசிய கொள்கையினை அமைப்பதே இனி நாமும் நமது அடுத்த சந்ததியினரும் இந்த நாட்டில் சீரும் சிறப்போடும் வாழ வழிவகுக்கப் போகின்றது.

(தொடரும்)

AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி & முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் மீண்டும் கியூவரிசையை உருவாக்க திட்டமிடுகின்றதா எதிரணி?

கொரோனா வைரஸ் பெருந்தொற்றுப் பாதிப்பு மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி என்பவற்றால் ஏற்பட்ட பின்னடைவுகளிலிருந்து நாட்டைப் படிப்படியாக சரியான பாதைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வு காணும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நாடப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் பணியாளர் மட்டத்திலான உடன்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில், கடன்வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டாலேயே நாணய நிதியத்தின் கடன் பிணை விடயத்தில் அடுத்த கட்டத்துக்குச் செல்ல முடியும்.

இது விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது என்றே கூற வேண்டும். இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளில் முக்கியமான இடத்தில் இருக்கும் இந்தியா தொடர்ந்தும் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

மறுபக்கத்தில் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு சம்பந்தப்பட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இலங்கையுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கடந்த வியாழக்கிழமை கூறியிருந்தார்.

இதற்கும் அப்பால் இலங்கை வந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் இலங்கையின் மீட்சிக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளனர். மறுபக்கத்தில், இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களை மறுசீரமைக்கத் தயாராக இருப்பதாக பத்திரப்பதிவுதாரர்கள் சர்வதேச நாணய நிதியத்திற்கு அறிவித்துள்ளனர்.

இலங்கை அதிகாரிகளுடன் வழிகாட்டுதல் குழு மூலமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் தயாராக இருப்பதாக பொன்ட் ஹோல்டர்ஸ் குரூப் என்ற இலங்கை பத்திரதாரர்களின் குழு உறுதிப்படுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டினா ஜோர்ஜீவாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இந்த உறுதிப்பாட்டை இலங்கை பத்திரதாரர்களின் தற்காலிக குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்று சர்வதேச ரீதியில் பெறக்கூடிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும், உள்நாட்டில் செலவுகளைக் குறைப்பதற்கும் அரசாங்கம் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டில் அனைத்து அரசாங்க நிறுவனங்களும் 6 வீத செலவுச்சுருக்கத்தை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

மறுபக்கத்தில், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதுடன், நாளுக்கு நாள் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டைப் பொருளாதா ரீதியில் சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்கான சிறந்த சமிக்ஞைகளாக அமைந்துள்ளன. இதன் காரணமாக மக்கள் மத்தியில் நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தென்படத் தொடங்கியுள்ளது.

அதேநேரம், தேர்தலுக்கான முன்னேற்பாடுகளும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதி மார்ச் 9 என அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, தபால் மூல வாக்களிப்புக்கான தினங்களாக பெப்ரவரி 23, 24, மற்றும் 25 ஆகிய திகதிகளை அறிவித்துள்ளது. ஜனநாயக நாட்டில் உரிய நேரத்தில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லாத போதும், இலங்கையின் பொருளாதார நிலைமையில் இத்தேர்தல் அவசியமானதா என்ற கேள்வி தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டே வருகிறது.

தேர்தலுக்கான பரப்புரைகளை அரசியல் கட்சிகள் சில ஆரம்பித்துள்ள போதும், மக்கள் மத்தியில் தேர்தலுக்கான வரவேற்பைப் பெரிதாகக் காண முடியவில்லை. மக்களின் நம்பிக்கை மீண்டும் அதிகரிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் 8000 உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டுமென எதிர்க்கட்சி எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாட்டுக்கு இப்போது அவசியமற்ற உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிப்பதில் எதிரணிகள் தீவிர முனைப்பு காட்டுவதன் பின்னணி!

இதன் காரணமாக நாடு மீண்டும் பொருளாதார பாதாளத்தில் விழுவதுடன் சுற்றுலாத்துறையும் பாதிக்கப்படலாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் உள்ள சிரேஷ்ட தலைவர்கள் பலரும் இந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். எரிபொருளுக்கும், எரிவாயுவுக்கும் மக்கள் பல நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருந்த நிலைமை மாற்றமடைந்து சாதாரண சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில் தேர்தலுக்குச் சென்று நாட்டை மீண்டும் வரிசை யுகத்துக்குக் கொண்டு செல்வது தேவையா என்பதை தேர்தலைக் கோரும் எதிர்க்கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா தேவைப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. இருந்த போதும் நாடு இருக்கும் நிலையில் அவ்வாறானதொரு பெருந்தொகையை வழங்குவதில் சிரமம் உள்ளது என திறைசேரி சார்பில் கூறப்பட்டுள்ளது. இதற்கான களயதார்த்தம் நாம் அனைவரும் அறிந்ததே.

அது மாத்திரமன்றி, தற்பொழுது தேர்தல் நடத்தப்பட்டு உள்ளூராட்சி மன்றங்கள் அமைக்கப்படுவதால் அது பொருளாதார முன்னேற்றத்துக்கு எதுவித நேரடிப் பங்களிப்பையும் வழங்கிவிடப் போவதில்லை. எதிர்க்கட்சிகள் தமது பலத்தினை சோதிப்பதற்காக இத்தேர்தலைப் பயன்படுத்தப் பார்க்கின்றன.

பெருந்தொகை நிதி செலவுசெய்து எதிர்க்கட்சியின் பலத்தை சோதிப்பது நாட்டுக்குத் தற்பொழுது தேவையான விடயமா என்பதை மக்களும் சிந்திக்க வேண்டியுள்ளது.

நாட்டை மீண்டும் கியூ யுகத்துக்குக் கொண்டு சென்று அரசாங்கம் மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவதற்கு எதிரணி திட்டமிடுகின்றதா என்ற வினாவும் இங்கு எழுகின்றது.

நாட்டிலுள்ள மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி முடிவுகளை எடுக்காது தன்னிச்சையாக செயற்பட்ட கடந்தகால நடவடிக்கைகளையே தற்பொழுது நாம் அனுபவித்து வருகின்றோம். இதன் ஊடாகவும் பாடங்களைக் கற்றுக்கொண்டு பிழைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடு மேலும் மேலும் சிரமங்களை எதிர்கொள்வதை யாராலும் தடுக்க முடியாமல் போய்விடும்.

பி.ஹர்ஷன்...✍

கடன் மறுசீரமைப்பில் முன்னேற்றம் ஏற்பட்டு வரும் போது, உள்ளூராட்சித் தேர்தலால் ஏற்படப் போகின்ற பெரும் செலவினம்

கொரோனா தொற்றுக்குப் பிந்திய தடைகளை தாண்டியது இந்தியா!

உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா விளங்குகிறது. எதிர்வரும் 2030 ஆம் ஆண்டு உலக பொருளாதாரத்தில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறும் அளவிற்கு இந்தியா வல்லமை கொண்டுள்ளதாக பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொரோனா தொற்றுக்குப் பின்னரான சூழல் உலகில் பல்வேறு தடைகளை ஏற்படுத்தியது. உக்ரைன் போரால் உலகின் வர்த்தக சங்கிலித் தொடர் பெரிதும் பாதிக்கப்பட்டது. வளர்ந்த நாடுகளில் கூட பொருளாதாரம் நலிவடைந்து மந்த நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இத்தனை சிக்கலுக்கு மத்தியிலும் இந்தியாவின் வளர்ச்சி வீதம் 7 சதவீதமாக இருந்து வருகிறது. அடுத்தடுத்து முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதேசமயம் மக்ளுக்கெல்லாம் இந்தியாவின் மனித வளம் கைகொடுக்கும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. குறிப்பாக இளைஞர்கள் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதனால், அவ்வளர்ச்சியானது இந்தியாவின் முன்னேற்றத்துக்குக் கைகொடுக்குமென்று எதிர்

எதிர்கால சவால்களை வெற்றியுடன் முறியடிப்பதில் திட்டங்கள் முன்னெடுப்பு

கள்தொகை அதிகரிப்பில் மிகப்பெரிய சவாலை இந்தியா சந்திக்கவுள்ளது. அதாவது வறுமை, பட்டினி, அனைவருக்கும் கல்வி, வேலைவாய்ப்பின்மை போன்றவை அதிகரிக்கும். இவற்றை சமாளிக்க பெரிதான உள்கட்டமைப்பு வசதிகளை செய்ய வேண்டியது அவசியமாகிறது.

ஆகவே இத்தகைய சவால்களையெல்லாம் முறியடித்து முன்னேறிச் செல்வதற்கு இந்தியா இப்போதிருந்தே திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகின்றது.

இவ்வாறான முன்னேற்றத் திட்டங்க பார்க்கப்படுகின்றது. புதிய தொழில்கள், முதலீடுகளை ஆரம்பிப்பதில் இந்தியா அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

இந்தியா தற்போது நடைபோட்டு வரும் புரட்சிகரமான பயணத்தில் மேற்கு ஆசிய நாடுகளின் ஆதரவைப் பெறுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் சவூதி அரேபியாவுடன் இந்தியா நெருக்கமான நட்புறவை பின்பற்றி வருகிறது.

அதேபோல் இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் ஒன்றாக முன்னோக்கி பயணித்து வருகின்றன. இருநாட்டு நல்லுறவிலும் வலுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வெளியுறவுக் கொள்கைக்கு அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பனீஸ் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறார். இது இந்தியாவிற்கு சாதகமாக இருப்பதால் இரு நாடுகளும் ஒன்றாக பயணிக்க உதவுமென்று நம்பப்படுகின்றது.

அதேசமயம் வலதுசாரி அரசியலை பின்பற்றும் இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனி சீனாவுடன் கடுமையான போக்கையும், இந்தியாவுடன் மிகுந்த நட்புறவையும் பின்பற்றி வருகின்றார். இதன்மூலம்

உலக நாடுகளுடன் நட்புறவைப் பேணியவாறு பொருளாதாரத்தில் வேகமான வளர்ச்சி!

இருநாட்டு வர்த்தக உறவும் அடுத்தகட்டத்திற்கு செல்லும் என்று நம்ப முடியும்.

மறுதரப்பில் இந்தியாவுடன் விரிவான பொருளாதார ஒத்துழைப்பை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரிடியூ கடைப்பிடித்து வருகிறார். கனடாவில் ஏராளமான இந்தியர்கள் வசித்து வருகின்றனர். இதனால் இருநாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் வலுப்பட்டு வருகிறது.

பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்கிற்கு இந்தியாவின் பாரம்பரியம் இருக்கிறது என்பது தெரிந்த விடயம். அந்நாட்டைப் பொறுத்தவரை இந்தியாவுடன் சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தத்தை பின்பற்ற விரும்புகிறது. இது இந்தியாவுக்கு சாதகமாக உள்ளது.

இதுஒருபுறமிருக்க, இந்திய பாராளுமன்றத்தில் 202324ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த 1 ஆம் திகதி தாக்கல் செய்தார். பட்ஜெட் தாக்கலுக்கு பிறகு நிர்மலா சீதாராமன் கருத்துத் தெரிவிக்கையில்

"கொரோனா காலத்தில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனால் எங்களால் வெற்றி பெற முடிந்தது. அனுபவத்தின் அடிப்படையிலே அனைத்தையும் செயல்படுத்தி வருகிறோம் அதனை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. உலக சந்தையில் நிச்சயமற்ற தன்மையை இந்தியா உட்பட எந்த நாட்டாலும் தவிர்க்க முடியவில்லை. எனவே உலக பொருளாதார சூழலை கருத்தில் கொண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை நாம் தீர்மானித்திருக்கிறோம்" என்றார் நிர்மலா சீதாராமன்.

"உலகின் பிற நாடுகளைப் போலவே, இந்தியாவும் நிதி நிலைமைகளை கையாள்வதில் அசாதாரண சவால்களை எதிர்கொண்டது. நீடித்த போரினால் (ரஷ்யா உக்ரைன்) விநியோகச் சங்கிலி சீர்குலைவுகளை இந்தியா எதிர்கொண்டது. ஆனால் பெரும்பாலான நாடுகளைவிட அவற்றை நாம் சிறப்பாக எதிர்கொண்டிருக்கிறோம் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது நினைவுகூரத்தக்கது" என்றார் இந்திய நிதியமைச்சர்.

எஸ்.சாரங்கன்...✍

இனவாத பிரசாரம் தலைதூக்கிய போதிலும் இனப்பிரச்சினைத் தீர்வில் ஜனாதிபதி உறுதி!

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் வெளிப்படையான நிலைப்பாட்டைக் காண்பிக்கும் இலங்கையின் முதலாவது தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



வார இறுதி
அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

இலங்கையில் நடைமுறையில் இருந்த அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பான விடயம் தற்பொழுது அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு ஆயத்தமாகிவரும் இன்றைய சூழ்நிலையில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்த விடயம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக ஜனாதிபதி கூறிய கருத்தே அரசியலில் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற அடிப்படையில் தற்போதுள்ள சட்டத்தை நடைமுறைப்படுத்த நான் கட்டுப்பட்டுள்ளேன். அந்தவகையில் 13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் கடந்த 37 ஆண்டுகளாக எமது சட்டப் புத்தகத்திலும் அரசியலமைப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்புச் சட்டத்தைக் கொண்டுவந்து, 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும். அப்படி இல்லையெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமலும், நீக்காமலும் எம்மால் இவற்றுக்கிடையே நிற்க முடியாது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யுமாறு கோரி பாராளுமன்றத்தில் யார் வேண்டுமானாலும் தனிப்பட்ட பிரேரணையை முன்வைக்க முடியும். அதற்குப் பெரும்பான்மையானவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தால் என்ன செய்வது? அப்படியானால் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நேரிடும். நான் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் நீதியரசர் குழாம் முன்வைத்துள்ள தீர்ப்புக்கமையவே செயற்படுகின்றேன். விசேடமாக பிரதம நீதியரசர் பாலிந்த ரணசிங்கவின் தீர்ப்பிற்கமையவே செயற்படுகிறேன். இதனை வரையறுத்துப் பார்த்தால், நாம் ஒற்றையாட்சியில் இருக்கின்றோம். நான் பெடரல் ஆட்சி முறையை எதிர்க்கின்றேன். ஆனால் அதிகாரங்களைப் பகிரத் தயார்" என ஜனாதிபதி கூறியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்தம் குறித்த சாதகமான நிலைப்பாட்டிலேயே அவர் நீண்ட காலம் இருந்து வருகின்றார்.

அவர் மாத்திரமன்றி, முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதிகளும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர்.

விசேடமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "13 பிளஸ் அல்லது 13 இற்கும் அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும்" என ஒரு கட்டத்தில் கூறியிருந்தார். இருந்தபோதும் அதனை நடைமுறைப்படுத்தாமல் விட்டது துரதிர்ஷ்டமாக அமைந்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக தற்போது கூறியுள்ளார்.

அதாவது, இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக உள்ளடக்கப்பட்ட மாகாணசபை முறையை வலியுறுத்துவதே அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தமாகும். 1987ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கம் நோக்கில் அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தரப்புகளை ஐக்கியப்படுத்தி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்பதே இந்தியாவின் மாறாத நிலைப்பாடாக உள்ளது.

இந்தியாவின் அழுத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு இலங்கையின் மத்திய அரசு தலையசைத்தாலும், முழுமையான அதிகாரங்கள் எதுவும் இதுவரை பகிரப்படவில்லை. குறிப்பாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் உள்ளிட்ட அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளிக்கவில்லை என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த விடயம்.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் தரப்புகளை ஐக்கியப்படுத்தி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்பதே இந்தியாவின் மாறாத நிலைப்பாடு

அதேநேரம், 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஆரம்பம் தொட்டு தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ன. ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த காலப்பகுதியில் எல்.ரி.ரி.ஈ உள்ளிட்ட ஆயுதக் குழுக்கள் மாகாணசபை முறையில் பெரிதாக நாட்டம் கொண்டிருக்கவில்லை.

ஆயுதக் குழுக்கள் மாத்திரமன்றி, அப்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளும் அதில் பெரிதாக அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை.

இருந்தபோதும், அதற்குப் பிந்திய காலத்தில் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதில் ஆர்வம் காட்டியிருந்தன.

13 ஆவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாணங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஆரம்பத்தில் இணைந்தே காணப்பட்டன. 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சராக வரதராஜப்பெருமாள் பணியாற்றினார். 1990 ஆம் ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினர் நாட்டைவிட்டு வெளியேறும் நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழீழப் பிரகடனத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல வருடங்களாக வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் பல வருடங்களாக நடத்தப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்தபோது விமல் வீரவன்ச உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கிற்கு அமைய இரு மாகாணங்களும் 2006 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டன. இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டிலேயே வடமாகாணத்துக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இதுவே பிரிக்கப்பட்ட வடமாகாணசபைக்கு நடத்தப்பட்ட ஒரேயொரு தேர்தலாகும். அதன் பின்னர் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை.

ஒவ்வொரு தடவையும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பேச்சுக்கள் எழுகின்றன போது, 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது போன்று மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு விடயம் அவ்வப்போது தலை தூக்கிச் செல்வது வழக்கம். குறிப்பாக தமிழ்க் கட்சிகளின் ஆதரவைக் கோரும் தென்னிலங்கை யின் பிரதான கட்சிகள் அநேகமான சந்தர்ப்பங்களில் அதிகாரப்பகிர்வு பற்றிய ஏதாவது ஒரு விடயத்தைக் கூறுவதுண்டு.

இருந்த போதிலும் மற்றுமொரு தேர்தல் வரும்வரை இது பற்றி தென்னிலங்கை தேசியக் கட்சிகளுக்கு அக்கறை இருக்காது. மறுபக்கத்தில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற விடயத்தில் இந்தியா உறுதியாக இருந்து வந்துள்ளது.

புதுடில்லியில் ஆட்சிக்கு வரும் இந்திய மத்திய அரசாங்கம் எதுவாக இருந்தாலும் இது விடயத்தில் மாற்றுக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. பாரதீய ஜனதாக் கட்சியாக இருந்தாலும் சரி, காங்கிரஸாக இருந்தாலும் சரி அவர்கள் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு வலியுறுத்தியே வந்துள்ளனர்.

இவ்வாறான அரசியல் பின்புலத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள 13 ஆவது அரசியல் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்ற நிலைப்பாடு தென்பகுதி அரசியல் சக்திகள் சிலரால் அரசியல் துரும்பாக எடுக்கப்பட்டுள்ளது.

எப்பொழுதும் இனவாதத்தையும், மக்கள் மத்தியில் வீணான பயத்தையும் தூண்டி அரசியல் செய்து பழகிப்போன தரப்பினரே மீண்டும் இதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த முயல்கின்றனர். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க போன்ற அரசியல்வாதிகள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிராகப் போர்கொடி தூக்கியுள்ளனர்.

'பிரிவினைவாதம் இன்னமும் நாட்டில் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதால் நாடு பிளவுபடும் அபாயம் உள்ளது. 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது நாட்டைப் பிளவு படுத்திவிடும்' என்ற வழமையான கோஷத்தை அவர்கள் முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.

இதுபோன்ற கருத்துக்கள் எப்பொழுதும் தேர்தலை இலக்காகக் கொண்டு தமது வாக்குகளை அதிகரிப்பதற்கான பிரசார உத்திகளே யாகும். இது விடயத்தில் பௌத்த மதத் தலைவர்களும் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

உண்மையில் பார்த்தால் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது, இந்தியாவின் மாநிலமொன்றில் காணப்படும் உள்ளாட்சி மன்றத்துக்கு உள்ள அதிகாரத்தை விட மிகவும் குறைவானதாகவே காணப்படுகிறது.

தேர்தலுக்கு 12 பில்லியன் ரூபா செலவு; நாட்டின் இன்றைய பொருளாதாரப் பிரச்சினைக்கு உள்ளூராட்சித் தேர்தல் எவ்வித தீர்வையும் தந்துவிடப் போவதில்லை. அது மாத்திரமன்றி, 8 ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களை நடத்திச் செல்வதில் அரசாங்கத்துக்கு மேலதிக செலவினமே ஏற்படும். மக்களுக்கு அதனால் நேரடியான நன்மை எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை

இவ்வாறான நிலையில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது எவ்வாறு பிரிவினைக்கு வழிவகுக்கும் என்பது பாரியதொரு கேள்விக்குறியாகவே காணப்படுகிறது.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு தெரிவிக்கும் எந்தவொரு தரப்பினரும் பிரிக்கப்படாத இலங்கைக்குள்ளேயே அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனக் கோருகின்றனர். இவ்வாறிருக்கையில் நாட்டில் உள்ள மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வது எவ்வாறு பிரிவினையாக மாறும் என்பது அவர்களால் விளக்கப்படவில்லை.

13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வழங்கப்படப் போவதில்லை. நாட்டின் ஏனைய மாகாண சபைகளுக்கும் வழங்கப்படத்தான் போகின்றன. அவ்வாறிருக்கையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தியவாறு 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பது அரசியல் போலித்தனம் என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை என்பதுதான் உண்மை!

13 ஆவது திருத்தத்தின் கீழான அதிகாரங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் வழங்கப்படப் போவதில்லை. நாட்டின் ஏனைய மாகாண சபைகளுக்கும் வழங்கப்படத்தான் போகின்றன. அவ்வாறிருக்கையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் வடக்கு, கிழக்கு மாகாணங்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தியவாறு 13 ஆவது திருத்தத்தை எதிர்ப்பது அரசியல் போலித்தனம்!

நாம் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் அல்லர், புலம்பெயர் தொழிலாளர்கள்

நாம் பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் அல்லர். 'பஞ்சம் பிழைக்க வந்த சீமை' என்ற ஒரு நாவலே இருக்கிறது. இது ஒரு கட்டுக்கதையாகும். இந்த நாவலை நான் வன்மையாக எதிர்க்கின்றேன். ஆனால் இது ஒரு நல்ல நாவல். கருத்தியல் ரீதியில் ஒத்துப் போகக் கூடியதாக இல்லை. எமது வரலாறு தொடர்பாக நாம் வைத்திருக்கக் கூடிய மாயையான கட்டுக்கதைகளிருந்து நாம் விடுபட வேண்டும்.

இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்கள் புலம்பெயர் தொழிலாளர்கள். இப்போதும் தொழிலாளர்கள் எமது நாட்டில் இருக்கிறார்கள். கட்டார். குவைத். மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பிய, மேற்கத்திய நாடுகளுக்கு எமது நாட்டவர்கள் தொழிலுக்காக எவ்வளவோ பேர் செல்கிறார்கள். நல்ல முயற்சியோடு தொழில் புரிகின்றவர்கள் அங்கேயே இருந்து விடுகிறார்கள். 1823 இல் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த பலர் வேலை தேடித்தான் புறப்பட்டார்கள்.

இந்தியாவில் இருந்து புலம்பெயர் தொழிலாளர் சுமார் 60 இலட்சம் பேர் வருகை தந்தார்கள்.

1863 ஆம் ஆண்டின் கணக்கின் படி அவர் 13 இலட்சத்தத்தை தவிர மிகுதி அனைவரும் திரும்பிச் சென்றுள்ளனர். அவர்கள் அனைவரும் உழைக்க வந்தவர்கள் தான் திரும்பிப் போனார்கள்.

உழைப்புக்கான உரிய வருமானம் அவர்களுக்கு கிடைத்தன. அவர்கள் அந்த வருமானத்தை அவர்களுடைய நாட்டுக்கு கொண்டு சென்றார்கள். அங்கு காணி வீடுகளை வாங்கி நிரந்தரக் குடிவாசிகளாக மாறினார்கள்.

1818 இல் இந்தியாவில் ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. பிரான்சீஸ் வில்லீஸ் என்கின்ற சென்னை மாகாணத்தின் கலக்டர் தீர்மானமொன்றை எடுக்கின்றார்.

நிலமற்ற விவசாயிகளுக்கு உரிமை கிடைக்க வேண்டும் என்ற சட்ட மசோதாவொன்றை முன் வைத்தார்.

நிலசொந்தக்காரர்களின் காணியில்தான் குடியிருப்புக்கள் காணப்பட்டன. இந்தக் காணியைப் பராமரிப்பவர்கள் அடிமை முறையில் வாழ்ந்து வந்தார்கள்.

1818 இல் இந்த முறைமை இல்லாமற் செய்யப்படுகிறது. 1820-1842 வரையிலும் காணியில் இருந்து இலட்சக்கணக்கான மக்கள் நிலச்சொந்தக்காரர்களுடைய காணிகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு எத்தனையோ தலைமுறையினர்களுக்கு பின்பு சுதந்திரம் கிடைத்த மாதிரி இருந்தது. அப்பொழுது உழைப்பதற்காக வெளியே புறப்படுகிறார்கள். அப்படி வந்தவர்களில் இலங்கைக்கும் வருகை தருகிறார்கள். அதில் மீளவும் சுமார் 40 இலட்சம் பேர் அளவில் பின் திரும்பிச் செல்லுகின்றனர்.

இந்தியாவில் வேலை செய்தால் ஆறனா, மூன்றனா என்ற சம்பளம் வழங்கப்படும். இலங்கையில் வந்து வேலை செய்தால் 9 ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என்றனர். அதற்காக வந்த அவர்கள் பணத்தைச் சேகரித்துக் கொண்டு திரும்பவும் அங்கு சென்று மதுரை மற்றும் இராமநாதபுரம் போன்ற இடங்களில் சொந்தக் காணி வாங்கிக் நிரந்தரமாகக் குடியேறினார்கள்.

அவர்கள் புலம்பெயர் தொழிலாளர்களாகவே வந்தார்கள். அவர்களை பஞ்சம் பிழைக்க வந்த புலம்பெயர் தொழிலாளர்களாகவே காட்டப்படுகிற ஒரு பலவீனமான கதைதான் நமது சமூகத்தில் கையாளப்படுகிறது.

எமது சமூகமும் அப்படி இருக்கப் பார்க்கிறது. இது வீரமிக்க சமூகம் உழைப்புமிக்க சமூகம் உன்னதமான சமூகம். இன்றைக்கும் வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லுகிறார்கள். இந்த வரலாறு தொடர்பான விடயங்களை 200 வருடத்திலாவது புரிந்து கொள்ளவில்லை என்றால் அடுத்த 100 வருட பூர்த்தியையும் நாங்கள் பிழையாகத்தான் கொண்டாடுவோம். அரச யாக்க காணிகளை காணியற்ற பெருந்தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கத்திற்கு நூறு விகிதம் உரிமை இருக்கிறது. அரசாங்கம் நினைத்தால் இதைச் செய்யலாம். அல்லது அவர்களிடத்தில் கோரிக்கை விடுக்க வேண்டும். இதனைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழி இது. இரண்டாவது வழி நாம் உழைத்து உறுதிக் காணிகளை வாங்கிக் கொள்ள வேண்டும்.

மலையகத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்று வடக்கு கிழக்கில் இருக்கக் கூடிய மக்களில் ஒரு 15 விகிதமானவர்கள் தான் உறுதிக் காணி வைத்திருக்கிறார்கள். மிகுதி 85 விகிதமானவர்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்ட அனுமதிக் கப்பட்ட போமிட் காணிகள்தான் வைத்திருக்கிறார்கள். இது சட்டப்படி விற்பனை செய்ய முடியாது. எனினும் சிலர் விற்பனை செய்கின்றார்கள். ஆனால் எவ்வளவு காலமும் இருக்கலாம். இக்காணிகளுக்கு காலம் கடந்தாவது அரசாங்கம் நிரந்தரக் காணி உறுதி பத்திரம் வழங்கும்.

மலையகத்தில் இருக்கக் கூடிய மிக முக்கியமான ஆளுமைகள் உலகில் பல்வேறு சாதனைகளையும்; வரலாறுகளையும் படைத்துள்ளார்கள். கிரிக்கெட் விளையாட்டு வீரர் முத்தையா முரளிதரன் முதல் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி வரையிலும் மலையகப் பரம்பரையின் வழியாகத் தான் வந்திருக்கிறார்கள். உலகத்தில் போற்றப்படக் கூடிய வரலாறுகளைப் படைத்தவர்கள் மலையக மண்ணில் இருக்கிறார்கள். நமது வரலாறு என்பது ஒரு வீரமிக்க மற்றும் உழைப்புமிக்க சமூகம்.

எனினும் நாங்கள் எங்களை கடை நிலை மக்களாக உருவாக்கி இன்னும் மற்றவர்களால் மிகவும் பரிதாபமானவர்களாக பார்ப்பதற்கும் இருப்பதற்கும் விரும்புகிறோம். அப்படி இருக்க இயலாது. என்னுடைய தந்தையும் கேகாலை இறப்பர் தோட்டத்தில் சப்மல்கந்தவில் வாழ்ந்தவர். அவர் ஜுலைக் கலவரம் வருவதற்கு முன்னரே 1981 இல் கிளிநொச்சிக்குச் சென்று காடு வெட்டி காணியைப் பெற்று நான்கு சகோதரிமார்களையும் படிப்பித்து எங்கள் எல்லா குடும்பத்தினர்களையும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார். நாங்கள் கூலிப்பிழைப்புக்காக வந்தவர்கள் அல்லர் என்று அவருக்கு வரலாறு நன்கு தெரியும். எங்களை அழைத்துச் சென்று எங்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை அமைத்துத்தந்தார். இது எல்லா அப்பாமார்களுக்கும் வராது.

ஆனால் நாங்கள் திரும்பத் திரும்ப நொந்த வரலாற்றை அல்லவா பேசிக் கொண்டிருக்கின்றோம். இந்த 200 ஆவது வருடத்திலேயாவது நாம் கதைக்காமல் விட்டோம் எனில் இனிமேல் கதைப்பதில் பிரயோசனம் இல்லை. காணி தொடர்பான விழிப்புணர்வு மலையக மக்களுக்கு அவசியம். இலங்கையில் இருக்கக் கூடிய சட்டவிதிமுறைகள் என்ன? என்பது மக்களுக்குத் தெளிவுப்படுத்த வேண்டும். ஒரு தந்தை தம் பிள்ளைகளின்எதிர்காலத்திற்காகஎப்படியோ ஓர் உறுதிக் காணியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படி பெருந்தோட்டங்களில் பணிபுரியும் கன தந்தைமார்கள் உறுதிக் காணிகள் வாங்கி சொந்த வீடுகள் நிர்மாணித்து வருகிறார்கள். இதனை நாங்கள் ஊக்குவிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மலையகத்தின் 200 ஆவது ஆண்டு நிகழ்வானது இது வெறுமனே கொண்டாட்டமாக அமைந்து விடக் கூடாது.

அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான 200 ஆவது ஆண்டு வருடமாகவும் அமைய வேண்டும் என்று என்றார்.

அடிப்படைப் பிரச்சினை என்றால் தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டினுடைய தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் பட்சத்தில் தான் ஆணைக்குழுக்களை நியமிக்கும் போதும் ஏனைய அரச சலுகைகளும் வரப்பிரசாதங்களும் அபிலாஷைகள் எல்லாம் இயல்பாகவே கிடைக்கப்பெறும். அரசியலமைப்பில் தனித் தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வில்லை. பெரும்பான்மை சிங்களவர்கள் வடக்கு கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோர் மாத்திரம் தான் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். மலையக மக்களை தனித்தேசிய இனமாக அங்கீகரிப்பதற்குரிய தகைமைகள் இருத்தல் வேண்டும்.

அதற்குரிய மக்கள் தொகை இருத்தல் வேண்டும்.

தனித்துவமான பண்பாடு இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட நிலப்பரப்பினில் வாழுதல் வேண்டும். அவர்களுக்குரிய நீண்ட கால இருப்பு இருத்தல் வேண்டும்.தனித்துவமான மொழி இருத்தல் வேண்டும். இந்த ஐந்து அம்சங்களும் இந்த சமூகத்திற்கு இருக்கிறது. பொருளாதார ரீதியாக மூலதனமும் இருக்கிறது.

ஆகவே மலையக இனத்தவர்களும் நான்காவதாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மலையக சமூகம் தனித்துவ இனமாக அங்கீகரிக்கப்படும் வேளையில் மலையக அபிவிருத்தி வேலைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் போது ஏனைய சமூகங்களான பெரும்பான்மையின சிங்கள மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் நடைபெறும் அபிவிருத்திப் பணிகள் எல்லாம் இயல்பாவே போய் சேரும். ஆனால் இத்தகைய அபிவிருத்தி மலையக மக்களைச் சென்றடைய முடியாது. தோட்ட நிருவாகத்திற்கு கீழ் வருவதால் அபிவிருத்தி இயல்பாக சென்றடையாது.

பிரதேச சபையின் கீழ் தோட்ட நிருவாகம் வருவதில்லை. பொதுவாக மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் அமைச்சரவைக் குழுவில் ஒரு கெபினட் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். ஆனால் ஏனைய பிரதேசங்களுடைய அபிவிருத்திகளுக்கு அமைச்சரவைக் குழுவில் கெபினட் அறிக்கை சமர்ப்பிப்பதில்லை.

இதுவே இன்னும் பாராபட்சமாக இருந்து கொண்டிருக்கிறது.

200 வருட காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்திற்குரிய நிலவுரிமை வீட்டுரிமை இல்லாவிட்டால் இந்த நாட்டினுடைய பிரஜை என்று எவ்வாறு உறுதிப்படுத்த முடியும். வீடொன்று இல்லாமல் அதே இடத்தில் உழைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

அவர்களை சிறு உடமையாளர்களாக மாற்ற வேண்டும்.

இக்பால் அலி...

வரலாறு மாற்றி எழுதப்பட வேண்டும்

பஞ்சம் பிழைக்க வந்த புலம் பெயர் தொழிலாளர்களாகவே காட்டப்படுகிற ஒரு பலவீனமான கதைதான் நமது சமூகத்தில் கையாளப்படுகிறது.....

காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் எழுத்தாளரும் கவிஞருமான வணபிதா யோசுவா அடிகளார்.

மலையகம் இரு நூற்றாண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு மலையகம் பற்றிய கலந்துரையாடல் காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யோசுவா அடிகளார் தலைமையில் எஹெலியகொடவில் சமீபத்தில் இடம் பெற்றது. இதன் போது மலையகம் தொடர்பான இன்றைய போக்குகள், கருத்தியல் பரிமாற்றங்கள் தொடர்பில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள்

புதிய மலையக இலக்கியம் படைக்கப்பட வேண்டும். மலையக வரலாறு குறித்த படைப்பிலக்கியத்திற்கு அப்பால் ஆய்வு ரீதியான படைப்புக்கள் அவசியமாகும். இலக்கியம், வரலாறு தொடர்பாக பேசப்படும் விடயங்கள் மறுவாசிப்பு செய்யப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல் மீள்வாசிப்பு செய்யப்பட்டு புதிய மலையக இலக்கியம் 200 ஆண்டில் படைக்கப்பட வேண்டும்.

எழுத்தாளர் அருட்திருப்பணி பெனி.யே.ச

மலையகம் – 200; மாணவர் மற்றும் இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டிகள்

1960 களில் மலையகம் எனும் கருத்தாக்கத்திற்கு உயிரூட்டி, உரமிட்டு அதனை பரவலாக்கம் செய்து மக்கள் மனதில் பதிய வைத்த மலையக கல்விமானும் சமூக செயற்பாட்டாளரும் சிந்தனையாளருமாகிய மறைந்த இர. சிவலிங்கம் அவர்களின் நினைவாக கடந்த 23 ஆண்டுகளாக இயங்கி வருகின்ற ஞாபகார்த்தக் குழு 'மலையகம் 200' ஐ நினைவு கூரும் முகமாக மலையக மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கட்டுரைப் போட்டி ஒன்றினை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இப்போட்டி மலையகப் பாடசாலை மாணவர்களையும் மலையக இளைஞர்களையும் மையப்படுத்தியதாக அமையவுள்ளது.

மலையகக் கல்வித்துறைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் இளைஞர்களை தட்டியெழுப்பி சமூக விழிப்பினை ஏற்படுத்திய பெருந்தகையை நினைவுக் கூர்வதாகவும் இக்கட்டுரைப்போட்டி அமைவதோடு இளம் சமூகத்தினரிடையே ஆய்வுக் கலாசாரத்தினை ஊக்குவிப்பது இதன் பிரதான நோக்கமாகும்.

இப் போட்டியில் தெரிவாகும் கட்டுரையாளர்களுக்கு பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுவதோடு தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு அமரர் சிவலிங்கம் அவர்களின் 24 வது நினைவுப்பேருரை நிகழ்த்தப்படும் தினத்தன்று நூலாகவும் வெளியிடப்படும்.

போட்டிக்கான விபரங்கள்

❒ மாணவர் மட்டத்திலான போட்டியில் பங்குப்பற்றுவோர் மலையகத் தமிழ் பாடசாலைகளில் தற்போது கற்பவர்களாக இருக்க வேணடும். இதனை உறுதிப்படுத்துவதற்காக அதிபரின் உறுதிப்படுத்தல் கடிதத்தினை கட்டுரையுடன் இணைத்தல் வேண்டும்.

❒ இளைஞர் மட்டத்திலான போட்டியில் பங்கு கொள்வோர் மலையகத்தவர்களாக இருப்பதோடு 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். வயதினை உறுதி செய்வதற்கு தேசிய அடையாள அட்டையின் பிரதியை கட்டுரையுடன் இணைத்தல் வேண்டும்.

❒ இளைஞர் மட்டத்திலான கட்டுரைகள் ஆய்வு முறையியலை பின்பற்றி எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

❒ கட்டுரைகள் கணனியில் அச்சுப்பதிப்பு செய்யப்பட்டதாகவும் ஏ4 தாளில் 10 – 12 பக்கங்களுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

❒ மாணவர்களுக்கான பிரிவில் முதல் மூன்று இடங்களை பெறுவோருக்கு முறையே தலா ரூபா 10,000, ரூபா 7,500, ரூபா 5,000 வழங்கப்படுவதோடு ஆறுதல் பரிசு பெறும் ஐவருக்கும் தலா ரூபா 3,000 என்றவாறு வழங்கப்படும்.

❒ இளைஞர்களுக்கான பிரிவில் முதல் மூன்று இடங்களை பெறுவோருக்கு முறையே தலா ரூபா 12,500 ரூபா 10,000 ரூபா 7,500 வழங்கப்படுவதோடு, ஆறுதல் பரிசு பெறும் ஐவருக்கும் தலா ரூபா 5,000 என்றவாறு வழங்கப்படும்.

❒ அத்தோடு பரிசில் பெறும் அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

❒ கட்டுரைகள் 30.04.2023 அன்று அல்லது அதற்கு முன் பதாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு இல 7, அலெக்ஸான்றா இடம், வெள்ளவத்தை, கொழும்பு 6. (R. Sivalingam Memorial Committee, No – 07, Alexandra Trace, Wellawatte, Colombo – 06)

❒ அத்தோடு பின்வரும் மின்னஞ்சல் முகவரிகளுக்கு கட்டுரையின் மென் நகலை (Soft copy) அனுப்பி வைக்க வேண்டும். prama@ou.ac.lk பொன். இராமதாஸ் 0776622560, karunaharan25@gmail.com fyhe கலாநிதி எஸ் கருணாகரன் 0714500047

கட்டுரைகளுக்கான தலைப்புகள்

மாணவர் மட்டம்

1. மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்
2. 1960 களில் மலையக சமூக எழுச்சி
3. மலையக மக்களின் சமூக உருவாக்கம்
4. மலையக அடையாளமும் மலையக இலக்கியமும்
5. நாட்டார் பாடல்களில் மலையக வரலாறு
6. மலையக உரிமைப் போராட்டங்களும் தியாகிகளும்
7. மலையகப் பண்பாடு: தோற்றமும் வளர்ச்சியும்
8. மலையகப் பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்வி, வாய்ப்புகளும் பிரச்சினைகளும்
9. மலையகத்தில் தொழிற்கல்வி வாய்ப்புகளும் சவால்களும்
10. தோட்ட முறைமையும் உரிமை பிரச்சினைகளும்

இளைஞர் மட்டம்

1. மலையக வரலாற்றில் நடேச ஐயரின் வகிபாகம்
2. மலையக அரசியலில் இடதுசாரிகளின் வகிபாகம்
3. தேசிய நீரோட்டத்தில் மலையக மக்கள் ஒன்றிணைதல்: சவால்களும் தீர்வுகளும்
4. தோட்டங்களை கிராமங்களாக உருமாற்றுதல்
5. மலையக தோட்டத் தொழிலாளர்களின் நிலவுரிமை
6. தோட்டத் தொழிலாளர்கள் விவசாயிகளாக மாறுதல்
7. மலையக சமூகம் ஒரு தேசிய இனமா?
8. மலைய மக்களும் அதிகாரப் பரவலாக்கமும்
9. ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மலையக இலக்கியத்தின் பங்கு
10. மலையக பண்பாட்டு தளத்தில் தமிழ் நாட்டின் செல்வாக்கு
11. மலையகத்தில் ஒரு தேசிய பல்கலைக்கழகம்
12. மலையக சமூக மேம்பாட்டில் ஆசிரியர்களின் பங்களிப்பு

எம். வாமதேவன
இர. சிவலிங்கம் ஞாபார்த்தக் குழு

அரச நிறுவனங்களில் கடன் அடிப்படையிலான செலவினங்களுக்கு தடை

நாட்டின் 75வது சுதந்திர தினத்தை பெருமையுடன் கொண்டாடுவதற்கான விடயங்களை தனிப்பட்ட முறையில் கவனிக்கும் பணிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் முழுவதும் ஈடுபட்டார். இதனிடையே, சர்வதேச நாணய நிதியத்தின் கடனை பெற்றுக்கொள்வது மற்றும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலும் அவர் கவனம் செலுத்தினார். அத்துடன் பெப்ரவரி 08ஆம் திகதி பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தில் முன்வைக்கப்படவுள்ள அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை குறித்தும் அவர் கவனத்தைச் செலுத்தினார்.



திங்கட்கிழமை ஜனாதிபதி வழமை போன்று அமைச்சரவைக்குச் சென்றாலும், பொருளாதாரத்திற்கு முக்கியமான பல பிரேரணைகளை எடுத்துச் சென்றிருந்தார். இதன் போது அரச நிறுவனங்களில் செலவுகளைக் கட்டுப்படுத்தும் பிரேரணை ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பித்தார். இதன் மூலம் கடனடிப்படையில் செலவுகளை மேற்கொள்வதைத் தடுப்பது பிரேரிக்கப்பட்டிருந்தது.

“அமைச்சரவை அனுமதி கிடைத்ததன் பின்னர் நான் இதனை நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்புவேன்” என இந்தப் பிரேரணையினைச் சமர்ப்பித்து ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்தார்.

“சேர், இது மிகவும் கஷ்டமான வேலை. அனேகமான நிறுவனங்கள் கடன் அடிப்படையில்தான் செலவுகளை முன்னெடுத்துச் செல்கின்றன”. இது அமைச்சர் பந்துலவின் கருத்தாகும்.

“ஆம், இது கஷ்டமானதுதான். எனினும் எம்மிடம் நிதி இல்லை. இந்த மாதம் வருமானத்தை விட செலவு இருமடங்கு அதிகமாகும்” என்றார் ஜனாதிபதி.

நிதிச் செலவுகளைக் குறைக்கும் பிரேரணைக்குப் புறம்பாக இன்னும் சில பிரேரணைகளும் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பீ. எஸ். எம். சார்ள்ஸின் இராஜினாமா பற்றி அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் வினவினார்கள்.

“எனக்கு இராஜினாமாக் கடிதம் கிடைத்தது. ஆனால் இன்னமும் அதனை நான் ஏற்றுக் கொள்வதா? இல்லையா எனத் தீர்மானிக்கவில்லை” என பதிலளித்தார் ஜனாதிபதி.

மறுநாள் நிதி அமைச்சராக ஜனாதிபதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த பிரேரணை நிதி அமைச்சின் செயலாளரினால் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டது. கடன் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வேறு கொடுப்பனவுகளைச் செய்வதை நிறுத்துமாறும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொண்டால் அதனை அங்கீகரித்த அதிகாரியின் சொந்த நிதியிலிருந்து அதனைச் செலுத்த வேண்டும் என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரிக் கோப்புகள் குறைந்துள்ளதைப் பற்றி ஜனாதிபதி தெரிவித்த கருத்தை அனேகமானவர்கள் பாராட்டியிருந்தனர். அந்தக் கூற்றைச் சரியாக விளங்கிக் கொண்ட அனைவரும் நாடு வங்குரோத்து அடைந்த முறை தொடர்பில் தெளிவான புரிந்துணர்வைப் பெற்றுள்ளார்கள் என்பது அவர்களின் நிலைப்பாடாகும்.

“உலகில் முன்னேறிய நாடுகளில் நேரடி வரிகள் அதிகமாகும். மறைமுக வரிகள் குறைவு. எமது மறைமுக வரிகள் அதிகம், நேரடி வரிகள் குறைவாகும். தற்போது 10 வீதமான அதிக ஊதியம் பெறுவோரைப் பாதுகாக்க குறைந்த ஊதியம் பெறும் 80 வீதமானோர் பயன்படுத்தப்படுகின்றார்கள். குறைந்த சம்பளம் பெறுபவர்களுக்கு இது ஏன் விளங்காமல் இருக்கின்றது என எனக்குப் புரியவில்லை” என்றார் அமைச்சர் பிரசன்ன.

“இவ்விடத்தில் தவறான நம்பிக்கை தானே இருக்கின்றது. இப்போது மக்களுக்கு கஷ்டமாக உள்ளது. ஆனால் இந்தக் கஷ்டங்கள் வந்தது முன்னாள் ஜனாதிபதி எடுத்த தவறான தீர்மானங்களாலேயே என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்தானே. ஜனாதிபதி எடுத்த முடிவுகளின் பிரதிபலன்கள் கிடைக்க இருப்பது இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டிலாகும். இப்போது மக்களுக்கு இருக்கும் கஷ்டங்களில் அந்த 10% மானவர்கள் பயனடைகிறார்கள்” என வஜிரா கூறினார்.

“ஆமாம், மூன்றாம் காலாண்டில் சம்பளத்தை அதிகரிப்பேன் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார் அல்லவா ...” என இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார கூறினார்.

அனைத்தையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ஜனாதிபதி ரணில், நெல் விலையினை நிலையானதாக வைத்துக் கொள்வதற்காக நெல் கொள்வனவுக்காக 20 பில்லியன் ரூபாவினை வழங்குமாறு திறைசேரிக்கு உத்தரவிட்டார். இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் அமரவீர “தேர்தலை நடத்தாமல் விட்டால் பரவாயில்லை, விவசாயிகளின் நெல்லினைக் கொள்வனவு செய்வதற்கு நிதியினைத் தாருங்கள்” என ஜனாதிபதியிடம் கோரினார்.

இதனிடையே ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்கா, இராணுவ அதிகாரிகள் முகங்கொடுக்கும் கொடுப்பனவு பிரச்சினைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தார். இது விடயம் தொடர்பில் நிதி அமைச்சுடன் பேசி இயன்ற நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கூறினார். தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் சுற்றுலாத் துறையினர் அச்சமடைந்திருக்கின்றார்கள் என அமைச்சர் மனுஷ நாணயக்கார இங்கு கூறினார்.

“தேர்தலை நடத்துவதற்கு நிதியினை வழங்கினால் கடைசியில் நாடு மீண்டும் அராஜக நிலைக்குள்ளாகிவிடும் என சுற்றுலாத்துறையினர் அச்சமடைகிறார்கள். இது தொடர்பிலும் கவனத்தைச் செலுத்துங்கள்” என தெற்கின் சுற்றுலாத்துறையினைச் சேர்ந்தோர் தன்னிடம் கூறிய விடயங்களை அமைச்சர் மனுஷ கூறினார்.

இதன் போது ஜனாதிபதியிடத்தில் அமைச்சர் பந்துல கேள்வி ஒன்றைக் கேட்டார். “IMF க்குச் செல்லப் போவதில்லை என அநுரகுமாரவும் கூறுகின்றார். சஜித்தும் கூறுகின்றார். இது எமக்கு பிரச்சினையாகிவிடும். பெற்ற கடனை நாம் செலுத்தப் போவதில்லை என அவர்கள் கூறுகின்றார்கள்” என்று அமைச்சர் பந்துல கூறினார்.

“IMF க்குச் செல்லா விட்டால் அவர்கள் இலங்கையிலேயே கடனை அடைக்கும் முறைகளைக் கூற வேண்டும். ஒரு ட்ரிலியனை அண்மித்த கடன் செலுத்த வேண்டியிருக்கின்றது” என அங்கிருந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

ஜனாதிபதி திங்கட்கிழமை காலை சிங்கள கலாசார நிறுவனத்தின் அதிகாரிகளைச் சந்தித்து அந்நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் கேட்டறிந்தார். அங்கிருந்த பழைய நண்பரான டப்ளிவ். ஜயசிரியுடனும் ஜனாதிபதி பழைய விடயங்களைப் பற்றிப் பேச மறக்கவில்லை.

உலக வங்கி பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான பொறுப்பு ஜனாதிபதியினால் ஜனாதிபதி செயலக பிரதானி சாகலவிடம் ஒப்படைக்கப்பட்டதோடு, அதனடிப்படையில் அவர் செவ்வாய்க்கிழமை உலக வங்கி பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். 75வது சுதந்திர தின விழாவுக்காக ஜனாதிபதியின் அழைப்பில் இந்நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் ஜனாதிபதியை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

புதன்கிழமை ஜனாதிபதி கண்டிக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு ஆயத்தமாகியிருந்தது சுதந்திர தினத்தையொட்டி இராணுவத்தினருக்கு விருதுகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்வதற்காகும். ஜனாதிபதி புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர், தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தமது அபேட்சகர்களுக்காகச் செலுத்திய கட்டுப்பணத்தைச் செலவிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு ஆயத்தமாக உள்ளது என்ற செய்தி ஜனாதிபதிக்குக் கிடைத்தது.

இவ்விடயம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பிரதிநிதிகள் சிலர் குற்ற விசாரணைத் திணைக்களம், நிதி அமைச்சு மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பவற்றுக்குச் சென்று முறைப்பாடு செய்து இச்செயலுக்கான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். ஜனாதிபதி ரணில் உடனடியாக ஜனாதிபதி செயலாளரைத் தொடர்பு கொண்டு இவ்விடயம் தொடர்பில் விசாரித்து தனக்கு விபரங்களை வழங்குமாறு உத்தரவிட்டார்.

அன்றைய தினம் மாலை கண்டிக்குச் சென்ற ரணில், அங்கு 77 இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கு சிறப்புச் சேவைக்கான பதக்கங்களை வழங்கினார். வியாழக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த ஜனாதிபதி ரணில், 75வது சுதந்திர தின வைபவங்கள் வெற்றிகரமாக நடந்து முடிவதற்கு ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார். இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் கேட்ட மகாநாயக்க தேரர்கள், மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி ரணில், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்ததன் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படப் போகும் பல்வேறு மாற்றங்கள் தொடர்பில் மகாநாயக்க தேரர்களுக்கு விபரித்தார். அதே போன்று 13ம் அரசியலமைப்புத் திருத்தத்தின் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர். தலதா கண்காட்சி ஒன்றை நடாத்துமாறும் ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

அன்றைய தினம் மாலை 75வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வகையில் தபால் தலை ஒன்றும், நினைவு நாணயக் குற்றி ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. 1000 ரூபாய் பெறுமதியுடைய நினைவு நாணயக் குற்றி ஒன்றும், 50 ரூபாய் பெறுமதியுடைய நினைவு தபால் முத்திரையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் பின்னர் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து 11 வெளிநாட்டுத் தூதுவர்கள், 11 உயர்ஸ்தானிகர்களுக்கு ஜனாதிபதியினால் நற்சான்றுப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அந்த வைபவத்தின் பின்னர் தலதா மாளிகைக்குச் சென்ற ஜனாதிபதி சமய நிகழ்வுகளில் பங்கேற்றார். தலதா மாளிகையில் மாலை தேநீர் விருந்தில் கலந்து கொண்ட அவர், வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர், விக்டோரியா அணையில் நிர்மாணிக்கப்பட்ட சிறப்பு பந்தலில் இரவு முழுவதும் இடம்பெற்ற சமய சொற்பொழிவைக் கேட்பதற்காக புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை, சுதந்திர தினத்தையொட்டி வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த 108 ஏக்கர் காணிகள் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அவற்றின் ஆரம்ப உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது பிரசாரக் கூட்டமானது அக்கட்சிக்கு புதிய உத்வேகத்தை வழங்கியிருக்கின்றது. அதன் மாத்தளை கூட்டத்தில் முக்கியமான நிகழ்வொன்று இடம்பெற்றது.

அது இரண்டு வருடங்கள் அரசியலிருந்து விடைபெற்று அமைதியாக இருந்த சுஜீவ சேனசிங்க அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதாகும்.

எம். எஸ். முஸப்பிர்

இஸ்ரேல்-பலஸ்தீன போர் பதற்றமும் அமெ. வெளியுறவுச் செயலாளரது விஜயமும்

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

மேற்காசிய அரசியலில் இஸ்ரேலிய, பலஸ்தீன முரண்பாடென்பது நீண்ட வரலாற்றுப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. பலஸ்தீன மக்களின் சுயநிர்ணயத்திற்கான போராட்டம் தீர்வற்ற சூழலை கொண்டதாகவும் இஸ்ரேலிய ஆட்சியாளர்களது தந்திரங்களால் அழிவுகளையும் இழப்பீடுகளையும் எதிர்கொள்ளும் இனமாகவும் மாறிவருவதையும் காணக்கூடியதாக உள்ளது. தொடர்ச்சியாக பெரும் போராட்டத்தை நடத்திய பலஸ்தீனர்கள் காஸா பகுதிக்குள் அடக்கப்பட்டிருப்பதுடன் தொடர்ச்சியாக யூத இராணுவக் கெடுபிடியினால் பாரிய அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டு முழுவதும் ஜெரூசலத்தில் அமைந்துள்ள பலஸ்தீன பள்ளிவாசலினால் ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து இரு பிரிவினருக்கும் இடையில் வன்முறை வெடித்துள்ளது. இதனை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் அட்டனியோ பிளிங்டன் இஸ்ரேலிய பிராந்தியத்திற்கு விஜயம் செய்துள்ளார். இக்கட்டுரையும் இஸ்ரேல், பலஸ்தீன முரண்பாட்டையும் அமெரிக்காவின் நகர்வையும் தேடுவதாக உள்ளது.

முதலில் இஸ்ரேலிய சிட்டி ஆப்டேவிட் பகுதியில் அமைந்துள்ள யூத வழிபாட்டுத் தலம் மீது 27.01.2023 அன்று பலஸ்தீன துப்பாக்கிதாரி தாக்குதல் நிகழ்த்தியதில் 7 யூதர்கள் கொல்லப்பட்டனர். மூன்று பேர் காயமடைந்தனர். இத்தாக்குதல் தொழுகைக்கு தயாரான போது நிகழ்த்தப்பட்டதாக யூதப் பொலிசார் அறிவித்துள்ளனர். இந்த ஆண்டின் ஆரம்பம் முதலே இருதரப்புக்குமான பதற்றம் நிலவியது. இதில் கடந்த 26.01.2023 இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீன அகதி முகாமுக்குள் தேடுதல் நடாத்திய போது 9 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இதனை அடுத்து காஸாப்பகுதியிலிருந்து இஸ்ரேலியர் மீது ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதெனவும் பதிலுக்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியது. இரு தரப்பும் போர் பதற்றத்தை அதிகரித்துள்ளதாகவும் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யூதர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் எனவும் இஸ்ரேலிய பொலிசார் தெரிவித்துள்ளனர். அதே நேரம் இன்னோர் யூத வழிபாட்டுத் தலத்தின் மீது 13 வயது பலஸ்தீன சிறுவன் தப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாகவும் அதில் இரு யூதர்கள் காயப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இத்தகைய பதற்றத்தை தணிக்கும் நோக்குடன் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் இஸ்ரேல் பலஸ்தீன தலைவர்களைச் சந்தித்துள்ளார். அவர் இருதரப்பையும் அமைதி காக்குமாறு கோரியுள்ளார். ஆனால் இருதரப்பும் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபடுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இஸ்ரேலிய புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பலஸ்தீனர் மீதான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இதேநேரம் அமெரிக்க வெளியுறவுச் செயலாளரது இப்பிராந்தியம் நோக்கிய விஜயத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வது அவசியமானது. உலகளாவிய ரீதியில் பாரிய நெருக்கடி நிலவும் போது அமைதிகாக்கும் அமெரிக்கா இஸ்ரேல் விடயத்தில் மட்டும் அதிதீவிரம் காட்டுவதற்கான காரணமும் முக்கியத்துவமும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

ஒன்று, யூதர்கள் கொல்லப்படுவதை எந்தளவுக்கு இஸ்ரேல் அனுமதிக்காதுள்ளதோ அதேயளவுக்கு அமெரிக்காவும் உள்ளது. அமெரிக்க ஆட்சியாளரது இருப்பு யூதர்களது செல்வாக்கிலுள்ளதென்பதுடன் அமெரிக்க ஆட்சி மீது யூதர்களுக்கு தனித்துவமான பங்கு காணப்படுகிறது என்பதாகும். அது மட்டுமல்ல யூதர்கள் கொல்லப்படுவது மேற்காசியாவுக்கு மட்டுமல்ல உலகத்திற்கே ஆபத்தானதாக மாறிவிடும் என்பதை உணர்ந்ததன் விளைவே அமெரிக்கா வெளியுறவுச் செயலாளரது அவசர விஜயமாகும்.

இரண்டு, அமெரிக்கா தனது நட்பு நாட்டுக்குள்ளேயோ அல்லது அணிநாடுகளின் பிராந்தியத்திற்குள்ளேயோ ஒரு போரை நிகழ்த்த விரும்பாதுள்ளது என்பதையே கொண்டுள்ளதாக தெரிகிறது. அதாவது சீனா, ரஷ்யா போன்று ஒரு போரை நிகழ்த்தவோ அல்லது நட்பு சக்திகள் போரை புரியவோ அமெரிக்கா அனுமதிக்காது என்பதையே கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது. அவ்வகையான ஒரு போரை அமெரிக்க நட்புச் சக்திகள் நிகழ்த்துமாக இருந்தால் அதன் விளைவு அமெரிக்காவின் எதிர்காலத்திற்கு ஆபத்தாக மாறிவிடும் என்பதில் கவனம் கொண்டுள்ளது. அதற்காக போரைத் தவிர்க்கும் நகர்வை துரிதப்படுத்தியுள்ளது. இஸ்ரேலிய தரப்பை மட்டுமல்ல பவலஸ்தீன ஜனாதிபதி அப்பாஸையும் சந்தித்து பிளிங்கன் உரையாடியுள்ளார்.



மூன்று, பலஸ்தீனர்கள் தொடர்ச்சியாக தாக்குதலை நிகழ்த்துவார்களாயின் யூததேசம் அதிக நெருக்கடியை எதிர் நோக்க நேரிடும் என்பதை கருத்தில் கொண்டே அமெரிக்காவின் நகர்வு அமைந்துள்ளது. பலஸ்தீனர்களது தற்கொலைத் தாக்குதல்களாயினும் துப்பாக்கித் தாக்குதலாயினும் யூதர்களது உயிரிழப்பினை அதிகரிக்கக் கூடியது. அதனால் அரபு, இஸ்ரேலியப் பிராந்தியம் பதற்றமடைவதுடன் உலகளாவிய போக்கின் தன்மை அமெரிக்காவுக்கு நெருக்கடியாக அமைந்துவிடும். யூதர்கள் நிரந்தரமாக அமைதியற்று இருப்பதென்பது அமெரிக்காவின் அமைதிக்கும் ஆபத்தானதாகவே அமையும். அதனால் யூதர்கள் மீதான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டும். அதுவே அமெரிக்காவுக்கும் அதன் உலகளாவிய இருப்புக்கும் இலாபகரமானதாக அமையும். அதற்கான நகர்வையே அமெரிக்க முன்னெடுத்துள்ளது. யூதர்கள் அமெரிக்காவின் செல்வாக்குக்குள் இருப்பதென்பதை விட அமெரிக்கா யூதர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவே தெரிகிறது. அதற்கான சேவையையே பிளிங்கன் வெளிப்படுத்திவருகிறார்.

நான்கு, ரஷ்யா மேற்காசியாவில் சிரியா, ஈரான் மற்றும் துருக்கி போன்ற நாடுகளது ஆதரவுடன் பலமானதாகவே உள்ளது. அதனால் அத்தகைய பலத்தை கட்டுப்படுத்தும் உத்தியாக தொடங்கிய உக்ரைன் ரஷ்யப் போர் சாதகமான விளைவை அமெரிக்காவுக்கும் மேற்குலகத்திற்கும் ஏற்படுத்திவருகிறது. அத்தகைய போர் வலுவான மாற்றத்தை ரஷ்யாவின் செல்வாக்குப் பிராந்தியங்களில் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. அதனால் ரஷ்யாவுக்குள்ளும் அதன் பிராந்தியங்களுக்குள்ளும் பலவீனம் ஏற்படுவதுடன் அத்தகைய சூழல் உருவான பின்பு ஒரு போரை இஸ்ரேல் ஆரம்பித்தால் அதில் அமெரிக்காவின் பங்கு வேறுமாதிரியாக அமையும். அதாவது போரை ஆதரிக்கும்' நிலையில் அமெரிக்காவின் போக்கு காணப்படும். அத்துடன் உக்ரைன் போரை முழுமைப்படுத்தும் நோக்கில் அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் செயல்படுகின்றன. தற்போது உக்ரையின் ஐரோப்பிய யூனியன் மாநாடு ஒன்றினை தொடக்கியுள்ள நிலையில் போர் ஐரோப்பாவுக்குள் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியும் ரஷ்யா மீதான தடைகளையும் பற்றிய உரையாடல் பலமடைந்து வருகிறது.

உக்ரைன் போரை எதிர்கொள்வதற்கான நகர்வுகளை ஐரோப்பிய நாடுகளும் நேட்டோ அணியினரும் தீவிரப்படுத்த முயல்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் அமெரிக்காவுக்கு கிடைத்துள்ள வாய்ப்புகளை பாதுகாக்கும் உத்தியிலேயே பிளிங்கனின் மேற்காசிய பயணம் அமைந்துள்ளது.

ஐந்து, ஆனால் அமெரிக்கா இஸ்ரேலின் மட்டுப்படுத்தப்பட்ட போரை ஆதரிக்கும் நாடாகவே உள்ளது. ஈரானிய இராணுவத் திறனை வளர்க்கும் நகர்வுகளை அழிப்பது மற்றும் அதன் மூலமாக திகழும் இராணுவத் தலைமைகளை கொல்வது போன்ற நிகழ்வுகளை இஸ்ரேல் மேற்கொள்ள வேண்டும் என்பதில் அமெரிக்கா கவனமாக செயல்படுகிறது. அதேநேரம் இஸ்ரேல் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் செல்வாக்கை உதறிவிட்டு செயல்படுவதையும் அமெரிக்கா அதிகம் விரும்பாத போக்கு காணப்படுகிறது. இஸ்ரேலை அமெரிக்கா இப்பிராந்தியத்தில் தலைமைதாங்க அனுமதிக்காத போக்காகவே தென்படுகிறது.

ஆறு, இஸ்ரேல் ஏற்கனவே திட்டமிட்டபடி உக்ரைன் ரஷ்யப் போரில் உக்ரைனுக்கு ஆதரவளிப்பதில்லை என்பதை அமெரிக்கா மாற்ற முயலுகிறது. அதாவது ரஷ்யாவுக்கு எதிராக ஆயுத தளபாடங்களையும் உளவுச் செயல்பாடுகளையும் உக்ரைனுக்காக வழங்க வேண்டும் என்ற எண்ணத்தை இஸ்ரேலுக்கு ஏற்படுத்த முனைகிறது. ஆனால் இஸ்ரேல் ரஷ்யா விடயத்தில் அதிக முரண்பாட்டை ஏற்படுத்தாது மேற்காசியப் பிராந்தியத்தில் செயல்பட வேண்டும் என்பதில் அக்கறையாக உள்ளது. அது இஸ்ரேலின் இருப்பையும் பாதுகாப்பையும் பாதிப்பதாக அமையும் என்பதில் இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் தெளிவாக உள்ளனர். ஆனால் இஸ்ரேலிய பிரதமரது பிரான்ஸ் பயணம் மேற்கின் எதிர்பார்ப்பு வேறானது என்பதை உணர்த்துவதாகவே தெரிகிறது. இஸ்ரேலிய இராணுவ தொழில்நுட்பம் வலுவானதாகவே உள்ளது. அமெரிக்கா, ரஷ்யாவையும் கடந்து அதன் தொழில்நுட்ப பலம் அலாதியானது என்பதை ஈரான் இராணுவத் தளபதி மற்றும் அணு விஞ்ஞானி மீதான இரு தாக்குதல்களும் உணர்த்தியிருந்தன. எதுவானாலும் அமெரிக்கா, உக்ரைன் இஸ்ரேல் நெருக்கத்தை சாதகமாக்கும் முயற்சியிலும்' ஈடுபட்டுள்ளது.

எனவே மேற்காசிய அரசியலில் பலஸ்தீனர்களுக்காக அல்லது யூதர்களுக்காக இருதரப்பினரது பதற்றத்தை அமெரிக்கா கையாண்டதை விட முழு உலகத்திலும் அமெரிக்காவுக்கான வாய்ப்புக்களையும் நடைமுறையையும் கையாள முனைந்துள்ளதை காணமுடிகிறது. உக்ரைன் போர் ரஷ்யாவை முழு உலகத்திலிருந்தும் பலவீனப்படுத்தும் என்பதே அமெரிக்க உபாயமாக உள்ளது. அதனால் இஸ்ரேல் உக்ரைன் போருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த பிளிங்கன் முயலுவதாகவே தெரிகிறது. அதன் மூலம் இந்தியா, சீனாவின் பலத்தையும் முடிவுக்கு கொண்டுவராது விட்டாலும் பலவீனப்படுத்தலாம் என்ற உத்தியுடன் அமெரிக்க நகர்வுகள் காணப்படுகின்றன.

மைத்திரிபால சிறிசேன சொல்ல மறந்த கதை

அருள் சத்தியநாதன்

உலகின் பொறுப்பு வாய்ந்த பதவிகளை ஏற்கும்போது அவர்களுக்கு எவ்வளவு புகழும் செல்வாக்கும், எவ்வளவு அதிகாரங்களும் அவர்களுக்கென்ன கொடுத்து வைத்தவர்கள் என்று நாம் எண்ணி பெருமூச்சு விடுவது வழக்கம். ஆனால் இந்தச் செல்வம், செல்வாக்குக்கு அப்பால் அவர்கள் மக்களுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள், கரணம் தப்பினால் கிட்டுவது அதலபாதாளம் என்றொரு பக்கம் இருப்பதை எண்ணிப் பார்க்க நாம் மறந்துவிடுகிறோம். உயர் பதவிகளை வகிப்பவர்கள் பொறுப்புகூறலில் இருந்து விலகி விடும்போது அவர்கள் காலம் என்ற குப்பைக்கூடைக்குள் வீசப்பட்டு விடுவார்கள். வீசப்பட்டுமுள்ளார்கள்.

காந்தி என்ற பெயரை பல லட்சம் பேர் தமது பெயராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஹிட்லர், முசோலினி, இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் போன்ற பெயர்களை யாரும் வைத்துக்கொள்வதில்லை. ஜெயலலிதா பல சாதனைகளை நிகழ்த்திய ஒரு இரும்புப் பெண்மணி, கூடாநட்பும் பேராசையும் அவரை ஒரு குற்றவாளியாகவே மரிக்கச் செய்தது.

அமெரிக்காவுக்கு ஒரு தலைவலியாக மாறிப் போயிருந்த வியட்நாம் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை அமெரிக்க ஜனாதிபதியான ரிச்சர்ட் நிக்சனையே சாரும். அமெரிக்காவும் சீனாவும் முகம் பார்த்துக் கொள்ளாத பகையாளி நாடுகள். முதல் தடவையாக இரு நாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட இரும்புத் திரையைத் தகர்த்து இராஜாங்க உறவை ஏற்படுத்தியவர் நிக்சன். இவற்றை எல்லாம் செய்து முடிப்பதற்கு ஹென்றி கிசிஞ்சர் என்ற இராஜதந்திரியை அவர் விசேட ஆலோசகராக வைத்திருந்தார். நிக்சன் நீண்ட காலமாக அரசியலில் ஜனாதிபதியாகும் முனைப்புடன் இருந்தவர். 1960 ஜனாதிபதித் தேர்தலில் ஜோன் கென்னடியுடன் போட்டியிட்டு தோல்வியைத் தழுவியவர். பின்னர் 1967இல் ஜனாதிபதியாக குறைந்த வித்தியாசத்தில் தெரிவான அவர், 1972 தேர்தலில் பெருவெற்றி பெற்று இரண்டாம் முறையும் ஜனாதிபதியானார். எனினும் இரண்டு வருடங்களில் 1974ஆம் ஆண்டு பதவியை இராஜிநாமா செய்துவிட்டு வீடு செல்ல வேண்டியதாயிற்று. 1972 தேர்தலில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி எத்தகைய பிரசார உத்திகளை மேற்கொள்ளப் போகிறது என்பதை நிக்சன் சார்ந்த குடியரசுக் கட்சி ஒட்டுக்கேட்க முனைந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டோரைக் காப்பாற்ற முனைந்தார் என்ற குற்றச்சாட்டில் அவர் பதவிதுறக்க நேரிட்டது. இது வோட்டர் கேட் ஊழல் எனப்பெயர் பெற்றது.

மேல் நாடுகளில் தலைவர்கள் தார்மிகப் பொறுப்பு ஏற்று பதவிகளை இராஜிநாமா செய்வது இன்றளவும் சாதாரணமான விடயம். எந்தத் தவறும் செய்யாத நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா கூட, இதுவே எனக்குப் போதும், இனிமேல் என் கைவசம் புதிய சரக்கு என்று சொல்வதற்கு எந்த மெஜிக்கும் கிடையாது என்று சொல்லி விட்டு பிரதமர் பதவியை இராஜிநாமா செய்தபோது, இப்படியும் கூடத் தலைவர்களா என வியந்து போனோம். மேலை நாடுகள் என்றில்லை, இந்தியாவிலும் இவ்வாறு இராஜிநாமா செய்யக்கூடிய அரசியல் தலைவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். மக்கள் ஆதரவு இல்லை என்றதும் மல்லிகார்ஜுன கார்கோவிடம் காங்கிரஸ் தலைமையை அளித்துவிட்டு காந்தி குடும்பம் கட்சிப் பணியாற்றச் சென்றுவிட்டது. பதவியில் இருக்கும் காங்கிரஸ் தலைவர்கள் பதவிகளை இராஜிநாமா செய்துவிட்டு கட்சிப் பணியாற்ற வேண்டும் எனக் காமராஜர் ஒரு கட்சித் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதன் பிரகாரம் முதல்வராக பணியாற்றிய அவரே பதவியை 1963இல் இராஜிநாமா செய்துவிட்டு கட்சிப் பணியாற்ற சென்றுவிட்டார். இப்படியும் அரசியல்வாதிகள்!

இப்படி உலகளவில் தனிப்பட்ட ரீதியாக நற்பண்புகளைக் கொண்டவர்கள், அரசியல் கண்ணியம் கொண்டவர்களை நாம் பார்த்திருக்கிறோம். இதற்கு விதிவிலக்கானவர்கள் ஏராளம். இதே சமயம் முன்னாள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருவகையில் பாராட்டத்தக்கவர்.

தன்னால் நாட்டு நிர்வாகத்தை முறையாகக் கையாள முடியாது என்பதையும் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகள் தன் கட்டளையை திறம்பட நிறைவேற்றுவதில்லை என்பதையும் அனைத்தும் கைமீறிப் போய்விட்டதையும் உணர்ந்த பின்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறினார். பின்னர் பதவி விலகினார். இவரால் ஆகக் கூடும் எனக் கருதப்பட்டவர், எதிர்க்கட்சிக்காரர் என்ற நிலையிலும் அவரிடம் பொறுப்புகளை வழங்குவதில் பின்நிற்கவில்லை. இவ்வகையில் இவர் பாராட்டுக்குரியவர்.

இப் பின்னணியில் நின்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கத்தோலிக்க மதப் பீடத்திடமும் கத்தோலிக்கர்களிடமும் மன்னிப்பு கோரியதை ஒரு முன்னுதாரணமாக நல்ல கலாசாரத்தின் வெளிப்பாடாக நாம் கருத முடியுமா மற்றும் கத்தோலிக்க பீடம் அம்மன்னிப்பை நிராகரித்தது சரியான செயலா என்ற கேள்விகளுக்கு பதில் தேட வேண்டியிருக்கிறது.

கத்தோலிக்க பீடம் அவர் மன்னிப்பை நிராகரித்ததை ஒருபுறம் வைத்துவிட்டுப் பார்த்தோமானால் பாதிக்கப்பட்டவர்களும் சரி, அனைத்து கத்தோலிக்கர்களும் சரி முன்னாள் ஜனாதிபதியை மன்னித்த மாதிரியும் தெரியவில்லை.

இதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களையும் அவதானிக்க வேண்டும்.

உண்மையில் என்ன நடந்தது என்பது முன்னாள் ஜனாதிபதிக்கு நன்கு தெரியும். சஹ்ரானுக்கு பின்னால் இருந்து ஒருவர் செயல்பட்டிருப்பாரானால் அவர் யார் என்பதையும் இவர் அறிந்திருக்கக் கூடும் என்பது பெரும்பாலான கத்தோலிக்கர்களின் கருத்து. ஒரு நாட்டின் ஜனாதிபதியாக விளங்குவதற்கான தகுதி தனக்கு இருக்கிறதா, தனது பலவீனங்கள் யாவை என்பதும் மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரிந்திருக்கும்.

இப் பின்னணியில் பார்த்தால், இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு தார்மிகப் பொறுப்பு என்பதற்கு அப்பால் இவ்வாறான ஒரு சதித் திட்டம் உருவாகி நடைபெறுவதற்கு தான் பல வழிகளில் காரணமாக இருந்திருக்கிறேன் என்பதை அவர் அறிந்து வைத்திருப்பார். ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை, ஆணைக்குழுவின் விசாரணை என்பவை வெளியான பின்னரும் அவருக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தோன்றவில்லை.

அப்பாவிகள் கொல்லப்பட்டு விட்டார்களே என்று எப்போது இரக்கமும் பச்சாதாபமும் குற்ற உணர்வும் அவருள் ஏற்பட்டிருக்கிறது என்றால், அக்கோரச் சம்பவம் நிகழ்ந்து நான்கு ஆண்டுகள் கழிகின்ற நிலையில்தான். அதுவும் உயர் நீதின்றம் அவர் நடந்துகொண்ட விதங்கள் தவறானவை என்பதைக் கண்டு உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்து வேதனைப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு 10 கோடி ரூபாவை நஷ்டஈடாக அவர் வழங்க வேண்டும் என இறுதித் தீர்ப்பை வழங்கிய பின்னர்தான் மன்னிப்பு கேட்க முன்வந்திருக்கிறார்!

உயர் பொறுப்பு வகிப்பவர்கள் தார்மிகப் பொறுப்பை ஏற்கத்தான் வேண்டும் என்பதை முன்னர் உதாரணங்களுடன் பார்த்தோம். ஆனால் இந்த 10 கோடி ரூபா நஷ்டஈடு தார்மிகப் பொறுப்புக்காகத்தான் என்று அவர் ஒரு சித்தரிப்பைக் காட்ட முயல்வது தவறானது.

ஏனெனில் 2015 முதல் 19 வரை மிகச் சில தடவைகள் மட்டுமே பாதுகாப்புச் சபை கூட்டப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு சபைக் கூட்டத்தை பிரதமர், பதுகாப்பு பிரதி அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் உரிய உயர் அதிகாரிகளின் பங்களிப்புடன் குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது கூட்டி பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்ந்திருக்க வேண்டும். இது அவர் பொறுப்பு. அதை அவர் செய்யவில்லை. இன்றைய ஜனாதிபதியே அன்றைய பிரதமர். இச் சம்பவம் நிகழ்ந்த பின்னர், பாதுகாப்பு சபைக் கூட்டங்களுக்கு தான் அழைக்கப்படுவதில்லை என்றும் தான் கூட்ட முயன்றபோது தனக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என்றும் சம்பவத்தின் பின்னரும் தனக்கு ஒத்துழைப்பு கிட்டவில்லை என்றும் அன்றைய பிரதமரான இன்றைய ஜானாதிபதி தெரிவித்திருந்தார். தனிப்பட்ட கோப தாபங்கள் வேறு நாட்டின் பாதுகாப்பு என்பது வேறு என்பதை முன்னாள் ஜனாதிபதி உணர்ந்திருக்க வேண்டும். அப்படி அவர் செய்யவில்லை.

ஆலயங்கள் மீது தாக்குதல்கள் நடைபெற ஒரு ஏற்பாடு உள்ளது என்ற உளவுத் தகவல் ஏற்கனவே வந்துவிட்டது. உயர் அதிகாரிகள் அத்தகவலின் பேரில் விரைந்து நடவடிக்கை எடுக்காமல்விட்டு விட்டார்கள். இதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் மீதும் நஷ்டஈட்டுத் தொகைகளை நீதிமன்றம் அறிவித்துவிட்டது.

முன்னாள் ஜனாதிபதியை தமிழ் சிங்கள புத்தாண்டின்போது பொலிஸ் மற்றும் உளவுத்துறை உயர் அதிகாரிகள் சந்திக்க வந்திருந்தார்கள் என்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள் என்றும் கூறியுள்ள மைத்திரிபால சிறிசேன, அப்போதுகூட தன்னிடம் நடைபெறவிருக்கும் தாக்குதல் தொடர்பான உளவுத் தகவலைப் பற்றி அவர்கள் பிரஸ்தாபிக்கவில்லை என்று கவலைப்பட்டிருக்கிறார்.

முகமன் கூறி வாழ்த்து பெற வருபவர்கள் மகிழ்ச்சியான எளிமையான வார்த்தைகளைத்தான் பயன்படுத்துவது வழக்கம். அலுவலக ரீதியான பேச்சுக்கள் பொதுவாகவே இவ்வான சந்தர்ப்பங்களில் இடம்பெறுவதில்லை. உத்தியோகபூர்வமான சந்திப்புகளை உரியவர்களுடன் வழமான அடிப்படையில் நடத்தாமல் முகமன் கூறவந்த இடத்திலாவது சொல்லியிருக்கலாமே என அங்கலாய்ப்பது சரியானது அல்ல. இது அவரது நிர்வாக பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

சந்திரிகா அம்மையார் காலத்திலும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போதும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்ந்தன என்றும் அப்போதெல்லாம் அவர்கள் மன்னிப்பு கேட்டார்களா? என்றொரு கேள்வியை முன்வைத்தார்.

அது பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் வடக்கில் ஒரு சிவில் யுத்தம் நடைபெற்ற காலம். எப்போதும் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதை அனைவருமே அறிந்திருந்தார்கள். இத்தகைய தாக்குதல்களைத் தடுப்பதற்கான கடும் முயற்சிகள் நாடெங்கும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவற்றைத் தாண்டித்தான் தாக்குதல்கள் இடம்பெற்றன. எனவே அன்றைய காலகட்டம் மற்றும் சூழல்கள் வேறு, 2019 நிலைகள் வேறு. இரண்டையும் முடிச்சுப்போட்டுப் பார்ப்பது தவறு.

சஹ்ரான் என்ற ஒரு மதத் தீவிரவாதி இயங்கி வருவது தெரிந்தும் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் அரசுக்கு தெரிந்த நபரும்கூட காத்தான்குடியில் ஒரு மோட்டார் சைக்கிளை வெடிக்க வைத்து முன்னோட்டம் பார்க்கப்பட்ட சம்பவத்தையும் உளவுத் துறையினர் பெரிய விஷயமாக எடுத்து விசாரணைகள் மேற்கொள்ளவில்லை.

இவை அனைத்தும் இலங்கை பாதுகாப்பில் ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பதையே எடுத்துக்காட்டின. ஒரு மெத்தனம் நிலவியது. இதற்கு அதிகாரிகளை குறைசொல்வதா அல்லது இவ்வாறான மெத்தன நிலை உருவாக்கத்துக்கு காரணமான உயர்மட்டத்தை குறைசொல்வதா? உயர்மட்டம்தானே பொறுப்பு கூற வேண்டும்!

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்று சகிப்புத்தன்மையை ஒரு அறமாக உபதேசிக்கக்கூடிய கத்தோலிக்க தேவாலயம் மன்னிப்பை எற்காமல் விட்டது சரியா?

மைத்திரிபால சிறிசேன கேட்டது மன்னிப்பே அல்ல; அது ஒரு நிர்ப்பந்தம். இறுதித் தீர்ப்பும் வந்துவிட்டது. இனி செய்வதற்கு ஒன்றும் இல்லை என்ற நிலையிலேயே மன்னிப்பு கேட்கப்பட்டுள்ளது. இத்தீவீரத் தாக்குதல்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ அல்லது மெத்தனத்தினாலோ நானும் பொறுப்பாளியாகி விட்டேன் எனவே நான் அச்சமூகத்திடம் மன்னிப்பு கோரியிருக்க வேண்டும் என்று உணர்ந்து சம்பவம் நிகழ்ந்த சில தினங்களில் அவர் மன்னிப்பு கோரியிருந்தால் மக்களும் அதை ஏற்றிருப்பார்கள். கத்தோலிக்கர்களிடம் மட்டுமல்ல; சகல இலங்கை பிரஜைகளிடமும் அவர் மன்னிப்பு கோரியிருந்திருக்க வேண்டும்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

தங்க கிரெடிட் கார்ட்கள்!!

கடத்தல்காரர்களின் முயற்சியை முறியடித்த சுங்க அதிகாரிகள்

வசந்தா அருள்ரட்ணம்

தங்கம் ஒவ்வொருவரின் வாழ்விலும் ஓர் அங்கமாக மாறிவிட்டது. நம்மை அலங்கரிக்கும், ஜொலிக்கும் தங்க ஆபரணங்கள் இல்லாமல் எந்த விசேட நிகழ்வுகளும் முழுமைபெறாது. எத்தனை விதமான ஆபரணங்கள் வந்தாலும் தங்கத்தின் விலை அதிகரித்தாலும் அதன் மீதான மதிப்பும் மோகமும் நம்மிடையே குறையப்போவதில்லை. அதனால் தான் தங்க கடத்தல் காரர்கள் 'எப்படி எல்லாம் தங்கத்தை கடத்தலாம்' என யோசித்து காலத்துக்கு காலம் பல விதமான நுட்பங்களை கையாளுகின்றனர். உடைமைகளில் வைத்து கடத்துவது, காலணிகளில் வைத்து கடத்துவது, உடல் உறுப்புகளில் மறைத்து வைத்து கடத்துவது என பலவிதமாக தங்கத்தை கடத்துகின்றனர். அதனால் தான் வெளிநாடுகளிலிருந்து தங்கத்தைக் கொண்டு வருகிறவர்களில் 40 சதவீதம் பேர் தப்பிவிடுகின்றனர். ஒருசிலரே சிக்குகின்றனர். சில கடத்தல் சம்பவங்களுக்கு அதிகாரிகளும் உடந்தையாக இருக்கின்றனர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடல் வழியாகவும் விமானம் மூலமாகவும் தங்க கடத்தல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

அந்தவகையில் நீண்டகாலமாக பாரியளவில் முன்னெடுக்கப்பட்ட தங்க கடத்தல் நடவடிக்கையொன்றை இலங்கை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் அண்மையில் வெற்றிகரமாக முறியடித்துள்ளனர்.

எகிப்திய பொற்கொல்லர்கள் ஆரம்பகாலங்களில் தங்கத்தை உருக்கி ஊதுகுழல் செய்தார்களாம். ஆனால் இச்சம்பவத்தில் தங்கத்தை உருக்கி கிரெடிட் / டெபிட் கார்ட்களை கடத்தல்காரர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் செய்துள்ளனர்.

வியாபார நடவடிக்கைகளுக்காக நிர்மலா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண் அடிக்கடி இந்தியாவுக்கு சென்றுவருவது வழமை. ஆனால் அவரது செயற்பாடுகளில் சந்தேகம் வலுக்கவே, இந்திய வருமான புலனாய்வு பிரிவினரின் (Directorate Of Indian Revenue Intelligence) கவனம் அவர் மீது திரும்பியது. இவரை நீண்டகாலமாகவே இந்திய வருமான புலனாய்வு பிரிவினர் மிகவும் இரகசியமான முறையில் கண்காணித்து வந்தனர். அவர் எதற்காக இந்தியாவுக்கு அடிக்கடி வந்து செல்கின்றார்? என்பதை அவர்கள் அறிய முற்பட்டனர். அதே நேரம் நிர்மலாவின் வியாபாரம் டுபாய் வரை விஸ்தரிக்கப்பட்டது. இலங்கையில் தனிநபர் வருமான புலனாய்வு விசாரணைகள் பிரிவொன்று தனியாக இல்லாமையால் இதுதொடர்பில் இந்திய வருமான புலனாய்வு பிரிவினர், இலங்கை சுங்க திணைக்கள கண்காணிப்பு பிரிவினருக்கு தெரியப்படுத்தினர். அதற்கமைய நிர்மலாவின் தங்க கடத்தல், அதன் பின்னணியிலிருந்து செயற்படுபவர்கள், உதவியாளர்கள் தொடர்பில் இலங்கை சுங்க திணைக்கள அதிகாரிகள் தகவல்களை திரட்டினர். அதனையடுத்து அவர் மீண்டும் இலங்கைக்கு வரும் நாளை அறிந்து அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கையும் களவுமாக மடக்கிப் பிடிக்க திட்டமிட்டனர். எனினும் நிர்மலா, பிரதான கடத்தல்காரரின் கைக்கூலியெனவும் அவர் பணத்துக்காக இதில் ஈடுபடுவதாகவும் இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. எனவே நிர்மலா அவர்களின் முதல் இலக்காகவிருந்தது.

அது கடந்த மாதம் 13ஆம் திகதி. அதிகாலை 01.52 மணியிருக்கும் நிர்மலா ஏ.ஐ 275 என்ற இந்திய விமானத்தில் பயணியாக பெரும் தொகை தங்கத்துடன் வருகின்றார். அவரிடமிருந்து தங்கத்தை இரகசியமான முறையில் வெளியில் கொண்டு செல்வதற்கென பிரதான சூத்திரதாரியின் உத்தரவுக்கமைய சுமார் 23 பேர் கட்டுநாயக்கவிமான நிலையத்தில் குவிந்தனர். விமான நிலையத்தில் பயணிகள் வரவேற்பு பிரிவு, காத்திருப்பு பிரிவு என அவர்கள் ஒவ்வொருவரும் நிர்மலாவுக்காக காத்திருந்தனர். எனினும் இவையனைத்தையும் முன்கூட்டியே அறிந்துவைத்திருந்த இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கடத்தல்காரர்களின் கைக்கூலிகள் நிர்மலாவை நெருங்காத வண்ணம் சுற்றிவளைப்பை மேற்கொள்வதற்கு மிகவும் சூட்சுமமான முறையில் திட்டம் தீட்டினர்.

அதன்படி நிர்மலா விமான நிலையத்திலிருந்து இறங்கி தங்கத்தை கைமாற்றுவதற்கு முயற்சி செய்தார். எனினும் அவளால் அவர்களை நெருங்க முடியவில்லை. விமானநிலையத்தில் நாலாபக்கமும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கழுகுப் பார்வையுடன் கண்காணிப்பில் ஈடுபட்டனர். இது எதையுமே நிர்மலா அறிந்திருக்கவில்லை. தங்கத்தை கைமாற்றுவதற்கு வழியின்றி பதற்றத்துடன் இருந்தார். இதன்போது சமயம் பார்த்து இலங்கை சுங்க அதிகாரிகள் நிர்மலாவை சுற்றிவளைத்து சோதனையில் ஈடுபட்டனர். அவரிடம் கைப்பையும் பயணப்பையும் இருந்தது. அதனை அதிகாரிகள் சோதனையிட்ட போது, வர்த்தக வங்கிகளால் விநியோகிக்கப்படும் 27 கிரெடிட் / டெபிட் கார்ட்கள் பொலித்தீன் பையொன்றில் சுற்றியிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன. அவற்றை அதிகாரிகள் முதலில் பார்த்த போது அச்சு அசல் கிரெடிட் / டெபிட் கார்ட்களை போலவே காட்சியளித்தன. எனினும் அவற்றை சோதனையிட்ட போது அவை 24 கரட்டில் செய்யப்பட்ட தங்க கிரெடிட் கார்ட்கள் எனத் தெரியவர அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். அவர்களுடைய சேவைக்காலத்தில் இத்தகைய தங்க கிரெடிட் / டெபிட் கார்ட்களை பார்த்ததில்லையென தெரிவித்தனர். பொதுவாக பெண்களின் கைப்பையில் அவர்களுடைய பிரத்தியேக தேவைகளுக்கென பல்வேறு பொருட்களை வைத்திருப்பார்கள் என்ற எண்ணத்தில் சோதனையிடுவதில்லை. எனவே இதனை அறிந்த கடத்தல்காரர்கள் மிகவும் சூட்சுமமான முறையில் கைப்பையில் மறைத்து வைத்து தங்க கிரெடிட் / டெபிட் கார்ட்களை கொண்டுவந்துள்ளனர். இதுதவிர பயணப்பையில் 24 கரட்டில் செய்யப்பட்ட சங்கிலிகள், வளையல்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. 6 கிலோ 500 கிராம் நிறையுடைய தங்கநகைகள் இலங்கை பெறுமதியின் படி 11 கோடி 15 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறிய கறுப்பு பைகளில் தங்க ஜெல்லும் (Gold Jel) அவருடைய பயண பையிலிருந்து மீட்கப்பட்டது. 2 கிலோ 200 கிராம் எடையுடைய தங்க ஜெல்லின் பெறுமதி 3 கோடி 5 இலட்சம் ரூபா என இலங்கை சுங்க திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய நிர்மலா மிக குறுகிய காலப்பகுதியில் ரூ. 17கோடிக்கும் அதிகமான தங்கத்தை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. ஒரிரு தடவைகள் டுபாயிலிருந்தும் தங்கத்தை கடத்தியுள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இலங்கை மட்டுமின்றி பொதுவாக அநேக உலகநாடுகளில் 22 கரட் தங்கநகைகளே பயன்படுத்தப்படுகின்றன. எனினும் கடத்தல்காரர்கள் 24 கரட் தங்கத்தை இலங்கைக்கு கொண்டுவந்து அதற்கு பல்வேறு மூலப்பொருட்களை சேர்த்து 22 கரட்டாக மாற்றுகின்றமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இச்சம்பவத்தை தொடர்ந்து சட்ட விரோதமாக 24 கரட் தங்கத்தை கொண்டுவருவதை தடைசெய்வதற்காக நிதியமைச்சினால் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய பலர் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளை இலங்கை சுங்கத் திணைக்கள வருமானப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மாத்தளை வடிவேலன்:

மலையக இலக்கியத்தின் எரிநட்சத்திரம்

கடந்த வாரத் தொடர்

'தினபதி' என்ற இலங்கைத் தினசரி அறிமுகப்படுத்திய 'தினமொரு சிறுகதை"த் திட்டத்தின் கீழ் திருச்செந்தூரனின் சிபார்சுடன் தனது 'கண்கள் ' (1969) கதை மூலம் சிறுகதைத் துறைக்குள் நுழைந்த மாத்தளை வடிவேலன் வெகு விரைவிலேயே மலையகச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் தனது இடத்தை உறுதிப்படுத்திக்கொண்டார்.

வீரகேசரி நடத்திய நான்காவது மலையகச் சிறுகதைப்போட்டியில் 'பிஞ்சு உலகம்' என்ற தனது சிறுகதைக்காக முதற்பரிசு பெற்ற சாதனை அவருடையது. சிறுகதைப் போட்டிகளில் கலந்து கொள்வதென்பது மாத்தளை வடிவேலனுக்கு எப்போதுமே ஈர்ப்புடையதாகவே இருந்து வந்திருக்கிறது. அவர் கலந்து கொண்ட போட்டிகளில் அவருடைய சிறுகதை ஏதாவதொரு பரிசைத் தட்டிக்கொண்டே வந்திருக்கிறது. அத்தகைய பரிசில்களை வென்ற பதினான்கு சிறுகதைகளின் தொகுப்பே இது.

மாத்தளை வடிவேலனின் சிறுகதைகள் எப்போதுமே அளவில் பெரியவை. அநேகமான கதைகள் இருபது பக்கங்கள் கொண்டவை. 'மலையகப் பரிசுக் கதைகள்' என்ற தொகுதி, 16 கதைகளைக் கொண்டு 110 பக்கங்கள்தான் வருகிறது. வடிவேலனின் இத்தொகுப்பு 14 கதைகளைக் கொண்டு 206 பக்கங்களில் வந்திருக்கிறது.

இந்தக் கதைகள் மாத்தளை வடிவேலன் நேர்த்தியான கதை சொல்லி என்பதைக் கேள்விக்கிடமில்லாமல் நிரூபிக்கின்றன. எழுபதாண்டு காலம் அந்த மக்களோடு வாழ்ந்து, உண்டு, சுகித்து, சுகதுக்கங்களில் பங்கு கொண்டு, அந்த மக்களின் கூட்டு சொரூபமாய் இக்கதைகளிலே அவர் வெளிவருகிறார். அவருக்குச் சொல்வதற்கு நிறையக் கதைகள் இருக்கின்றன. கதைகளின் கிட்டங்கி அவர். சரித்திரம் அவரில் புதையுண்டு கிடக்கிறது. நோர்த் மாத்தளைச் சந்தியில் குடை பிடித்து நிற்கும் ஆலமரம், சுந்தர ராமசாமிக்கு ஒரு புளியமரம் போல, மாத்தளை வடிவேலனுக்கு நோர்த் மாத்தளைச் சந்தி ஆலமரம்.

'அட்சய வடம்' கதை இந்த ஆலமரத்தின் கதைதான். அந்த ஆலமரம் சாய்ந்து விட்டது. 'சாய்ந்த கணப்பொழுதுக்குள் அதனை வெட்டி, சிதைத்து, பிளந்து, கூர் கூராக்கி, பாகம் பாகமாக பிரித்து, அங்கம் அங்கமாக அரிந்து அரிந்து, விறகாக்கி' அது இருந்த சுவடே இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். ஆனால், அந்த ஆலமரத்துக்கு இலக்கிய உலகில் சிரஞ்சீவித்துவம் கொடுத்திருக்கிறார் வடிவேலன். வரலாற்றில் ஊறிய, தொன்மங்களின் செழுமையைக் கண்டு கொண்ட ஒரு கலைஞன் தான் இந்தப் பணியைச் சாத்தியமாக்க வல்லவன். இந்தக்கதையில் மட்டுமல்ல, மாத்தளையை மையங் கொண்டுள்ள எல்லாக் கதைகளிலுமே இந்த ஆலமரம் ஒரு கதாபாத்திரமாகவே வந்து போகிறது. சமூகத்தின் இயக்கவியலைப் புரிந்து கொண்ட ஓர் எழுத்தாளனுக்கே இத்தகைய பார்வை சாத்தியப்படும். அது வடிவேலனுக்கு வாய்த்திருக்கிறது.

'தாத்தாவின் ரெங்கு பெட்டி'யும் குறிப்பிடப்பட வேண்டிய கதை. ரெங்குப்பெட்டி மலையக மக்களின் வாழ்வியலில் அழிக்கப்பட முடியாத ஒரு குறியீடு. எம்.வாமதேவனின் Sri Lankan Repatriates in Tamilnadu (1989) என்ற நூலுக்கு முன் அட்டைப்படத்திற்காக, சென்னையில் எங்கேயோ ஒரு ரெங்குப்பெட்டியைத் தேடி எடுத்து, திருவான்மியூரில் ஒரு ஸ்டூடியோவிற்குக் கொண்டு போய், அந்த ரெங்குப்பெட்டியைப் படம் எடுக்கச் சொன்னபோது, அந்த ஸ்டூடியோக்காரர் என்னை ஒருவிதமாகப் பார்த்தார்.

'தாத்தாவின் ரெங்குப்பெட்டி' கதையின் இறுதிப்பகுதியில், 1922 மார்ச் முதலாம் திகதியிட்டு, லேபர் கமிசனர் எச்.எச்.நிக்கல்சன் வெளியிட்ட 'இலங்கை போக விரும்பும் கூலியாட்களுக்கு விளம்பரம்' ரெங்குப்பெட்டியில் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, அந்த முழுச் சுற்றறிக்கையையும் ஏழு பக்கங்களில் சொல்லியிருக்க வேண்டாம்.

மலையகத்தில் தொடர்ந்து நடைபெற்ற இனவெறியாட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் துயருறுவதைக் காணச்சகியாத நெஞ்சக் குமுறல்களாகவே (ஓரிரு கதைகளைத் தவிர) அனைத்துக் கதைகளும் அமைந்துள்ளன.

சிங்களவர்களுக்கும் மலையகத் தொழிலாளர்களுக்குமிடையேயான கசப்புணர்வு கோப்பிக் காலத்திலிருந்தே உருப்பெற்று வந்துள்ளது. 1848ஆம் ஆண்டு மாத்தளையில் நிகழ்ந்த கிளர்ச்சியின் போது, தோட்டத் துரைமார்களின் பங்களாக்களும் கிளர்ச்சியாளர்களால் தாக்கப்பட்டபோது, அந்த பங்களாக்களைப் பாதுகாப்பதற்காக தோட்டத்தொழிலாளர்களே கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போராடியுள்ளனர். அவர்கள் நம்பிக்கைக்குரிய விசுவாசிகள் என்றும் கிளர்ச்சியாளர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் காணிகளில், மாத்தளை, குருநாகல் போன்ற இடங்களில் தோட்டத்தொழிலாளர்களைக் குடியமர்த்த வேண்டும் என்றும் பிரிட்டிஷ் கொள்கை வகுப்பாளர்கள் கருதியிருந்தனர்.

எச்.எச்.விக்கிரமசிங்க

மாத்தளை வடிவேலன்

இதனைவிட, பிரிட்டிஷ் அரசு அமுல்படுத்திய சாலைகள் கட்டளைச் சட்டமானது, சாலைகள் போடுவதற்கு கண்டி விவசாயிகள் கட்டாய ஊழியம் வழங்க வேண்டுமென்றும், அவ்வாறு வழங்க முடியாது போனால் அதற்கீடாக மூன்று சிலிங் பணமாக அறவிடப்படுமென்றும், தண்டப்பணத்தைச் செலுத்த முடியாதவர்கள் கசையடியோடு ஆறு நாட்கள் ஊழியம் செய்ய வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருந்தது. சாதாரண ஏழை விவசாயிகளுக்கு இவ்வளவு கடுமையான வரி நடைமுறைகள் இருந்தபோது, இந்தச் சாலைகள் கட்டளைச் சட்டத்திலிருந்து தோட்டத்தொழிலாளர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தமை கண்டிய விவசாயிகளுக்கு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. வேலைதேடி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் அந்நியர்களான இவர்களுக்கு வரி விலக்கு வழங்கப்பட்டது மட்டுமல்ல, பொதுப்பணத்திலிருந்து அவர்களுக்கு மருத்துவ வசதிகள் வேறு செய்து கொடுக்கப்படுகிறது என்றும் அவர்களுக்கு ஆதங்கம் இருந்தது.

கண்டிய விவசாயிகள் தோட்டங்களில் வேலை செய்து, பணம் பெற்று சம்பாதிக்க பிடிவாதமாக மறுத்துக் கொண்டிருக்கும் வேளையில், ஆயிரம் ஆயிரம் மலபார் கூலிகள் தோட்டங்களில் உழைத்து நல்ல பணத்துடன் ஒவ்வோராண்டும் தங்கள் தாய் நாட்டிற்குத் திரும்புவதை எரிச்சலோடு அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர். ஒவ்வோராண்டும் 50,000 இலிருந்து 60,000 கூலிகள் வரை ஒவ்வொருவரும் பத்திலிருந்து பன்னிரண்டு சிலிங் வரை உழைத்துக்கொண்டு போவதை, தோட்டத்துரைமாரிடமிருந்து ஒரு சிலிங் கூடச் சம்பளமாக வாங்க மாட்டோம் என்று சோம்பேறித்தனமாக நின்று பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று டெனன்ட் போன்றோர் குறித்துள்ளனர்.

தங்கள் வாழ்வாதாரம் பறிக்கப்படுவதை உணரும்போது இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான விரோத நிலைப்பாட்டில் அவர்கள் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

அத்துடன், காசு சேர்த்துக் கொண்டு ஊர் திரும்பும்போது செல்லும் வழியில் பெரும் பான்மையினத்தவர் சூழ்ந்து அவர்களின் பணத்தை வழிப்பறி செய்து கொண்டுவிடும் நிலைமைகளும் கோப்பியுகத்தில் சாதாரணமாக நடந்தேறியுள்ளன. கோப்பிக் காலத்திலிருந்தே இந்திய விரோத உணர்வு கண்டியர்களிடம் நிலவவே செய்தது. இது சுதந்திரத்திற்குப் பின்னரும் தொடர்ந்தது.

சன்சோனி ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்த 22 மலையகத் தோட்டங்களின் பிரதிநிதிகள் தாங்கள் இன வன்முறைகளுக்குள்ளானதாகத் தெரிவித்துள்ளனர். ஏறத்தாழ 500 மலையகத் தமிழர்கள் கொல்லப்பட்டதாக சாட்சியங்கள் தெரிவித்துள்ளன. 1983 இனக்கலவரத்தின்போது பதுளையில் மட்டும் 141 பேர் கொல்லப்பட்டிருந்தனர். மாத்தளை வடிவேலனின் இச்சிறுகதைத் தொகுப்பில் 'தாத்தாவின் ரெங்கு பெட்டி', 'அட்சய வடம்', 'அக்கினி', 'உச்சிமீது வானிடிந்து', 'இராமு தீபாவளிக்கு தனது தோட்டத்திற்கு வருகின்றான்', 'வல்லமை தாராயோ?', 'தர்மத்தின் வாழ்வுதனை" ஆகிய கதைகள் மலையகத்தின் இனவன்மைக் குரூரங்களைச் சித்திரிக்கின்றன. இந்த வன்முறைகள் நிகழ்ந்தபோதெல்லாம் வடிவேலன் அந்த மக்களோடு நின்றிருக்கிறார். அவர் பார்வையாளன் இல்லை. பங்காளி. அந்த மக்கள் கூட்டத்தில் ஒருவன்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

மு.நித்தியானந்தன்
லண்டன்

இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட துஆ பிரார்த்தனை, நேற்று சீனன்கோட்டை ஜாமிஅதுல் பாஸியா கலாபீடத்தில் இடம் பெற்றது. மாணவர்களால் தேசிய கீதம் பாடப்பட்டு உஸ்தாத்மார்கள் துஆ பிரார்த்தனை புரிந்தார்கள். உப அதிபர் மவ்லவி ரஸான் அல் முர்ஸி, விரிவுரையாளர்களான மௌலவி ஸமீர் பஹ்ஜி, மௌலவி ஹாதிக் பஹ்ஜி உட்பட உலமாக்கள், மாணவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வரிக் கொள்கைகளுக்கு எதிராக 08ம் திகதியிலிருந்து எதிர்ப்பு வாரம்

தற்போதைய வரிக் கொள்கைகள் மற்றும் மின் கட்டண அதிகரிப்பு போன்றனவற்றுக்கு எதிராக அரசாங்கத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்து இம்மாதம் 08ம் திகதியிலிருந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுதந்திர சேவைகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ராஜகிரிய, சரண வீதியில் அமைந்துள்ள இலங்கை சுதந்திர சேவைகள் சங்கத்தின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் லெஸ்லி தேவேந்திர இதனைத் தெரிவித்தார்.

இந்த ஊடகச் சந்திப்பில் சுதந்திர சேவைகள் சங்கத்தின் ரஞ்சித் ஹெட்டியாராச்சி, எயர் லங்கா சங்கத்தின் தலைவர் ஜனக விஜயபத்திரன, பெற்றோலிய கூட்டுத்தாபன சங்கத்தின் ஜகத் விஜயகுணவர்தன, லேக் ஹவுஸ் சுதந்திர சேவை சங்கத்தின் அநுர கொடகந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

எம். எஸ். முஸப்பிர்

கொழும்பு கிளப் தலைவியாக அனுஷ்யா குமாரசுவாமி

இலங்கையில் வசிக்கும் ஆங்கிலேய மற்றும் ஸ்காட்டிஷ் ஆண்கள் சந்திக்கவும், ஓய்வெடுக்கவும், 150 ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷ்காரர்களால் கொழும்பு கிளப் ஆரம்பிக்கப்பட்டது. 125 ஆண்டுகளுக்கும் மேலாக, பெண்களை அதன் உறுப்பினர்களாக ஆக்குவதில் இருந்து விலக்கப்பட்டதால், ஆண்களுக்கு பிரத்தியேகமானதாக இது இருந்தது. 1995ஆம் ஆண்டில் அதன் முதல் பெண் அங்கத்தவர் அனுமதிக்கப்பட்டார். கழகத்தின் கடந்த ஆண்டு பொதுக் கூட்டத்தில், முதன்முறையாக ஒரு பெண் உறுப்பினர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவி பதவியை பொறுப்பேற்க அவரது பெயரை முன்மொழிந்த முன்னாள் தலைவர் குமார் ஜயசூரிய, 'கொழும்பு கழகம் தற்போது வரலாற்றை உருவாக்க தயாராக உள்ளது. எங்கள் 150க்கும் மேற்பட்ட ஆண்டு வரலாற்றில், பெண்கள் உறுப்பினராக அனுமதிக்கப்படவில்லை. இந்த அநீதி 1995 இல் சரி செய்யப்பட்டது. அதன்பிறகு நாங்கள் பாலின நடுநிலைப் பாதையில் சீராக முன்னேறி, 25 வருடங்களில் அந்த முயற்சியின் உச்சத்தை எட்டியுள்ளோம், அது நமது முதல் பெண் தலைவரைத் தேர்ந்தெடுப்பது. கழகப் பொதுக்குழுவினால் ஏகமனதாக பரிந்துரைக்கப்பட்டு, அடுத்த வருடத்திற்கான கொழும்புக் கழகத்தின் தலைவியாக திருமதி அனுஷ்யா குமாரசுவாமியின் பெயரை முன்மொழிந்து இந்த வரலாற்று நிகழ்வில் இணைந்திருப்பது எனது பெரும் பாக்கியமாகும். அனுஷ்யா 2006ஆம் ஆண்டு முதல் கழகத்தில் பணியாற்றியுள்ளார். மற்றும் கடந்த ஆறு ஆண்டுகளாக முறையே பொருளாளர், செயலாளர் மற்றும் துணைத் தலைவர் பதவிகளை வகித்துள்ளார்.

கொழும்பு கிளப்பின் அதிர்ஷ்டம் மிகவும் பாதுகாப்பான கரங்களில் இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்' என்றார். அனுஷ்யா குமாரசுவாமி இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும், ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவனத்தின் உறுப்பினராகவும் உள்ளார். அவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் குழு நிதிப் பணிப்பாளராக பணியாற்றியவர்.

காயத்ரியின் முயற்சிக்கு பாராட்டு

வெள்ளவத்தை சங்கம் வீதி பெயர் பலகை கடந்த ஒரு மாத காலமாக உடைந்த நிலையில் காணப்பட்டிருந்தது. பல கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வீதியில் சென்றும் அதனைக் கண்டு கொள்ளவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.01.2023) கொழும்பு வடக்குத் தொகுதி லொனுபொகுண வட்டார மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க தமிழ் ஊடகவியலாளர்கள் ஏற்பாடு செய்திருந்த குமார் நடேசனின் பாராட்டு விழாவிற்குச் சென்ற போது சங்கம் வீதி பெயர் பலகை உடைந்திருந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்து கொழும்பு மாநகர சபை பெயர் பலகைக்குப் பொறுப்பான ஒப்பந்தக்காரர் ரிச்சட் சன்னுடன் தொடர்பு கொண்டு அப் பெயர்ப் பலகையை மாற்ற நடவடிக்கை எடுத்தன் விளைவாக (02.02.2023) வியாழக்கிழமை அன்று பெயர்ப்பலகை திருத்தியமைக்கப்பட்டது. இது ஒரு சிறிய விடயமாக இருந்தாலும் இதனை உடனடியாக திருத்தியமைத்த காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு சங்கம் வீதி குடியிருப்பாளர்கள் தங்களது மனமார்ந்த பாரட்டை தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை சின்மயாமிஷன் தலைமைச் செயலகம் அமைந்துள்ள கொள்ளுபிட்டி, பத்தாவது ஒழுங்கையை "சின்மயா லேன்" என பெயர் மாற்றி இலங்கையிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளினதும், தலைநகரில் உள்ள பல இந்து அமைப்புகள் உட்பட பலரது வாழ்த்துக்களையும், பாரட்டுக்களையும் பெற்றவர் காயத்ரி விக்கிரமசிங்க என்பதும் குறிப்பிடத்தக்கது.

தியாகராஜர் கலைக்கோயில் மாணவி செல்வி பிரியங்கா குகப்பிரியாவின் அரங்கேற்றம் கடந்த 20ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ ரவிசந்திரன் குருக்கள் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவியின் நடனத் தோற்றத்தையும், கலந்து கொண்டோரையும் காணலாம்.

கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத்

நாடறிந்த ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 57 ஆவது கீத்ராத் " FIVE IN ONE " மாபெரும் இசை நிகழ்ச்சி இம்மாதம் 26 ஆம் திகதி கொழும்பு 7 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதம அதிதியாக " இலக்கியபுரவலர்" ஹாஸிம் உமர் கலந்து

சிறப்பிக்கும் இந்நிகழ்வில் "கலைப்புரவலர்" ஸைட் சிவாஜி மௌலானா முன்னிலை வகிப்பார்.

தேசமான்ய அக்கரைப்பற்று ஏ. பி. அப்துல்கையூம் தலைமை வகிக்கவுள்ளனர். சமூகசேவையாளர் நுவரெலியா மாவட்ட ஐ.தே.க.இணைப்பாளர் திருச்செல்வம், தொழிலதிபர்கள் எஸ். ரவீந்திரன். எம்.ரி.எம். நௌஷாத் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இசை முரசு, ரி.எம்.எஸ். எஸ்.பி.பி ,ஜேசுதாஸ்,முஹம்மது ராபி ஆகியோரின் பாடல்களை கலாபூஷணம் கலைக்கமல் பாடவுள்ளார்.

இலங்கையர் நாம்!

காலனித்துவ ஆட்சியதை
காலாவதிக்குள் தள்ளியதால்
காசினியில் எம்நாடு
காத்திரமாய் நிமிர்ந்ததே

எம்மவரே எமை ஆளனுமென்ற
எடுப்பான சிந்தனை எட்டிப்பார்த்திட
ஏகாதிபத்தியத்தின் எடுகோள்கள்
எகிறிக்குதித்தே ஓடினவே

தூவப்பட்ட விடுதலைக் கொள்கை
துயர்துடைத்தே எழும்பிட
பாவப்பட்ட மக்கள் பலரும்
பயமின்றியே எழுந்தனரே

விடுதலையை வேட்கையாக்கி
விதிமுறையை வாழ்க்கையாக்கி
குறிதவறா இலக்கினிலே
குதூகலத்தைக் கண்டனரே

இறைமையுள்ள நாடு இது
இங்லீஷ்காரனுக்கு இடமில்லையென
உயர்ந்து ஒலித்த குரல்கள்
உற்சாகத்தைப் பரப்பி விட்டனவே

இலங்கையர் ஓரணியென
இலங்கிய ஒற்றுமையில்
துலங்கிய சுதந்திரம்
சுடர்விட்டுப் பிரகாசித்ததே

தேசியம் தேசம் என்றே
பேசப்பட்ட நம்நாடு
ஆசீர்வாதம் பெற்றதுபோல்
ஆளுமையை வளர்த்ததே

கொலுவிருந்த அந்நியக் கொடியும்
நழுவிக்கீழே விழுந்திடவே
கோலோச்சிட சிங்கக் கொடியும்
வானேந்தி வாகையைத் தொட்டதே

மூர்ச்சையின்றி முன்னெடுத்த
மூவினத்தாரின் போராட்டம்
சர்ச்சையின்றி துலங்கிடவே
சமாதானம் சகவாழ்வு மலர்ந்ததே

சுதந்திரத்தின் பலாபலன்களை
சுவைத்திடவே நாம் முனைந்து
தரித்திரத்தின் தடயங்களை
தகர்த்திடவே நாம் விரைவோம்

இனங்களுக்குள் குரோதங்களை
இல்லாதொழித்தே நாம் வென்று
மனங்களுக்குள் இலங்கையரென்று
மார்தட்டி மமதை கொள்வோம்

உசனார் எம்.பஷீர்
ஏறாவூர்

அரும்பும் காதல்

மாலையானதும்
மனதினுள் வருகிறாய்...
என் இரவின் நீட்சியும் நீதானே...
உன்னுடன் உரையாட வார்த்தைகள் தேடுகிறேன். ..
வார்த்தைகளின் பஞ்சத்தால்
பண்டிகைக் காலம் வரை காத்திருக்கிறேன்
வாழ்த்து அனுப்பி உரையாடுவதற்கு...
உன்னிடமிருந்து வரும் பதில்கள்
ஒவ்வொன்றையும் நூறு முறை பார்க்கிறேன்...
மீண்டும் மீண்டும் பார்க்க
தூண்டுகிறது உன் மீதுள்ள ஈர்ப்பால்...
இது தான் நம் காதலின் ஆரம்பமா அன்பே?

V.K.கலீபன்,
கொடிகாமம்.

சுதந்திரம் உண்டா?

சுதந்திர நாட்டில்
உண்மைக்கு சுதந்திரம் உண்டா?
உணர்விற்கு சுதந்திரம் உண்டா?
உழவனிற்கு சுதந்திரம் உண்டா?
பெண்ணிற்கு சுதந்திரம் உண்டா?
மண்ணிற்கு சுதந்திரம் உண்டா?
பொருளாதார சுதந்திரம் உண்டா?
ஆசைக்கு சுதந்திரம் உண்டா?
தேவைக்கு சுதந்திரம் உண்டா?
திறமைக்கு சுதந்திரம் உண்டா?
மொழிக்கு சுதந்திரம் உண்டா?
அறிவிற்கு சுதந்திரம் உண்டா?
தெரிவிற்கு சுதந்திரம் உண்டா?
எழுத்தாளனிற்கு சுதந்திரம் உண்டா?
நாளைக்காவது சுதந்திரம் உண்டா?
இவையெலாம் உண்டெனில் சுதந்திர நாடென்பேன்
இல்லையேல் யாதும் நாடகமென்பேன்

வன்னிக்கவி மக்சன்...

சுதந்திரம் வேண்டும்

நாளும் விலையேற்றம்
ஏறுவதை நிறுத்தட்டும்
ஏழைகள் பசியாற
உணவினை உண்ணட்டும்

நாட்டிலே பிரிவினை
ஏற்படாது இருக்கட்டும்
போதைப் பாவனைகள்
அடியோடு ஒழியட்டும்

பெண்களது உரிமைகளை
ஆண்களினம் மதிக்கட்டும்
வீண் பழி சுமத்தாமல்
சுதந்திரமாய் வாழட்டும்

பொய் களவில்லாது
தேசம் வளரட்டும்
நீதி நேர்மையினால்
நானிலம் மலரட்டும்

சமாதானம் நிலைக்கட்டும்
சமத்துவம் பெருகட்டும்
ஒற்றுமை ஓங்கட்டும்
ஓரணி சேரட்டும்

கிண்ணியா
ஜெனீரா தௌபீக்
ஹைருல் அமான்

நம்பிக்கை

இருகைகள் சேர்த்து இயக்கிடும் பணிகள்
எல்லாமே வெற்றியாய் மாற
பெருகையாம் நம்பிக்கை துணையானால்
பேறும் நல்லதாய் அமைந்திடுமே!
தருணத்தில் இக்கையை துணையாக்கிடு
தக்கபடி செயலாற்ற வழிகாட்டிடும்
கருணையும் அதற்குண்டு கடவுளாகி
கடமையை கனிவாக்க அருள்பாலிக்கும்
உருவான புகழ்பூத்த அமைப்பெல்லாமே
உண்டானதே உரியோர் நம்பிக்கையால் தான்
தருபோலே வாழ்வினிலே தக்கவைப்போம்
தக்கபடி துணைகொண்டு செயல் புரிவோம்
அருமையான நண்பனாம் அவனைப்பற்றி
அன்றாட வாழ்வுதனை செழுமையாக்கி
வெறுப்பற்று வாழ்வோமே நம்பிக்கையால்
வினைகூடி இம்மையதை நலமாக்கிடும்

பசறையூர்
மல்லிகா பத்மநாதன்

சுதந்திர தினம்

இலங்கைக் கொடியை ஏற்றிடுவோம் நாம்
இலங்கைத் தாயைப் போற்றிடுவோம்
வீரத்துடன் கடமை ஆற்றிடுவோம் நாம்
விண்ணுயர் புகழை ஈட்டிடுவோம்!

விடுதலை வீரரைப் போற்றிடுவோம் நாம்
வீணரைக் காலில் தூற்றிடுவோம்
கெடுதல்காரரை வீழ்த்திடுவோம் நாம்
கேண்மை செய்வோரை வாழ்த்திடுவோம்!

அடிமைச் சிந்தனை அகற்றிடுவோம் நாம்
அச்சம் அறவே தவிர்த்திடுவோம்
மிடிமை முழுவதும் தகர்த்திடுவோம் நாம்
வேற்றுமை மறந்தே வாழ்ந்திடுவோம்!

விண்கலங்கள் பல செய்திடுவோம் நாம்
விண்ணிலவில் உலா வந்திடுவோம்
விண்வெளி வீதிகள் அமைத்திடுவோம் நாம்
வீடுகள் அங்கே அமைத்திடுவோம்!

பாலையினும் பயிர் விளைத்திடுவோம் நாம்
பாரினில் பஞ்சம் துடைத்திடுவோம்
நாளை சரித்திரம் படைத்திடுவோம் நாம்
நாளும் சாதனை புரிந்திடுவோம்!

கலாபூஷணம்
கல்லொளுவை பாரிஸ்

சுதந்திரம்

ஆங்கிலயரின் ஆட்சியால்
மௌனித்தது இலங்கையும்
தீங்கையே வாழ்வாக்கி
சூடியது விலங்கையும்
நீங்காத இன்னல்
நீடிக்கக் கலங்கியது
தூங்காத கண்களும்
பயத்தையே வழங்கியது

முதுகெழும்பும் கூனியே
நிமிர்வதைத் தடுத்தது
சாதுவாய் மாற்றியே
ஆதிக்கம் எழுந்தது
காதும் கண்ணும்
சக்தியை இழந்தது
தீயது பெருகியே
நல்லது அழிந்தது

கண்ணீரும் கவலையுமே
வாழ்வாகிப் போனது
புனிதம் புதைந்தே
திமிரென ஆனது
விண்ணைத் தொட்டிடவே
அடக்குமுறை உயருது
மண்ணையும் இழந்திடும்
மனதிற்குத் துயரிது

பொறுமை இழந்தே
பொங்கியது மனிதம்
உரிமை கொண்டே
உயர்ந்ததுத் தியாகம்
நேர்மை துலங்கியதால்
உண்மையானது யாகம்
கருமை விலகிடவே
உதயமானது சுதந்திரம்..!

ஏறாவூர் எம்.ரி.எம்.அன்ஸார்

சுதந்திரம்

எங்கள் நாடு கண்ட
சுதந்திரம்
அதை நாம்
காத்திடுவோம்
அதன் புகழ் ஓங்க
ஒன்றாய்
இணைந்திடுவோம்

தம் உரிமை போல
பிறர் உரிமை மதித்து
நேசம் கருணை கண்டு
வாழ்ந்திடுவோம்

அந்நியர் ஆட்சியை
கவிழ்த்து
அடிமை தளையை
அவிழ்த்து
சுதந்திரமாம்
விடுதலையை
எமக்களித்த
வீரர்களை
நினைவு கூருவோம்

சுதந்திரம் கண்டு
ஆனந்தம் எங்கும்
பெருகுது
தேசிய கொடிகள்
எங்கும் பறக்குது
தேசிய கீதம்
எங்கும் கேட்குது
ஆலய மணிகள்

எங்கும் ஒலிக்குது
சுதந்திரம் கண்ட
இலங்கையை
போற்றுவோம்
வாழ்த்துவோம்

எம்.ஏ.அத்தாஸ்,
மாத்தறை

சுதந்திரம்

பிரித்தானியாவிடம்
பிரியாவிடை பெற்றோமே!
அதன் பெயர் சுதந்திரம்

நாடு பெற்ற சுதந்திரம்
மக்களின்
சுவாசக் காற்றாகனும்

இலங்கையே
இயற்கையாய்
இளமையாய்
இருக்கிறாய்

ஆரோக்கியமாய்
மக்களுமில்லை
மனங்களுமில்லை
பொருளாதாரமுமில்லை

சுதந்திரமே!
நீ
பகலுக்கும்
விளக்கேற்று

பசி எனும்
சொல்லுக்கும்
அடுப்பு மூட்டு

கடலின்
ஆழமாய்
இன ஒற்றுமை வேண்டும்

உற்பத்திகள்
பொங்கட்டும்

உழைப்பு
உட்சாகமாகட்டும்

தென்றலுக்கு
விசிறி கொடுக்க வேண்டிய
வனே!

ஒளி இழக்காத
தினகரனாகிடு

வீழ்ச்சியை
வீழ்த்தி
எழுச்சியாய்
எழுந்து வா!
சுதந்திரமே!...

மூதூர் நிஸ்லின்

அப்பாவிக் கைதிகள்

தவறுகள் எதனையும் புரியவுமில்லை
தவறிய நெறியில் நடக்கவுமில்லை
எவர் உடமையும் திருடவுமில்லை
எங்கும் பொய்கூறிப் பிழைக்கவுமில்லை

உறவுகள் எவரும் வருவதுமில்லை
உணர்வுகள் இருப்பது புரிவதுமில்லை
பிறப்பிறப்புக்கும் வேறுபாடுகளில்லை
பிணிகளில் உதவ தோள்களுமில்லை

நன்நடத்தை எதுவும் கவனிக்கப்படுவதில்லை
நன்றியுணர்வுடன் எவையும் கணிக்கப்படுவதுமில்லை
பன்னெடுங்காலம் அடைத்து வைத்தபோதும்
பரிவுடன் பார்வை கிடைக்காதெப்போதும்

மனிதர்கள் பார்த்து மகிழ்வதற்காய்
மிருகக் காட்சிக் கூடங்கள்
எனினும் அடைக்கும் உயிர்களெல்லாம்
ஏங்கும் அப்பாவிக் கைதிகள்தாம்

காத்தான்குடி
எம்.ஐ.அப்துல் நஸார்

தடையற்ற எரிசக்தி விநியோகத்தை வழங்கி நிறுவனங்களை வலுப்படுத்திவரும் லிற்றோ

இலங்கை சந்தைக்குத் திரவப் பெற்றோலிய வாயுவை இறக்குமதி செய்து விநியோகிக்கும், பாரிய சந்தை முன்னணியாளரான லிற்றோ காஸ் லங்கா லிமிடட் நிறுவனம், அண்மைய நெருக்கடி காலத்தில் பெரும் அளவில் நாட்டுக்கு டொலர்களை ஈட்டித்தரும் முக்கியமான, பாரிய தொழில்துறைகளை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியுள்ளது.

அந்நியச்செலாவணிக்கான நெருக்கடி காணப்பட்டபோதும் B2B துறையினரின் ஏற்றுமதி செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில் லிற்றோ தொடர்ச்சியான விநியோகத்தை வழங்கியது. இந்த காலகட்டத்தில், லிற்றோ தனது ஒரே போட்டியாளரின் வாடிக்கையாளர்களுக்கு இடமளித்ததுடன், உள்ளூர் தொழில்துறைகள் தங்கள் செயல்பாடுகளை மிகக் குறைவான சூழ்நிலைகள் இருந்தபோதிலும் விரைவாக மேற்கொள்ள முடியும் என்பதை உறுதிசெய்தது.

தடையில்லாத விநியோகத்தை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய அதேநேரம், போக்குவரத்து சேவைகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு என்பவற்றையும் லிற்றோ வழங்கியது. வாடிக்கையாளர்களின் வினவல்கள் மற்றும் புகார்களுக்கு இடமளிக்கும் வகையில் 1311 எனும் லிற்றோ உடனடி தொலைபேசி சேவை மையம் 24x7 செயற்படுகிறது.

உலகளாவிய தொற்றுநோய்க்குப் பின்னர், சமீபத்திய வரலாற்றில் மிக மோசமான மந்தநிலையின் போது ஏற்றுமதி உட்பட நாட்டின் பல முக்கியமான தொழில்களுக்கு லிற்றோ முக்கியமான ஆதரவை வழங்கியது. தொடர்ச்சியான ஆதரவு பல நிறுவனங்களுக்கு இலட்சியத்தை விட குறைவான சூழ்நிலைகள் இருந்தபோதிலும் முன்னெப்போதும் இல்லாத திருப்பத்தை அடைய உதவியது. 2021/22 இல் தொற்றுநோய்கள் உச்சத்தில் இருந்தபோது 1.1 பில்லியன் ரூபா இழப்பையும் ஏற்றுக் கொண்டு தொடர்ச்சியான விநியோகத்தை எளிதாக வழங்கியதுடன், விலையின் ஸ்திரத்தன்மையையும் பேணி வந்தது.

தெற்காசியாவின் முதலாவது

mmWave 5G சோதனையை வெற்றிகரமாக முன்னெடுத்த டயலொக்

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, 2018 ஆம் ஆண்டின் போது 5G திறன்களை வெளிப்படுத்திய தெற்காசிய பிராந்தியத்தின் முதலாவது தொலைத்தொடர்பு சேவை வழங்குனர் என்ற ரீதியில், தெற்காசியாவில் முதல் முறையாக mmWave 5G இன் வெற்றிகரமான சோதனை (பரீட்சார்த்த) முன்னெடுப்பையும் தற்போது மேற்கொண்டுள்ளது .

டயலொக் 5G பதிவிறக்க (Download) வேகமானது 4 Gbps ஐ விட அதிகமான NSA பயன்முறையை அடைந்துள்ள அதேவேளை mmwave ஆனது தற்போதைய தரநிலைகளை விட கணிசமான அளவு அதிக செயல்திறனை அடைந்துள்ளதுடன் குறுகிய தூரங்களில் அதிக ரித்த திறனை அது வழங்வகுவதுடன் வேகமான uplinks மற்றும் downlink, பயனர்கள் 5G இன் அனைத்து நன்மைகளையும் பயன்படுத்தவும் உதவுகின்றது.

mmWave தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் நிலையான broadband செயல்திறன் நிலைகளை அது மேம்படுத்துவதன் மூலம் குறைந்த தாமத தொழில் பயன்பாடுகளை கொண்ட தொழில்துறைக்குள் அடங்குகின்ற தொழிற்துறை தானியங்கு தன்மை, சுகாதார பாதுகாப்பு, அறிவார்ந்த போக்குவரத்து அமைப்புகள் மற்றும் மெய்நிகர் யதார்த்தம் உள்ளிட்ட குறைந்த தாமதத் தொழில் பயன்பாடுகளை சிறப்புடன் செயல்படுத்துகின்றது.

இந்த வெளிப்படுத்தலானது பிராந்தியத்தின் முதல் 5G சோதனை வலையமைப்பின் வரிசைப்படுத்தல் உட்பட தெற்காசியா மற்றும் இலங்கையில் மேற்படி 5G தொழிற்பாடானது முதன்மைமிகு ஒரு மைல்கல்லாக குறிப்பிடப்படுவதுடன், முதலாவது சுயாதீனமான 5G (5G SA) வலையமைப்பு சோதனை நடவடிக்கையாகவும் மற்றும் டிசம்பர் 2018 ஆம் ஆண்டில் நிலைப்படுத்தப்பட்ட முதல் தரநிலை அடிப்படையிலான 5G நிலையான வயர்லஸ் மாதிரி பரப்பியாகவும் இது குறிப்பிடப்படுகின்றது.

ZeroCarbon சான்றிதழுடன் தமது நிலையான உற்பத்தியை வலுப்படுத்தும் Suwanda Industries

உலகின் மிகப்பெரிய ஊதுபத்தி தயாரிப்பு வர்த்தக நாமமான Cycle Pure Agarbathi களை இலங்கையில் தயாரித்திடும் Suwanda Industries மற்றும் அதன் பெறுமதி சேர்க்கப்பட்ட பிரிவான உலகின் மிகப் பெரிய பத்திகள் மற்றும் வாசனை தயாரிப்புக்களின் ஏற்றுமதியாளர்களான N. Ranga Rao & Sons (NRRS), Climate & Conservation Consortium (CCC) இடமிருந்து ZeroCarbon சான்றிதழை பெற்றுக்கொண்டது. இது நிலையான உற்பத்திக்கு உறுதியளிக்கும் ஓர் நிறுவனமாக விளங்கிடும் அதன் நிலையை, மேலும் மேம்படுத்துவதாக அமைகிறது. 2020ஆம் ஆண்டில் Suwanda Industries, இலங்கையில் கார்பன் நடுநிலைமைக்கான Carbon Neutral சான்றிதழை பெற்றுக்கொண்ட இத்துறையின் முதலாவது நிறுவனமாக வரலாறு படைத்துள்ளது.

Zero Carbon சான்றிதழை புகழ் பெற்ற பிரித்தானிய தர நிலைகள் நிறுவனத்தினால் (BSI) வெளியிடப்பட்ட கார்பன் நடுநிலைமைக்கான முன்னோடி கட்டமைப்பான PAS 2060 தரநிலைக்கு அமைவாக Zero Carbon வழிகாட்டிகளின்படி வழங்கப்பட்டுள்ளது. CarbonNeutral Protocol எனும் விதிமுறைகளுடன் ஒப்பிடும் போது PAS 2060 தரநிலைகளானது மேலதிக தேவைகளைக் குறிப்பிடுகிறது. இது கார்பன் உமிழ்வு குறைப்பு மற்றும் செயற்திறன் அளவீடுகளில் அதிக கவனம் செலுத்துவதுடன் இதற்கு கார்பன் முகாமைத்துவ திட்டமும் தேவைப்படுகிறது.

நிறுவனங்கள் அதன் செயற்பாடுகளின் போது வெளிவிடும் பச்சைவீட்டு வாயு உமிழ்வினை மதிப்பிடுவதற்காக காலநிலை மற்றும் பாதுகாப்பு கூட்டமைப்பு, Suwanda Industries மதிப்பீட்டினை செய்தது.

கோல்ட் கொயின் ஃபீட் மில்ஸ் லங்காவின்

100 சதவீத உரிமையாண்மையை வசப்படுத்திய நியூ அந்தனீஸ் பார்ம்ஸ்

தரம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் கீர்த்தி நாமத்தைப் பெற்ற, இலங்கையில் கோழி இறைச்சி உற்பத்தித்துறையில் முன்னணி உற்பத்தியாளரான நியூ அந்தனீஸ் பார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், Aboitiz Equity Ventures Inc.("AEV") இன் துணை நிறுவனமான Pilmico International Pte. Ltd இடமிருந்து கோல்ட் கொயின் ஃபீட் மில்ஸ் (லங்கா) லிமிடெட்டின் 100 சதவீத உரிமையாண்மையை கொள்வனவு செய்துள்ளது. அதன் பிரகாரம், இந்நிறுவனம் இனி அந்தனீஸ் ஃபீட் என அழைக்கப்படும்.

நியூ அந்தனீஸ் பார்ம்ஸினால் தற்போது முழுமையாக கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில். தற்போது உற்பத்திச் செயன்முறையை முழுமையாக நிர்வகிக்க முடிவதுடன், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தரத்தை மேலும் மேம்படுத்தி, உற்பத்தி வினைத்திறனை மேம்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது. இலங்கையிலிருந்து கோழி இறைச்சி உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதில் முன்னோடிகளாக நியூ அந்தனீஸ் திகழ்வதுடன், இந்தக் கையகப்படுத்தலினூடாக, நிறுவனத்தின் ஏற்றுமதி வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தும் இலக்குக்கு ஆதரவளிப்பதாகவும், அதனூடாக நாட்டுக்கு பெறுமதி வாய்ந்த அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு ஆதரவளிப்பதாகவும் அமைந்துள்ளது.

டிசம்பர் மாத நடுப்பகுதியில் இரு நிறுவனங்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ கைச்சாத்திடலுடன் இந்த கையகப்படுத்தல் பணிகள் பூர்த்தியடைந்திருந்தன. நியூ அந்தனீஸ் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர்களாக நித்தியா பார்ட்னர்ஸ் செயலாற்றியதுடன், கொள்வனவாளரின் நிதி ஆலோசகராக சமிந்த வீரசிங்க CFA இயங்கினார். விற்பனையாளரின் பிரத்தியேக நிதி ஆலோசகராக TWCorp (Pvt) Ltd இயங்கியதுடன், சட்ட ஆலோசகராக ஜுலியஸ் அன்ட் கிறீஸி இயங்கியிருந்தது.

நியூ அந்தனீஸ் குழுமத்தின் தவிசாளர் எமில் ஸ்டான்லி கருத்துத் தெரிவிக்கையில், "நியூ அந்தனீஸைப் பொறுத்தமட்டில் இது மிகவும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக அமைந்துள்ளது.

இரட்டை SLIM விருதுகளை வென்றுள்ள DSI Tyres

இலங்கையின் முதன்மையான டயர் வர்த்தக நாமமான DSI Tyres, அண்மையில் நடைபெற்ற SLIM Brand Excellecne 2022 விருது விழாவில் Product Brand of the Year பிரிவின் வெள்ளிப் பதக்க விருதையும், Local Brand of the Year பிரிவின் வெண்கல பதக்க விருதையும் வென்று மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட தமது பெருமைமிகு பயணத்தின் தனித்துவமான தடத்தை பதித்துள்ளது.

மேலும், தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இலங்கையின் முதன்மையான மூன்று வர்த்தக நாமங்களில் ஒன்றாக தமது இடத்தை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளமை DSI Tyres இன் இன்னுமொரு சரித்திர வெற்றியாகும். தமது உற்பத்திகளை நவீன சந்தைப்படுத்தல் உத்திகள் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடம் சரியான முறையில் கொண்டு சேர்த்தமையே இவ்வெற்றிக்கு பிரதான காரணமாகும். கடினமானதும் நெருக்கடி மிக்கதுமான சூழலிலும் நிலைத்தகு இருப்பை அடிப்படையாக கொண்ட சந்தைப்படுத்தல் வழிமுறைகள் ஊடாக வாடிக்கையாளர்களின் மனங்களை கவர்ந்து தமது சந்தைப் பங்கை பெருக்கிக் கொள்வதற்கு DSI Tyres இனால் முடிந்துள்ளது.

"DSI Tyres வாடிக்கையாளர்களின் மனங்களில் ஆழப் பதிந்துள்ள வர்த்தக நாமமாகும். நாம் வென்றுள்ள ஆகச்சிறந்த விருது மக்கள் விருதே. அந்த மக்கள் நம்பிக்கையினை காப்பதற்கு நாம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்படுவது எமக்கு பெரும் மகிழ்ச்சியாகவும் கௌரவமாகவும் உள்ளது என DSI Tyres நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பொரளை கிளையில் தங்க கடன் சேவையை ஆரம்பிக்கும் HNB FINANCE

பெருமளவு மக்கள் தொகையைக் கொண்ட பொரளை பிரதேசத்தில் தங்கக் கடன் சேவைகளுக்காக அதிகரித்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE, இல. 61 டி.எஸ். சேனநாயக்க மாவத்தை கொழும்பு 08இல் அமைந்துள்ள அதன் பொரளை கிளையில் புத்தம் புதிய தங்கக் கடன் நிலையத்தை அண்மையில் நிறுவியது.

பொரளையிலுள்ள தற்போதுள்ள மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு தங்கக் கடன், தங்கக் கடன் திட்டம் மற்றும் VIP தங்கக் கடன் திட்டம் உள்ளிட்ட நிறுவனத்தின் நவீன தங்கக் கடன் சேவைகளில் இணைவதற்கு இந்த புதிய தங்கக் கடன் அலகு அறிமுகப்படுத்தப்பட்டது. HNB FINANCE இன் தங்கக் கடன் சேவையின் சிறப்பு அம்சங்கள் தங்கக் கடன் துறையில் போட்டித் தன்மை கொண்ட வட்டி விகிதத்தின் கீழ் சேவைகளை மிக விரைவாக வழங்குவது மற்றும் சலுகைக் கட்டண முறைகள் மூலம் தங்கக் கடனை மீளச் செலுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குகிறது. மேலும், நிறுவனம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆவணக் கட்டணம் அல்லது மறைக்கப்பட்ட கட்டணம் எதனையும் விதிக்காது.

"எமது பொரளை கிளைக்கு புதிய தங்கக் கடன் நிலையம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், அப்பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள ஏராளமான வாடிக்கையாளர்களுக்கு தங்கக் கடன் சேவைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை வழங்க முடியும். எமது தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு உத்தரவாதமான தனிப்பயனாக்கப்பட்ட சேவையை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்." என HNB FINANCEஇன் தங்கக் கடன் சேவைப் பிரிவின் தலைவர் லக்ஷ்மன் ரணசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் சிறந்த நிறுவனமாக மகுடம் சூடிய யுனிலீவர்

அண்மையில் இடம்பெற்ற 'Best Corporate Citizen Sustainability Awards 2022' (சிறந்த ஒன்றிணைக்கப்பட்ட பிரஜை நிலைபேறானதன்மை விருதுகள் 2022) விழாவில், ஊழியர் உறவுகளை வளர்ப்பதில் சிறந்த செயல்திறனுக்கான பிரிவின் (Best Performance in fostering Employee Relations) விருதை யுனிலீவர் ஸ்ரீலங்கா (Unilever Sri Lanka) நிறுவனம் பெற்றுள்ளது.

இந்த விருதை யுனிலீவர் நிறுவனத்திற்கு, இலங்கை வர்த்தக சம்மேளனம் வழங்கியிருந்தது. ஊழியர்களின் ஈடுபாடு, பயிற்சி, தொழில் விருத்தி, நல்வாழ்வு, இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பன்முகத்தன்மை, உள்ளீர்த்தல் ஆகியவற்றில் சிறந்த ஊழியர் நிகழ்ச்சி நிரல் மற்றும் பொது நடைமுறைகளை பேணியமை தொடர்பில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. நிறுவனம் முழுவதும் நெகிழ்ச்சியான மற்றும் உற்பத்தித் திறனை வழங்கக் கூடிய ஊழியர்களைக் கொண்ட ஒன்றிணைக்கப்பட்ட கலாசாரத்தை இது உருவாக்கியுள்ளது.

Best Corporate Citizen Sustainability Awards ஆனது, உள்ளூர் பொருளாதாரம், சமூகம், சூழலுக்கு சிறந்த பங்களிப்பாளர்களுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்ற, இலங்கையின் மிக உயர்ந்த பெருநிறுவன விருதாக கருதப்படுகிறது.

யுனிலீவர் ஸ்ரீலங்காவின் மனிதவளப் பணிப்பாளர் அனன்யா சபர்வால் இது தொடர்பில் தெரிவிக்கையில், "இந்த அங்கீகாரத்தைப் பெறுவதில் நாம் பெருமையடைகிறோம். இது சரியான நேரத்திலும், முற்போக்கான கொள்கைகள் மூலம் எமது ஊழியர்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் பணியிடத்தை பேணுவதற்கான எமது முயற்சிகளுக்கு சாட்சியமளித்துள்ளது." என்றார்.

அனன்யா மேலும் தெரிவிக்கையில், "எமது ஊழியர்களுக்கு மிகவும் அவசியமான வேளையிலும், பெருநிறுவனங்களுக்கு மிகவும் கடினமாகவும் இருந்த வேளையிலும் யுனிலீவர் முன்னெடுத்த மனிதாபிமான அணுகுமுறையானது, எமது ஊழியர்களுக்குள் ஒரு வலுவான நோக்கத்தை உருவாக்க உதவிய அதே நேரத்தில், நிறுவனத்திற்கும் நாட்டிற்கும் அவசியமான இவ்வேளையில் அது பிரதியுபகாரமாக அமைந்தது." என்றார்.

மஞ்சரி சிறுகதை

மெல்ல உடையும் சிறகுகள்

'அம்மா போஸ்ட்...போஸ்ட்..' வெளியில் தபால் காரரின் குரல் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்கிறது. 'மகள்.. மகள் வெளியில யாரோ கூப்பிடுறாங்க. ஒருக்கா யாருன்னு பாருங்க. இங்க நான் கொஞ்சம் வேலயா இருக்கேன்.' வீட்டு சமயலறை பக்கம் இருந்து கத்தினாள் தாய் பசீலா. இரு சத்தங்களையும் உள்வாங்கிக் கொண்டு முன் வாசலுக்கு விரைகிறாள் மஸீனா. அங்கே ஒரு பதிவுத் தபாலுடன் தபால்காரர் காத்திருப்பதை புரிந்துகொண்ட மஸீனா, அவர் காட்டிய இடத்தில் கையொப்பத்தை இட்டு அந்த கடிதத்தைப் பெற்றுக்கொள்கிறாள்.

அந்த கடிதம் மஸீனாவின் பெயருக்குத்தான் வந்திருந்தது. 'எனக்கு யாரு கடிதம் போட்டிருப்பா..' என்ற பதற்றத்தோடு கடிதத்தைப் பிரிக்கிறாள். அதை வாசிக்க வாசிக்க அவளுக்குத் தலை சுற்றியது. இலேசாக மயக்கம் வருவது போலிருந்தது. மெது மெதுவாக சுவர் ஓரமாக சென்று தனது அறைக்குள் போடப்பட்டிருந்த கட்டிலில் அமர்ந்து கொள்கிறாள். அவளின் இதயம் வேகமாக துடித்தது. அவளை அறியாமலேயே கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கிறது. கத்தி அழ வேண்டும் போலிருந்தது. இருந்தாலும் ஒரு முறை தன்னை சுதாகரித்துக்கொண்டு கடித்தை முழுமையாக படித்து முடிக்கிறாள்.

காதி நீதி மன்றத்தால் அனுப்பப்பட்டிருந்த அந்த கடிதத்தை மஸீனாவின் கண்ணீர்த் துளிகள் நனைத்தன. தனது கணவன் பற்றி அவள் கண்ட கனவுகளும், எதிர் பார்ப்புகளும் ஏமாற்றங்களாக சிதறி விழ 'ச்சீ இப்படியும் மனிதர்களா?' என வெறுப்புடன் திரும்பிய போது சேலை முந்தானையால் கைகளை துடைத்துக் கொண்டு உள்ளே வருகிறாள் தாய் பசீலா. தனது மகளின் மாற்றத்தை அவதானித்து அவள் கொஞ்சம் ஆடிப் போனாள். 'மக.. என்னம்மா... என்னம்மா நடந்துச்சு? ஏம்மா அழுவுறீங்க? தாய்மைக்குரிய பதற்றம் பசீலாவின் குரலில் எதிரொலித்தது.

மஸீனாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இந்த கடிதத்தைப் பார்த்தால் அந்த தாயின் உள்ளம் உடைந்து போய்விடும் என்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் தனக்கு இருக்கும் ஒரே ஆறுதல் உம்மா மட்டும்தான் என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள். அவளுக்கு உம்மாவிடம் கடிதத்தை வாசித்து காட்டி ஆறுதல் பெற வேண்டும் போலிருந்தது. எனினும் எடுத்த எடுப்பில் இதை எப்படிச் சொல்வது என ஒரு கணம் யோசித்தாள். அதற்குள் மகளின் கைகளில் இருந்த கடிதத்தை கண்டுவிடுகிறாள் பசீலா. அதை பறித்தெடுத்துப் படிக்கிறாள்.

மஸீனாவுக்கு எதிராக அவளது கணவன் சமீரால் தொடரப்பட்டிருந்த தலாக் வழக்கு தொடர்பான இறுதி விசாரணை எதிர்வரும் சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு இடம்பெறும் என்றும். அன்றைய தினம் காதி நீதிமன்றத்திற்கு வருகை தராவிட்டால் சமீருக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்படும் என்றும் அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

அந்த கடிதத்தை வாசித்து முடித்த பசீலா பதறினாள். மகளை கட்டியணைத்துக்கொண்டு கதறுகிறாள். அங்கு வார்த்தைகள் எதுவும் வெளி வரவில்லை. நீண்டதொரு விம்மலுக்குப் பின்னர் மௌனத்தைக் களைகிறாள் மஸீனா. 'யேம்மா என்ட வாழ்க்க இப்படியா போச்சு. இவரு சொல்றது உண்மையா உம்மா.? அப்படீன்னா எனக்கு பைத்தியமா உம்மா.? சொல்லுங்க உம்மா எனக்கு பைத்தியமா உம்மா..? கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள் மஸீனா. பதிலளிக்க முடியாமல் தடுமாறினாள் பசீலா.

'இல்லம்மா இல்ல. உங்களுக்கு ஒன்னுமே இல்ல. நீங்க நல்லாதான் இருக்கீங்க. அந்த அல்லாஹ் உங்கள கைவிட மாட்டான். பொய் ஒரு நாளும் நிலைக்காதும்மா. நீங்க கவலப்படாம இருங்க சனிக்கிழமை என்ன நடக்குதுன்னு பார்ப்பம்' மகளின் ஆறுதலுக்காக பேசினாலும் பசீலாவின் உள்ம னம் பற்றி எரிவதை அவள் மட்டுமே அறிவாள். அவளால் கட்டுப்படுத்த முடியாத கண்ணீர் மஸீனாவின் தோள்பட்டையை நனைக்கிறது. உம்மாவின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டவளாய் கட்டிலில் சாய்கிறாள். தன் முகத்தை தலையணையில் புதைத்துக்கொள்கிறாள். அழுதழுது அந்த தலையணை ஈரமாகிறது. ஆனால் அவள் மனப்பாரம் குறையவில்லை. எப்படியெல்லாம் வாழ நினைத்தவள், என்னவெல்லாம் கனவு கண்டவள் இன்று நாதியற்றவளாக மாறிவிட்டாள். இது எல்லாவற்றுக்கும் தனது தாய் தந்தையும் காரணமாகி விட்டார்கள் என்பதை நினைக்கும் போது அவளுக்கு ஆத்திரம் மேலிட்டது. எனினும் அவளால் உம்மாவையும், வாப்பாவையும் வெறுக்க முடியவில்லை. ஏனெனில் இன்று அவளுக்கு இருக்கும் ஒரே பாதுகாப்பு அவர்கள்தான். அவர்களையும் ஒதுக்கிவிட்டு எப்படி வாழ்வது என்று சிந்தித்தாள்.

அந்த சிந்தனை அவளது கடந்த கால வாழ்க்கையை வட்டமிடத் தொடங்கியது.

ஆமாம் அமீன் மற்றும் பசீலா தம்பதியினரின் செல்வப் புதல்விதான் இந்த மஸீனா. குடும்பத்திற்கு ஒரே பிள்ளை என்பதால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். செல்வத்திற்கும், செழிப்பிற்கும் எந்தவிதமான குறைவும் இருக்கவில்லை. எட்டாம் வகுப்பு வரை ஊர் பாடசாலையில் படித்தாள். அந்த பாடசாலையில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால் ஒரு பிரபல பாடசலைக்கு அவள் மாற்றப்பட்டாள். ஊரிலிருந்து சற்று தூரத்தில் அமைந்திருந்த அப்பாடசாலைக்கு தினமும் சென்று வர முடியாத காரணத்தால் அவளை ஒரு விடுதியில் சேர்த்து விடுவதென்று பெற்றோர் முடிவு செய்தனர். ஆரம்பத்தில் மஸீனா இதை கடுமையாக எதிர்த்தாள். தன்னால் உம்மா, வாப்பாவை விட்டுச் செல்ல முடியாது என அடம் பிடித்தாள். ஆனால் அதில் மஸீனா தோற்றுப் போக தந்தை அமீனின் பிடிவாதம் வென்றது.

பலதரப்பட்ட நினைவுகளுக்கும், ஏக்கங்களுக்கும் மத்தியில் காலங்கள் உருண்டோடின. அப்போது மஸீனா தரம் பன்னிரண்டு விஞ்ஞானப் பிரிவிலே படித்துக் கொண்டிருந்தாள். அன்று பாடசாலை விடுமுறையில் வீடு வந்த மஸீனா வீட்டு முன் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அங்கு வந்த அவளின் தந்தை மெதுவாக பேச்சுக் கொடுத்தார். 'மகள் நான் உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லனும்' என இழுக்க 'சொல்லுங்க வாப்பா சொல்லுங்க' என வாப்பாவின் பக்கம் திரும்புகிறாள் மஸீனா. 'அது வந்து ஒன்னுமில்ல மக. நானும் உங்க உம்மாவும், சேர்ந்து ஒரு முடிவெடுத்து இருக்கோம். அதாவது இனிமேலயும் உங்கள படிக்க வைக்காம உங்களுக்கு ஒரு கல்யாணத்த நடத்தி பார்க்க ஆசபடுறோம். இத நீங்க மறுக்க மாட்டீங்கன்னு எங்களுக்குத் தெரியும். இருந்தாலும்.....' அமீன் சரியாக முடிக்கவுமில்லை. மஸீனா துள்ளி எழுந்தாள்.

'உங்களுக்கு என்ன வாப்பா புடிச்சிருக்கு. இப்பதான் எனக்கு பதினேழு வயசு. நான் படிக்கனும், டாக்டர் ஆகனும் தயவு செஞ்சு என்ன வற்புறுத்தாதீங்க வாப்பா' இந்த பதிலை அமீன் எதிர்பார்க்கவில்லை. அதனால் கோபத்தால் அவர் முகம் சிவந்தது. 'நீங்க பொறுமையா இருங்க நான் பேசுறேன்' என்று சொல்லிக் கொண்டே பசீலா பேச ஆரம்பித்தாள்.

'இஞ்ச பாரு மகள் வாப்பா உனக்கு ஒரு நாளும் அநியாயம் செய்ய மாட்டாரு. நீ படிச்சி, டாக்டராகி மாப்புள தேடி கல்யாணம் முடிக்கிறதுக்குள்ள நாங்க ரெண்டு பேரும் உசுரோட இருப்போமோ தெரியா. அதனால உன்ட கல்யாணத்த முடிச்சிடனும். இந்த காலத்துல மாப்புள தேடுறது சரியான கஷ்டம்மா. ஒன்ட அதிஷ்டமோ என்னவோ அந்த கலீல் ஹாஜியார்ட மகன் சமீருக்கு உன்ன கேட்டு கேட்டு வாராங்க. நல்ல வசதியான குடும்பம். அவனும் சீதேவியான பொடியன்' பசீலா அடுக்கிக் கொண்டே போனாள். மஸீனாவின் கோபம் தலைக்கேறியது.

'உம்மா உங்க ரெண்டு பேருக்கும் பைத்தியமா புடிச்சிருக்கு. போயும் போயும் அந்த பொறுக்கி சமீருக்கா என்ன முடிச்சு கொடுக்கப் போறீங்க? ஆவேசமாக கத்தினாள் மஸீனா.

'ஏய் வாய மூடுடி. அந்த பொடியன்ற அழகுக்கும், வசதிக்கும் ஆயிரம் பேர் பொண்ணுக் கொடுக்க தயாரா இருக்காங்க. அவர்ட வீடு என்ன, கார் என்ன வலிய வாரதிஷ்டத்த உதச்சி விரட்ட போறீயா?' அமீன் கொஞ்சம் ஆவேசமாக பேசினார்.

'இல்ல வாப்பா அந்த சமீர் நல்லவனில்ல வாப்பா. அவனுக்கு பல பெண்களோட தொடர்பு இருக்கு வாப்பா. அதோட அவனொரு குடுக்காரன் வாப்பா. அப்படியே அவன் நல்லவனா இருந்தா கூட இப்போதைக்கு எனக்கு கல்யாணம் வாணாம் வாப்பா. பிளீஸ் என்னய படிக்கவிடுங்க வாப்பா' அமீனின் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் மஸீனா.

'வசதி வாய்ப்பு இருந்தா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருக்கும். ஊர்க்காரங்க பொறாமையில இல்லாததயும், பொல்லாததயும் சொல்வாங்க. அதயெல்லாம் நீ கண்டுக்க தேவயில்ல. நாளைக்கி அவங்க கல்யாணத்துக்கு திகதி குறிக்க வாராங்க. பிடிவாதம் பிடிக்காம ஆக வேண்டியத பாரு' உறுதியாகச் சொன்ன அமீன் யாருடைய பதிலுக்காகவும் காத்திருக்காமல் தனது அறைக்குள் புகுந்து படாரென கதவை சாத்திக்கொண்டார்.

மஸீனாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கத்தினாள், கதறினாள். அவளுடைய அலறலை யாருமே காதிலெடுக்கவில்லை. பசீலாவும் எதையும் கண்டு கொள்ளாமல் பிடிவாதமாகவே இருந்தாள். மஸீனாவால் இனி போராட முடியவில்லை. அவள் பித்தம் பிடித்தவள் போலானாள். பல நாட்கள் பட்டினி இருந்தாள், தன்னால் முடியும் மட்டும் அழுது தீர்த்தாள். பெண்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத சமூகத்துடன் போராடி தோற்றுப்போன பல்லாயிரக்கணக்கான பெண்களில் மஸீனாவும் ஒருத்தியானாள். அவளின் எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன, அவளின் கனவுகள் எல்லாம் சிதைவடைந்து அவளது சின்ன இதயம் உடைந்து துகள் துகளாகியது.

எண்ணி இரண்டு வாரத்திற்குள் அவளது கல்யாணம் நடந்தேறியது. எல்லாம் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் என்று எண்ணியவளாக புதிய வாழ்க்கைக்குள் நுழைகிறாள். நினைத்த வாழ்க்கை கிடைக்காத போது கிடைத்த வாழ்க்கையில் தன்னை அர்ப்பணிக்கும் சராசரி பெண்களில் ஒருத்தியாக அவளும் மாறத் தொடங்கினாள். திருமணம் முடிந்து ஆறு மாதம் வரையில் அவர்களின் வாழ்க்கை ஓரளவு சந்தோஷமாகத் தான் ஓடியது. ஆனால் காலம் செல்லச் செல்ல சமீரின் சுயரூபம் தெரிந்தது. அவனுக்கு பல பெண்களோடு தொடர்பிருப்பது நிரூபணமானது. அத்தோடு அவன் போதைக்கும் அடிமையாகி இருந்தான். இருந்தாலும் வெளியில் தன்னை நல்லவனாகவே காட்டிக் கொள்வான். அவனை நல்லவனாக காட்டுவதற்காக அவ்வப்போது மஸீனா மீது பழி போடுவான்.

இப்படியே நாட்கள் நகர அவனுடைய நாடகம் மஸீனாவின் பெற்றோருக்கும் தெரிய வந்தது. மகளின் வாழ்க்கைக்காக மருமகனிடம் மன்றாடினார்கள். அவன் எதையும் காதில் வாங்கவில்லை என்பதால் சமீரின் பெற்றோரை நாடிச் சென்றார்கள். அவர்களும் ஆம்பள புள்ளய பெத்தவங்க என்ற அகங்காரத்தில் பேச அமீனும், பசீலாவும் ஆடிப் போனார்கள். தம் மகளை தாமே பாழ் கிணற்றில் தள்ளி விட்டதை நினைத்து மௌனமாக அழுதார்கள். அவர்களுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. இதனால் மஸீனாவின் இதயம் ரணமாகியது. அதிலிருந்து மீள முடியாமல் தவித்தாள். கடந்த காலமும், நிகழ்காலமும், எதிர்காலமும் அவளை நெருக்கியது.

'மகள் நீங்க காலையில இருந்து ஒன்னுமே சாப்பிட இல்ல. நீங்க அதயே நெனச்சிக்கிட்டு இருக்காம எதையாச்சும் வந்து சாப்பிடுங்க. எல்லாம் அல்லாஹ் வச்சபடிதான் நடக்கும். கவலப்படாம வாங்க.' தாயின் பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்காமல் எழுந்து நின்றாள் மஸீனா. மிகவும் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டிருந்த மகளை பாசமாகவும், அதேநேரம் ஆச்சரியத்தோடும் பார்த்துக் கொண்டிருந்தாள் பசீலா.

'உம்மா இந்த முறயும் நான் காதி கோர்ட்டுக்கு போர இல்லேன்னு முடிவு பண்ணிட்டன் உம்மா. அவருக்கு வேண்டிய தீர்ப்ப வழங்கட்டும். இவ்வளவும் நடந்துக்கு பொறகு அவனோட வாழ்றத விட சாவுறது மேல்' மஸீனாவிடமிருந்து இதை எதிர்பார்க்காத தாய் பசீலா பதறிப் போனாள். 'நீ....நீ என்னம்மா சொல்ற? இத ஒன்ட வாப்பா தாங்க மாட்டாரும்மா. அவரோட மானம், மரியாத எல்லாம் போயிடும்மா'.

'அப்ப உங்களுக்கு வாப்பாட கௌரவம்தான் முக்கியம். நான், என்ட வாழ்க்க எப்படி போனாலும் பரவாயில்ல. அன்டக்கி அந்த கோர்ட்ல நான் தல குனிஞ்சி நின்டத பார்த்தீங்களா? நான் மனநில சரி இல்லாதவளாம். இன்னொருத்தனோட தொடர்பு இருக்காம். இத விட எனக்கு கணவன மதிக்க தெரியாதாம், திருப்திபடுத்த தெரியாதாம்.

இந்த கேவலத்த இன்னொருக்கா என்ட காதால கேட்கச் சொல்றீங்களா உம்மா? இந்த கோர்ட், காதியார் எல்லாரும் ஆம்புள சொல்றததான் கேட்குறாங்க. அந்த சமீர் போதைக்கு அடிமையாகி சீரழியுறது இந்த ஊருக்கே தெரியும். ஒரு மனைவிய விட அவனுக்கு அந்த போதை எட்டு மணி நேர சந்தோஷத்தை கொடுக்குறதா அவனே என்கிட்ட பலதடவ சொல்லி இருக்கான். அவன ஒரு ஆம்புளன்னு சொல்றதுக்கே எனக்கு வெக்கமா இருக்கு.

இத நான் கோர்ட்ல சொன்னா ஏத்துக்குவாங்களா உம்மா? நான் கடைசியா சொல்றன் இனி இதபத்தி யாரும் என்கிட்ட பேசக் கூடாது. உங்களுக்கும், வாப்பாக்கும் கஷ்டம்னா சொல்லிடுங்க நான் எங்கயாச்சும் போயிட்றன்.' படபடவென கத்திய மஸீனா பக்கத்திலிருந்த கதிரையை தூக்கி எறிந்து தனது கோபத்தை தீர்த்துக் கொண்டாள். இனி அவளொரு ஊமைக் குயில். இந்த சமூகம் அவளின் சிறகுகளை மெல்ல மெல்ல உடைத்துவிட்டது.

வரக்காமுறையூர் ராசிக்...✍

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 56



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 56
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 56

இடமிருந்து வலம்

1. சிறிதும் விட்டுக் கொடுக்காத மனநிலை
5. அமைதியான இயல்புடையவர்
7. கோபம் குழம்பிவிட்டது
8. விலங்குகளுக்கு உண்டு (திரும்பியுள்ளது)
9. பறக்கும் இயல்புகொண்ட ஒருவகை உயிரினம்
10. குதிரை (குழம்பியுள்ளது)
11. வீடுகளில் வளர்க்கப்படும் விலங்கு திரும்பி நிற்கின்றது.
12. விடியல் பொழுது
14, பெண்
16. அடைக்கலம் அல்லது பாதுகாப்பு (குழம்பியுள்ளது)
18. திரும்பியிருந்தாலும் பிழையற்றது
20. அச்சம்
21, திறந்த வெளியிடம் (திரும்பியுள்ளது)
22. ஆறு, பள்ளத்தாக்கு போன்றனவற்றின் மேல் போக்குவரத்துக்காக இருபகுதிகளையும் இணைக்கும் பாதை (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. நோய்
2. ஆகாயம்
3. இளைய சகோதரன்
4. கையடக்கத் தொலைபேசியின் இயக்கத்துக்கு இது அவசியமானது (தலைகீழ்)
5. நிறைந்த பண்பு அல்லது மேன்மை
6. துளை
9. இழப்பால் ஏற்படும் மன வருத்தம்
10. ஆகாயக் கப்பலின் சாரதி
11. தழும்பு (தலைகீழ்)
12. உலகம்
13. வீட்டின் உள்ளே தனித்தனியாக அமைக்கப்படுவது (தலைகீழ்)
15. மனத்துணிவு
17. இயல்பான செழிப்புநிலை
19. ஒருவகை அரிசி
20. ஒன்றுக்கும் மேற்பட்டது.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 55

விடைகள்

இடமிருந்து வலம்

1. மகாவலி 4. பாசம் 6. துகில்
7. பணிவு 8. லட்டு 9. ஆமை
10. குடை 12. மாடி 13. பகுதி
14. கலம் 15. வள்ளம் 16. பாரதி
18. நாரி

மேலிருந்து கீழ்

1. மகிமை 2. காது 3. வல்லமை
4. பாணி 5. சவுக்கு 7. குடும்பம்
9. ஆடி 11. கொடை 12. மாணவன்
13. பலம் 14. களவு 16. பாரி
17. திணை

பரிசு பெறுவோர் விபரம்

முதல் பரிசு (ரூ 500/)	இரண்டாம் பரிசு (ரூ 350/)	மூன்றாம் பரிசு (ரூ 150/)
1. என். எஸ். ரஜீவ், பிரதேச செயலகம், முசலி, மன்னார்	2. எச்.எம்.எம். லெப்பே இல 11/26 ஏ, ரத்வத்தை மாவத்தை, பதுளை	3. சந்திரசேகரன் சசிதரன் தம்பியப்பா அதிபர் சாலை ஆரையம்பதி 01

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 55

பாராட்டு பெறுவோர்

1. சாஹிராபானு லியாவுத்தீன் புத்தளம்
2. அனுராதா பாக்கியராஜா வெள்ளவத்தை
3. ஏ.எல்ஏ. அஸீஸ் தெஹிவளை
4. கே.எப் மில்ஹானி ஏறாவூர்
5. ஆர் .ஞானச்சந்திரன் மட்டக்களப்பு
6. என்.நுஸ்பாஷெரீன் புல்மோட்டை
7. உ. வைஷ்நவ் கல்முனை
8. என். கிரித்திகா மட்டக்களப்பு
9. சு. சுல்பிக்கர் பொலன்னறுவை
10. எஸ்.எச்.எம் ஜிப்ரி உக்குவளை

அந்தஸ்து பார்த்து பிறப்பதுதான் காதலா அன்பு அதிகமானாலும் ஏற்படுவது தான் மோதலா?

இனியவன் இதுவரை வந்ததை கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்வது நல்லது.

ஜீவகன்

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் கறாஜ் ஒன்றில் சம்பளத்திற்கு வேலை பார்த்து வருகிறான்.

இரத்தினபுரியை பிறப்பிடமாகக் கொண்ட அவன் கொழும்பில் அவனது தூரத்து உறவான பார்வதி மாமியின் வீட்டில் தங்கி இருந்து வேலைக்குப் போகிறான்.

பார்வதியின் மகன் பிரேம்,

அவன் புகைப்படபிடிப்பாளன். இருவரும் ஒருநாள் போகும் போது வீதியில் வரும் மூன்று பெண்களைச் சந்திக்கிறார்கள்.

மூன்று பெண்களில் அழகாக இருந்த வெண்பா என்ற பெண்ணை கையில் இருந்த பிரேமின் கமெராவில் படம் பிடித்து வருகிறான்.

இதைப் பார்த்து விட்ட மூன்று பெண்களும் அவர்களை விரட்ட இருவரும் ஓடி தப்பிக்கிறார்கள்.

வெண்பா என்ற அந்த அழகியப் பெண்ணை ஜீவகனின் மனம் விரும்புகிறது. ஆனால் அவளோ கோடீஸ்வரர் ஒருவரின் மகன் என்பது தெரிய வந்ததும், அவளை மறந்துவிடு என்று பிரேம் ஜீவகனிடம் சொல்லுகிறான். அதற்கு மறுப்பு கூறுகிறான் ஜீவகன்.

இதற்கிடையில் பிரேமின் பக்கத்து வீட்டில் இருக்கும் தீபிகா என்று பெண் ஜீவகனைக் காதலிக்கிறாள்.

பலவழிகளில் தனது காதலை வெளிப்படுத்துகிறாள். ஆனாலும் ஜீவகன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

வெண்பா மீது பைத்தியமாக இருக்கும் ஜீவகன், அவள் தனியார் டியூசன் கிளாசுக்கு வருகிறாள் என்பதைக் கேள்விப்பட்டு அங்கு செல்கிறான். ஆனாலும்,

அவனது தோழிகள் எல்லோரும் சேர்ந்து தொலைவில் பார்த்தபடியே வெண்பாவிடம் கிண்டல் செய்கிறார்கள். 'கரள்கரண்டி' என்றும் அவனுக்கு பட்டப் பெயர் சூட்டுகிறார்கள்.

இனிமேலே படியுங்கள்

கோடீஸ்ர குடும்பம் ன்றின் ஒரே செல்ல மகள் வெண்பா. அவள் அப்பா விஜயராகவன் பெரிய வர்த்தகர். பம்பலப்பிட்டியில் உள்ள இரட்டைமாடி வீடொன்றில் வசித்து வந்த அவர், மிகவும் அமைதியான ஒரு மனிதர் அவர்வீட்டில் இருப்பது கூட எவருக்கும் தெரியாது.

அந்த வீட்டில்,

விஜய ராகவனையும் வெண்பாவையும் தவிர, இன்னுமோர் ஜீவகனும் இருந்தது.

அது,

'அம்மா'

அம்மா என்றால் வெண்பாவின் அம்மா அல்ல!

வெண்பாவின் அம்மா, அவள் பிறந்த ஒரு மாதத்திலேயே இறந்து விட்டாள்.

தாயின் அரவணைப்போ வாசனையோ வெண்பா உணர்ந்ததில்லை.

எல்லாமே அவளுக்கு அம்மா தான்.

'அம்மா' என்றுதான் அவளை எல்லோரும் அழைப்பார்கள்.

விஜய ராகவனும் அப்படித்தான் அழைப்பார்.

நடுத்தர வயதுடைய அந்த பெண்மணி மிகவும் அழகாக இருந்தாள்.

சாந்தமான முகம் அமைதியான சுபாவம்,

வெண்பாவை சிறுவயதில் இருந்தே அவள்தான் தன்பிள்ளையைப் போல் பார்த்து வந்தாள்.

'வெண்பாவின் தாயார் இழந்த ஒரு மாதத்திலேயே 'அம்மா'வை அழைத்து வந்து விட்டார் விஜய ராகவன்.

எல்லோரும் நினைத்தார்கள்,

விஜயராகவன் 'அம்மா'வைத் திருமணம் செய்து கொண்டுதான் வந்திருக்கிறார் என்று,

ஆனாலும்,

அப்படி ஓர் எண்ணம், விஜயராகவனின் ஆழ் மனதில் கூட இருந்ததில்லை.

தனது அன்பு மனைவியின் மரணத்திற்குப்பிறகு,

வெண்பாவின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தில்,

வேறு திருமணம் அவர் செய்து கொள்ளவில்லை.

வீசட்டுக்கொரு வேலைக்காரன் வைக்க வேண்டும் என்று விஜயராகவன் முடிவு செய்த போது

"வேண்டாமே தனியாக ஒரு பெண் பிள்ளை இருக்கும் வீட்டுக்கு வேலைக்காரனோ வேலைக்காரியோ வேண்டாமே எல்லாத்தையும் நானே பார்த்துக் கொள்றேன்!"

அந்த எண்ணத்துக்கு சாவுமணி அடித்து விட்டாள் அம்மா!

பாடசாலையில் படிக்கும் நாட்களில், காலையில் காரில் போகும் வெண்பா மாலையிலும் காரிலேயே வீடு திரும்புவாள்.

இதனால்,

வெளி உலக தொடர்புகள் எதுவும் அவளுக்கு ஏற்படவாய்ப்பு இருக்கவில்லை.

இப்போது கல்லூரிப் படிப்பை எல்லாம் முடித்து விட்டு,

கம்பியூட்டர் சம்பந்தமான பாட நெறி ஒன்றுக்காக,

தனியார் டியூஷன் கிளாஸ் ஒன்றிற்காக போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

காரில் போகாமல் பஸ்சில் போனால் சிறப்பாக இருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது.

இதனால்,

அப்பாவிடம் மிகவும் சிரமப்பட்டு,

அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டாள் வெண்பா.

பஸ்சில் போய் வருவதும்,

சுவாரஸ்யமான அனுபவமாகவே இருந்தது வெண்பாவிற்கு.

இதுவரையில் இப்படி ஒரு அனுபவத்தை அவள் பெற்றதே இல்லை என்று அவளுக்குத் தோன்றியது.

பஸ்சில் செல்வதற்கு பொதுமக்கள் எவ்வளவு சிரமப்படுகிறார்கள் என்பதும் அப்போதுதான் அவளுக்குப்புரிந்தது.

பஸ்வில் அவள் பயணம் செய்ய ஆரம்பித்த பிறகு,

அவளுக்கு கிடைத்த தோழிகள்தான்,

கீதாவும், ரமாவும், பழக ஆரம்பித்த சிறிது காலத்திலேயே,

மூவரும் நெருங்கிய தோழிகளாகிவிட்டனர்.

அப்படி தோழிகளான பிறகுதான்,

வெண்பாவிற்கு ஜீவகனை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது.

தனது வாழ்வில்,

இதுவரையில் எந்த ஆண் மகனும் வந்து போனதாக,

அவளுக்கு ஞாபகம் இல்லை. ஜீவகனை சந்தித்தது,

அவளுக்கு புதிய அனுபமாகவே தோன்றியது.

அந்த இளைஞன் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

அடிக்கடி,

அவர்கள் இருவரது விழிகளும் சந்தித்துக் கொண்டதும் உண்மைதான்.

அந்த விழி மேய்ச்சல்,

அவளுக்கு வித்தியாசமாகவே இருந்தது.

மீண்டும் மீண்டும் அதைப் பற்றி நினைக்கையில்,

அதில் ஒரு சுவாரஸ்யம் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.

ஆனாலும் காராஜில் கூலி வேலை செய்யும் ஒருவனுக்கும்,

தன்னைப் போல் சமூக அந்தஸ்தில் உயர்ந்துள்ள ஒருவனுக்கும்,

ஒத்து வராதே என்ற என்று உணர்வும், அவள் உள்ளத்தில் ஊர்ந்தது.

(இனியவன் வருவான்....!)

பீபல்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிடெட்
திறந்த வாகன ஏல விற்பனை

71 மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகள்
2023 பெப்ரவரி 15 ஆம் திகதி புதன்கிழமை மாபிம வாகன கூடத்தில் காலை 10.00 மணி தொடக்கம் நடைபெறும்.
பரீட்சிப்பது பெப்ரவரி 12 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 14 செவ்வாய்க்கிழமை வரை காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரையான காலத்தில்
கலேவல வாகனக் கூடம் - கேதலகொல்ல, பெலிகமுவ, கலேவல. தொலைபேசி - 066-2287355
மாபிம வாகனக் கூடம் - இல. 225/D, நயாகல வீதி, ஹெய்யன்துடுவ, மாபிம. தொலைபேசி - 011-2401031 - 011-3055180
மொனராகலை வாகனக் கூடம் - இல. 08, பொத்துவில் வீதி, மொனராகலை. தொலைபேசி – 055-2277461
தலைமை அலுவலகம் - 0112 890 990/ 0112 828 169

கலேவல வாகனக் கூடம்

VEHICLE NO.	MAKE	MODEL	YEAR
மோட்டார் பைக்			
NC BDI-93XX	TVS	ZEST	2015
SG BHU-37XX	BAJAJ	PULSAR 150	2019
UP BIH-74XX	HONDA	DIO	2019
NC BEG-81XX	HERO	DASH VX	2015
NC BGT-81XX	YAMAHA	RAY-ZR	2018
மூன்று சக்கர வாகனம்			
SG AAG-63XX	BAJAJ	RE-205	2013
CP QO-61XX	BAJAJ	AUTO 4S	2008
CP AAU-18XX	BAJAJ	RE-SB	2014
CP AAN-89XX	BAJAJ	RE-SB	2019
CP AAW-92XX	BAJAJ	RE-SB	2015
NWABD-04XX	BAJAJ	RE/SB	2015
CP ABE-27XX	BAJAJ	RE-SB	2015
CP YD-25XX	BAJAJ	AR 4S	2010
NW AAL-52XX	BAJAJ	RE 205	2013
NW AAS-91XX	BAJAJ	RE/SB	2014
NC AAW-81XX	TVS	KING	2014

மாபிம வாகனக் கூடம்

VEHICLE NO.	MAKE	MODEL	YEAR
மோட்டார் பைக்			
SP BCK-86XX	MAHINDRA	GUSTO	2015
SG BIH-26XX	TVS	NTORQ	2019
WP BHU-24XX	HONDA	GRAZIA	2019
SP BGV-76XX	BAJAJ	PLATINA	2018
SP BGN-13XX	HERO	MAESTRO	2018
SG BDM-02XX	TVS	APACHE	2015
SG BFY-18XX	HERO	MAESTRO EDGE	2017
மூன்று சக்கர வாகனம்			
WP QS-92XX	BAJAJ	4S	2009
SP QW-66XX	BAJAJ	AR4S-UG	2009
SP YC-88XX	BAJAJ	AR 4S UG	2010
WP YR-97XX	BAJAJ	RE	2011
WP AAI-82XX	BAJAJ	RE205	2013
WP AAX-35XX	BAJAJ	RE-SB	2015
SP QU-22XX	BAJAJ	BAJAJ 4S	2009
SP ABK-90XX	BAJAJ	RE-SB	2016
WP YL-70XX	BAJAJ	RE205	2011
WP AAZ-20XX	BAJAJ	RE-SB	2015
WP QT-81XX	BAJAJ	BAJAJ 4S	2009
WP AAW-74XX	BAJAJ	RE-SB	2014
SP QV-13XX	BAJAJ	BAJAJ 4S	2009
WP QQ-77XX	BAJAJ	AUTO AR 4S	2008
WP QZ-72XX	BAJAJ	AR4S UG	2010
WP YU-19XX	BAJAJ	RE205	2011
WP ABI-57XX	BAJAJ	RE-SB	2015
WP AAY-36XX	BAJAJ	RE-SB	2015
WP QJ-04XX	BAJAJ	AR 4S	2007
WP AAO-32XX	BAJAJ	RE SB	2014
EP YZ-12XX	BAJAJ	RE205	2012
WP QW-87XX	BAJAJ	AR 4S-UG	2010
SG YA-96XX	BAJAJ	AR AS-UG	2010
SP AAS-67XX	BAJAJ	RE-SB	2014
SP AAK-48XX	BAJAJ	RE 205	2013
SP QZ-71XX	BAJAJ	RE-AR4S-UG	2010
WP AAJ-68XX	BAJAJ	RE205	2013
WP QE-74XX	BAJAJ	AUTO RE-2S	2006
WP ABC-13XX	BAJAJ	RE SB	2015
SP AAB-51XX	BAJAJ	RE 205	2012
WP YM-50XX	BAJAJ	RE 205	2011
WP AAE-38XX	BAJAJ	RE-205	2012
WP ABD-27XX	BAJAJ	RE-SB	2015
WP AAA-00XX	BAJAJ	RE 205	2012
WP AAP-49XX	BAJAJ	RE-SB	2014
WP AAC-38XX	BAJAJ	RE 205	2012
SP AAB-10XX	BAJAJ	RE 205	2012
SP AAN-76XX	BAJAJ	RE-SB	2013
WP AAR-36XX	BAJAJ	RE SB	2014

மொனராகலை வாகனக் கூடம்

VEHICLE NO.	MAKE	MODEL	YEAR
மோட்டார் பைக்			
CP BDD-50XX	BAJAJ	PULSAR 135 LS	2015
UP BIB-00XX	SUZUKI	-	2018
UP BIJ-68XX	HONDA	GRAZLA	2019
EP BGX-98XX	TVS	NTORQ	2018
மூன்று சக்கர வாகனம்			
UP YY-48XX	BAJAJ	RE 205	2012
UP YE-84XX	BAJAJ	AR RE 200	2010
UP YX-16XX	BAJAJ	RE 205	2012
EP ABE-87XX	BAJAJ	RE 5B	2015
UP QR-86XX	BAJAJ	AUTO 4S	2008

விற்பனை நிபந்தனைகள்

- உள்நுழைவு: ஏல விற்பனைத் திகதிக்கு முன்னர் வருகை தரும் வரிசைக்கு அமைய அனுமதிச் சீட்டு வழங்கப்படும். கொழும்பில் பிரதான ஏல விற்பனைக்கான நுழைவுக் கட்டணமாக ஒருவருக்கு மீளளிக்கப்படாத 1500 ரூபா நுழைவுச் சீட்டு மற்றும் 5000 ரூபா மீளளிக்கப்படும் வைப்புத் தொகை அறவிடப்படும்.
- கொடுப்பனவு: சுத்தியல் வைக்கப்பட்ட உடன் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை பணமாகச் செலுத்த வேண்டும் என்பதோடு எஞ்சிய 75% தொகையை 2023 பெப்ரவரி 21ஆம் திகதி செவ்வாக்கிழமை மாலை 3.00க்கு முன்னர் இல. 290, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்ற முகவரியில் அமைந்திருக்கும் பீபல்ஸ் மைக்ரோ கொமர்ஸ் லிமிடெட் தலைமை அலுவலகத்திற்கு செலுத்தி அகற்றிக் கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து நீக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உள்ளது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ஏ என் அல்கெவத்த ஒக்ஷனியர்(ர்)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com
lankaauction.lk

சாரதி தேவை

கொழும்பு பாதைகள் பற்றி நல்ல அனுபவமுடைய, வெள்ளவத்தை வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய, ஓடோ (Auto) கார், ஜீப் ஓட்டத்தெரிந்த சாரதிகள் (Drivers) தேவை. வயதெல்லை 45க்கு கீழ், இலவச தங்குமிடவசதி வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு வரவும்.

இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ.பே. இல. 076-6200300

We are a leading motor spare parts company, located in Rajagiriya.

Looking for;

SALES REPRESENTATIVES

For : Batticaloa Ampara, Kalmunai, Kaththankudi area.

- Should possess in G.C.E. O/L
- 2 - 3 years sales experience.
- Should have own motorbike.

Email or WhatsApp your CV within 14 days of this advertisement.

WhatsApp : 0706988871, 0716948444

Email - careers@somapalaco.com

வேலைவாய்ப்பு

திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தில் பின்வரும் வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 40 வயதிற்கு மேற்பட்டோராக அல்லது ஓய்வூதியம் பெறுபவராக இருத்தல் விரும்பத்தக்கது

1. காவல் வேலை 2. சமையல் வேலை 3. விடுதிப் பொறுப்பாளர்

விண்ணப்பங்களை பெப்ரவரி 20ம் (20.02.2023) திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நன்றி
முகவரி : இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் தூல்மலை, திஹாரிய, கலகெடிஹேன

ICPH
DOOLMALA
THIHARIYA
KALAGEDIHENA

தொலைபேசி :
033 2287840 - காரியாலயம்
077 5601111 - தலைவர்
077 1343692 - பொருளாளர்

விசேட அறிவித்தல்

2016ஆம் ஆண்டு 10ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் 30(2) பிரிவின் கீழ் ஹோமியோபதி வைத்தியராக பதிவு செய்யும் பரீட்சை 2023

2023 பெப்ரவரி மாதம் 06ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்வு மார்ச் மாதம் முதலாம் வாரத்தின் பின் நடைபெறும் மற்றும் திகதியை பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.slhmc.lk எனும் இணையதளத்தை நாடவும்.

டப்லியு. ஏ. எஸ். கிம்ஹானி வேரகொட ஆரச்சி,
பதிவாளர்,
ஹோமியொபதி மருத்துவ கவுன்சில்
இலக்கம் 94, ஷெல்டன் ஐயசிங்க மாவத்தை,
வெலிசர.
ராகம.

ஜாதிக லொதரய மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
NLB

மஹஜன சம்பத்
வியாழக்கிழமை 2023.02.02
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
சீட்டிழுப்பு இலக்கம் 5019
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,781,565.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 7 6 1 1 0 0

கொவிசெத வலிமை & Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3261
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,062,294.40
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 23 38 51 72

ராசி சுப மலன் மகுடம் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 328
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,710,031.60
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 08 13 18 57
விசேட இலக்கினம் கும்பம்

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1367
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 297,467,302.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து I
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 23 59 63 72

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1474
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 5 1 3 0 3 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1049
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,509,777.20
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 16 36 40 48

UNIVERSITY HOSPITAL
General Sir John Kotelawala Defence University

பல்கலைக்கழக வைத்தியசாலை
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
நிரந்தர ஊழியர்களுக்கான பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

வைத்திய அதிகாரி பதவிகள் (Post of Medical Officer)

01. வைத்திய அதிகாரி – தரம் I
02. வைத்திய அதிகாரி – தரம் II
03. வைத்திய அதிகாரி – ஆரம்பத் தரம்

தாதியர் பதவிகள் (Post of Nursing Staff)

01. தாதிய உத்தியோகத்தர்கள் - தரம் I
02. தாதிய உத்தியோகத்தர்கள் - தரம் III

துணை மருத்துவ சேவை (Post of Paramedical Staff)

01. மருந்தாளர் - தரம் III (Pharmacist)
02. கதிரியக்கவியளாலர் - தரம் III (Radiographers) – (நோயறிதல்)
03. பேச்சு சிகிச்சையாளர் - தரம் III (Speech Therapist)

நிர்வாக பதவிகள் (Administration Posts)

01. மக்கள் தொடர்பு அலுவலகர் – தரம் II (Public Relation Officer)
02. சந்தைப்படுத்தல் அதிகாரி – தரம் II (Marketing Officer)

பொது நிபந்தனைகள்:

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்ததொரு பிரதேசத்திலும் அத்துடன் பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
5. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர – மருத்துவ துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய விசேட தரப்பதவிகள் அல்லாதவர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II, ஆகியோர் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.
6. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 % பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக் கழகத்தினால் 15 %ம் , 03 % ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) பல்கலைக்கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.
7. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு " நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர" என்ற முகவரிக்கு 2023.02.21 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
9. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
10. விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk)

www.kdu.ac.lk

மேஷம்

பஞ்சமாதிபதி சூரியன் தசமகேந்திரத்தில் இருக்கிறார். அவர் சுகஸ்தானத்தைப் பார்வையிடுகின்றார். சனி பகவானின் நிலையால் தொழில் வளர்ச்சியும் லாபமும் அதிகரிக்கும். இதுவரை வராமல் இருந்த ஊதிய உயர்வு மற்றும் பதவி உயர்வு முதலியவை கிடைப்பதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதால், அதற்கான முயற்சியில் ஈடுபடலாம். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும் சுக்கிரனின் நிலையால் கலைத்துறையினருக்கு நல்வாய்ப்பும் வருமானமும் கூடும்.

குரு ராகுவை நோக்கி நகர, ராகு குருவை நோக்கி நகர்வதால் சில விஷயங்கள் கடைசி நேரத்தில் மாற்றம் பெறும். எதிர்பாராத திருப்பங்கள் நேரும். சுப காரியங்களில் சற்று பின்னடைவு நேரலாம். ஆனால், முயற்சியை கைவிட வேண்டாம்.

ரிஷபம்

களத்திரகாரகர் செவ்வாய் ராசியில் இருக்கிறார். சுகாதிபதி சூரியன் பாக்கியஸ்தானத்தில் இருக்கிறார். தொழில் ஸ்தானத்தில் சுக்கிரனும், லாபஸ்தானத்தில் குருவும் இருக்கிறார்கள். புதனும் 8ல் மறைந்து நல்ல பலன்களைத் தருவார். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் இருக்கும். அலுவலகத்தில் மேலதிகாரிகள் நன்கு ஒத்துழைப்பார்கள். புதிய வேலைக்கு செய்து வரும் முயற்சிகள் பலனளிக்கும். ஆதாயத்துடன் தொழில் வணிகம் நடக்கும். புதிய முதலீடுகளை ஜாக்கிரதையாக செய்ய வேண்டிய காலம் இது. சுக்கிரன் அமைப்பினால் கணவன் மனைவி ஒற்றுமை நீடிப்பது மட்டுமல்ல கலைத்துறையினருக்கும் நல்ல வாய்ப்பு உண்டு.

ராசியில் செவ்வாய் அமர்ந்திருக்கிறார். ரத்த அழுத்த நோயினால் அவதிப்படுபவர்கள், இன்னும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எதிர்பாராத பயணங்கள், அலைச்சல்கள் உண்டு.

மிதுனம்

குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து உங்கள் தனஸ்தானத்தைப் பார்ப்பதால் வருமானம் நன்றாகவே இருக்கும். குடும்பத்திலும் அமைதியும் செயல்திறனும் கூடும். ராகு 11ல் இருப்பதும், ஐந்தாமிடத்தில் கேது இருப்பதும் நல்ல அமைப்புக்கள். கேது உங்களுக்கு மனப்பக்குவத்தைத் தருவதோடு கோயில் குளங்கள் முதலிய புனிதப் பயணங்களுக்குச் செல்ல தூண்டிக் கொண்டு இருப்பார். பெண்ணோ பிள்ளையோ இருந்தால் திருமண ஏற்பாடுகள் தொடங்கக்கூடிய காலம் இது. மேல் படிப்பு படிப்பவர்கள் தேர்வுக்கு தயாராக இருப்பவர்களுக்கு நல்ல காலம். எளிதில் வெற்றி கிடைக்கும்.

செவ்வாய் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். அஷ்டமத்தில் சனி சூரியனோடு சேர்ந்து இருக்கிறார். அவ்வப் பொழுது சிறு ஆரோக்கிய குறைபாடுகள் ஏற்படும். கடன் பிரச்சினைகள் தலைவலியைத் தரும். மறந்து போன சிலபகைகள் மீண்டும் தலை எடுக்கும் என்பதால் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

கடகம்

5, 10 க்கு உரிய செவ்வாய், லாபஸ்தானத்தில் இருந்து உங்கள் தனஸ்தானத்தைப் பார்வையிடுகிறார். சொத்து நிலம் சம்பந்தப்பட்ட வகைகளில் ஆதாயம் கிடைக்கும். வருமானம் சிரமமின்றி வரும். உறவினர்கள் மற்றும் சகோதரர்களிடையே ஒற்றுமை நிலவும். ஆரோக்கியம் நல்லபடியாக இருக்கும். ராசிக்கு குருவின் சுப பார்வை கிடைப்பது நல்ல பலன்களை அதிகரிக்கும். 3,12க்குரிய புதன் 6ல் இருக்கிறார். உங்கள் வருமானத்தையும் பண வசதியும் கூட்டும் அமைப்பு இது.

மிக அதிக உழைப்பும் அலைச்சலும் உள்ள வாரம் இது. அடுத்தவர் விஷயத்தில் எக்காரணத்தை முன்னிட்டும் தலையிடாமல் இருக்க வேண்டும். பெண்கள் மூலம் சில பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்புள்ளது. காரணம் சுக்கிரன் அஷ்டமத்தில் இருக்கிறார்.

சிம்மம்

குரு 7ஆம் பார்வையாக உங்கள் தனஸ்தானத்தையும், 9ஆம் பார்வையாக சுகஸ்தானத்தையும் பார்வையிடுகின்றார். கேது 3ஆம் இடத்தில் இருக்கின்றார். இந்த அடிப்படையில் இந்த வாரம் உங்களுக்கு முன்னேற்றமான வாரமாகவே இருக்கும். ஆனால், உங்களுடைய முயற்சி அதிகம் தேவைப்படும். வேலை இல்லாதவர்கள், முயற்சி செய்தால் இவ்வாரம் நல்ல வேலை அமையும். தற்காலிக பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தர பணி கிடைக்க வாய்ப்புண்டு.

குரு அஷ்டமத்தில் இருக்கிறார். இந்த இரண்டு கிரகங்களும் அவ்வப்பொழுது சில தடைகளை கொடுக்கவே செய்யும். எதிர்காலத்தைப் பற்றிய பயத்தை அதிகரிக்கும். கணவன் மனைவி உறவுகளில் சிக்கலை ஏற்படுத்தும் என்பதால் எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

கன்னி

தனபாக்கிய அதிபதியான சுக்கிரன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். ராசிக்குரிய புதன் 4ஆம் இடத்தில் இருந்து தொழில் ஸ்தானத்தைப் பார்வையிடுகின்றார். நாலு ஏழுக்குரிய குரு கேந்திரத்தில் பலம் பெற்று உங்கள் ராசியைப் பார்ப்பதும் தைரிய ஸ்தானத்தைப் பார்ப்பதும் லாபஸ்தானத்தைப் பார்ப்பதும் நல்ல அமைப்புகள். தெய்வீக திருத்தலங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும். 8ஆம் இடத்தில் ராகுவும் 2ஆம் இடத்தில் கேதுவும் சிரமங்களை ஏற்படுத்தும். 8ல் இருக்கும் ராகு ஆரோக்கிய பிரச்சினைகளையும் தந்து கொண்டே இருப்பார்.

துலாம்

ராசிநாதன் சுக்கிரன் 5ஆம் இடத்தில் இருந்து லாபஸ்தானத்தைப் பார்க்கின்றார். லாபாதிபதி சூரியன் சனியோடு இணைந்து கேந்திரத்தில் இருக்கிறார். குருவின் பார்வை, உங்களுடைய தனஸ்தானத்திற்கு கிடைப்பதால் வருவாய் தேவைக்கு ஏற்றபடி வந்துவிடும். கருத்து வேறுபாடுகள் மறையும். ஆன்மிக சிந்தனைகள் ஓங்கும். ராசிக்கு அதிபதி சுக்கிரன் பலம் பெற்று இருப்பதால் கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வணிகம் நல்ல முறையில் இருக்கும்.

திருமணம் முதலிய சுப முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டு பிறகு சரியாகும். அவ்வப்பொழுது மனத் தடுமாற்றம் ஏற்படும். மேலதிகாரிகளுடன் சற்று விட்டுக் கொடுத்துச் செல்லவும். பகை உணர்வை வளர்க்க வேண்டாம்.

விருச்சிகம்

ராசிநாதன் செவ்வாய் 7ல் பலம் பெற்று ராசியைப் பார்ப்பதும், சப்தமாதிபதி சுக்கிரன் நான்கில் பலம் பெற்று தொழில் ஜீவன ஸ்தானத்தைப் பார்ப்பதும் நல்ல அமைப்புகள். அது இன்னும் அதிக பலனைத் தரும். சொந்த வீடு வாங்க, நிலம் வாங்க நினைப்பவர்களுக்கு நல்ல விதமான முறையில் அமையும் அமைப்பு உண்டு. பதவி உயர்வு, ஊதிய உயர்வு, சலுகைகள் முதலியன கிடைக்கும் காலம் இது.

12ல் இருக்கும் கேது பிரச்சினைகளும் தரும். அவரை ராகு பார்ப்பதால் நீங்கள் அளவுக்கு அதிகமான ஏதேனும் ஒரு விஷயத்தை மேற்கொண்டு இருந்தால் அது உங்களுக்கு ஏமாற்றத்தைத் தரவும் செய்யலாம்.

தனுசு

6,11க்குரிய சுக்கிரன் உங்கள் பாக்கிய ஸ்தானத்தை பார்க்கின்றார். ராசியதிபதி வலுவடைந்து இருப்பதும் சப்தமாதிபதி ராசியில் இருப்பதும் நல்ல அமைப்புக்கள். குரு இருக்கும் இடத்தைவிட பார்வையிடும் இடத்தால் உங்களுக்கு பலன் அதிகம். சுக்கிரனின் நிலையால் குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து இருப்பது குடும்பத்தில் ஏற்படும் மற்ற பிரச்சினைகளைச் சமாளிக்க கூடிய வலிமையைத் தரும். அலுவலகத்தில் மேலதிகாரிகளால் ஏற்பட்ட குழப்பங்களும் சிக்கல்களும் நீங்கி உங்களுக்கு நல்ல வழி பிறக்கும். வேலையில் உற்சாகத்தை ஏற்படுத்தும். சிலருக்கு பதவி உயர்வுகளும் கிடைக்கும். வருமானம் திருப்திகரமாக இருக்கும்.

நீங்கள் சற்றும் எதிர்பாராத சில செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில், படிப்பில் ஏற்படும் பின்னடைவுகள் கவலையைத் தரும்.

மகரம்

பஞ்சம ஜீவனாதிபதியான சுக்கிரன் தன குடும்ப ஸ்தானத்தில் இருந்து அஷ்டமஸ்தானத்தைப் பார்க்கிறார். சுகாதிபதி செவ்வாய் 5ஆம் இடத்தில் இருந்து உங்கள் லாபஸ்தானத்தைப் பார்க்கிறார். உங்களுடைய திட்டங்களுக்கு ஒரு வடிவினைத் தந்து செவ்வாய் பகவான் நிறைவேற்றி வைப்பார். இந்த வாரம் உங்கள் எண்ணத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். நிலம் வீடு போன்ற விஷயங்களில் ஆதாயம் உண்டு. 2ல் சுக்கிரன் இருப்பதால் குடும்ப உறவுகள் நன்றாகவே இருக்கும். செவ்வாயும் பலம் பெற்று இருப்பதால் பெண்கள் கணவன் மூலம் தங்கள் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

குரு ஒரு பக்கம், ஏழரைச் சனி ஒரு பக்கம் என இருப்பதால், நிர்ப்பந்தங்கள் உண்டு. நீங்கள் எதையும் தீவிர ஆலோசனைக்குப் பின் தான் செய்ய வேண்டும். சில சமயங்களில் உங்கள் முயற்சிகளையும் மீறி விரக்தி ஏற்படும். என்றாலும் முயற்சியை கைவிடக் கூடாது.

கும்பம்

சுகபாக்கியாதிபதி சுக்கிரன் கும்பத்தில் அமர்ந்து சிம்மத்தைப் பார்வையிடுகின்றார். அது உங்கள் களத்திர ராசி என்பதால் கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாகவே இருக்கும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதால் குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் அதிகரிக்கும். 2ல் குரு பகவான் இருப்பதால் பணவருவாய் வருவதில் சிக்கல் இல்லை. புதன் 11ல் உதவுவதால், இருக்கின்ற புதிய ஆடை ஆபரணங்கள் நகைகள் வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகள் திருமண முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

கலைத்துறையில் இருப்பவர்களுக்கு வாய்ப்பு குறையும் என்றாலும், பொறுமையுடன் இருக்க வேண்டும். அதிகமான உழைப்பும் பொறுப்பும் கூடிக் கொண்டே போகும். அதிக வெளியூர் பயணங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. சூரியன் சனி இருவரும் 12ல் இருப்பதால், பொருள் நஷ்டம் ஏற்படும். ஜாக்கிரதையோடு இருக்கவும்.

மீனம்

3, 8க்கு உரிய சுக்கிரன் 12ல் இருக்கிறார். களத்திரகாரக புதன் 10ஆம் இடத்தில் இருக்க, அந்த ராசிக்குரிய குரு ராசி அதிபதியாக ராசியில் பலம் பெற்று இருக்கிறார். பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாக இருப்பதால் இவ்வாரம் நன்றாகவே இருக்கும். சுக்கிரன் அமைப்பு கணவன் மனைவி ஒற்றுமையை அதிகரிக்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். உற்சாகமாக வேலை செய்யும் சூழ்நிலை ஏற்படும். பதவி உயர்வு, உத்தியோக உயர்வு, வருவாய் உயர்வு ஏற்படும். வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு அனுகூலமான பலன்களே ஏற்படும். தொழிலில் நல்ல லாபம் எதிர்பார்க்கலாம். போட்டிகள் குறையும்.

சப்தமாதிபதி புதன் பத்தில் கேந்திர ஆதிபத்திய தோஷத்துடன் இருப்பதால், அவ்வப்பொழுது குடும்பத்தில் சிறு சலசலப்புகள் ஏற்படும். எதிர்பாராத சில பிரச்சினைகள் அவ்வப்பொழுது உங்கள் அமைதியை குறைக்கும். உற்சாகத்தோடு இருக்கும் பொழுது திடீரென்று உங்கள் உற்சாகத்தைப் போக்கும்.

அட்டாளைச்சேனை சமூக மேம்பாட்டாளர் ஜே.எம். ஷம்சுத்தீன் மௌலானா

தன் சிந்தனையால் நற்பண்பால் நற்கருமத்தால் மக்களை மேம்படுத்தும் மனிதனுக்கு ஓர் உயர்ந்த சமூக அந்தஸ்தும் கிடைக்கும். அத்தகைய குணஇயல்புகளோடு கூடிய வாழ்க்கை வாழ்ந்தவர்தான் அட்டாளைச்சேனை அறிவுப்பெருந்தகை மர்ஹூம் ஜே. எம். ஷம்சுத்தீன் மௌலானா.

எழில் கொழிக்கும் தென்கிழக்கில் அட்டாளைச்சேனை என்கிற அழகிய சிற்றூரில் ஓர் ஆன்மீக செல்வாக்குக் கொண்ட குடும்பத்தில் ஜமால்தீன் மௌலானா – அலியார் பாத்திமா என்கிற தம்பதிகளுக்கு 24.06.1925 அன்று பிறந்தார் ஷம்சுத்தீன் மௌலானா. இவர் முன்னாள் ஊர்த் தலைவர் மர்ஹூம் பதுறுதீன் மௌலானாவின் இளைய சகோதரர். முன்னாள் அதிபர் மர்ஹூம் நசுறுதீன் மௌலானா மற்றும் சகோதரி சித்திலத்திபா என்போரது மூத்த சகோதரர் ஆவார்.

1945இல் ஷம்சுத்தீன் மௌலானா அட்டாளைச்சேனையில் பயிற்சி பெற்ற ஆசிரியர் பணி தொடங்கி இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் பள்ளி அதிபராகவும் பணி செய்தார். அவர் ஒரு தமிழ்த் திறனாய்வாளர், இலக்கியப் படைப்பாளர், இஸ்லாமிய உணர்வாளர் சமூக சேவையாளர் என்று காலத்தைக் கடந்து நிற்கும் புகழுக்குச் சொந்தக்காரர். இவை தவிர தமிழில் பாண்டித்தியம் பெற்ற ஒரு தமிழ்ப்பண்டிதர் என்ற பெருமையும் அவருக்குண்டு. ஒரு தனி மனித ஆளுமையாகத் தனித்துவம் பெற்ற அவர் ஒரு தமிழ்நிறுவனமாகச் செயலாற்றியவர். அட்டாளைச்சேனை காதி நீதிபதியாகவும் இருந்தவர். சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தகைமை பெற்ற அவர் அரபுமொழியில் ஆறு வருட 'ஷரீஆ' சட்டம் கற்றவர். கல்விப் புலத்தில் மட்டும் காலூன்றி நிற்காமல் மொழி – சமூகம் அறவியல் ஆன்மீகம் போன்ற பலபரிமாணங்களில் அவரது ஆளுமை ஒரு தேசிய அடையாளமாக அகன்று நிற்கின்றது இலங்கையில்.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியை நிறுவ முயன்ற முதுபெரும் அறிஞர் பெருமக்களில் அவர் முதல் மனிதராக முன்நின்றார். கல்லூரி நிறுவப்பட்டதன் பின் அதன் ஆளுநர் சபையில் உப தலைவராகப் பணியாற்றினார். 1967இல் அட்டாளைச்சேனை கோணாவத்தைப் பாலம் அமைப்பதற்கு அரும் பாடுபட்ட ஷம்சுத்தீன் மௌலானா இணக்க சபை, அம்பாறை மாவட்ட அரசியல் அதிகார சபை, ஜூம்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபை என்பவற்றுக்கெல்லாம் பிரதம ஆலோசகராவும் பதவி வகித்தார். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியவற்றுக்கெல்லாம் தலைவராகச் சேவை செய்தார். இப்படிப் பல அரச நிறுவனங்களில் சமயோசிதமாகச் சிந்தித்துச் செயலாற்றிய திறன் அவருக்கு சமூக சேவையாளர் என்கிற பேரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது.



ஷம்சுத்தீன் மௌலானாவிடம் கற்ற பழைய மாணவர் பலர் உயர் பதவிகளை வகித்தார்கள். அந்த அரச உத்தியோகத்தர்கள் எல்லோருமே இப்போது ஓய்வும் பெற்றுவிட்டார்கள். 37 வருட சேவையின் பின்னர் 1982இல் அவர் ஓய்வு பெற்றிருந்தபோது 2010, 2011ஆம் ஆண்டுகளில் தன் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள அறபா பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியதையறிந்த மௌலானா தனக்கு உடலாரோக்கியம் உடன்படாமல் இருந்தபோதும் அங்கே படித்த க.பொ.த. (சாதாரண தர) மாணவர்களை தன் வீட்டுக்கு வரவழைத்து தினமும் தமிழ் பாடம் கற்றுக் கொடுத்தார். "டியூசன்" மட்டுமே கொடுக்கும் இக்காலத்தில் எந்த ஆசிரியரும் தன் வீட்டில் சமூகநலன் கருதி மாணவர்களுக்கு இலவச பாடம் நடத்தியதாக தகவல் இல்லை.

ஷம்சுத்தீன் மௌலானா நேர்மையானவர். நிர்வாகத்தில் கண்டிப்பானவர். கொள்கையில் திடமானவர். தன் தீர்ப்புக்களில் தயவு தாட்சண்யம் காட்டாதவர். அவர் "யூதர்கள் யார்? – வாழ்வியலும் பண்பாடும் – முஸ்லிம்களின் வரலாறு – முஸ்லிம்களின் விவாக விவாகரத்துச் சட்ட முரண்பாடுகளும் திருத்தங்களும்" என்ற பல நூல்களை அச்சில் தந்துள்ளார். அவர் 50க்கும் மேற்பட்ட திறனாய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ஒரு தனி மனிதன் தன் தாய் மொழியில் பற்றுள்ளவனாய் இருப்பதும் அவசியம் என்னும் கருத்துக்குக் கட்டியங்கூறும் கட்டுரைகள் என்றே அவை கருதப்படுகின்றன. 1950ம் ஆண்டு முதல் சுதந்திரன் தினபதி – தினகரன் எழுவான் ஆகிய இலங்கைப் பத்திரிகைகள் அவரது படைப்புக்களை விரும்பிப் பிரசுரித்தன. அக்காலத்தில் "தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் கருத்து முரண்பாடுகள்" என்ற மௌலானாவின் கட்டுரை தினகரனில் வெளிவந்தபோது தமிழுணர்வாளர்கள் சிலர் விமர்சனம் செய்தனர். அவர்கள் முன்வைத்த பொருளுக்கு ஆதாரமாக மௌலான எழுதிய கருத்துக்கள் தெளிவானவை திடமானவை என அவர்கள் கடைசியில் ஏற்றுக்கொண்டனர். அவை முற்போக்குச் சமுதாய மாற்றங்களுக்கான கூராயுதம் என்றே அவர்கள் கருத்துரைத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் காலத்தில் இலங்கையில் தமிழ் முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு வேண்டுமென்று தனி அரசியல் அபிலாசையோடு தீவிரமாக முயன்ற முன்னாள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரஃப் ஒலுவிலை உயர்த்திவிடும் நோக்கில் துறைமுகத்தையும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தையும் உருவாக்க ஓர் அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்கினார்.

இந்த அபிவிருத்தித் திட்டத்தையும் அமுல்படுத்துவதற்கு முன் அந்தச் சூழலில் வாழ்ந்த மூத்தோர் பலரிடம் கருத்தறிந்துகொள்ள ஷம்சுத்தீன் மௌலானாவிடமும் கருத்தைக் கேட்டார். கல்வி முக்கியமானது என்பதனால் பல்கலைக் கழகம் வேண்டும் என்றே பரிந்துரை செய்தார் ஷம்சுத்தீன் மௌலானா.

கடந்த காலத்தில் அட்டாளைச்சேனை மக்கள் வழி தெரியாமல் வரப்புத் தெரியாமல் வயல்நிலம் தெரியாமல் பண்படுத்திப் பயிர் செய்ய முடியாமல் இந்தக் கரையிலிருந்து அந்தக் கரைக்கும் அந்தக் கரையிலிருந்து இந்தக் கரைக்கும் இடுப்புவரை நிறைந்திருந்த குளத்துநீரைக் கடந்து சென்று விவசாயம் செய்ய அவதிப்பட்டார்கள். பாவங்காயில் ஒரு பொதுப்பாதை இல்லாமல் அவலப்பட்டார்கள். பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட காணிகளை இழந்து நின்றார்கள். ஊர்மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாமல் ஏமாற்றிக்கொண்டு அன்றைய அரசியல் வாதிகள் காலத்தைக் கடத்தினார்கள். அப்போதுதான் ஊர் மக்களை ஒன்று திரட்டி ஷம்சுத்தீன் மௌலானா சிரமதானம் செய்தே அந்தப் பாதையைப் போடலாம் என்று பள்ளியில கூடி முடிவெடுத்தார். அதற்கிணங்க ஆகஸ்ட் 1975இல் ஊர்மக்கள் சிரமதானப் பணி செய்தே அட்டாளைச்சேனை "பாவங்காய்ப் பாதை" போடப்பட்டது. அட்டாளைச்சேனையிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் அந்த " பாவங்காய் நெடுஞ்சாலையில்" இப்போது காரில் சென்றால் அங்கே காணக் கிடைக்கும் காட்சி கனிவு தருகிறது. ஆக, ஷம்சுத்தீன் மௌலானா அப்போது நட்ட சிந்தனைவிதை பாவங்காய்ப் பாதைக்கு ஒரு மரமாகி, கிளையாகி, விழுதாகி, விருட்சமாகி இப்போது செழித்து வளர்ந்து நிற்கிறது என்பதே நிதர்சனம்.

"நேற்றைய காலடிச் சுவடுகளே
இன்றைய தேசிய நெடுஞ்சாலைகள்
ஆதலால்
புதுவழி காணத் தயங்காதே
காலடிச் சுவடுகள்
இல்லையெனக் கலங்காதே"

என்று அப்போது எழுதப்பட்ட எனது கவிதைக்குக் கரு தந்ததே அந்த பாவங்காய்ப் பாதைபோட ஊர்மக்கள் மேற்கொண்ட சிரமதானம்தான் என்பதுதான் உண்மை. இப்படி தன்னல மறுப்பும், தியாக உணர்வும் குறைந்து வருகிற நிகழ்காலத்தை நினைக்கும்போதெல்லாம் அவர் முகத்தை நமது சமூக கனவுகளின் அடிவாரத்தில் இரை மீட்டிப் பார்க்க முடிகிறது.

கனடாவிலிருந்து
இனியவன் இசாறுதீன்

பாரம்பரியம் நிகழ்ச்சியில் யூ.எல்.பதியுஸ்ஸமான்

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர் வரும் 07ஆம் திகதி (07.02.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியின் அதிதியாக ஜனாப். யூ. எல். பதியுஸ்ஸமான் கலந்து கொள்கிறார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒலிபரப்பாகி வரும், முஸ்லிம் சேவையின் பிரபலமான சஞ்சிகை நிகழ்ச்சிகளில் ஒன்றான "இளைஞர் இதயம்" நிகழ்ச்சியை, 2002ஆம் ஆண்டு தொட்டு நீண்ட காலம் நடாத்தி இளையோர், பல்கலைக்கழக மாணவர்கள், முதியோர், உட்பட சாதாரண தரப்பினரும் கேட்குமளவுக்கு அந்நிகழ்ச்சியினை ஜனரஞ்சகப்படுத்தியோர்களில் இவரும் ஒருவர். இந்நிகழ்ச்சியினை இவர் நடாத்திய காலத்தில், சமூக வல்லுநர்கள் பலரை நேர்காணல் கண்டும், இளையோருக்கு பயன் மிக்க பல்வேறு வெளிக்கள நிகழ்ச்சிகளையும், நேரடியாக சென்று, இவரே, ஒலிப்பதிவு செய்தும் நிகழ்ச்சியில் இணைத்துக்கொண்டமை, நினைவுகூரத்தக்க ஒன்றே.

அத்தோடு ஜனாப். பதியுஸ்ஸமான் அந்நாட்களில் நேயர்கள் மத்தியில் பெரும் வரவேற்பினைப் பெற்றுக்கொண்ட நிகழ்ச்சிகளான "ஸகாத் பெட்டகம்", "முன்மாதிரிகள்", "உரையாடல்கள்" போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளையும் தொகுத்தளித்துள்ளார்.

இவரது அனுபவங்களை சுமந்து வரும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் எம். ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

சுய தொழில் கடன் வழங்கும் நிகழ்வு

பதுளை தினகரன் விசேட நிருபர்

வெளிபிஸ்ஸ கிராம அபிவிருத்தி நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மாப்பாகலை பெருந்தோட்ட மக்கள் உள்ளிட்டவர்களுக்கு, சுய தொழில் கடன் வழங்கும் நிகழ்வு, இன்று 5ம் திகதி பிற்பகல் 02 மணிக்கு நடைபெறவுள்ளது.

வெளிபிஸ்ஸ சனசமூக நிலைய மண்டபத்தில் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக, மேற்படி நலன்புரி சங்கத்தின் பொருளாளர் இரா. சலோபராஜா தெரிவித்தார். இக்கடன் வழங்கும் திட்டத்தின் மூலம், மாப்பாகலை பெருந்தோட்ட மக்கள் பெரும் பயனை அடையவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், பதுளை பிரதேச செயலகப்பிரிவின் கிராம அபிவிருத்தி அதிகாரி, சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் மற்றும் செயலாளர், மாப்பாகலை தமிழ் வித்தியாலய அதிபர் எஸ்.ஜோதிகண்ணன், மாப்பாகலை பெருந்தோட்ட வெளிக்கள உத்தியோகஸ்த்தர் எம். ஸ்ரீதர் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்வர்.

மலையக...

(13 ஆம் பக்கத் தொடர்)

1958, 1977, 1983 என்று நேரம் தேர்ந்து, இடம் தேர்ந்து, ஆட்களைத் தேர்ந்து, அரச படைகளின் ஆசியோடு, அரசியல்வாதிகளின் அனுசரணையுடன் காடையர்கள் நடத்தும் இந்தக் கொலைவெறித் தாக்குதலுக்கு இலக்காகி, உயிரிழந்து, உடமை இழந்து, நிர்க்கதியாய், வாழ்விடம் துறந்து, பாதுகாப்புத் தேடி, அங்கும் அல்லலுற்று, மீண்டும் விட்டு வந்த இடம்தேடி, அங்கும் அயலவர்கள் அத்துமீறித் தம் குடில்களை ஆக்கிரமித்து நிற்பதைத் தட்டிக் கேட்க வலுவின்றி வாயில்லாப் பூச்சிகளாய், நூறாண்டுகள் கடந்தும் அவல முறும் நிலைமை மாத்தளை வடிவேலனின் நெஞ்சில் வேல் பாய்ச்சி நிற்கிறது. சில சந்தர்ப்பங்களில் வன்முறையை எதிர்கொள்ளத் துணிகிறார்கள். சில இடங்களில் அது சாத்தியமற்றுப் போகிறது. இந்த வன்முறைகள் குறித்து பெரும்பான்மை இனம் வெட்கப்படுவதில்லை. ஆட்சியாளர்கள் வெட்கப்படுவதில்லை. மாறாக வன்முறைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

மாத்தளை வடிவேலன் தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்று அமைதி காண்கிறார். அது அவர் அவாவும் லட்சியம்; உன்னத நெறி. ஆனால் அப்படி ஒரு விதி இல்லை. தர்மத்தின் வாழ்வுதனை சூது கௌவினால் கௌவியதுதான். பின்னால் தர்மம் வென்றதாக நாம் கண்டதில்லை. அநியாயங்கள் நிகழும்போது எதுவும் செய்துகொள்ளும் வழி தெரியாத போது நாம் நமக்குள் அமைதி காணச் செய்து கொள்ளும் ஏற்பாடுதான் இது.

'வதைப்படலம்' மிக அழகாக எழுதப்பட்ட கதை. அந்தக் கதை முடிகிறபோது நெஞ்சம் அதிர்கிறது. பிஞ்சு உலகம்' சிறுவனின் மன ஓடையின் நினைவுச் சிதறலாகத் திறனோடு எழுதப்பட்டுள்ளது. தெளிவத்தை ஜோசப்பின் 'சோதனை' கதையை நினைவுக்குக் கொண்டு வருகிறது. தோட்டப் பாடசாலைகள் நடத்தப்பட்ட விதத்தை மிக நேர்த்தியாக வெளிப்படுத்தும் கதை.

மலையகத்தின் நாட்டார் வழக்காறுகளில் அவர் கொண்டிருக்கும் ஆழ்ந்த ஈடுபாடும் அறிவும் 'நாடு கடந்த நதிகள்' கதையில் பூரணமாக வெளிப்படுகிறது. இந்தக் கதையை வேறு யாரும் இவ்வளவு இறுக்கமாக எழுதியிருக்க முடியாது.

வடிவேலன் நீண்ட வசனங்களில் எழுதுபவர். சில வசனங்கள் அரைப்பக்கத்தையும் எடுத்துக் கொண்டு விடுகிறது. மிகப் பல ஆண்டுகளுக்கு முன் ஜேர்மனியில் ஒரு நண்பருடன் வடிவேலனின் "தலைக்கொரு கூரை" என்ற சிறுகதையை ஜேர்மனிய மொழியில் மொழிபெயர்க்க அமர்ந்தேன். அந்தக் கதையின் முதல் வசனத்தை வாசித்தேன். ஐந்து வரிகளில் அந்த வசனம். 'கஷ்டம் நித்தி, இதை என்னால் மொழிபெயர்க்க முடியாது' என்று விட்டார்.

வடிவேலனின் கதைகள் மொழிபெயர்ப்புக்கு சவால் விடுபவை. எனினும் அவரது கதைகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

மலையகச் சிறுகதை இலக்கியத்தின் சில உச்சங்களை அவரது கதைகள் தொட்டிருக்கின்றன. சமூக அநீதிகள் கண்டு குமுறும் அவரது ஆவேசத்தை அவரின் எல்லாக் கதைகளிலுமே காணமுடிகிறது. தன்னைச் சூழ கண்ணீரையும் அவலத்தையும் பாரபட்சத்தையும் அநீதியையும் நாளும் ஒரு கலைஞன் எதிர் கொள்ளும் போது அவன் எழுத்தில் கிளர்ச்சியும் எழுச்சியும் மிளிரவே செய்யும். மாத்தளை வடிவேலனின் அனைத்து எழுத்துகளும் தொகுக்கப்பட்டு நூலுருப் பெறவேண்டியது அவசியம்.

மலையக இலக்கியத்திற்கு வளம் சேர்த்த மாத்தளை மண்ணின் மைந்தன் 'அசல் மைந்தன்' மாத்தளை வடிவேலன் மலையகத்தின் எரிநட்சத்திரம் ஆவார்.

மைத்திரிபால சிறிசேன...

(12 ஆம் பக்கத் தொடர்)

இதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் எல்லாக் கதவுகளும் மூடப்பட்ட நிலையில் மன்னிப்பு கோருவது ஏற்கக்கூடியது அல்ல என்பது கத்தோலிக்க ஆலயத்தின் நிலைப்பாடு.

மன்னிப்பு என்பது மனிதாபிமானத்தின் வெளிப்பாடு. அது உடனடியாக நிபந்தனைகளற்றதாக காரங்கள் காட்டப்படாததாக வெளிப்படுத்தப்படுவது முக்கியம். முன்னாள் இலங்கை அதிபர் மெத்தனமாக ஒரு நாட்டு நிர்வாகத்தை மேற்கொண்டதன் விளைவாகத்தான் இக் கொடுந் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. மேலும் இச் சம்பவத்தின்போது ஜனாதிபதி நாட்டில் இல்லை அவர் சிங்கப்பூரில் தங்கியிருந்தார். ஆனால் அது அவரது தனிப்பட்ட விஜயம் என்றோ மருத்துவ சிகிச்சைக்கானது என்றோ முன்னர் அறிவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. செய்திகள் மூலமும் முகநூல் வழியாகவுமே தகவலை அறிந்ததாக அவர் கூறியிருந்தார். ஒரு நாட்டின் தலைவருக்கு தகவல்கள் பொது ஊடகங்கள் மூலம்தான் போய்ச் சேர்கின்றன என்பது அதிர்ச்சியளிக்கும்.

ஒரு நாடு எவ்வாறெல்லாம் நிர்வகிக்கப்படக் கூடாது என்பதற்கான முன்உதாரமாக இவற்றைக்கொள்வதா மெத்தனம் என்னவெல்லாம் செய்யும் என்பதற்கான உதாரணமாக எடுத்துக்கொள்வதா?

சிங்கப்பூர் பெருமுன்னேற்றம் கண்டதற்குக் காரணம் லீகுவான்யூ என்ற ஒற்றை மனிதரே என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்கிறார்கள். பொருளாதாரத்தில் ஸ்திரம் பேணிய பல ஆபிரிக்க நாடுகள் வறுமை நாடுகளாக மாறியமைக்கு அந்நாடுகளை ஆளவந்தவர்களே காரணம்.

இது இலங்கைக்கும் பொருந்தும். தற்போது வந்திருக்கும் தீர்ப்பு, மனித உரிமைகள் மீறல் தொடர்பானது. ஏப்ரல் தாக்குதல் தொடர்பாக வேறுபல வழக்குகளும் உள்ளன. இலங்கையும் தவறான ஆட்சிமுறைகளினால் சீரழிந்த ஒரு நாடு. எனவே இத்தகைய தீர்ப்புகள் இப்போது உள்ளவர்களும் சரி இனி வரப்போகிறவர்களும் சரி உண்மையான நல்லாட்சியைத் தர உதவும் என நம்புவோம். மதவாதம், இனவாதம், கட்சி அபிமானம் போன்ற சில்லறை விடயங்களில் சிக்காமல் சிந்தித்து வாக்களிக்காவிட்டால் என்ன நடக்கும் என்பதற்கும் நம் நாட்டின் இன்றைய பொருளாதார கஷ்டங்களே ஒரு சாட்சி!

sabarathnam Shrikanthshrikanth.tkn@gmail.com+ Add to contacts

'மகீஸா' கல்வி நிலைய ஏற்பாட்டில் இரு நூல்கள் வெளியீட்டு விழா

பாணந்துறை மல்டிலக் நிறுவனத்தின் கல்வித்துறை பிரிவு 'மகீஸா மஹால்' மற்றும் அதன் கிளை அமைப்பான களுத்துறை மகீஸாவின் தரம் ஒன்பது, பத்து மாணவர்களின் நூல் வெளியீட்டு விழா கடந்த டிசம்பர் 29 ம் திகதி பாணந்துறை மகீஸா மஹால் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இதன்போது, மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான 'அழகின் அழகு' கவிதைத் தொகுப்பும் ஆசிரியர் சிராப் அஹ்மத் கஸ்ஸாலியின் முயற்சியில் உருவான 'இலக்கணப் பூங்கா' எனும் தலைப்பிலான தமிழ் இலக்கணப் பயிற்சி நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வுகளுக்கு மகீஸா நிர்வாகி ஸமீலா மிஸ்வர் முன்னிலை வகித்ததோடு முதல் பிரதிகளையும் பெற்றுக் கொண்டார். பாணந்துறை மகீஸா நிறுவன கற்றல் கற்பித்தலுக்கான அதிபர் ஹைதர் ஸலாமின் வழிகாட்டல் ஆலோசனையுடன் இந்த நிகழ்வு ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் சிறப்பாக ஏற்பாடாகியிருந்தது. முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலைமதி யாஸீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில், கலாபூஷணம் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், முன்னாள் விவாகப் பதிவாளரும் பள்ளிவாசல் பரிபாலன சபையின் முன்னாள் செயலாளருமாகிய ஏ.ஜே.ஏ. பளீல், மல்டிலக் நிறுவன பிரமுகர்களான எம். என். எம். இஸ்திகார் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். பாணந்துறை மகீஸா அதிபர் பாத்திமா நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார். களுத்துறை மகீஸா மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் காட்டிய திறமைகளுக்காக சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், மேற்படி விழா நடைபெறுவதற்கு முன்னோடியாக அயராதுழைத்த பேருவளை ஹுமைஸறா தேசிய கல்லூரி ஆசிரியரும் களுத்துறை மகீஸாவின் தமிழ்மொழி போதனாசிரியருமான சிராப் கஸ்ஸாலி மகீஸாவால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சர்வோதய ஹேலிஸ் அக்ரிகல்ச்சர் புரிந்துணர்வு உடன்படிக்கை

இலங்கையின் முதலாவது அபிவிருத்தி நிதி நிறுவனமான சர்வோதய டெவலப்மென்ட் ஃபினான்ஸ், இலங்கையில் விவசாயப் பொருட்களை வழங்குவதில் முன்னணி நிறுவனமான ஹேலிஸ் அக்ரிகல்ச்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட் உடன் அண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் (ஆழுரு) கைச்சாத்திட்டுள்ளது.

Kubota மற்றும் EKubota டிராக்டர்கள், Kubota Combine அறுவடை இயந்திரங்கள் மற்றும் Agrotech Combine அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றின் விற்பனைக்கு அனுசரணையளிப்பதே இந்த கூட்டாண்மையின் நோக்கமாகும். இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்கான SDF இன் அர்ப்பணிப்பையும், நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கான ஹேலிஸின் அர்ப்பணிப்பையும் ஒருங்கிணைக்கிறது. இந்த கூட்டாண்மை, நாட்டின் விவசாயத் துறைக்கு பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கான வளங்கள் மற்றும் வழிமுறைகளை சமூகங்களுக்கு வழங்குகிறது. இலங்கை முழுவதும் உள்ள மக்களின் மேம்பாட்டை உறுதி செய்கிறது.

வாடிக்கையாளர்கள் கணிசமான விலைத் தள்ளுபடிகளுடன் ஆரம்ப கொடுப்பனவுத்தொகை மற்றும் கவர்ச்சிகரமான வட்டி வீதங்களை அனுபவிக்க முடியும். இது அனைத்து சமூகப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கும் இத்திட்டத்தை எளிதாக அணுகக்கூடிய வகையில் அனுசரணையளிக்கிறது. முதல் ஆண்டு காப்புறுதியை இலவசமாக SDF வழங்கும். அத்துடன் இத்திட்டத்தால் வழங்கப்படும் பல நன்மைகளையும் அவர்களால் அனுபவிக்க முடியும்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விலை மனுக்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை வழங்கல் (2023/2024)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை வழங்குவதற்காக புகழ்பூத்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட வலைமனுக்களை தற்போது அழைக்கிறார்.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் 06.02.2023 முதல் 27.02.2023 வரையிலான வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணிவரை, **மீளச்செலுத்தமுடியாத வைப்புத் தொகையான ரூ. 12,500.00 இனை** பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இடமிருந்து ஆங்கில மொழியில் காணப்படும் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து விலைமனு ஆவணங்களும் 119 நாட்களுக்கு (26.06.2023 வரை) செல்லுபடியாகக்கூடிய **ரூ.570,000.00 பெறுமதியான வங்கிப் பிணைகளை** கொண்டிருத்தல் வேண்டும். வங்கிப் பிணை இலங்கை மத்திய வங்கியின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கும் வணிக வங்கியொன்றில் இருந்து "உபவேந்தர், இங்கை திறந்த பல்கலைக்கழகம்" எனும் பெயரிற்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது பல்கலைக்கழக காசாளரிற்கு பணமாக செலுத்துவதன் மூலம் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

15 பெப்ரவரி 2023 அன்று மு.ப. 10.00 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபாமண்டபத்தில் முன் விலைமனுக் கோரல் கூட்டம் இடம்பெறும்.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனுப்பத்திரங்கள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டு **(கடித உறை 1- தகைமை மற்றும் அனுபவ தகவல்கள் மற்றும் கடித உறை 2 - நிதியியல் விலை மனு . கடித உறையானது கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என சரியாக குறிப்பிடப்பட்டு)** அவற்றினை தனித்தனி கடித உறைகளில் இட்டு பின்னர் ஒரே கடித உறைகளில் இட்டு அக்கடித உறையில் முத்திரையிடப்பட்டு இடது பக்கமேல் மூலையில் **"இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்களுக்கு தனியார் பாதுகாப்பு சேவை வழங்கல் (2023/2024)** எனக்குறிப்பிட்டு 27.02.2023 அன்று பி.ப. 03.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக பொது நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் எக்காரணத்திற்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் வருகையுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் **27.02.2023 அன்று பி.ப.3.00 மணிக்கு** கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகப் பிரிவு (தொலைபேசி இலக்கம். 0112881209) இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்கள பெறுகை குழு,
பொது நிர்வாகப் பிரிவு,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
05.2.2023

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விலை மனுக்கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான சுத்திகரிப்பு சேவைகள் (2023/2024)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான சுத்திகரிப்பு சேவைக்காக (2023/2024) புகழ்பூத்த நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது வரவேற்கிறார்.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் **மீளச்செலுத்தமுடியாத கேள்வித் தொகையான ரூ.7,500.00** இனை பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிப்பதன் மூலம் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் எனும் முகவரியில் 06 பெப்ரவரி 2023 முதல் 27 பெப்ரவரி 2023 வரையிலான வேலைநாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப 02.00 மணிவரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அனைத்து விலை மனுப் பத்திரங்களுடனும், முடிவுத் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியான (26 ஜுன் 2023 வரை), **ரூ.300,000.00 பெறுமதியான விலை மனுப் பிணையொன்று** இணைக்கப்படல் வேண்டும். விலை மனுப் பிணையானது "உபவேந்தர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்" எனும் பெயரில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் வணிக வங்கியிடமிருந்து அல்லது பல்கலைக்கழக காசாளருக்கு காசாக செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

முன்-விலை மனுக்கோரல் கூட்டம் 15 பெப்ரவரி 2023 அன்று பி.ப.2.00 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் நடைபெறும்.

ஆங்கில மொழில் தயாரிக்கப்பட்டிருக்கும் விலை மனுப் பத்திரங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி தனித்தனி முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் **(கடித உறை 1- தகைமை மற்றும் அனுபவத் தகவல்கள் மற்றும் கடித உறை 2 – நிதிசார் விலை மனு. இரண்டு விலை மனுக்களும், கடித உறை 1 மற்றும் கடித உறை 2 என சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். அவற்றினை முத்திரையிடப்பட்ட ஒரு கடித உறையினுள் இட்டு இடதுபக்க மேல் மூலையில்** திறந்த பல்கலைக்கழக மத்திய வளாகத்திற்கான சுத்திகரிப்பு சேவை (2023/2024)" எனக் குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு 27 பெப்ரவரி 2023 அன்று பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது பொது நிர்வாக பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திர பெட்டியில் இடப்படல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் **27 பெப்ரவரி 2023 பி.ப.2.00 மணிக்கு** விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலதிக தெளிவூட்டல்களை, உதவிப் பதிவாளர் / பொது நிர்வாகப் பிரிவு (தொலைபேசி இல.011-2881209) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

தலைவர், திணைக்கள பெறுகை குழு
பொது நிர்வாகம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
29.01.2023

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

திறந்த போட்டி ரீதியிலான விலைக்கோரல் (OCB)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

கல்வி அமைச்சு

திகதி : **2023 பெப்ரவரி 05**
கடன் / மானிய இல மற்றும் தலைப்பு : **JFPR 9193**
: **தொழில்நுட்பம் மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிக்காக தனியார் துறை மற்றும் மகளிரை வலுவூட்டுவதற்கான நவீன அணுகுமுறையை விளக்குதல் (TVET)**
ஒப்பந்த இலக்கம் மற்றும் தலைப்பு : **MSDVT/6/3/1/53-2022**
: **மூன்று (3) வருட கால பராமரிப்பு உட்பட திறன் வகுப்பறை தீர்வுக்கான வன்பொருள் மற்றும் மென்பொருட்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தித் காண்பித்தல்.**
விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் : **2023 பெப்ரவரி 24 பி.ப. 2.00 மணி (உள்ளூர் நேரம்)**

1. தொழில்நுட்பம் மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிக்காக தனியார் துறை மற்றும் மகளிரை வலுவூட்டுவதற்கான நவீன அணுகுமுறையை விளக்குதல் (TVET) என்பவற்றின் கிரயச் செலவிற்காக இலங்கை சனநாயக, சோசலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள அங்கத்துவ நாடுகளும் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.
2. மூன்று (3) வருட கால பராமரிப்பு உட்பட திறன் வகுப்பறை தீர்வுக்கான வன்பொருள் மற்றும் மென்பொருட்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் (''கொள்வனவாளர்'') சார்பில் செயற்றிட்டத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிலையான விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பாவித்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக ஒரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய (1S1E) திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.
4. விலைமனு ஆவணத்திலுள்ள பின்வரும் முக்கிய தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக் கோரலில் பங்குபற்றலாம்.

நிர்மாண அனுபவம்
- கடந்த ஐந்து வருடங்களில் பிரதான வழங்குநராக ஒவ்வொன்றும் 275 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியைக் கொண்ட ஒத்த தன்மை மற்றும் 6ஆம் பிரிவில் (வழங்கல் அட்டவணை) விபரிக்கப்பட்டுள்ள வழங்கல் நோக்கத்தைப் போன்ற சிக்கல் தன்மையுடனான ஆகக் குறைந்தது இரண்டு (02) ஒப்பந்தங்களை வெற்றிகரமாக முடித்திருத்தல் வேண்டும்.

தொழில்நுட்ப அனுபவம்
- விலைமனுதாரர் வழங்கும் பொருட்கள் (உற்பத்தி / வர்த்தக நாமம்) இருப்பதை நிரூபிக்க வேண்டும்.
  i. ஆகக் குறைந்தது (5) வருடங்கள் (உற்பத்தி / வர்த்தக நாமம் சர்வதேச அளவிலும் உள்நாட்டிலும்) நன்கு அறியப்பட்ட உற்பத்தியாகவிருத்தல் வேண்டும் மற்றும்
  ii. குறைந்தபட்சம் மூன்று (3) வருடங்கள் செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம், விலைமனுதாரரின் மொத்தச் சொத்துக்களுக்கும் மொத்தப் பொறுப்புகளுக்கும் உள்ள வித்தியாசம் கணக்கிடப்பட்ட கடந்த வருடத்திற்கான வருடாந்த நிகர மதிப்பு சாதகமாகவிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரரின் ஆகக் குறைந்த சராசரி வருடாந்த புரள்வானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த மூன்று (3) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

5. விலைமனுதாரர்கள் மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும்,

   குழுத் தலைவர் (செயற்றிட்ட முகாமையாளர்),
   திறன்கள் துறை அபிவிருத்திப் பிரிவு,
   கல்வி அமைச்சு,
   ''நிபுனதாபியச'', இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை,
   கொழும்பு-05.
   தொலைபேசி: 011 2136500 (நீடிப்பு 585)
   மின்னஞ்சல்: rukmanir.ssdp@gmail.com

   விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் வேலைக் கொள்வோரால் 2023 பெப்ரவரி 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-05, இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, ''நிபுனதாபியச'', கல்வி அமைச்சின், 1ஆம் மாடி, கேட்போர்கூடத்தில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள்.
   - மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 இல. ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்துதல்
7. உங்கள் விலைமனுக்களை:
   - தலைவர், செயற்றிட்டப் பெறுகைக் குழு, திறன்கள் துறை அபிவிருத்திப் பிரிவு, கல்வி அமைச்சு, ''நிபுனதா பியச'', இல. 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 என்ற முகவரிக்கு
   - இறுதி நேரமான 2023 பெப்ரவரி 24ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்
   - விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் 5,250,000.00 ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்றுடன் அனுப்புதல் வேண்டும்.
8. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகமளித்திருக்கும் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதி வேளையின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. விலைமனுக்களின் தயாரிப்பு அல்லது ஒப்படைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் அமைச்சு பொறுப்புகூற மாட்டாது.

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவு,
கல்வி அமைச்சு.
2023-02-05.

தமிழக தகவல்கள்

சின்னச் சின்னதாய்...

"தமிழ் நாடு" தப்பித்துக் கொண்டது

கடந்த வாரத் 'தமிழகத் தகவல்'களின் முதல் பத்தி எழுத்தின் தொடர்ச்சியாகவே இது அமைய வேண்டியிருக்கிறது.

தமிழ் நாட்டு மக்களும் சரி 'அதிமுக' என்கிற அரசியல் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர்களும் சரி, "எங்கள் நாடு தமிழ் நாடு நாங்கள் வைத்த பெயரை அழிக்க விட மாட்டோம்" என்று ஜனவரி 02ல், முதலாவது சட்டமன்ற அமர்வில் ஆளுநர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து உரிமைக்குரல் எழுப்ப, அதையெல்லாம் அலட்சியம் செய்து இடைநடுவில் திருமிகு ரவியாகிய ஆளுனர் சபையை விட்டு 'ஓட' (வெளியேற)

என் மூத்த பேனை இப்படி கணித்து பத்தி எழுத்தில் பதித்தது?

★ "ஆளுனர் அகற்றப்பட்டாலொழிய இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படாது."

ஆனால் பொய்த்துப் போகச் செய்து விட்டாரே ஆளுனர் பேனையின் கணிப்பை!

அவரை இந்திய ஜனாதிபதி புது டெல்லிக்கு அழைத்து புத்திமதி சொன்னதாலோ என்னவோ, இந்தியக் குடியரசு தினமான கடந்த 26ல் அவர் சம்பந்தப்பட்ட அனைத்து உத்தியோகபூர்வ நிகழ்வுகள், தேநீர் உபசார அழைப்பேடு அனைத்திலும் பழையபடி தமிழ் நாடு தமிழ் நாடு!

தமிழ் மணிகளாகிய நமக்குத் தேவை அதுவே! ஆளுனர் ரவி கனவானிடமிருந்து தமிழ்நாடு பெயர் மட்டுமன்று, தமிழ்நாட்டு மக்களும் அவர் ஏற்படுத்துகிற வேறு வேறு பிரச்சினைகளிலிருந்து தப்பித்து நலமே வாழ வேண்டும். பிரார்த்திப்போம்.

தவறு ஒன்றுக்கு மன்னிப்புத் தருக

"தமிழ் நாடு என்கிற பெயரைச் சூட்ட பல ஆண்டுகளுக்கு முன் உண்ணாவிரதம் இருந்து 76 நாட்களுக்குப் பின் உயிர்மூச்சு துறந்த திருவாளர் சுந்தரலிங்கம் அய்யா நிழற்படம், குறித்திருந்தபடி, வழங்க. முடியாமற் போனது தன்னிப்புத்தருக.

தமிழ் நாட்டு ஊடகத்தினரின் ஊமைத்தனம்

நம் காலத்தில் நாம் கண்ட சிறந்த ஆளுமைகளுள் ஒருவர். அலுக்காமல் சளைக்காமல் 23 ஆண்டுகளாக ஒரு கலை இலக்கியச் சஞ்சிகையை (வழங்கிக் கொண்டிருக்கும் **'ஞானம்' தி. ஞானசேகரன்** கடந்தாண்டு நவம்பரில் 'சாகித்தியரத்னா'வானார். தொடர்ந்து தஞ்சைப் பல்கலைக்கழகத்து **சிங்கப்பூர் முஸ்தஃபா (முத்துப் பேட்டை) அறக்கட்டளை கரிகாற் சோழன் விருதும்** பெற்றார். அடுத்த இரண்டாம் நாளில் திருச்சி மாநகர் **'இனிய நந்தவனம்'** சிற்றிதழ் வாசகர் வட்ட ஏற்பாட்டில் திருச்சி தமிழ்ச்

சங்கத்தில் பாராட்டும் **'இதழியல் மாமணி'** விருதும் வழங்க, திருச்சியின் பழம்பெரும் அமைப்பான **'ஏகத்துவ மெய்ஞ்ஞான' சங்கத்தாரும்** கௌரவித்து மகிழ்ந்தனர்.

இப்படி எம்மவர் ஒருவருக்கு தமிழ் நாட்டின் பிரதான இரு நகரங்களில் வைபவங்கள் நடந்தும் தமிழ் நாட்டு ஊடகத்தினர் கண்டுக்காமல் விட்டதை எதில் சேர்ப்பது?

ஒருவேளை, அழைப்போ தகவலோ கிடைக்கவில்லையோ என்று யோசித்தால் மூன்று வைபவங்களுக்குமா அப்படி நடந்திருக்கும்?

எப்படியோ, தமிழக ஊடகத்தினரின் ஊமைத்தனம் பெரிய பொல்லாத் தனம்!

நாமெல்லாம் அங்கிருந்து வருவோருக்குக் காவடி அல்லவா தூக்குகிறோம். ஓடியோடியல்லவா உபசரித்து ஊடகங்களிலும் பிரபல்யப்படுத்துகிறோம்?

கடந்த வாரத்தில் கூட, தூத்துக்குடியிலிருந்து வந்த தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்டத்தலைவருக்கும் பொருளாளருக்கும் வரவேற்பளித்து அமைச்சர்களைச் சந்திக்க வைத்து ஊடகங்களில் நிழற்படங்களைப் பிரசுரிக்கச் செய்து ஏக தடபுடல் படுத்தினோமே...

இந்த ஊமைப்போக்கு அல்லது கள்ள மௌனம் ஊடகத் துறைக்கு ஆகவே ஆகாது.

விசித்திரமான வேர்களும் விழுதுகளும்

சென்னையில் தங்கி நின்ற டிசம்பர் பொழுதுகளில், நண்பர்கள் புடைசூழ வந்த ஒருவர் பெரிய அதிசயப் பேர்வழி! தன்னை ஊடகக் காரர் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார்.

அவர் உரையாடலில் அறியக் கிடைத்த அதிசய, ஆச்சரியத் தகவல்களை அபிமானிகளும் அறியும் பொழுது இப்படியும் விசித்திரமான வேர்களா, விழுதுகளா எனத் திகைப்பீர்கள்.

இராமேஸ்வரம் செல்லும் வழியில் பிரதான நகரம் இராமநாதபுரம். சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டி இதற்குப் பக்கந்தான். இதைச் சுற்றிலும் எத்தனையோ ஊர்களும் கிராமங்களும். அவற்றிலே **திருப்பாலைக்குடி** ஊர் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புடையது. ஒரு நூற்றாண்டுக்கு முன்னே அங்கு வாழ்ந்த முஸ்லிம் சமூகம் அப்படியே இங்கே புலம் பெயர்ந்து விட்டது.

இப்பொழுது மூன்று, நான்கு தலைமுறைகளைக் கண்டு விட்டனர். அந்தப் பரம்பரையில் வந்த ஒருவர் இப்போதைய ஆட்சியிலும் முக்கிய அங்கம் வகிக்கிறார்.

இந்தப் பதிவு அவர் சம்பந்தமானதன்று என்பதால் இந்தளவில் நிறுத்தி நிந்தவூர் மண்ணின் மைந்தர் காலஞ்சென்ற மீரா மொகிதீன் என்பாரை அறியத்தருகிறேன்.

இந்த மனிதர் தான் பிறந்த நிந்தவூரிலும் ஒலுவில், அக்கரைப்பற்றில் மார்க்கச் சட்டத்திற்கு முரண் ஏற்படாத வகையில் மூன்று, தடவை மாப்பிள்ளைக் கோலம் பூண்டவர்! நான்காவது தடவையாகவும் **திருப்பாலைக்குடி சாராபீவியையும்** இல்லக்கிழத்தியாக்கிக் கொண்டார்!

இவரது மைந்தரே என்னைச் சந்திக்க வந்தவர். **முஹம்மத் ஃபாரிஸ்** என்ற அவர் சொன்னார்! இலங்கையிலிருந்து அதுவும் கிழக்கிலிருந்து யார் தமிழ் நாட்டுக்கு வந்தாலும் சந்திப்பதற்கு ஆவல்படுவேன நிந்தவூர் வாப்பா அவர்கள் கடைசி நிரந்தர உறக்கம் கொண்டது திருப்பாலைக்குடி தொண்டிக்கு அடுத்த நம்புதாளையில் நீங்கள் எல்லாம் அறிந்திருப்பீர்களே. பிரபல தமிழ்நாட்டு ஆய்வெழுத்தாளர் **தாழை மதியவன்** அவர் மண்! வாப்பாவுக்கு இங்கே காணிகள் இருந்தன. எல்லோரும் புலம் பெயர்ந்து இங்கேயே தங்கி விட்டோம்.!"

அதிசயத் தகவலை உள்வாங்கிக்கொண்டு "என்னைச் சந்திக்க முன் நீங்கள் கடைசியாகக் கண்ட இலங்கைக் காரர் யார்?" என்ற ஒரு கேள்வியை எழுப்பிய பொழுது

"கேட்க வேண்டியது கேள்வி, தான்! கிழக்கிலங்கைப் பகுதி அமைச்சர் முஸரஃப்! என் வேர்களையும் விழுதுகளையும் அறிந்து வியந்து போனார்!"

நான் அவரது அந்தத் தவறைத் திருத்தப் போய் தோற்றேன். குறிப்பிடப்பட்ட அரசியல் மனிதர் ஒரு நா.உ. (எம்.பி) மட்டுமே என்பதை அவர் ஏற்கத் தயாரில்லை!

போகட்டும்! பிரபல அமெரிக்க எழுத்தாளர் **ஆர்தர் ஹெக்ஸலி** எழுத **ரூட்ஸ் வேர்கள்** நாவல் நினைவில் வந்து அலைக்கழித்தது!

முக்கியத் தகவல் தற்சமயம் நிந்தவூர் மீரா மொகிதீன் வாரிசு முஹம்மத் ஃபாரிஸ் வளைகுடா வாழ் தமிழர் நலச் சங்கத் தலைவராகவும், மனித உரிமைக்கழகச் செயல்பாட்டாளராகவும், ஊடகவியலாளராகவும் திகழ்கிறார்.

இங்கு கவிஞர்கள் ஜாஹிர் ஹுசைன், தாழை மதியயவனும் உள்ளனர்.

விசித்திரச் சங்கதிகளைத் தான் கிண்கிணியாக ஒலிக்க வைக்கின்றன!

கலாபூஷசணத்திற்கு நிகரான 'கலைமாமணியில்' முறைகேடு?

இங்கு, நமக்குக் கலாபூஷணம் வழங்க இந்து, முஸ்லிம் கலாசாரத் திணைக்களங்கள் இருப்பது போல் தமிழ்நாட்டில் இல்லை.

அங்கே, 'இயல் இசை நாடக மன்றம்" என்ற ஓர் அமைப்பை தமிழ் நாடு அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதில் அங்கத்துவம் பெற்றிருப்போரே அவர்களுக்குக் கரும்புள்ளி.

ஒரு கலாரசிகர் நீதிமன்றத்தையே நாடிவிட்டார்.

"2021 கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டதில் முறைகேடு! மோசடி! கலையா, விலை எத்தனை என்போரெல்லாம் பெற்றிருக்கிறார்கள். விசாரித்து நல்ல தீர்ப்பு சொல்ல வேண்டும்" என்று வழக்குத் தொடுத்திருக்கிறார்.

நம்மவர்கள் கலாபூஷணம் விருது நேரங்களில் கசமுசா என்று கதைத்து மௌனித்து விடுவதோடு சரி. அங்கேயோ வழக்கு! இன்னும் விசாரிப்புக்கு நாள் குறிக்கவில்லை நீதி தேவதை!

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வர்த்தகம்

வியாபார வாய்ப்புகள் 201

ஒளிப்பரப்புச் செய்யப்படும் அனுமதிப் பத்திரத்துடன் தொலைக்காட்சி அலைவரிசைக்கு நிதி இடுவதற்கு வர்த்தகர் தேவை. 0115942300. 169/ D, மாத்தலான, நிட்டம்புவ. 007315

வேலைவாய்ப்பு

வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல் 308

உதவி விற்பனை முகாமையாளர்கள், சிரேஷ்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள், சந்தைப்படுத்தல் நிறைவே ற்று அதிகாரிகள். முன்னணி காப்புறுதி கம்பனிக்கு அவர்களது விற்பனைக் குழுவுடன் இணைவதற்கு பொருத்தமான விண்ணப்பதாரர்களை கோருகின்றது. தகைமை க.பொ.த. (சா/ த) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் பொதி, எரிபொருள் அலவன்ஸ் மற்றும் கம்பனி பராமரிப்பு வாகனம் வழங்கப்படும். தயவு செய்து உங்களது விண்ணப்பங்களை கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது தொடர்பு இல. 0777748388. கொழும்பு மற்றும் புநகர் விண்ணப்பங்கள் விரும்பத்தக்கது. மின்னஞ்சல் raj@ceyins.lk 007761

வெற்றிடங்கள் தொழில் நுட்பம் 312

அனுபவமுள்ள போரிங் மெசின் இயக்குநர், ஒட்டு மோல்டர், லேத் மெசீன் இயக்குநர் மற்றும் பயிற்சிபெறும் கையுதவியாட்கள் தேவை. தங்குமிட வசதி இலவசம் தொடர்புகள் 0771097907, 0766635457 007519

வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள் 317

அனுபவமுள்ள பெண் தையலாளர்கள் அல்லது ஒரு தையலாளர் உடன் தேவை. வெள்ளவத்தை மற்றும் அருகில் இருப்போர் அழையுங்கள். CV ஐ வட்ஸ்அப் செய்யுங்கள்/ அழையுங்கள் 0726 929447. 005070

வெற்றிடங்கள் டிரைவர்கள் 318

சாரதிகள் தேவை. அனுபவமுள்ள இலகுரக, தட்டுலொறி மற்றும் பூம் டிரக் ஓட்டக்கூடிய தன்னைப்பற்றி பரிந்துரைக்கக்கூடிய நபர்கள் இருப்பவர்கள் உடன் தேவை. நேரில் விசாரிக்கவும். எலைட் டிரேடிங் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிட்டட், 301, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12. (ஆமர் வீதி, கெப்பிட்டல் சினிமா அரங்குக்கு முன்னாலுள்ள வீதி) 0117397777, 0762129669. 007714

சாரதிகள் தேவை. "ஏ" தர சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறந்த பரிந்துரையுடன் சாரதிகள் 3 பேர் தேவை. அவர்களுக்கு மேர்சிடிஸ் பென்ஸ், லேண்ட் குருசர், பிராடோ போன்ற வாகனங்களை செலுத்தக்கூடிய அனுபவம் இருத்தல் வேண்டும். எலைட், இல.301, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12. 0772424013, 011739 77 77. 007704

வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள் 319

கம்பஹா தோட்டத்திற்கு நன்கு கமத்தொழில் தெரிந்த கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடிய தம்பதி தேவை. சிறிய வீடு உண்டு. 0772299965 006758

களுத்துறை தேயிலை, தென்னத் தோட்டத்தில் தங்கி கொழுந்து பறிப்பதற்கு மற்றும் தோட்ட வேலைக்கு இள வயது, நடுத்தர வயது தம்பதி தேவை. 0728895647 006760

வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள் 320

அனுபவமுள்ள பேக்கறி/ சோட்ஈட் பாஸ், பெண்பாஸ், பாண் வண்டி சாரதிகள், விற்பனை ஆண், பெண் உதவியாளர்கள் தேவை. 0701591500, 0769046395. 007502

வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள் 322

பொரளை வேலைத் தளத்திற்கு செட்டலின் பாஸ் மற்றும் உதவியாளர்கள் தேவை. தங்குமிடம் உண்டு. 0722820404, 0782823330 007180

தொழில்துறை பொது 325

பண்ணையில் தங்கி வேலை செய்யும் ஆட்கள் தேவை. கால் நடைகள் (பராமரிப்பு விவசாயம், சமையல் வேலைகள் தெரிந்தவர்களு க்கும் முன்னுரிமை உண்டு. சாப்பாடும் தங்குமிட வசதிகளும் செய்துதரப்படும். சம்பளம் 36,000 இலிருந்து 45,000 வரை அனுபவத்திற்கு ஏற்றமாதிரி யும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதன் மூலம் அதிகரித்துக் கொடுக்கப்படும். தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்கு உள்ளவர்கள், வயது 18 முதல் 45 வரை உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு 0774292500 முகாமையாளர் 0212291578, 0762574690 007929

(2555 வயது ஆ/ பெ) சிறந்த திறமை சாலிகளுக்கு வேலை வாய்ப்பு. பல்வேறு மொழி பேசுதல் விசேட திறமையாகும். 0112638228, 0760864210, 0771333123 007312

0718653778 பாதுகாப்பு வெற்றிடங்கள் வத்தளை, பெலவத்த, தெஹிவளை, யூனியன் பிளேஸ் கோன பொல, பண்டாரகம, இங்கிரிய, ஹொரன, ஹோமாகம, பாதுக்க, பாணந்துறை, கட்டுகுருந்த தெஹிவளை. 070251 3418 ஹொரன. 0718379981 கொழும்பு 0718653780, வத்தளை 0718653779 அலுவலகம் 0718653781, 0704040899, 0768171053, 0706655331 007314

காணி/தோட்டம்

சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் 602

வாடகைக்கு/ குத்தகை

நுகேகொடையில் புத்தம் புதிய ஆடம்பர அப்பார்ட்மென்ட் வாடகைக்கு மாதாந்தம் ரூ. 90,000/ விலைபேசித் தீர்க்கலாம். முகவரி 22/9, ஜம்புகஸ்முல்ல மாவத்த, நுகேகொடை 2 படுக்கையறை 2 குளியலறை, 900 சதுர அடி, A/C, சுடு நீர், CCTV பாதுகாப்பு, பார்க், ஓய்வறை, லொன் டரி அறை பென்றியுடன் சமையலறை, தொடர்பு 0706283870/ 0714468482/ 0778120213 தம்பதி அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. செல்லப் பிராணிகள் அனுமதிக்கப்படமாட்டாது. 005549

வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு 616

கொட்டாவ மத்தேகொட சந்தியில் 10 பேர்ச் புதிய இருமாடி வீடு விற்பனைக்கு 5 அறைகள், 2 குளியலறைகள். 43 மில்லியன் (Negotioble) 071-4916174. 006896

வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு 617

திஹாரி சென்றல் பிளேஸில் 15 பேர்ச் 3 படுக்கை அறை வீடு, பள்ளிவாசல், சர்வதேச பாடசாலை அல் அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு அருகில் விற்பனைக்கு உண்டு. Dr. Shuaib 0740656333 007875

வத்தளை ஹெந்தல கெரவலப்பிட்டிய அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலிலிருந்து 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள 10 பேர்ச்சஸ் காணியில் 3 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் 21 மில்லியன் பெறுமதியான வீடு விற்பனைக்கு. தொடர்புகளுக்கு 0774438319/ 0767310446. 007421

வத்தளை, கெரவலப்பிட்டிய அதிவேக பிரவேசத்திற்கு 400 M தூரத்தில் ஆடம்பர இருமாடி வீடு விற்பனைக்கு 13.5 பேர்ச். 0713649124. 007311

ஹங்வெல்ல கிரிந்திவெல பிரதான பஸ் வீதியில் செமின்ரோ விழா மண்டபத்திற்கு அருகில் லெக்தாவளை வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் 171/2 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு 17 இலட்சம். தொடர்புகளுக்கு 0774438319/ 0767310446. 007413

வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு 621

0777282147 கண்டியில் வீடு, ஹோட்டல், தோட்டம், வெற்றுக் காணித்துண்டுகள், வியாபாரஸ்தலம், கொள்வனவு செய்வதற்கு அழையுங்கள். 0777438169. 005002

வீடு சொத்து வவுனியா மாவட்டம் விற்பனைக்கு 639

இரட்டைப் பெரிய குளம் வவுனியா A9 பிரதான வீதிக்கு முகப்பாக 120 பேர்ச் காணி மற்றும் வீடு ரூ. 155/ இலட்சம் விற்பனைக்கு 0718895895, 0776342941 007667

வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு 642

மாபோல, வத்தளை, பங்களாவத்த வீதியில் மூன்று படுக்கையறை முழுமையாக டைல் செய்யப்பட்ட பார்டிசன் உடன் வாடகைக்கு. 0773960964. 007645

வீரமஞ்சரி திருமண சேவைகள்

மணமகள்

முஸ்லிம் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மிக கௌரவமான குடும்பத்தைக் கொண்ட ஆங்கிலத்தில் கல்வி கற்ற எங்களது அழகான (29) வயதுடைய இளம் தோற்றமுடைய மணமகளுக்கு நல்ல தகைமைகளைக் கொண்ட மணமகனை எதிர்பார்க்கிறோம். abdulsma1950@gmail.com B194089

தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி BUDGET ADZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

இரத்மலானை

மெலிபனுக்கு அருகில்

காலி வீதிக்கு 250 மீட்டர்கள் லும்பினி அவெனியூவில் 8.5 பேர்ச் காணியுடன் மாடி வீடு விற்பனைக்கு

அழையுங்கள் :
0766 994 115

VICTORIAN GUEST

Bandarawela
victorianbungalow.lk

1 Person Full Night Rs. 1000/-
2km Away from Railway Station and Town BANDARAWELA
8 Bathrooms

1st floor - 4 double rooms | Rs. 10,000/- 8 Persons
Ground floor - 4 Triple rooms | Rs. 12,000/- 12 Persons

Weekday	Full board
D/ Rooms - 2000/-	D/ Rooms - 8800/-
Triple Room - 3000/-	Triple Room - 11300/-

Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available

077 3 711 196 | 070 2 536 896

EXCELLENT OPPORTUNITY

HIGHEST PRICE FOR YOUR GOLD



HOME VISITED FOR PURCHASING

Reg. No WLL 5244

Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silver, Old Notes, Antique Furniture

Maximum price for Silver spoons and forks imported from Italy(Arjanthu)

RELIABILITY ASSURED

WE BUY PAWNED GOLD JEWELLERY ITEMS

0777 077 333

MITSUBISHI - NISSAN - LANDROVER

TOYOTA සියලුම JEEPS සහ DOUBLE CABS

RECONDITIONED / BRAND NEW
සියලුම ACCESSORIES සහ BODY PARTS

071-7 808 043
www.sntrading.lk

S N TRADING COMPANY (PVT) LTD

NO. 335, HIGHLEVEL ROAD, NUGEGODA. TEL : 0714 403 555, 0112 827 994/5

மினுவங்கொட

16 ஏக்கர் ரம்மியமான சூழலில் அமைந்த மரக்கறி பழங்கள் தென்னம் பயிருடன்

பண்ணை மற்றும் விடுமுறை இல்லம் விற்பனைக்கு

மஞ்சல், இஞ்சி, கோவா, பீட், மிளகாய், கத்திரி, கரட், வாழை, அன்னாசி, தூரியன், ரம்புட்டான், மா, பலா, கஜு, வெரலு, தேக்கு, மஹோகனி

தென்னை 8 ஏக்கர்

கட்டுநாயக்கவில் இருந்து 15 விநாடிகள் (சுற்றிவர பாதைகள்)

வங்கிக் கடன் வசதிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது

சிக்கலற்ற உறுதி



தொடர்புகள் : **0771 432 746**

Villa for Sale @ Bolgoda

13 Million

Small Villa with A/C on 11.3p 2nd block of land with Panoramic View of the Bolgoda Lake and Swimming Pool for Sale

- 0044 77 638 42 740 / 077 811 99 81

ASSAT TRADING COMPANY

Hotline
0727366022
0773935808

PROFESSIONAL HOME MAINTENANCE SERVICE

From a single repair to a yearly maintenance schedule, KADS Lanka offers complete home care solutions.

071155 9000
077 320 9000

- All Handy Men Services
- Civil Electrical
- Water Proofing
- Tiling
- Painting
- Steel Work

24 HOUR SERVICE

KADS (Lanka) Construction & Suppliers,
No. 119/13, Asgiri Walpola,
Udugampola, Gampaha.
Email: kadslanka@gmail.com

தினகரன் வாரமஞ்சரி BUDGET ADZ போட்டோ குறும் விளம்பரம்

TOYOTA REGISTERED

Prado 150 Diesel Automatic 2013 / 2012, 79750 Km, Toyota Maintained Electric Foot Board, 4way Camera, beige interior, Excellent Condition, Personal Use, URGENT 0711 058 971 / 0775 469 744 TKNV 01

Toyota RAV 4 motor car for sale. Year of manufacture 1999, 1st registration 2003, Vehicle in good condition. Price 40/- Inquire – 0712 341 896 / 0714 397 024 TKNV 02

TOYOTA REGISTERED

Toyota Regius HW-xxxx Van, P/ mirrors, R/key, D/AC, R/cam, Subwoofer, R/seat, Full Body Kit, Tyres 100%, Engine 100%, for sale or exchange. 54 Lakhs. 0759 500 909 / 0714 888 172 TKNV 03

Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 21,250,000/- Negotiable Contact No. 0753 944 872 TKNV 04

Mercedes-Benz REGISTERED

2015 BENZ GLC 250 4 MATIC, LUXURY SUV, DIMO Imported & maintained, Made in Germany. 95,000 Km, Mountain Gray, Electric Seats, 2000 cc with 9G-DCT turbo, CD player, Economical, Automatic – Triptronic, 4 wheel drive, Push Start, Parking Assistance, Paddle Shift, dual A/C, 18" Mercedes Alloys, Reverse Camera, Special Number, New Benz battery, New rear original shocks, all records available. Price 21 million. SHOWROOM CONDITION. Inspection in Rajagiriya. 0777 315 500 TKNV 05

Mercedes-Benz REGISTERED

Brand new, Multifunction Benz E 200 car- 2003 with power Curtain, Telephone, Cool box, accessories. 0760 812 496 RPT 01

TOYOTA REGISTERED

Toyota Hilux Double Cab 2005 / wp PO - xxxx, B/ New, 2500cc, Diesel, in excellent condition. Attidiya. 077 88 58 462/ 077 18 28 207 anudi

LAND ROVER REGISTERED

Land Rover Range Sport HSE 2018 ued SUV/ 4x4, Engine Capacity 2000cc , country of origin UK, Grey - Wrapped with white colour - leather Electric memory seats - triptronic Diesel Mileage 93000km Price Rs. 68, 000, 000/- Negotiable Contact 0753 944 872 TKNV 06

BMW REGISTERED

BMW 520D year 2012 used triptronic Diesel, Engine Capacity, 1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 16,000,000/- Negotiable. Contact - 0753 944 872 TKNV 07

தினகரன் வாரமஞ்சரி
போட்டோ குறும் விளம்பரம்

Amal
077 7 270 443
Asela
077 313 0 150

OTHERS REGISTERED

2018 JEEP COMPASS, DIMO unlimited mileage WARRANTY until Jan 2024, Mountain Gray, 40,000 Km, just serviced, 1400 CC with 7G-DCT, Automatic, Triptronic, Dual A/C, Push Start, 17" JEEP Alloys, Nano Coat, Winker Mirrors Keyless entry, Reverse Camera, Multi-function steering with Bluetooth phone Controls, New battery, all records @ DIMO. Asking 17 million. Inspection in Rajagiriya. 0777 315 500 TKNV 08

OTHERS REGISTERED

NB – 6 xxx series, 38 seater, A/C Bus for sale. 3.6 million, minor work to be done. Used only for transportation of foreigners. 0771 080 808 TKNV 09

Audi car A3 CBF-5xxx, Year 2018, 56000km, Full Option, First Owner, 116 Lakhs. Maharagama anudi

படித்ததும் பகர்வதும்

130

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

வாகன விபத்துக்கள்

பிரபல பாடசாலையொன்றிலிருந்து கல்விச் சுற்றுலா சென்ற மாணவர்கள் பயணித்த பேரூந்து ((bus) ஒன்று மோதியதில், மோதுண்ட வேனிலும், முச்சக்கர வண்டியிலும் பயணித்த ஏழு பேர் உயிரிழந்த சம்பவம் அண்மையில் இந்நாட்டு மக்கள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது. இதைத் தொடர்ந்து அடுத்து வந்த சில நாட்கள் இடம் பெற்ற விபத்துக்களின்போதும், மற்றும் சிலர் உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகின. இந்நிலை இன்னும் தொடரத்தான் செய்கிறது.

இத்தகைய வாகன விபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், பல்வேறு வழிகளில் பாதிப்புக்குள்ளாவோரின் தொகை பாரிய அளவில் உள்ளதையும், அவதானிக்க முடிகிறது. இவ்வாறான விபத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்திருப்பது கவனயீனமாக அல்லது அதிவேகமாக அல்லது போதையுடன், அல்லது தூக்க மயக்கத்தில் வாகனங்களை செலுத்துவதாகும்.

குறிப்பிட்ட பஸ் விபத்தின் போது, பஸ்ஸில் பயணித்த மாணவர்கள் சாரதியிடம் 'வேகமாக போக வேண்டாம்' என பல முறை கத்தியும் அதனை பொருட்படுத்தாது அதிவேகமாக வாகனத்தை செலுத்தியமையே இவ் விபத்துக்கான ஒரு காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதைகளில் வாகனத்தை செலுத்தும் சாரதிகள் அதிக எச்சரிக்கையுடனும் கூடிய கவனத்துடனும் செயல்பட வேண்டியது இன்றைய காலத்தில் ஒரு கட்டாய கடமையாக இருக்கின்றது. இப்போது பாதைகளில் செல்லுகின்ற வாகனங்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளது. அவற்றுக்கு ஏற்ற வகையில் பாதைகள் அபிவிருத்தியடையவில்லை. பலர் கவனக் குறைவாகவே வாகனங்களை செலுத்துகின்றனர். பொருத்தமற்ற வாகனங்கள் பாதைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இவை போன்ற பல காரணங்களை சாரதிகள் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வாகன விபத்துகளில் இத்தகைய பாரிய அளவிலான உயிரிழப்புக்கள் ஏற்பட்ட போதிலும் அவற்றை படிப்பினையாகக் கொண்டு சாரதிகள், அதிலும் குறிப்பாக பஸ் சாரதிகள் தம்மை திருத்திக் கொண்டதாக தெரியவில்லை ஏனெனில் தொடர்ந்தும் ஒரே வகையான அதே காரணங்களுடனான வாகன விபத்துக்கள் நாளாந்தம் நடந்து கொண்டே இருக்கின்றன. இவற்றை தவிர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சாரதியும் சுயமாக சிந்தித்து தம்மைத்தாமே திருத்திக்கொள்ள வேண்டும். உரிய, பொருத்தமான, வேகத்திலும், வீதி ஒழுங்குகளைப் பேணியும், நிதானமாகவும் வாகனங்களை செலுத்த முன்வர வேண்டும்.

பஸ் சாரதிகளுக்கென விசேட பயிற்ச்சி வகுப்புக்களையும், கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து அவர்களை மனோவியல் ரீதியாகவும், ஒழுக்கவியல் ரீதியாகவும், பக்குவப்படுத்தி, நேர்மையாக, முறையாக தமது கடமைகளைச் செய்ய பயிற்சியளிக்க வேண்டியது அவசியமாகும். சமூக சேவை நிறுவனங்கள், போக்குவரத்து அமைச்சு, அதன் கீழ் உள்ள நிறுவனங்கள், பஸ் உரிமையாளர்கள் சங்கம் போன்றன இவ்விடயத்தில் அக்கறை எடுத்து ஆக்க பூர்வமாக செயல்பட முன்வர வேண்டும்.

நெஞ்சுக்கு நீதி

வேண்டாம் வாகன ஓட்டலில் அதிவேகம்
உண்டாம் விபத்து விளைந்திடும்சோகம்
காண்டம் கொள்வதால்பிரிந்திடும் நேசம்
தண்டனை பெற்றிடுவார்வந்திடும் நாசம்

பிரிந்தார் பெருமை

டாக்டர் ஏ.எல் தஸ்தகீர்

பிரபல வைத்தியரும்,சிறந்த சமூக சேவையாளருமான டாக்டர் ஏ.எல் தஸ்தகீர் கடந்த ஜனவரி 24ம் திகதியன்று (24.01.2023) கொழும்பில் காலமானார். அவரது ஜனாஸா, அவரது விருப்பப்படி புத்தளம், கரம்பையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார், பெரியமடுவைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்டர் ஏ.எல் தஸ்தகீர், வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து புத்தளத்தில் குடியேறிய போதும், பின்னர் கொழும்பை தனது வசிப்பிடமாகக் கொண்டு, புதுக்கடை வாழைத்தோட்ட பிரதேசத்தில் தனது மருத்துவ நிலையத்தை நிறுவி வைத்தியத் தொழிலைத் தொடர்ந்தார். இப்பிரதேசத்தில் பிறப்பு இறப்பு பதிவாளராகவும் அவர் சேவையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

இனமத பேதமின்றி சகலருக்கும் சேவையாற்றினார். இவரது மருத்துவ நிலையத்துக்கு, சீருடையுடன் வரும் பாடசாலை, அரபு மத்ரசா மாணவர்களுக்கு இலவசமாகவே சிகிச்சை வழங்கப்பட்டதும், மத குருமார்களுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இலவசமாக அல்லது அரைக்கட்டணத்தில் சிகிச்சையளிக்கப்பட்டதும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

நண்பர்கள், தெரிந்தவர்கள் நேரிலோ, தொலைபேசி மூலமோ மருத்துவ ஆலோசனை கேட்டால், அது எத்தகைய நேரமாக இருந்தாலும் உற்சாகமாக, இலவசமாக, உளப்பூர்வமாக உதவுவதற்குத் தயங்காதவர் டாக்டர் தஸ்தகீர். கொரோனா தொற்று காலத்தில் பல ஜனாஸாக்களை எரிக்கவிடாமல் அடக்கஞ் செய்வதற்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

தனது பிறந்தகமான வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களது வாழ்வை மேம்படுத்த அளப்பரிய பங்களிப்புகளைச் செய்த இவர், வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் பலவகையிலும் உதவி, ஒத்தாசைகளை செய்துள்ளார். அரசியலிலும் ஆர்வம் கொண்டிருந்த இவர், காலஞ்சென்ற, எம். எச். எம் அஷ்ரப் காலத்திலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் உயர்பீட உறுப்பினராக இருந்துள்ளார்.

இலக்கியத் துறையிலும் ஆர்வம் கொண்டிருந்த டாக்டர், அத்துறை சார்ந்த பல விடயங்களை அடிக்கடி என்னோடு கலந்துரையாடுவார். எமது "படித்ததும் பகர்வதும்" பகுதியை வாசித்து ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தெரிவிக்கத் தவறமாட்டார். அவரது பிரிவு அவர் பிறந்த மண்ணுக்கும், வாழ்ந்த மண்ணுக்கும் பேரிழப்பாகும். அவரது மறு உலக வாழ்வு சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

வாசிக்க ஒரு நூல்

'Die Empty' (காலியாக இறக்கவும்)



நாள்தோறும் ஒவ்வொருவரும் பல்வேறு வகையான புத்தகங்களை வாசிக்கின்றனர். கவிதை, சிறுகதை, நாவல், ஆய்வு, மனோதத்துவம், நவீனம் என பலதரப்பட்ட நூல்கள் ஒவ்வொருவரது இரசனைக்கும் ஏற்ற வகையில் வாசிக்கப்படுகின்றன. இவற்றில் சில தனித்துவமாக தனியிடம் பிடித்துக்கொள்கின்றன.

இந்த வகையிலான, எல்லோரும் தவறாது படிக்க வேண்டிய சிறப்பான ஒரு ஆங்கிலப் புத்தகம் தான் 'Die Empty'என்ற 'காலியாக இறக்கவும்' எனும் நூல். பிரபல எழுத்தாளர் டொட் ஹென்றி (Todd Henry) எழுதியது.

இந்த நூலை எழுத அவர் ஈர்க்கப்பட்ட சம்பவம் சுவையானது. ஒரு வர்த்தக சம்மேளனத்தில் அவர் கலந்துகொண்டபோது இந்தப் புத்தகத்தை எழுதும் எண்ணத்தைப் பெற்றார். அங்கு நிகழ்வை நடத்திக்கொண்டிருந்த இயக்குனர், பார்வையாளர்களிடம் கேட்டார், "உலகின் பணக்கார நிலம் எங்கே உள்ளது?"

பார்வையாளர்களில் ஒருவரிடமிருந்து பதில் வந்தது. "எண்ணெய் வளம் நிறைந்த அரேபிய நாடுகள்தான்."

மற்றொருவர் கூறினார்: "ஆபிரிக்காவில் உள்ள வைரச் சுரங்கங்கள்."

அப்போது இயக்குனர் கூறினார்: "இல்லை! இல்லை!! இறந்தவர்களை அடக்கம் செய்யும் மயானம்தான் அது. ஆம், இதுதான் உலகின் பணக்கார, பெறுமதிமிக்க நிலம், ஏனென்றால் இலட்சக் கணக்கான மக்கள் பிரிந்து சென்றதால், "அவர்கள் இறந்துவிட்டார்கள்" என்று அடக்கம் செய்யப்பட்டு விட்டார்கள். அவர்களோடு வெளிச்சத்திற்கு வராத பல மதிப்புமிக்க யோசனைகளும், திட்டங்களும், பெருமதிப்பு நிறைந்த கருத்துக்களும், ஆலோசனைகளும் புதைக்கப்பட்டுவிட்டன. அவை அனைத்தும் அவர்கள் புதைக்கப்பட்ட கல்லறைகளில் தானே உள்ளன.."

இந்த பதிலால் ஈர்க்கப்பட்டுத்தான், டொட் ஹென்றி இந்த 'Die Empty' எனும் 'காலியாக இறக்கவும்' என்ற புத்தகத்தை எழுதினார். மக்கள் தங்கள் ஆற்றல்களை, ஆலோசனைகளை, திறமைகளை, செல்வங்களை வெளிப்படுத்தாமல், மக்களுக்கு வழங்காமல், உலகுக்கு ஒப்படைக்காமல் தமக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு இறக்கக்கூடாது என்பதற்காகவே தன்னால் முடிந்த பங்களிப்பாக இந்நூலை எழுதியதாக குறிப்பிட்டுள்ளார்.

"உங்களிடம் உள்ளவற்றில் சிறந்தவற்றை உலகுக்கு கொடுக்காமல், நீங்கள் உங்கள் கல்லறைக்குச் செல்லாதீர்கள், அவற்றை முழுமையாக வழங்கிவிட்டுச் செல்லுங்கள்" என்று அவர் தனது புத்தகத்தில் கூறியுள்ளமை சிறப்பான கூற்றாகும்.

இந்த நூல் சொல்வதன் சாரம் இதுதான், "எப்பொழுதும் காலியாக இருப்பதைத் தேர்வுசெய்யுங்கள்" இதன் உண்மையான பொருள், "உங்களுக்குள் இருக்கும் அனைத்து நன்மைகளையும் உலகுக்குக் கொடுக்காமல் இறக்கக் கூடாது என்பதுதான். உங்களது ஆற்றல்கள், ஆலோசனைகள், திறமைகள், செல்வங்கள், சிறந்தவைகள் அனைத்தையும் நீங்கள் இறப்பதற்கு முன்னர் உலகிற்கு வழங்கி விடுங்கள்" என்பதுதான்.

உங்களிடம் ஒரு யோசனை இருந்தால் அதை செயல்படுத்தி விடுங்கள்.

உங்களிடம் அறிவு, ஆற்றல் இருந்தால் அவற்றை பிறருக்கு வழங்கி விடுங்கள்.

உங்களுக்கு ஒரு இலக்கு இருந்தால் அதை தவறாது அடைந்திடுங்கள்.

அன்பு, நட்பு, காதலை உங்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ளாதீர்கள். மற்றவர்களுக்கு பகிர்ந்தளித்து மகிழுங்கள்.

மொத்தத்தில் இறக்கும்போது, ஒவ்வொருவரும் 'காலியாக இறக்கவும்' ('Die Empty')

கவிக் 'கடி'கள்

சுதந்திரத்திற்காய்
காத்திருக்கிறார்கள்
முன்னாள் போராளிகள்
சிறைச்சாலை பேருந்துகளில்.

★★

தூக்கத்தில்
தொலைக்கப்பட்டது
ஊர்.....
பேருந்து பயணம்

ஈழகணேஷ்

★★

ரேஷன் கடைக்காரனுக்கு
குழந்தை பிறந்தது
எடை குறைவாய்

ந. முத்து

★★

கறுத்த பெண்
புகுந்தகம் வந்தாள்
கலர் டிவியோடு

மு. முருகேஷ்

★★

சாகவே இல்லை
சாதிச் சண்டையில்
சாதி

புதுவைத் தமிழ்ச் செல்வன்

தகவல் களஞ்சியம்

கையடக்க தொலைபேசிகளில் சாரதி அனுமதிப் பத்திரம்

இலங்கையில் டிஜிட்டல் சாரதி அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், டிஜிட்டல் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் முறை கையடக்க தொலைபேசிகளின் ஊடாக அறிமுகப்படுத்த ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்த புதிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு அட்டை தேவைப்பட மாட்டாது.

சாரதிகளுக்கு எச்சரிக்கை!

வாகன சாரதிகளுக்கு புள்ளிகள் வழங்கி, சாரதிகள் செய்யும் தவறுகளுக்கு ஏற்ப அவற்றைக் குறைக்கும் வகையிலான புள்ளி வழங்கும் முறை இந்த வருடம் (2023) மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் எனவும், அதற்கமைய சாரதிகள் குறிப்பிட்ட அளவை விடவும் குறைவாக புள்ளிகளைப் பெற்றால் அவர்களது சாரதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் எனவும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் குறித்த சாரதி ஒரு வருட காலத்திற்கு அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க முடியாது எனவும், ஒரு வருடத்தின் பின்னர்தான் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

தொலமியின் வரைபடத்தில் கொழும்பு

53 கொழும்பின் கதை

என். சரவணன்

கொழும்பு மாநகரம் இலங்கை வரலாற்றில் நீண்ட காலமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சிறப்பான இடத்தைப் பெற்ற ஒரு பிரதேசமாகும். கி.மு 2ஆம் நூற்றாண்டில் வரையப்பட்ட "தப்ரபேன்" வரைபடமும் கொழும்பு எந்தளவு சர்வதேச அளவில் பிரபலமாக இருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறது.

நவீன புவியியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கிலேடியஸ் தொலமி (Claudius Ptolemaeus (Ptolemy)). இலங்கையின் முதலாவது வரைபடத்தை வரைந்தவர் அவர் தான். இலங்கை முதன்முதலாக உலகுக்கு தப்ரபேன் (Taprobana) என்கிற பெயரில் அழைக்கப்பட்டது அவரின் இந்த வரைபடத்தின் பின்னர் தான். இந்த வரைபடத்தை அவர் வரைந்த காலத்தை அறிந்தால் நாம் வியப்புறுவோம். கிறிஸ்துவுக்கு முன் இரண்டாம் நூற்றாண்டில் வரைந்த வரைபடம் அது.

தொலமி கி.மு.100ஆண்டில் பிறந்தவர் எனக் கணிக்கப்படுகிறது. 70வது வயது வரை வாழ்ந்தவர். எகிப்தை உள்ளடக்கிய ரோம சாம்ராஜ்ஜியத்தின் தலைநகர் அலெக்சாண்டிரியாவில் பிறந்தவர் தொலமி. அவரின் வரைபடங்களில் காணப்படுகிற குறிப்புகள் கிரேக்க மொழியிலேயே உள்ளன.

அதற்கு முன் கி.மு மூன்றாம் நூற்றாண்டில் மகா அலெக்சாண்டரின் இந்திய பயணத்தின் போதே தப்ரபேன் என இலங்கை அழைக்கப்பட்டிருந்தது. பண்டைய கிரேக்கர்கள் இந்தியாவை ஆண்ட மௌரியப் பேரரசுடன் கொண்டிருந்த தொடர்புகள் காரணமாக இந்தியக் கடற்கரையில் தாம்ரவர்ணி (தாமிரபரணி)என்கிற சமஸ்கிருதப் பெயரைக் கொண்ட பெரிய தீவு இருப்பதை அறிந்திருந்தனர். தாம்ரவர்ணியை அவர்கள் தப்ரபேன் என்று உச்சரித்தார்கள். விஜயன் இலங்கையை வந்தடைந்த கடற்கரையாக தாமிரபரணி அறியப்படுகிறது. அந்த தப்ரபேனைத் தான் பின்னர் தொலமி வரைபடமாக வரைந்திருந்தார்.

கி.மு மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்க மொழியில் எழுதப்பட்ட அரிஸ்டாட்டிலின் படைப்புகளில் ஒன்றான "பிரபஞ்சத்தில்" (On the Universe (Greek: என்கிற நூலில் உலகப் பெருங்கடலில் உள்ள தீவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அந்தப் பட்டியலில் "தப்ரபேன்" தீவும் இடம்பெற்றுள்ளது. அலெக்சாண்டரின் பயணத்தின் மூலம் தான் அவர் தப்ரபேனை அறிந்திருந்தார்.[1]

இலங்கையைப் பற்றி மட்டுமல்ல இன்னும் உலக நாடுகள் பலவற்றின் முதல் வரைபடம் அவரால் வரையப்பட்டது தான்.

தொலமியின் வரைபடங்கள் பல நூற்றாண்டுகளாக தொலைந்து போன பிறகு இடைக்காலத்தில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டன. மறுமலர்ச்சிக் காலத்தின் போது, பல உலக அறிஞர்களும் வரைபட நிபுணர்களும் பண்டைய கிரேக்க, ரோமானிய எழுத்தாளர்களின் படைப்புகளில் ஆர்வம் காட்டினார்கள். மேலும் அதுவரை கிடைக்காதிருந்த நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து மொழி பெயர்க்கத் தொடங்கினர். இந்த முயற்சியின் அங்கமாகத் தான் தொலமியின் "ஜியோகிராஃபியா" மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. கிரேக்க சொல்லான "ஜியோகிராஃபி" (Geography) என்கிற சொல் புவியியலைக் குறிக்கும் சொல்லாக ஆனது அப்படித் தான். எனவே தான் அந்த தொலமி நவீன புவியியலின் தந்தை (The Father of Geography) என்று அழைக்கப்படுகிறார். அவரின் வரைபடங்களில் உள்ள முக்கியமான இன்னொரு அம்சம் என்னவெனில் அன்றே அவ்வரைபடங்களில் அட்ச, தீர்க்க ரேகைகளை பயன்படுத்தியிருப்பது தான். அவற்றை உலகுக்கு முதலில் அறிமுகப்படுத்தியதும் அவர் தான்.

தொலமி

உலக அளவில் மற்றும் அக்கால வரைபடத்தை உருவாக்குபவர்களுக்கு பெரும் உத்வேகமாக மாறியது "ஜியோகிராஃபியா". அது பரவலாக ஆய்வு செய்யப்பட்டு, அதன் மறுகண்டுபிடிப்புக்குப் பிறகு பல நூற்றாண்டுகளாக வரைபடங்கள் மற்றும் புவியியல் அறிவுக்கான ஆதாரக் குறிப்புகளாகப் பயன்படுத்தப்படத் தொடங்கியது. இந்த நூல் முதன்முதலில் 9ஆம் நூற்றாண்டில் கிரேக்க, அரேபிய மொழிகளில் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 1477ஆம் ஆண்டு லத்தீன் மொழியில் அச்சிடப்பட்டு ஐரோப்பாவில் பரவலாக விநியோகிக்கப்பட்டது, இது தொலமியின் படைப்பின் அடிப்படையில் பல புதிய வரைபடங்களை உருவாக்க வழிவகுத்தது. அதன் பின்னர் "ஜியோகிராஃபியா" ஐரோப்பிய வரைபடக்கலையின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இன்றும் உலகளவில் அந்த நூல் பல கோணங்களில் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

"ஜியோகிராஃபியா" நூல்கள் எட்டுத் தொகுதிகளைக் கொண்டவை. சுமார் 8000 க்கும் மேற்பட்ட இடங்கள் அவரின் அந்த நூல்களில் இடம்பெற்றுள்ளன என்பது முக்கியமாக கவனிக்க வேண்டியது. கி.மு இரண்டாம் நூற்றாண்டு காலத்தில். ஏழாவது தொகுதியில் தப்ரபேன் இடம்பெற்றுள்ளது. மூல வரைபடம் இன்றும் பிரிட்டிஷ் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

தொலமியின் "தப்ரபேன்" என்கிற வரைபடமானது இலங்கையைத்தான் குறிப்பிடுகிறதா என்கிற சர்ச்சைக்குரிய விவாதம் இன்றும் தொடர்ந்து வருகிறது. ஆனால் அந்த ஓவியத்தை அக்குவேறு ஆணிவேறாக நுணுக்கமாக பிரித்து ஆராய்கிறவர்கள், அது இலங்கை தான் என்றும் இன்னும் சிலர் அது சுமாத்திரா தீவு என்றும் விபரங்களை வெளியிட்டு வருகின்றனர். அவரின் வரைபடத்தில் தப்ரபேன் அதன் உண்மை அளவை விட பதினான்கு மடங்கு அதிகமாக காட்டப்பட்டிருந்தமையும் பலரால் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தியா கூட இலங்கையை விட சிறியதாகக் காட்டப்பட்டிருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.[2] அன்றைய இலங்கை பற்றி மேற்கில் நிலவிய பெருங்கதைகளாலேயே அதனை முக்கிய பெரிய நாடாகக் கருதியிருக்கக் கூடும் என்கிற வாதங்களும் பரவலாக வைக்கப்படுகின்றன, அப்படியான அளவு வித்தியாசங்கள் அவரின் ஏனைய வரைபடங்களிலும் உள்ள குறைதான் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள முடியும்.

தொலமி இந்த வரைபடத்தை கி.பி 139 காலத்தில் வரைந்திருக்கிறார். மகாவம்சத்தின் படி, மஹாலுனா அல்லது இரண்டாவது பாத்திய திஸ்ஸ என்கிற மன்னன் அந்த நேரத்தில் நாட்டை ஆட்சி செய்தான். இக்காலத்தில் இந்நாட்டு அரசர் ரோமா, எகிப்து, எத்தியோப்பியா, கிரீஸ், அரபு நாடுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை இலங்கையிலிருந்து மேற்கொண்டதாக பதிவுகள் உண்டு. அதன் காரணமாக, தப்ரோபேன் உலகம் முழுவதும் பிரபலமான நாடாக இருந்திருக்கலாம்.

மேலும், தொலமியின் வரைபடத்தில் அன்றைய நாட்டின் பிரபல இராச்சியமாக இருந்த அனுராதபுரம் துல்லியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனுரோகிராமன் என்று பதிவு செய்துள்ளார். அனுரோக்ரமன் என்று அதில் குறிப்பிடப்பட்டிருகிறது. கிரேக்கர்கள் அந்த உச்சரிப்பில் தான் அதை அறிந்து வைத்திருந்திருக்க வேண்டும். தெற்கில் ரோகன் (றுஹுண) என்கிற இடமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொலமி இலங்கை வரைபடத்தை வரைந்த காலத்தில், இலங்கையில் பயன்படுத்தப்பட்ட கிராமப் பெயர்கள் சமஸ்கிருத மூலத்தைக் கொண்டிருந்தன என்பதையும் இது காட்டுகிறது.

இதை விட அந்த வரைபடத்தில் மத்தியில் தொடர் மலைகளும் இடம்பெற்றிருக்கின்றன. "Malea mone" (மலை மேடு) என அவை குறிக்கப்பட்டுள்ளதையும் இங்கே குறிப்பிடவேண்டும். இன்று நாம் குறிப்பிடுகிற மலைநாடு என்பது கிறிஸ்துவுக்கு முன்னரே "மலை" என்கிற அடைமொழியுடன் பயன்படுத்தப்பட்டிருகிறதா என்கிற கேள்வியும் எழுகிறது.



தொலமியின் தப்ரோபேன்

தொலமி இலங்கைக்கு ஒருபோதும் வந்திராத போதும் பல நாடுகாண் பயணிகளிடமும், வர்த்தகர்களிடமும், கேட்டுத்தெரிந்த உருவத்தையும், பெயர்களையும், குறிப்புகளையும், பதிவுகளையும் வைத்து உண்மைக்கு நெருக்கமான இத்தகைய வரைபடங்களை அன்றே உருவாக்கியிருப்பதை வியக்காமல் இருக்க முடியுமா?

இலங்கை போர்த்துகேய காலனித்துவத்துக்குள் வீழ்ந்த காலமான பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தப்ரபேன் என்கிற வரைபடம் தான் உலக அளவில் இலங்கையின் வரைபடமாக அறியப்பட்டிருந்தது. இந்த வரைபடத்தை ஆதாரமாக வைத்து அதே வடிவில் சில மாற்றங்களுடன்; செழுமைப்படுத்தப்பட்ட பல வரைபடங்கள் 16ஆம் நூற்றாண்டில் வெளியாகின.

இந்த வரைபடங்கள் அவ்வளவு காலமும் எத்தனை பேர்களின் கைகளுக்கு மாறி இறுதியில் 1406ஆம் ஆண்டு யாகோபுஸ் அன்ஜெலஸ் (Jacobus Angelus)என்பவரால் நூல் வடிவம் பெற்றன, அவை கூட மீண்டும் கண்டுபிடிக்க இயலாதிருந்த நிலையில் டொக்டர் சார்ல்ஸ் பேர்னி என்பவரால் (Dr Charles Burney) பிரிட்டிஷ் நூலகத்துக்கு வழங்கப்பட்ட ஏராளமான சேகரிப்புகளில் இவை கண்டெடுக்கப்பட்டன. இன்றும் சார்ல்ஸ் பேர்னியின் சேகரிப்புகளில் இந்த வரைபடங்கள் தனியாக "Burney MS 111" என்கிற பெயரில் குறிப்பிடப்படுகிறது.

தொலமியின் வரைபடத்தில் "தப்ரபேன்" என்பதை இலங்கை தான் என்று குறிப்பிடுகிற இன்னொரு துல்லியமான ஆய்வு கிரேகர் ரீச் (Gregor Reisch)என்பவர் செய்த பட ஒப்பீட்டு ஆய்வு. [3] அந்த ஆய்வில் அன்றைய இடங்களின் பெயர்களில் உள்ள வரலாற்று சான்றாதாரங்களையும், புவியியல் நிலப்பரப்பில் அதன் தன்மைகளையும் இன்றைய நிலையோடு ஒப்பிடுகிறார்.

கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ள இடங்களின் பெயர்களின் உச்சரிப்புகளை ஆங்கிலப்படுத்தி அந்தக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. அதன்படி "Boumasanoi" என்று குறிப்பிடப்படுகிற இடத்தை களனி பகுதி என்று குறிப்பிடுகிறார். இந்த சொல்லானது சமஸ்கிருதத்தில் பூமியைக் குறிக்கிற பூமா (bhma) என்கிற சொல்லும் பழமையைக் குறிக்கிற "சனா" (sana) என்கிற சொல்லும் சேர்ந்து உருவாகியிருக்கலாம் என்றும் அன்றைய களனி இராஜ்ஜியம் தான் அதுவென்றும் குறிப்பிடுகிறார். கௌதம புத்தர் முதற்தடவை இலங்கைக்கு வந்த போது கல்யாணி என்கிற அந்த களனிப் பிரதேசத்துக்கே வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இதையே நிக்கலஸின் ஆய்வுக் கட்டுரையிலும் ஆராயப்பட்டிருக்கிறது.[4]

தொலமி தனது வரைபடங்களில் அந்தந்த பிரதேசங்களில் அன்று அழைக்கப்பட்ட பெயர்களாக தான் ஊகித்த பெயர்களை மாத்திரம் அவ்விடங்களுக்கு வழங்கவில்லை. மாறாக அவற்றின் காரணப் பெயர்களாக தான் கருதியதையும் கிரேக்க அர்த்தம் தரத்தக்க பெயர்களையும் இட்டிருக்கிறார். அவர் "Dios Zeus"என்று குறிப்பிடுவது கொழும்பைத்தான் என்று கிரேகர் ரீச் மட்டுமன்றி நிக்கலஸ், மெக்கிரிண்டில் (McCrindle) ஆகியோரும் கூட குறிப்பிடுகின்றனர். சீயஸ் (Zeus) என்பது அன்றைய முக்கிய கிரேக்க கடவுளர்களில் ஒருவரின் பெயர். அப்படிப்பட்ட ஒரு பெயரை வைத்ததன் மூலம் அந்த இடத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியிருக்கிறார் என்றே மேற்படி ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர். அன்றைய இராச்சியத்தின் முக்கிய இடமாக அது இருந்திருந்ததாலேயே அந்தப் பெயரை அவர் சூட்டியிருக்கக் கூடும் என்றே இவர்கள் கருதுகிறார்கள்.

தொலமியின் வரைபடம் இலங்கையில் பன்முகப் பார்வையில் ஆராயப்பட்டு வெளிவரவேண்டிய விரிவான ஆய்வுக்கான தேவை இன்றும் இருக்கிறது.

[1]Johan C. Thom, Cosmic Order and Divine PowerPseudoAristotle, On the Cosmos, Mohr Siebeck, T bingen, Germany, 2014

[2]O. A. W. Dilke, The Culmination of Greek Cartography in Ptolemy, in B. Harley, D. Woodward (edS.), The History of Cartography. Volumeone. Cartography in Prehistoric, Ancient and Medieval Europe and the Mediterranean, The University of Chicago Press, Chicago and London

[3]Reisch, Gregor, "The Accuracy of some Mediaeval Maps of the Taprobane Island", (5 March 2018).

[4] Nicholas, C. W.: Historical Topography of Ancient and Medieval Ceylon, Journal of the CeylonBranch of the Royal Asiatic Society, New Series, Vol. VI, Special number, Colombo 1963.

சுகந்தி

குறுக்கெழுத்துப் போட்டி இல. 49

01	02	03		04	05
06		07	08		09
10	11	12	13		14
		15		16	
17	18		19	20	21
	22	23	24		25

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(1) ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து எமது நாட்டுக்குக் கிடைத்த விடுதலை. அதன் 75 ஆவது பவளவிழாவை இலங்கை நேற்றுக் கொண்டாடியது.
(7) இரப்போருக்கு இல்லையென்று கூறாது வாரி வழங்கிய மன்னன் இவன். இந்தியாவின் பறம்பு நாட்டை ஆட்சி செய்த அரசன். (தலைகீழான சொல்)
(11) இரவு நேரத்தில் உங்கள் வீட்டின் சுவர்களை அவதானித்தால் இப்பிராணியைக் கண்டு கொள்வீர்கள். சிறிய பூச்சிகளைப் பிடித்துண்பதற்காக சுவர்களில் நடமாடுவதைக் காணலாம்.
(14) உலகுக்கு இவ்வாறும் ஒத்தபொருள் சொல் உள்ளது. பெயராகவும் வினையாகவும் வருகின்ற சொல் இது. பெயராக வரும் போது உலகம் என்ற அர்த்தமும், வினையாக வரும் போது 'காண்' என்ற அர்த்தமும் தரும் சொல்.
(17) சினிமா, நாடகம், நாவல் போன்றவற்றின் கருப்பொருள் இது. உங்களைப் போன்ற சிறார்களுக்கு இதனைக் கேட்பது பிடிக்கும். (தலைகீழான சொல்)
(19) கறி சமைப்பதற்குப் பயன்படுகின்ற இலைகளை பொதுவாக இப்பெயரால் குறிப்பிடலாம்.
(23) உலகின் பிரதான சக்திமுதல். உலகுக்கு ஒளிச்சக்தியும், வெப்பசக்தியும் தருவது.

மேலிருந்து கீழ்

(1) வெற்றி பெற்றவர்களுக்கு மகிழ்வான அன்பளிப்பாக வழங்கப்படுவது. (தலைகீழான சொல்)
(2) கடிதம் என்பதை இவ்வாறும் குறிப்பிடுவதுண்டு.
(4) நாம் வாழும் பூமியின் உபகோள். (தலைகீழான சொல்)
(6) அகங்காரம், ஆணவம் என்றெல்லாம் கூறக்கூடிய மற்றொரு சொல். (தலைகீழான சொல்)
(13) பாலூட்டி வகை பிராணி. உலகெங்கும் பெருந்தொகை தானியங்களை தின்று தீர்க்கும் பிராணி. இரவு நேரத்தில் சமையலறைக்குள் பிரவேசித்து உணவுப்பொருட்களை உண்டுவிட்டுச் செல்லும். (தலைகீழான சொல்)
(14) வீதி என்ற பொருள் தருகின்ற சொல்.
(19) பாம்புக்கு எதிரியான பிராணி.
(21) தந்திரமான சுபாவம் கொண்ட காட்டு மிருகம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 48

விடைகள்

இடமிருந்து வலம்

01. மயில் 04. கனி 07. சதி 10. மஞ்சள்
17. மழை 19. காகம் 22. வாத்து

மேலிருந்து கீழ்

01. மகள் 03. ஊஞ்சள் 05. அவனி 08. மதி
16. கசை 18. வாழை 19. காது 21. நாம்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 47

பாராட்டு பெறுவோர்

1. எஸ்.எப். சிம்லா
தரம் 04, ப/ கென்கல்ல முஸ்லிம் மகா வித்தியாலயம்,
இல. 326/1, பலகொல்ல, கென்கல்ல.

2. அப்லல் அஹமத்
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

3. ஏ.என். உல்பா மர்யம்
தரம் 04D, வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை,
இல. 35/1, சமகி மாவத்தை, வெலிகம.

4. உ. வய்ஸ்ணவ்
தரம் 03, கமு/கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை,
இல. 127K, புதிய சோமநாதர் வீதி, பாண்டிருப்பு.

5. தி. சயந்தவி
தரம் 05, மட்/ வின்சன் ம.உ.பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

6. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்
தரம் 11B, மேமா/மது/ ரஹ்மானிய்யா ம.வி.தே.பா,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

7. எம். அகாஸ் அகமட்,
தரம் 05, அஸ் - ஸபா வித்தியாலயம்,
நிந்தவூர்.

8. எம்.எம்.சஹ்றீஸ்
தரம் 04, அல் மதீனா வித்தியாலயம்,
இல. 76/C/1, அல் ஹம்றா வீதி, மருதமுனை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 49
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.
தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

குறளமுதம் :

பழைமை: பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை

தெளிவுரை :
பழகியவர் உரிமைப்பற்றிச் செய்யும் செயலைத் தாம் செய்தது போலவேக் கருதி உடன்படாவிட்டால் அவரோடு தாம் பழகிய நட்பு என்ன பயன் தரும்.

கடவுள் கற்றுத் தந்த பாடம்

முத்து மலையடிவாரத்திலுள்ள கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அவர் இறை பக்தியுடையவர். மலையடிவாரத்திலுள்ள மரங்களை வெட்டி நன்றாக சம்பாதித்து வந்தார். கையில் நிறைய பணம் உள்ளது. ஒரு நாள் மரங்களையெல்லாம் வெட்டி விட்டு தனது மதிய நேர உணவை ஆற்றோரமாக இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது அவர், முன்னங்கால்கள் இல்லாத ஒரு குள்ள நரியைப் பார்த்தார். முத்து மிகவும் பரிதாபப்பட்டார். இரண்டு கால்கள் தான் அந்த குள்ள நரிக்கு உள்ளது. அது எப்படி வேட்டையாடி சாப்பிடும் என எண்ணி வருந்தினார். அப்போது அங்கே ஒரு புலி உறுமும் சத்தம் கேட்டது. அந்த சத்தத்தை கேட்ட முத்து பயந்து மரத்தின் மேல் ஏறி ஒழிந்து கொண்டார். புலியை உன்னிப்பாக கவனித்தார். புலி ஒரு மானைப் பிடித்து வந்து சாப்பிட்டுவிட்டு மிகுதியை அப்படியே வைத்து விட்டுச் சென்றது. அதனை கண்ட குள்ளநரி மெதுவாக தவழ்ந்து சென்று புலி மிச்சம் வைத்து சென்ற மானை புசிக்க ஆரம்பித்தது. மரத்திலிருந்த முத்து சந்தோசப்பட்டார். இறைவன் என்னதான் குள்ள நரியை காலில்லாமல் படைத்தாலும் அதற்கு சாப்பாட்டை ஏற்படுத்திக் கொடுத்தாரே என்று நினைத்து சந்தோசப்பட்டார்.

அவர் உடனே குள்ள நரிக்கே இறைவன் சாப்பாட்டை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார், அப்படியென்றால் எனக்கு மிகுந்த இறை நம்பிக்கை உள்ளதால் எனக்கும் அவ்வாறே உணவளிப்பான் என்று எண்ணினார். நாம் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்று நினைத்தார். வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே தங்கினார். இறைவனைத் தொழுது விட்டு வீட்டு வாசலிலேயே இருந்தார். நாள் போகப் போக அவர் இளைத்துப் போனார். சில பேர் அவருக்கு சாப்பாடும் எடுத்து வந்து கொடுத்தார்கள். சில நாள் கழித்து முத்து சலித்துக் கொண்டு ஏன் என்னை கடவுள் கண்டு கொள்ளவே இல்லை என வேதனைப்பட்டார்.

வெறி பிடித்து இறைவனைத் தொழுது காலில்லாத நரிக்கு கூட சாப்பாடு போட்டாய். ஏன் என்னை கண்டு கொள்ளாமலேயே இருக்கிறாய் என்று இறைவனிடம் மன்றாடினார். மிகவும் மன்றாடி அழைத்ததால் கடவுள் உடனே காட்சி தந்தார். முத்து அவரிடம் கேட்டான், "ஏன் கடவுளே காலில்லாத நரிக்கு கூட உணவு வழங்குறீங்க, நீங்கள் படைத்த எல்லாவற்றுக்கும் உணவளிப்பீர்கள் என்று நம்பி தானே நான் இப்படி இருந்தேன்" கடவுள் பதிலளிக்கிறார், "ஆம் நான் எல்லோருக்கும் தகவல் கொடுத்துக் கொண்டே இருக்கிறேன். உனக்கும் தகவல் கொடுத்தேன். ஆனால் நீ புலியைப் பார்த்து கற்றுக் கொள்ளாமல் நரியைப் பார்த்து வாழப் பார்க்கிறாய். புலியோ சாப்பிட்டு விட்டு மிகுதியை தேவையானவர்களுக்கு கொடுத்தது. எனவே அதைப் பார்த்து கற்றுக் கொள் என்றார்."

இக்கதையை எடுத்துப் பார்த்தால் நம் வாழ்வில் பல குள்ள நரிகளையும் பல புலிகளையும் பார்க்கின்றோம். இதில் நாம் நரியைப் பார்த்து கற்கின்றோமா புலியைப் பார்த்து கற்கின்றோமா என்பது நம் கையில் தான் உள்ளது.

எம்.என். அயான் அஹமட்,
தரம் 9, ஸாஹிராக் கல்லூரி, கொழும்பு

Money Plant

money plant வளர்த்தால் செல்வம் தரும் என்பார்கள். உண்மையில் இது ஒரு சக்திவாய்ந்த காற்று சுத்திகரிப்பு தாவரமாகும். 24 மணி நேரமும் ஒக்சிஜன் தரும். நல்ல காற்றுக்கு உத்தரவாதம் ஒரு தாவரம்.

குரங்கு பொம்மைகள்

மகாத்மா காந்தியிடம் மூன்று குரங்கு பொம்மைகள் இருந்தன. அதை ஒரு படிப்பினைக்காக வைத்திருந்தார்.

அதில், முதல் குரங்கு இரு கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டிருக்கும். இரண்டாவது குரங்கு காதுகளை இறுக மூடிக் கொண்டிருக்கும். மூன்றாவது குரங்கு இரு கைகளால் வாயை மூடிக் கொண்டிருக்கும்.

இதற்கு, 'கெட்ட விஷயங்களை பார்க்காதே', 'கெட்ட விஷயங்களை கேட்காதே', 'கெட்ட விஷயங்களை பேசாதே' என்று மூன்று படிப்பினைகளைக் கூறுவதாக கற்பிக்கப்படுகின்றன.

இம் மூன்று குரங்குகள் ஜப்பான் நாட்டில் 'நிக்கோ' என்ற நகரத்திலுள்ள புத்தர் கோவில் ஒன்றில் வரையப்பட்டுள்ள உலகப் பிரசித்திப் பெற்ற சித்திரங்களில் ஒன்று. இதுவே நாளடைவில் பொம்மை வடிவில் செய்யப்பட்டு விற்கப்படுகின்றது.

இந்தச் சித்திரத்தைத் தீட்டியவர், ஹிதாரி ஜிஸ்கோ ஆவார். 'ஹிதாரி' என்றால், ஜப்பான் மொழியில் 'இடது கைகாரர்' என்று பொருள். இந்தச் சித்திரக்காரர் இடது கைப் பழக்கம் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. மிஜாரு, கிகஜாரு, இவஜாரு என்று ஜப்பானிய பெயர் கொண்ட இக் குரங்குச் சித்திரம் 800 ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டதாகும்.

சாரணா கையூம்...

இவ்வார மழலை

ஏ.பி.ஏ. ரிஷான்
தரம் 07, அமனா சர்வதேச பாடசாலை, மல்லவபிடிய

ஏ.பி.எப். ரிம்ஷா
தரம் 07, அமனா சர்வதேச பாடசாலை, மல்லவபிடிய

ஆர். அஷ்வினி ரொமேஷா
தரம் 10, நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை.

வாரம் ஒரு பெரியார்

முகம்மது காசிம் சித்தி லெப்பை

நவீன உரைநடை இலக்கியத்தின் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவரும் இலங்கை முஸ்லிம்களுக்கு கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்தியவருமான முகம்மது காசிம் சித்தி லெப்பை (Muhammad Cassim Siddi Lebbe) பிறந்த தினம் ஜூன் 11.

முகம்மது காசிம் சித்தி லெப்பை 1838ஆம் ஆண்டு கண்டியில் பிறந்தவர். பிரபல அரேபிய வணிக சமூகத்தின் வழித்தோன்றல். இவரது தந்தை அந்நாட்டின் முதல் முஸ்லிம் வழக்கறிஞர். திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் மதக் கல்வி பெற்றதோடு, தமிழ் மொழியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார்.

ஆங்கில மொழியையும் கற்றுத் தேர்ந்தார். அரபு, தமிழ், ஆங்கில மொழிகளில் நிபுணத்துவம் பெற்றிருந்த இவர், தந்தையைப் போலவே சட்டமும் பயின்றார். கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் 1862ல் வழக்கறிஞராக நியமனம் பெற்ற இவர், 1864ல் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர்ந்தார். கண்டி மாநகர சபை நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் கடமையாற்றிய இவர், சிறிது காலம் மாநகர உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் விரும்பியிருந்தால், கண்டியின் மிகப் பெரிய செல்வந்தர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்க முடியும். தன் சமுதாயத்தின் மீதான பற்றினால், சட்டத் தொழிலையும், கண்டி மாநகர சபை உறுப்பினர் பதவியையும் துறந்தார்.

தனது செல்வத்தின் பெரும்பகுதியை தன் இலட்சியங்களுக்காவும் சமூக முன்னேற்றத்துக்காகவும் செலவிட்டார். இஸ்லாமியர்கள் கல்வியில் முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த, 1882ல் முஸ்லிம் நேசன் என்ற பெயரில் அரபுதமிழ் வார இதழைத் தொடங்கினார்.

இதன் மூலம் முதல் முஸ்லிம் பத்திரிகையாளர் என்ற பெருமை பெற்றார். தத்துவம், அறிவியல் சம்பந்தமான கட்டுரைகள், தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள், வியாபாரம், விவசாயம், வாணிபம், குடியுரிமை முதலானவை குறித்த அறிக்கைகள் இதில் இடம்பெற்றன.

பாடசாலைகளை நிறுவியும், பாட நூல்களை எழுதியும் இலங்கை முஸ்லிம்களிடையே குறிப்பாக, கல்வித் துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்த அரும்பாடுபட்டவர். கண்டியிலும் குருநாகலையிலும் இவர் தொடங்கிய பாடசாலைகள் நவீன கல்வியின் ஆரம்பக் கல்விக்கூடங்களாக அமைந்தன.

பெண்கல்விக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர். இவரது கல்விக் கூடங்களில் இஸ்லாமியப் பெண்களும் கல்வி பயின்றனர். பெண் தலைமை ஆசிரியர்களும் பதவி வகித்தனர். 1884 இல் கொழும்பில் இவர் தொடங்கிய முதலாவது ஆங்கில முகமதிய பாடசாலைதான் பின்னாளில் கொழும்பு சாஹிரா கல்லூரியாக தழைத்தோங்கியது.

நவீன உரைநடை இலக்கியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவராக கருதப்பட்டார். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய அசன்பே சரித்திரம் என்ற நூல் தமிழில் வெளிவந்த இரண்டாவது புதினம் (இதுவே முதல் புதினம் என்றும் கூறப்படுகிறது), ஈழத்தில் வெளிவந்த முதல் தமிழ்ப் புதினமும் இதுதான்.

இலங்கை சட்ட நிர்ணய சபையில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் இருத்தல் அவசியம் என்பதை இடையறாது வலியுறுத்தி வந்தார். இஸ்லாமிய சமுதாயத்தினரின் கல்விக்கு உயிர்கொடுத்து, அவர்களை அரசியல், சமூக, பொருளாதார, கலாசார துறைகளிலும் முன்னேறச் செய்தார்.

சமூக சீர்திருத்தவாதி, பதிப்பாளர், தொலைநோக்கு சிற்பி, மறுமலர்ச்சித் தந்தை என்றெல்லாம் போற்றப்படுபவரும் முஸ்லிம் சமுதாயத் தலைவருமான மு.கா. சித்தி லெப்பை 1898ம் ஆண்டில் 60வது வயதில் காலமானார்.

மஞ்சரி விளையாட்டு

தேர்வுக் குழுவை தேர்வு செய்வது எப்படி?

இலங்கை கிரிக்கெட் அணிக்கு வீரர்களை தேர்வு செய்வது எப்படிப்போனாலும், அந்த வீரர்களை தேர்வு செய்யும் தேர்வுக் குழுவை தேர்வு செய்வது இன்றைய திகதியில் பெரும் பிரச்சினையாக மாறியிருக்கிறது.

இலங்கை கிரிக்கெட் சபை தேர்வுக் குழுவுக்கான பெயர்களை விளையாட்டுத் துறை அமைச்சுக்கு பரிந்துரைக்க, விளையாட்டுத் துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கும் தேசிய தேர்வுக் குழுவுக்கு அந்தப் பெயர்கள் பிடிக்கவில்லை என்பதுதான் இன்றிருக்கும் பெரிய பிரச்சினை.

தேர்வுக் குழுவுக்கு நியமிப்பதற்கு அனுபவம், அறிவு பெற்ற பலர் இருப்பதாகவும், எனவே மேலும் பெயர்களை பரிந்துரைக்க வேண்டும் என்பதுவே ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான தேசிய தேர்வுக் குழுவின் தர்க்கம். ஆனால் தேடிப் பார்த்ததில் பொருத்தமாக இந்தப் பெயர்கள் மாத்திரம்தான் கிடைத்தன என்று இலங்கை கிரிக்கெட் சபை கூறுகிறது.

ஆனால் தேர்வுக் குழுவுக்காக பரிந்துரைத்திருக்கும் 10 பெயர்களில் புதிதாகவும் பெரிதாகவும் எதுவும் இல்லை. ஏற்கனவே தேர்வுக் குழுவில் இருக்கும் அதன் தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க, ஹேமன்த விக்ரமரத்ன மற்றும் ரொமேஷ் கஜு விதாரன ஆகியோரின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலில் இருப்பது முதல் பிரச்சினை.

தற்போதைய தேர்வுக்குழு மீது கிரிக்கெட் சபை தவிர்த்து ஏனைய தரப்புகளுக்கு அதிருப்தி இருப்பது வெளிப்படையாகத் தெரியும் ஒன்று. கடந்த காலங்களில் அணித் தேர்வு பற்றி கடுமையான விமர்சனங்கள் எழுப்பப்பட்டதோடு, கிரிக்கெட் தேர்வுக்குழு தேர்வு செய்த அணிக்கு விளையாட்டு அமைச்சு ஒப்புதல் அளிக்காத வரலாறு கூட அண்மையில் இடம் பெற்றது.

குறிப்பாக அர்ஜுன ரணதுங்க தலைமையிலான தேசிய விளையாட்டு சபை கிரிக்கெட்டில் சீர்திருத்தங்களை கொண்டுவர நினைக்கும் தருணத்தில் தேர்வுக் குழுவில் இருந்து அதனை ஆரம்பிக்க நினைப்பது தெளிவாகத் தெரிகிறது.

தற்போதைய தேர்வுக் குழுவில் மேற்கூறிய மூவர் தவிர வருன வராகொட, உவைஸ் கர்னைன், திலகா நில்மினி குணரத்ன இடம்பெற்றிருக்கிறார்கள். இந்தத் தேர்வுக் குழு 2021 ஏப்ரல் 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. அதாவது இன்றாகும்போது இந்தத் தேர்வுக் குழுவுக்கு வயது கிட்டத்தட்ட 21 மாதம்.

ஏற்கனவே இலங்கை அணி பலவீனப்பட்டிருக்கும் நேரத்தில் இந்தத் தேர்வுக் குழுவின் தேர்வுகள் அணியை பலப்படுத்துவதாக இருந்ததா? அல்லது இன்னும் பலவீனப்படுத்தியதா? என்பதுதான் பெரிய கேள்வி.

தரவுகளைப் பார்க்கும்போது, புதிய தேர்வுக்குழு நியமிக்கப்பட்ட பின் இலங்கை அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 போட்டிகள் என மொத்தமாக 83 போட்டிகளில் ஆடி, 43இல் தோற்றிருக்கிறது. 35 போட்டிகளிலேயே வென்றிருக்கிறது.

இந்தக் காலப்பகுதியில் தேர்வுக் குழுவால் இலங்கை அணிக்கு புதிதாகத் தேர்வு செய்த வீரர்களின் எண்ணிக்கை 32. ஒருநாள் போட்டிகளில் 12 வீரர்கள் புதிதாக தேர்வு செய்யப்பட்டிருப்பதோடு அதுவே டெஸ்டில் 7 மற்றும் டி20 இல் 13 வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகம் பெற்றிருக்கிறார்கள்.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரை இந்தக் காலத்தில் மொத்தமாக 25 வீரர்கள் தேசிய அணிக்காக விளையாடி இருக்கிறார்கள். 12 போட்டிகளில் ஆடிய இலங்கை அணி 6 வெற்றிகளை பெற்று 4 தோல்விகளை சந்தித்திருக்கிறது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அணி சற்று ஸ்திரமாக இருந்தாலும் ஒருநாள் போட்டிகளில் இன்னும் குழப்பம் நீடிக்கிறது. ஒருநாள் போட்டிகளில் கடந்த 21 மாதங்களில் மொத்தம் 37 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தக் காலப் பகுதியில் இலங்கை அணி 26 ஒருநாள் போட்டிகளில் ஆடி 10 வெற்றிகளை பெற்றபோதும் 14 போட்டிகளில் தோல்வியை சந்தித்தது.

மறுபக்கம் டி20 போட்டிகளுக்கு இந்தத் தேர்வுக் குழுவால் மொத்தம் 38 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் காலத்தில் இலங்கை அணி மொத்தமாக ஆடிய 45 டி20 போட்டிகளில் 19இல் வென்றபோதும் தோல்வி என்பது அதிகம். அதாவது 25 ஆட்டங்களில் தோல்வி உரித்தானது.

எனவே பிரமோத்ய விக்ரமசிங்கவினது தேர்வுக் குழுவின் காலம் என்பது குறிப்பிடும்படியான காலம் என்று கூறிவிட முடியாது. அண்மையில் இலங்கை அணி ஆசிய கிண்ணத்தை வென்றபோதும் அதனை ஒரு சாக்காகக் கூறிவிட முடியாது.

இலங்கை அணிக்கு பத்தும் நிசங்க, சரித் அசலங்க போன்ற நல்ல வீரர்கள் தேர்வு செய்யப்பட்டபோதும் இன்னும் அணி ஸ்திரமாக இல்லை. குறிப்பாக ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி இன்னும் சராசரி மட்டத்தைக் கூட எட்டி இருப்பதாகத் தெரியவில்லை.

அதுவும் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு இன்னும் எட்டு மாதங்கள் அளவு தான் இருக்கிறது. இந்த நிலைமையில் ஒருநாள் அணி எப்படி இருக்க வேண்டும் என்ற கட்டமைப்புக் கூட இன்னும் போடப்படவில்லை. வெறுமனே டி20 ஆடிய வீரர்களை வைத்து ஒருநாள் ஆட முடியும் என்ற நினைப்பு சரிப்பட்டு வராது என்பது அண்மையில் இந்தியா சென்ற இலங்கை அணி கற்றிருக்கும் பாடம்.

குறிப்பாக அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் போன்ற அனுபவ வீரர்களை தேர்வுக் குழு திரும்பியும் பார்க்காதபோது ஒருநாள் அணியின் மத்திய வரிசை துடுப்பாட்டம் பலவீனப்பட்டிருப்பது இந்தியாவில் அப்பட்டமாகத் தெரிந்தது.

குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தனவின் ஓய்வுக்குப் பின்னர் இலங்கையின் ஸ்திரமான அணி ஒன்றை உருவாக்குவதற்கான நிலைமாற்றுக் காலம் ஒன்று ஏற்பட்டபோது இலங்கை அணியை அழைத்துச் செல்வதற்கு அஞ்சலோ, சந்திமால் ஆகியோர் தான் இருந்தார்கள்.

அவர்கள் அடுத்தடுத்து சோபிக்காத நிலையில் இளம் வீரர்களை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் இலங்கை தேர்வுக் குழுவுக்கு ஏற்பட்டது உண்மைதான், அதற்காக எல்லா நாட்களிலும் இளம் வீரர்களை தேர்வு செய்து கொண்டிருக்க முடியாது. அனுபவ வீரர்களுக்கான இடைவெளியும் அணியில் உள்ளது. டி20 கிரிக்கெட்டில் இந்தக் கோட்பாட்டை புறக்கணிக்க முடியும் என்றாலும் ஒருநாள் கிரிக்கெட்டின் சூத்திரமே இது தான்.

இலங்கையில் ஒருநாள் அணி ஒன்றுக்கான திறமையான பதினொரு வீரர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனால் அந்த வீரர்களை சரியான புள்ளியில் தேர்வு செய்து ஓர் அணியாக உருவாக்குவது தான் தேர்வுக் குழுவின் வேலை.

அதிலும் இப்போது ஒருநாள் கிரிக்கெட்டில் முழுக்க அவதானம் செலுத்த வேண்டிய நிலையில், இலங்கை அதற்கான அணியை ஆரம்பத்தில் இருந்து தொடங்க வேண்டிய சிக்கலில் இருக்கிறது. இத்தனைக்கும் இலங்கை அண்டை நாடான இந்தியாவில் நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு இன்னும் நேரடித் தகுதி கூட பெறவில்லை.

இப்போது இலங்கை வந்திருக்கும் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான உத்தியோகபூர்வமற்ற மூன்று ஒருநாள் போட்டிகளுக்காக இலங்கை ஏ அணிக்கு மேலதிக வீரர்களாக அஞ்சலோ மத்தியுஸ் மற்றும் குசல் ஜனித் பெரேரா ஆகியோர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கான அணித் தேர்வுக்காகவே இந்த மேலதிக வீரர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மத்தியூஸ் அண்மைக் காலமாக கழகப் போட்டிகளில் சோபித்து வருவதோடு, குசல் பெரேரா உபாதையால் ஓர் ஆண்டுக்கு மேல் ஒதுங்கி இருந்த நிலையில் மீண்டும் களமிறங்கவிருக்கிறார்.

தவிர காயத்தில் இருந்து மீண்டிருக்கும் துஷ்மந்த சமீரவும் இந்த அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். இதனை பார்க்கும்போது தேசிய தேர்வுக் குழு அனுபவ வீரர்கள் பக்கம் திரும்பி இருப்பதாகத் தெரிகிறது.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அங்கு மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவிருக்கிறது. உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதியை முழுமையாக உறுதி செய்ய நியூசிலாந்தை சொந்த மண்ணில் வீழ்த்தி தொடரை வெல்ல வேண்டும் என்பதோடு மூன்று போட்டிகளையும் வென்றால் தான் பிரச்சினை இன்றி இந்தியா போக முடியும்.

இல்லாவிட்டால் வரும் ஜூன், ஜூலையில் சிம்பாப்வேயில் நடைபெறும் தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டி ஏற்படும். இது கயிற்றின் மேல் சாகசமாகப் போகலாம். சின்னத் தவறு கூட உலகக் கிண்ணத்தை இழக்கக் கூடியதாக அமையும்.

இப்படியான நிலைமையிலேயே தேர்வுக் குழுவை வைத்து சாகசம் நடக்கிறது. தேர்வுக் குழுவில் முழுமையாக மாற்றங்களை செய்வதற்கே தேசிய தேர்வுக் குழு எதிர்பார்ப்பது அதன் நகர்வுகளில் தெரிகிறது.

பொதுவாக இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவின் நியமனம் என்பது இலங்கை கிரிக்கெட் சபைக்கு பொறுப்பானது. முதலில் தேர்வுக் குழுவுக்கு பொருத்தமான பத்துப் பேரை தேர்வு செய்து அதற்கு இலங்கை கிரிக்கெட் சபை நிறைவேற்றுக் குழுவின் ஒப்புதலைப் பெற்று பின்னார் விளையாட்டு அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். விளையாட்டு அமைச்சு அதில் இருந்து ஐந்து தொடக்கம் ஏழு பேரைத் தேர்வு செய்யும்.

அதாவது விளையாட்டு அமைச்சின் அதிகாரம் என்பது பத்தில் ஐந்து அளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது. ஆனால் இப்போது இந்த அதிகாரத்தை விஞ்சி தேர்வுக் குழுவுக்கு இன்னும் பெயர்கள் தேவை என்கிறது தேசிய தேர்வுக் குழு.

இந்த விவகாரத்தில் இலங்கை கிரிக்கெட் சபையை விஞ்சி செயற்படும் அளவும் தேசிய தேர்வுக் குழு முடிவுகளை எடுத்து வருகிறது. அதாவது விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, தேசிய விளையாட்டு சபை மற்றும் தேசிய தேர்வுக் குழு அண்மையில் கூடியபோது மாற்றுத் தீர்வு ஒன்று எட்டப்பட்டது.

அதாவது கிரிக்கெட் தேர்வுக் குழுவுக்கு அங்கத்தவர்களை தேர்வு செய்ய பத்திரிகையில் விளம்பரம் செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இதற்கு விண்ணப்பிக்க முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் தகுதியானவர்கள். இதன்மூலம் தேர்வுக் குழுவுக்கான தேர்வில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்த முடியும்.

ஆனால், இது ஒரு வகையில் ஆபத்தான விளையாட்டும் கூட. அடிப்படையில் என்ன செய்வதாக இருந்தாலும் கிரிக்கெட் சபையுடன் ஒத்துப்போவது நல்லது. கிரிக்கெட் நிர்வாகத்துக்கு அப்பால் தன்னிச்சையாக செயற்பட முடியாது. என்ன சீர்திருத்தங்கள் செய்தாலும், சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறது.

ஏற்கனவே, வெளித் தலையீடுகள் இருப்பதாகக் கூறி இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் தடை விதித்திருக்கும் நிலையில் அவ்வாறான ஒரு நிலைமை கிரிக்கெட்டுக்கு ஏற்பட்டால், அதன் தாக்கம் கால்பந்தை விடவும் அதிகமாக இருக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...✍

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2023 பெப்ரவரி 5 ஞாயிற்றுக்கிழமை

Divya Sinniah

Directress Of Lasya Kalabhvanam School of Bharathanatyam

யார் இந்த Xavier?

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

Xavier
Open your helmet you will see.

சமூக தளத்தில் தடித்த மீசையுடன் Xavier என்ற பெயரில் ஒருவர் ஒரு வரியில் நகைச்சுவையாக கருத்துச் சொல்வதை தவறியேனும் ஒரு தடவையேனும் பார்த்திருப்பீர்கள். நகைச்சுவைக்காக அந்தத் தருணத்தில் சிரித்துவிட்டுப் போனாலும், இந்த மர்ம மனிதன் உலகெங்கும் பிரபலமானவர்.

“ஆணும் பெண்ணும் சிறந்த நண்பர்களாக இருக்க முடியுமா?” என்று ஒருவர் பேஸ்புக்கில் ஒரு சீரியஸான கேள்வியை கேட்டதற்கு, சேவியர் அளித்த பதில், “ஆம் அதில் ஒருவர் அசிங்கமானவராக இருக்க வேண்டும்.”

சேவியரின் பதில்கள், கருத்துகள் எல்லாம் இப்படித் தான் இருக்கும். ஆனால் யார் இந்த சேவியர் என்பது யாருக்கும் முழுமையாகத் தெரியாது.

“நான் சேவியர். ஒரு பெட்ரோல் நிரப்பு நிலையத்தில் பணிபுரிகிறேன்... என்ன? எந்த ஊரில்? மன்னிக்க வேண்டும். அந்த பெட்ரோல் நிரப்பு நிலையம் எங்கிருக்கிறது என்பது எனக்கும் தெரியாது. ஆனால் நிச்சயமாக இங்கு எங்கேயோதான் இருக்கிறது. ஆம்... துரதிர்ஷ்டவசமாக எனக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனக்கு நிறைய தோழிகள் இருப்பதாக எனது மனைவி கூறுகிறார். நிச்சயம் இல்லையென்று எனக்குத் தெரிந்தாலும், இந்த உலகில் மனைவியருக்குத் தெரியாதது தான் எதுவுமே இல்லையே..!” என்று சமூகதளத்தில் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்துகிறார் சேவியர்.

சேவியர் ஓர் இந்தியர் என்பது உறுதி. அவர் வெளிநாட்டில் வாழ்கிறார். ட்விட்டரில் பகாலு பபிடோ என்ற கணக்கில் கருத்துகளை பதிவிடுகிறார். தனது கணக்கில் 5000 பலோவர்களை சேர்ப்பதாக நண்பர்களுடன் பந்தயம் கட்டி, தனது நகைச்சுவையால் அதில் வெற்றி பெற்றதாக அவர் கூறுகிறார். அவரது ட்விட்டர் கணக்கை 800 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பின்தொடர்கிறார்கள்.

“சில வருடங்களுக்கு முன், எனது நண்பர்கள் ஒரே வருடத்தில் ட்விட்டரில் ஐயாயிரம் பாலோவர்களுக்கு மேல் வந்தால் பத்தாயிரம் டொலர்கள் பரிசளிப்பதாக விளையாட்டாக என்னிடம் பந்தயம் கட்டினார்கள். அப்படி வென்ற பணத்தில் ஒரு ஒட்டகத்தையும், ஒரு பெட்ரோல் நிரப்பு நிலையத்தையும் வாங்கினேன்” என்கிற அவரது ட்வீட் உண்மையா பொய்யா என்று யாருக்கும் தெரியாது.

ட்விட்டரில் பகாலு பபிடோ என்ற கணக்கில் வரும் அதே புகைப்படம் பேஸ்புக்கில் சேவியர் என்ற கணக்கில் வருகிறது. அதே பாணியில் நகைச்சுவை செய்வதும் ஒரு நொடியில் சிரிக்க வைக்கும் திறனையும் பார்க்கும்போது இந்த இரு கணக்கும் ஒருவருடையது என்பது போல் தெரிகிறது.

“நீங்கள் எப்படி இறக்க விரும்புகிறீர்கள்?” என்ற கேள்விக்கு, “தனியே இல்லை. அதனால்தான் நான் விமான ஓட்டியாவதற்கு பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன்” என்று பதிலளித்திருக்கிறார் சேவியர்.

“இந்த லொக்டௌன் காரணமாக திருமணம் தடைபட்டவர்கள் அனைவருக்கும்... நீங்கள் தப்பிக்க கடவுள் உங்களுக்கு இன்னொரு வாய்ப்பைத் தந்துள்ளார்.. இப்போதாவது கொஞ்சம் யோசியுங்கள்..!”.

“ஒரு தனி எறும்பு 29 வருடங்கள் வரை வாழக்கூடும்..! அப்படியென்றால் திருமணமான எறும்பு..?”

பகாலு பபிடோ என்ற அட்மிக் 2013 செப்டெம்பரில் பேஸ்புக்கில் கணக்கை ஆரம்பித்திருக்கிறார். என்றாலும், அவரது பேஸ்புக் கணக்கில் அவர் ட்விட்டரில் கூறியவையே பதிவிடப்பட்டிருக்கிறது. அவரது பேஸ்புக் கணக்கு கிட்டத்தட்ட 500 லைக்குகளை பெற்றிருக்கிறது.

என்றாலும் 2018 இல் பகாலு பபிடோவின் ட்விட்டர் கணக்கு நிறுத்தப்பட்டிருப்பதோடு அவரது பேஸ்புக் பக்கமும் நீக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அதற்கான காரணம் தெரியவில்லை.

அதனை ஒத்ததாக பகாலு பபிடவ் என்ற பெயரில் மற்றொரு ட்விட்டர் கணக்கு திறக்கப்பட்டது. அதுவும் முந்தையது அளவுக்கு பிரபலம் பெற்றது. பெரும்பாலும் சிலேடை பணியிலான நகைச்சுவைகள் தான் அதில் வரும். என்றாலும் முந்தைய கணக்கு மற்றும் தற்போதைய கணக்கு இரண்டும் ஒருவருடையதா என்பதை முழுமையாக உறுதி செய்ய முடியாதிருக்கிறது.

அவரது கமென்ட்கள் ஸ்க்ரீன் ஷொட்களாகி, அதே ட்விட்டர், பேஸ்புக்கில் என சுற்ற ஆரம்பித்து, பிற்பாடு மீம்ஸ் க்ரியேட்டர்களுக்கு கன்டென்ட் ஆகின.

சேவியரைப் போலவே, ‘Few minutes later’ என்று நடனமாடியபடி சவப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வரும் டேவிட் என்ற மீம்ஸ் கிரியேட்டரும் பிரபலமடைய, சேவியர் எதிர் டேவிட் பக்கங்களும் ஆரம்பிக்கப்பட்டு, ஒருவரை ஒருவர் கேலி செய்யும் மீம்களும் அண்மைக் காலமாக வலம்வர ஆரம்பித்துள்ளன.

டேவிட்: நண்பனே, பரீட்சை எப்படி?

சேவியர்: கடினமாக இருந்தது, பதில் எழுதாமல் வெற்றுக் காகிதத்தை கொடுத்துவிட்டேன்.

டேவிட்: எனக்கும் கடிமாக இருந்தது, நானும் வெற்றுக் காகிதத்தை கொடுத்துவிட்டேன்.

சேவியர்: அடக்கடவுளே! ஆசிரியர் நாம் இருவரும் பரீட்சை மோசடியில் ஈடுபட்டதாக நினைக்கப் போகிறார்.

சேவியார் என்ற பெயரும் அந்த தடித்த மீசை மனிதனும் இப்போது சமூக ஊடகத்தில் மீம் அடையாளமாக மாறியிருக்கிறார். இந்த பெயரில் வரும் அனைத்து கமன்ட்களும் உண்மையான சேவியர் உடையது என்று நம்பிவிட முடியாது. என்றாலும் நகைச்சுவை நன்றாக இருந்தால் சிரித்துவிட்டுப் போக வேண்டியதுதான்.

Xavier
Because you are drinking shampoo.

பெண்ணே.....! நீயே உன் சக்தி

பெண்ணே நீயே உன் சக்தி பெண்ணே பார்ப்பவர் போர்த்த பார்வையில் உன்னை நீ அறியாமலேயே பேதையாய், பெதும்பையாய், மங்கையாய், மடந்தையாய், அரிவையாய், தெரிவையாய் ஈற்றில் பேரிளம் பெண்ணாக உன்னை நீயே பரிணமித்து விடுகிறாய். பெண் மகவாய் பிறந்ததில் இருந்தே மகாலக்ஷ்மியாய்,தேவதையாய், தாயாய், சேயாய், தாரமாய், சகோதரியாய் போற்றுதலும் புகழ்தலும் பெண்ணானவள் விலை மதிப்பில்லா பொக்கிஷம் என்றுருரைத்தலும், இறைவனின் தன்னிகரில்லா படைப்பு என்றது கொடுமை என்னவெனில் ஆண் குழந்தைகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல என்பதே. புரட்சி பெண் என போற்றும் இந்த கூட்டமே, சில நேரங்களில் அவள் உயர்வின் வெற்றியை ஏற்க பெறாமையால் சக வேலை தளங்களிலும் நிறுவனங்களிலும் அவளை எழ விடாமல் வெட்டி வீழ்த்துகிறது. உன்னை மனைவி என்றோ மருமகள் என்றோ பெருமித ஸ்தானம் தரும் கூட்டமே நீ துணையினை இழந்ததும் உடன் கட்டையும் ஏற்றி விட்டிருக்கிறது... சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் நிறம் மாற்றி கொள்ளும் பச்சோந்தி கூட்டமான இந்த சமூகத்தின் போற்றுதல் வார்த்தைகளையோ கேட்டு உன்னை நீ ஏமாற்றி கொள்ளாதே... "யானையின் பலம் அதன் தும்பிக்கையே "அது போல் "பெண்ணே உன் பலம் உன் நம்பிக்கையே", தூற்றுவார் தூற்றட்டும் ஏசுவார் ஏசட்டும் வாழ்தல் உனது உரிமம். உன் பலம், உன் வெற்றி, உன் உணர்வு, உன் அன்பு அனைத்தும் உன்னை சார்ந்தது மற்றவரை ஏற்றி விடும் ஏணியாய் இருப்பதை விட, மலையாக உன்னை வளர்த்து சிகரம் தொட்டு விடு. பெண்ணாக உருவக படுத்தப்படும் ஆதி தெய்வங்களையே, தன் சுபாவங்களால் தன்னை பெருமித படுத்திக்கொள்ள கல்வியா, செல்வமா, வீரமா என்று முரண்பாட்டுக்குள் சிக்க வைத்த உலகம் இது. இறைவியரையே எது பெரிது என்ற குழப்பத்தில் ஆழ்த்த முடிந்தால், பெண்ணே இவற்றின் முன் நீ துச்சம். உன் நிலை தளறி விடாதே, வீரத்தால் நீ சிறந்தவள் எனில் உன்னை நீ நம்பு அந்த வீரம் தான் சிறந்ததானால் அதை எண்ணி ஆடம்பரம் கொள்ளாதே, ரௌத்திரம் பழக வேண்டிய இடத்தில் பழகு. கல்வியில் நீ சிறந்தவளானால் கல்வியால் உன்னை சீர் செய்து கொள் வீண் பெருமிதம் கொள்ளாதே. செல்வத்தால் தான் சிறந்தவள் எனின் உன்னை நீ உதவும் பாங்குடையவள் ஆக்கி கொள் இறுமாப்பு கொள்ளாதே. பெண்ணானவள் இறைவியாகட்டும், அல்லது லௌகீக உலகில் வாழ்பவள் ஆகட்டும், அவள் அவளுக்குரிய தனிப்பட்ட பண்புகள், சுபாவங்களின் அடிப்படையில் தனித்து, சிறந்து விளங்குபவள். உன்னை இன்னொரு பெண்ணோடும் ஒப்பிடாதே, எந்த ஒரு ஆடவரோடும் ஒப்பிடாதே சரி நிகர் பார்க்காதே. பிரபஞ்ச அடிப்படையில் இரண்டும் வேறு வேறே. உனக்கான தனித்துவம் உன்னை சார்ந்ததே. மேலும் ஒன்றை கூடி உறுதி செய்ய வேண்டுகிறேன். நான் குற்றப் பார்வை கொண்டு நோக்கும் இந்த சமூகம் வேற்று உலகத்தாரை அல்ல. நீயும் நானும், ஆணும் பெண்ணும் இணைந்த சமூகமே. இங்கு பெண்ணை பெண்ணும், பெண்ணை ஆணும், ஆணை பெண்ணும் தூற்றுதலும், வீழ்த்துதலும் வீணானது. ஒன்று மட்டும் உறுதி நீ வீழ்ந்தாலும் எழுந்தாலும், மகிழ்ந்தாலும் மனம் வருந்தினாலும், சமூக பார்வைக்குள் சிறை பிடிக்கும் இந்த மனித வர்க்கம் கழுகு போல் உன்னை எதிர்நோக்கி காத்திருக்கும். உன்னை நீ உணர்ந்து, உன் ஆழுமை இதுவென கண்டறிந்து பெருமிதம் இல்லா, ஆர்ப்பாட்டமற்ற, உனக்கான சரியான பாதையை நீயே உருவாக்கியாக வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனி மனித உரிமை, மற்றும் உணர்வுகளின் அடிப்படையில் தனித்தன்மை பெருகின்றனர். ஆக ஒவ்வொரு பெண்ணும் தனித்தனி ஆளுமை உடையவள் அவள் பருவ மாற்றங்களை அவளின் நிகழ் நிலையை உணர வைக்கின்றன. பெண்ணே உனக்கான வெற்றி பாதையை நீயே செதுக்கியாக வேண்டும்.

இந்த போதை வார்த்தைகளில் மயங்க வைத்த சமூகம், உண்மையில் உன்னை யாராய் மதிக்கின்றது. ஒடுக்கப்படும் வர்க்கமாக்கப்படுகிறாயா? இல்லை இவ்வாறான மாய வார்த்தைக்குள் பாதுகாப்பை உணர்கிறாயா உண்மையில் யார் நீ? ஆணும் பெண்ணுமாய் கலந்த இச்சமூகம் பெண்மையை மட்டும் அதிகப்படியாக போற்றுதலுக்குரிய படைப்பாய் வைத்து அங்கீகரிக்கிறதே அது உண்மையில் உனக்கான அங்கீகாரம் தானா அல்லது மான்விழியே...! கயல் விழியே...! கனிமொழியே...! என்றெல்லாம் வார்த்தை ஜால வலைகளுக்குள் விழ வைக்கும் போது தெரிந்தும் தெரியாதது போல் சிக்கி, நீயாக உன்னை பெருமிதமாக எண்ணி ஏமாற்றி கொள்கிறாயோ? அப்படியாயின் இந்த சமூகம் இரு கோணங்களில் மட்டுமே உன்னை சித்தரித்து மகிழ்கிறது. ஒன்று பெண்ணை போற்றி புகழ் பாடி, நீ பாதுகாப்பாய் இருக்கிறாய் என்ற எண்ணப் போர்வைக்குள்ளே கரை காண முடியா கடலுக்குள் நீந்த செய்து விடுகிறது அல்லது ஏதோ... ஆண்களை பகை கொள்கின்ற வர்க்கம் என்றும், ஆண்களை வீழ்த்த வந்த வர்க்கம் என்றும் உன்னை உருமாற்றிய கோணத்தில் சித்தரிக்கின்றது. பெண்ணே! ஒன்றை மட்டும் உணர்ந்து கொள் உன்னை கடவுளுக்கு நிகராய் சித்தரிக்கும் இச்சமூகமே மாதவிலக்கு காலங்களில் சமய சடங்குகளில் விலக்கியும் வைக்கின்றது, தாயென போற்றும் உன்னை ஆத்திரமிகுதியால் தகாத வார்த்தைகளில் தாயின் தன்மையை கொச்சைப்படுத்திகிறது உருவக்கேலியும் செய்கிறது பெண் குழந்தை என்று குலதெய்வமாய் ஏந்தி மகிழும் உலகமே பாலியல் வன்புணர்வு எனும் கொடூர செயலால் பெண் குழந்தைகளின் வாழ்வை சிதைக்கின்றது. பெண்ணை போதை சடமாய் பார்க்கி

தொடுவானம் பாடல் வெளியீடு

ஆரோக்கியமான சமுதாயம் மிகவும் பெருமையுடன் வழங்கும் எங்களுடைய "தொடுவானம்" பாடலானது சக்தி தொலைக்காட்சியில் நடைபெறும் Shakthi chat நிகழ்ச்சியின் மூலமாக பிரத்தியேக வெளீயிடாக வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு நிகழ்வானது, மிக இனிதாக நடைபெற்று முடிந்தது. மேலும் இப் பாடலை நீங்களும் நிச்சயமாக பார்த்து, உங்களுடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் எங்களுடைய பாடலுக்கு தாருங்கள். இவ்வாறு புனுஹா ராஜன் தெரிவித்தார்.

பாடலை முழுமையாக பார்க்க....
https://youtu.be/OXMGT8PS5U
இசை தருமராஜா துவாரகன்
பாடல் வரிகள் மற்றும் ஒருங்கிணைப்பு
சுந்தரராஜன் டினுஷா காயத்திரி
குரல்
★அப்ரா லதீப்
★சிவதாசன் சினேகா
★அறிமுக பாடகர்ஜோசப் பெனடிக்ட் அன்டனி ஜெரிசன்
ஒலிக்கலவை டிலான் பெரேரா(Next Generation Music Studio)
தயாரிப்புஆரோக்கியமான சமுதாயம்(Healthier Society)
ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு லக்ஷ்மனன் கபிலேஷ் (Cinevilla photography)

மட்டக்களப்பில் இடம்பெற்ற 'போடியார்' திரைப்பட இசை வெளியீட்டு விழா!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்) மட்டக்களப்பு

மட்டக்களப்பின் மண்வாசனை வீசும் திரைப்படமாக உருவாகியுள்ள "போடியார்" எனும் திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் (28) இடம்பெற்றது.

விசுவல் ஆர்ட் மூவி நிறுவனத்தின் உரிமையாளர் ப.முரளிதரனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இப்படத்தில் இடம்பெற்ற மூன்று பாடல்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டதுடன், மட்டக்களப்பு கலைஞர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், விசேட அதிதிகளாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பாமரிப்பு விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி தில்லைநாதன் சதாநந்தனும், கௌரவ அதிதிகளாக தமிழ்சங்கத் தலைவர் சைவப்புரவலர் ரஞ்சிதமூர்த்தி, வர்த்தகசங்கத் தலைவர் தேச பந்து முத்துக்குமார் செல்வராசா, பேராசிரியர் ஜே.கென்னடி, உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவகப் பணிப்பாளர் செல்வரெத்தினம் ஜெயபாலன், வவுணதீவு பிரதேச செயலாளர் சுதாகர், குடும்பநல வைத்திய நிபுணர் அருளானந்தம், சிரேஸ்ட விரிவுரையாளர் சதா சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோடீஸ்வரனின் இயக்கத்திலும், AJ சங்கர் ஜனின் இசையமைப்பிலும் உருவாக்கப்பட்டுள்ள இத்திரைப்படத்தை Visual Art Movies நிறுவனத்தின் சார்பில் வைத்திய நிபுணர் அருளானந்தம், சதா சண்முகநாதன், ப.முரளிதரன் ஆகியோர் இணைந்து தயாரித்துள்ளனர்.

விரைவில் இத்திரைப்படம் திரையரங்குகளில் வெளியிடப்படவுள்ளதாகவும், அதற்கு முன்னர் இசைக்கலைஞர்களைக் கௌரவிக்கும் வகையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தயாரிப்பு நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டது. மீன் பாடும் ஊரு, கார் கூந்தல், நாடும் நல்லால ஆகிய மூன்று பாடல்கள் வெளியிடப்பட்டதுடன், 1966 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மட்டக்களப்பின் பிரபலமான பாடலான மீன்மகள் பாடுகிறாள் எனும் பாடலும் உத்தியோகபூர்வமாக இத்திரைப்படத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

பாடல், நடனம், கவிதை, அபிநயம் என பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றதுடன் மீன்மகள் பாடுகிறாள் எனும் பாடலைப் பாடிய குணம் சவரிராஜா ஆசிரியர் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். எமது சினிமாவின் வர்த்தக அந்தஸ்த்தை உயர்த்த வேண்டுமானால் தொடர்ச்சியாக படங்களைத் தயாரிக்க வேண்டும். அதற்காக Visual Art Movies நிறுவனத்துடன் இணைந்து எவரும் படம் தயாரிக்க முன்வரலாம் என முரளிதரன் அழைப்பு விடுத்தார்.

இந்திய அதியுயர் விருது பெற்ற குமார் நடேஷனுக்கு பாராட்டு விழா

இந்திய அதியுயர் விருது பெற்ற குமார் நடேஷனுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கௌரவமளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

இலக்கியத் துறையில் சுடர்விடும் ஓர் இஸ்லாமிய பெண் எழுத்தாளர் நஸீரா எஸ். ஆப்தீன்

உங்களைப் பற்றிய அறிமுகம், பாடசாலை வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?

எனது பிறப்பிடம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் நகரமாகும். எனது தந்தை ஏறாவூரின் உயர் குடியெனக் கருதப்பட்ட பெரிய ஆலிம் குடும்பத்தின் முகம்மது ஹஸன் ஆலிம் என்பவரின் ஆண் மக்களில் இரண்டாமவரான செயினுலாப்தீன் என்பவராவார். எனது தாயின் பெயர் அலியார் ஆயிஷா உம்மா. எனது பெற்றோருக்கு நான் இரண்டாவது பிள்ளை. எனது தந்தை ஏறாவூரின் பிரபல பாடசாலைகள் அனைத்திலும் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். எனது கணவர் சேகு இப்றாகிம் முகம்மட் மஹ்சூர், வாகன திருத்துனராகப் பணி புரிந்தவர். 1988 ஆம் ஆண்டில் ஏறாவூரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தாக்கப்பட்டார். எனக்கு இரண்டு பெண் மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் இருவரும் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமை புரிகின்றார்கள்.

நான் ஏறாவூர் அலிகார் மகா வித்தியாலயத்தில் (தற்போதைய அலிகார் மத்திய கல்லூரி) ஆரம்ப வகுப்பு முதல் உயர்தரம் வரை கல்வி கற்றவள். க.பொ.த. உயர் தரத்தில் நான் வணிகப் பிரிவில் கற்று 1980 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி பெற்றேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தொலைக்கல்வி மூலம் எனது கலைமாணிப் பட்டப் படிப்பையும் முதுகலைமாணிப் பட்டப் படிப்பையும் பூர்த்தி செய்துள்ளேன்.

உங்கள் தொழில் அனுபவம் பற்றியும் கூறுங்கள்?

நான் 1982 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடத்தப்பட்ட ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று மனையியல் உதவி ஆசிரியையாக 1982 ஏப்ரலில் முதல் நியமனம் பெற்று, வாழைச்சேனை அன்னூர் மகா வித்தியாலயத்தில் (அன்னூர் தேசிய பாடசாலை) கடமையேற்றேன். அதன் பின்னர் எனது பாடத் தகுதிகளின் அடிப்படையில் சமூகக் கல்விப் பாட நெறிக்காக அழுத்தமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாங்கப்பட்டு, பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியினைப் பூரணப்படுத்தினேன். அதனைத் தொடர்ந்து ஏறாவூர் றகுமானியா வித்தியாலயம், ஏறாவூர் அறபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியையாகக் கடமை புரிந்துள்ளேன்.

தொடர்ந்து இலங்கை கல்வி நிருவாக சேவை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று, 1999 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதிக் கல்விப் பணிப்பாளராக கல்குடா கல்வி வலயம், மட்டக்களப்பு மத்திய கல்வி வலயம், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் பணி புரிந்து 2018 ஆம் ஆண்டில் 55 வயதில் எனது கடமையிலிருந்து ஓய்வு பெற்றேன்.

உங்களுக்குள் ஓர் இலக்கியவாதி தோன்றுவதற்கான உங்களது குடும்பப் பின்னணி, இளமைப் பருவம் போன்றவற்றை முதலில் கூறுங்கள்?

நான் ஆரம்ப வகுப்புகளில் கற்றுக் கொண்டிருந்தபோது அந்த சிறு வயதிலிருந்தே ஏராளமான நூல்களை வாசிக்கும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தது. எனது தந்தை வீட்டுக்குள்ளேயே ஒரு குட்டி நூலகமொன்றை வைத்திருந்தார். அதுபோன்று எனது தந்தை பொது நூலகங்களிலிருந்தும் பல நாவல்கள், சிறு கதைகள் போன்ற நூல்களை வீட்டிற்குக் கொண்டு வருவார்.

இவைகளில் எந்த நூல்களையும் நான் படிக்காமல் விட்டதில்லை. மிகப் பெரிய நாவல்களைக் கூட ஓரிரு தினங்களில் வாசித்து முடிப்பேன். எனது தந்தை தொடர்ச்சியாக தினசரிப் பத்திரிகைகளை எடுப்பதுண்டு. வார இறுதிப் பத்திரிகைகளுக்காக மிக ஆவலுடன் காத்திருந்து அதில் வரும் தொடர் கதைகள், சிறுகதைகள், துணுக்குகள் போன்றவற்றைத் தவறாமல் வாசிப்பேன். அவ்வாறான வாசிப்புப் பழக்கம்தான் எனது மொழியாற்றலை விருத்தி செய்ததுடன் எனது பாடசாலைக் கல்விக்கும் காத்திரமாக அமைந்தது என்றே கூற வேண்டும். அதுவே எனது இலக்கியப் பயணத்திற்கும் உறுதுணையாக அமைந்தது எனலாம்.

உங்களது முதலாவது எழுத்து முயற்சி எதனூடாக எப்போது ஆரம்பித்தது?

நான் ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் பல கவிதைகளையும் சிறுகதை, உருவகக் கதைகளையும் எழுதியுள்ளேன். அவை பாடசாலை சஞ்சிகைகளில் நூலாக்கக் குழுவில் இடம் பெற்று சில தொகுப்புப் பணிகளுக்கு ஒத்தாசையாக இருந்துள்ளேன். பாடசாலை றோனியோ பிரதிகளில் சில ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் எனது வெற்றிகரமான எழுத்து முயற்சி முகநூல் குழுமங்களூடாகத்தான் விருத்தியடைந்தது. பல்வேறு முகநூல் குழுமங்களில் நடத்தப்பட்ட பல்வேறு வகையான கவிதைப் போட்டிகளில் பங்கேற்று அவை எல்லாவற்றிலும் வெற்றிச் சான்றிதழ்களைப் பெற்றேன். உண்மையில் 2018 ஆம் ஆண்டில் நான் கடமையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரே எழுத்துலகுக்குள் மிகுந்த ஆர்வத்துடன் பிரவேசித்தேன்.

நீங்கள் எந்தெந்த இலக்கியத் துறைகளில் இயங்கி வருகின்றீர்கள்?

நான் பல்வேறு வகையான கவிதைத் துறைகளில் ஈடுபட்டு அவற்றுக்கான இலக்கண விதிகளைக் கற்று அறிந்து அவற்றை எழுதி வருகின்றேன். புதுக் கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், தன்முனைக் கவிதைகள் எனப் பலவற்றையும் எழுதி வெற்றியடைந்துள்ளேன். அவற்றை நூல்களாகவும் வெளியிட்டுள்ளேன். அதுபோன்று மரபுக் கவிதைகள், வெண்பாக்கள் போன்றவற்றையும் தற்போது கற்றறிந்து அவற்றிலும் முயற்சி செய்து வருகின்றேன். இவைதவிர கவிஞர்கள் புதிய வடிவக் கவிதைகளையும் படைக்க வேண்டுமென ஊக்குவித்து, மணிக்கூ கவிதைகள், புத்தொளிக் கவிதைகள், கூம்புக் கவிதைகள் எனப் பல புதிய வடிவக் கவிதைகளை அறிமுகப்படுத்திக் கவிஞர்களை அவற்றின்பால் ஊக்குவித்து வருவதுடன் அக் கவிதை வகைகளில் நூல்களையும் வெளியிட்டுள்ளேன். தற்போது சிறுகதைகள், நாடகங்களை எழுதுவதில் முயற்சித்து வருகின்றேன்.

இதுவரை வெளிவந்த உங்களது நூல்கள் மற்றும் தொகுப்புகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

நான் இதுவரை ஏழு நூல்களை வெளியிட்டுள்ளேன்.

01. ஹைக்கூவில் கரைவோமா?
02. வானும் மண்ணும் நம் வசமே
03. பாரதிக்கு பதில் மடல்
04. மகுடம் சூடும் மணிக்கூகள்
05. புத்தொளிக் கவிதைகள்
06. மண்ணில் தவழும் விண்மீன்கள்
07. பெயர் பதிக்கும் தகைகள்

'ஹைக்கூவில் கரைவோமா?|| எனது முதலாவது நூல் 2020 பெப்ரவரி 02 ஆம் திகதி சென்னை எழும்பூரில் வெளியிடப்பட்டது. எனது இரண்டாவது நூல் 'வானும் மண்ணும் நம் வசமே..|| என்ற தன்முனைக் கவிதைகள் நூலாகும். மூன்றாவது நூல் 'பாரதிக்கு பதில் மடல்|| என்ற புதுக் கவிதைகள் மற்றும் கிராமியக் கவிதைகளை உள்ளடக்கிய நூலாகும். நான்காவது நூல் 'மகுடம் சூடும் மணிக்கூகள்|| என்ற மணிக்கூ கவிதைகள் அடங்கிய நூலாகும். இவை நான்கும் எனது தனிப்பட்ட படைப்புகளாக இருக்கின்றன.

(07 ஆம் பக்கம் பார்க்க)

அத்தோடு புத்தொளிக் கவிதைகள், மண்ணில் தவழும் விண்மீன்கள் ஆகிய இரண்டு உலகக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூல்களையும் நான் வெளியிட்டுள்ளேன். தொடர்ந்து 'பெயர் பதிக்கும் தகைகள்|| என்ற ஏறாவூரின் முக்கிய நபர்களின் விபரங்களடங்கிய வரலாற்றுத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளேன். இந்த நூல் சுமார் 640 பக்கங்களைக் கொண்டது.

நீங்கள் இங்கு மணிக்கூ கவிதைகள் என்று குறிப்பிடுகின்றீர்களே! அது பற்றி விளக்க முடியுமா?

தற்காலத்தில் எத்தனையோ கவிஞர்கள் ஹைக்கூ கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். நூற்றுக்கணக்கான ஹைக்கூ நூல்கள் தமிழிலே வெளிவந்துள்ளன. ஆனால் இந்நூல்கள் ஹைக்கூ விதிமுறைகளை மீறிய வகையில் அமைந்

துள்ளன. அதில் ஹைக்கூ என்ற பெயரில் வெளிவருகின்ற ஏராளமான கவிதைகள் மூன்று வரிகளைத் தாங்கியதாக வெளிவருகின்றன. பலர் ஹைக்கூ கவிதைகளை எவ்வாறு எழுதுவதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். மேலும், 'ஹைக்கூ|| என்ற பெயரானது தமிழுக்கு உகந்த பெயரும் அல்ல. அதனால் தான் மணிக்கூ என்ற பெயரில் மூன்று வரிக் கவிதைகளை எழுதுமாறு நான் எழுத்தாளர்கள், வாசகர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளேன். மணிக்கூ கவிதைகளை ஏன் எழுத வேண்டும்?; எப்படி எழுத வேண்டும்? போன்ற விளக்கங்களை நான் 'ஹைக்கூவில் கரைவோமா?|| என்ற எனது நூலில் விபரித்துள்ளேன்.

இந்த மணிக்கூகள் அடங்கிய 'மகுடம் சூடும் மணிக்கூகள்' என்ற நூலையும் நான் 2022.08.20 இல் வெளியிட்டுள்ளேன். அத்தோடு 'மணிக்கூ மகுடம்|| என்ற காலாண்டு மின்நூலையும் தற்போது ஆரம்பித்து, அதன் இதழ் 01 ஆனது 2022.08.20 இல் தமிழ் நெஞ்சம் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

கவிதை தவிர வேறு எவ்வகையான இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள்?

ஆசிரியராகக் கடமை புரிந்த காலத்தில் பாடல்களை இயற்றி மாணவர்களுக்குப் பயிற்றுவித்துள்ளேன். அவ்வப்போது பிரதேச செயலகங்களில் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகளில் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளேன். நான் எழுத்துலகுக்குள் பிரவேசித்து சுமார் ஐந்து ஆண்டுகளே ஆகின்றன. இக்குறுகிய காலப் பகுதிக்குள் ஏழு நூல்களை வெளியிட்டுள்ள காரணத்தினால் இந்நூல் தொகுப்புப் பணிகளில் அதிக காலத்தைச் செலவிட்டுள்ளேன். நான் இன்னும் என்னை வளப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. மரபுக் கவிதைகள், வெண்பாக்களின் இலக்கண விதிமுறைகளை ஓரளவு கற்று தற்போது எழுதி வருகின்றேன். மரபுகளில் இன்னும் அதிகமதிகமாகக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

சில ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளேன். அவை சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இலக்கியம் என்று சொல்லிக் கொண்டு குடும்பப் பொறுப்புகளை உதாசீனம் செய்ய முடியாத நிலையில், அத்தகைய குடும்ப பொறுப்புக்களுடன் இலக்கியத்திலும் பயணிப்பது சற்று சிரமமாகவே உள்ளது. எனினும் எதிர்வரும் காலங்களில் சிறுகதைத் தொகுதியொன்றையும் நாவல் ஒன்றையும் வெளியிட அவாக் கொண்டுள்ளேன். நான் இதுவரை வெளியிட்ட நூல்கள் ஏழும் ஒன்றுடனொன்று ஒத்த வையல்ல. ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையானவை. அவ்வாறே இன்னும் வெவ்வேறு வகையான நூல்களை வெளியிடுவதற்கான யோசனைகள் உள்ளத்தில் தேங்கியுள்ளன.

வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்குத் தாங்கள் கூறும் செய்தி என்ன?

படைப்பாளிகளைப் பொறுத்த வரைக்கும் இன்று அவர்கள் நவீன தொழில்நுட்பங்களையும் சமூக ஊடகங்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி அதி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையிலேயே இளம் படைப்பாளிகள் பலரின் திறமைகள் வியக்கத் தக்கதாக உள்ளது. அவர்களிடமிருந்து என் போன்றவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் நிறைய இருப்பதாகவே நான் கருதுகின்றேன். பல்வேறு சமூக செயற்பாட்டுக் குழுமங்கள், இலக்கியக் குழுமங்கள் போட்டி போட்டுக் கொண்டு படைப்பாளிகளை ஊக்குவித்து வருவதையும் நாம் காண்கின்றோம். இங்கு நான் படைப்பாளிகளுக்குக் கூற விரும்பும் செய்தி சமூக வலைத்தளங்களை வீணான பொழுது போக்கு வகைகளில் கழித்து விடாமல் அவற்றை ஆக்கபூர்வமான விடயங்களில் பயன்டுத்தி உங்கள் துறைகளை மேலும் வளப்படுத்திக் கொள்ளுங்கள் என்பதாகும்.

நீங்கள் இலக்கியத்தில் தடம் பதித்து சுமார் ஐந்து ஆண்டுகள் என்கிறீர்கள். இக்காலப் பகுதிக்குள் பட்டங்கள், விருதுகள் ஏதேனும் பெற்றிருக்கிறீர்களா?

கல்வித் துறையிலும் முகநூல் குழுமங்களில் நடத்தப்பட்ட போட்டிகளிலும் ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளேன். விசேடமாக நான் 'மணிக்கூ கவிதை|| என்ற கவி வடிவத்தை அறிமுகப்படுத்தியதால் பிரான்ஸ் நாட்டின் தமிழ் நெஞ்சம் இலக்கிய அமைப்பும் உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றமும் இணைந்து 'மணிக்கூ கவி|| என்ற விருதினை வழங்கினார்கள். இந்த வகையில் எனக்குக் கிடைத்த பட்டங்கள் மற்றும் விருதுகளைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

கல்வித் துறையில் பெற்ற விருதுகள்:–

★ 2011.06.26 இல் சாமஸ்ரீ வித்தியா ஜோதி விருது அகில இன நல்லுறவு ஒன்றியம்
★ 2014.05.17 இல் கல்விச் சுடர் விருது ஏறாவூர் சமூக உறவு ஒன்றியம்

இலக்கியத் துறையில் பெற்ற விருதுகள்:–

★ 2019 இல் பட்டுக்கோட்டை கண்ணதாசன் விருது கவியுலகப் பூஞ்சோலை இலக்கியக் குழுமம் (சென்னை)
★ 2019 இல் கவி அலரி விருது தேடல் கலை இலக்கிய அமைப்பு (இலங்கை)
★ 2020.02.01 இல் மணிக்கூ கவி விருது தமிழ் நெஞ்சம் இலக்கிய அமைப்பு (பிரான்ஸ்)
★ 2020.02.02 இல் கவி இமயம் விருது கவியுலகப் பூஞ்சோலை இலக்கியக் குழுமம் (சென்னை)
★ 2020.02.02 இல் பேரறிஞர் அண்ணா விருது கவியுலகப் பூஞ்சோலை இலக்கியக் குழுமம் (சென்னை)
★ 2022.03.17 இல் கவிச் சாரல் விருது தமிழ்ச்சாரல் இலக்கியக் குழுமம் (ஏறாவூர்)
★ 2021 இல் கவி மின்னல் விருது ஊ...ல...ழ...ள... இலக்கியக் குழுமம் (சென்னை)
★ 2021 இல் கவிக் கேசரி விருது தேடல் கலை இலக்கிய அமைப்பு (இலங்கை)

விருதுச் சான்றிதழ்கள்:

★ 2019.04.10 இல் கனல்கவி பட்டம் நிலா முற்றம் இலக்கியக் குழுமம்
★ 2019.08.05 இல் கவிமணி விருது சங்கத் தமிழ் கவிதைப் பூங்கா
★ 2019.11.14 இல் இசைக்கவி விருது ஊ...ல...ழ...ள இலக்கியக் குழுமம்

இந்த நேர்காணல் மூலம் வேறு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

என்னை நேர்காணல் செய்த சகோதரி ரிம்ஸா முஹம்மத்துக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வாசகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் உங்கள் கற்பனைகளை, சிந்தனைகளை எவ்வடிவத்திலேனும் எழுத்தில் வடியுங்கள். அவை கதை வடிவமாக, நாடகமாக, மரபுக் கவிதைகளாக, புதுக் கவிதைகளாக அல்லது புதிய வடிவங்களாக அமையட்டும். எதுவாக இருப்பினும் அவற்றைத் தொகுத்து நூல் வடிவமாக்குங்கள். நூல்களை அச்சுப் பிரதிகளாக்க உங்களால் முடியவில்லையெனில் அவற்றை மின்நூல்களாக வெளியிடுங்கள். நீங்கள் எழுத்துலகில் ஒளிர்வீர்கள்.

நேர்கண்டவர்:
வெலிகம
ரிம்ஸா முஹம்மத்

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எம்.ஐஷெக், மன்னார்.

கேள்வி: ஆஸ்கர் குழு வெளியிட்டுள்ள பரிந்துரை பட்டியலில் பார்த்தீபனின்' இரவின் நிழல் படமும் இடம் பெற்றுள்ளதாமே... உண்மையா..?

பதில்: ஆஸ்கர் குழுவினர் வெளியிட்டுள்ள பரிந்து ரைப்பட்டியலில் 'இரவின் நிழல்','ஆர்.ஆர்.ஆர்,'காந் தாரா'உள்பட மொத்தம் 10 இந்தியப் படங்கள் இடம்பெற் றுள்ளன. சினிமாவில் உயரிய விருதாக கருதப்படுவது ஆஸ்கார் இவ்விருது விழா ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 95வதுஆஸ்கார் விருது விழா வருகிற மார்ச் மாதம் நடைபெற வுள்ளது. இதற்காக போட்டியிடும் படங்க ளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 301 படங்களின் பரிந்துரைப் பட்டி யலை ஆஸ்கார் குழுவினர் வெளியிட்டுள்ளனர். இதில் பத்து பார்த்தீபனின் 'இரவின் நிழல்'படமும் மாதவன் இயக்கி நடித்த'ராக்கெட்ரி' படமும் தெரிவாகி உள்ளன. 'இரவின் நிழல்'திரைப்படம் ஆஸ்கார் பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றுள்ளதை அறிந்த அப்படத்தின் இயக்குநரும் நடிகருமான பார்த்தீபன் டுவிட்டரில் அது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள் ளார். அதில் அவர் பதிவிட்டிருப்பதாவது "அந்த. மகா சமுத்திரத்தில் இந்த. எளி யவனின் படம் எலிஜிபில் லிஸ்ட் வரை வந்ததே வரம்தான். அதுவும் ஒரு ரூபாய் இந்திய திரைப் படங்களும் தேர்தல்வாகி உள்ளன.அதன் படி ராஜமௌலி இயக்கிய ஆர். ஆர்.ஆர்.திரைப்ப டமும்.ரிஷப்ஷெட் டிஇயக்கி நடித்த 'காந்தாரா' திரைப்படமும் கூட செலழிக்காமல், RRRக்கெல்லாம் பலகோடி செலவழித்து campaign செய் கையில்" என தனக்கே உரித்தான நக்க லுடன் அந்தப் பதிவை போட்டுள்ளார்.

எம்.மாகிரட், எலபடகம.

கேள்வி: சமீபத்தில் காலமான பிரபல நடிகை ஜமுனா மக்கள் திலகம் எம்.ஜி. ஆருக்கு ஜோடியாக எந்த படத்திலாவது நடித்துள்ளாரா? இல்லை என்றுதான் பலரும் சொன்னார்கள்.!

பதில்: பொதுவாகவே திறமையான நடிகைகளுடன் ஜோடி சேர்ந்து நடிப்ப தற்கு எம்.ஜி.ஆர் தயங்கியதே இல்லை. ஜமுனா திறமையான ஒரு நடிகை. அந்த வகையில் அவருடன் ஜோடியாக ஒரு படத்தில் நடித்தார் எம்.ஜி.ஆர். அந்த படத்தின் பெயர் 'தாய் மகளுக்கு கட்டிய தாலி'.

இந்தப் படத்தில் ஜமுனாவிற்கு தாயாக கண் ணம்மா நடித்திருந்தார்.

எம்.மலர்ராணி, கொழும்பு -13

கேள்வி: நடிகை நயன்தாராவிற்கு குழந்தை பெற்றுக் கொள்ளும் பாக்கியம் இல்லையா. உண்மையில் என்னதான் நடந்தது?

பதில்: அது இல்லாததினால் தானே செவிலித்தாய் மூலம் சமீபத் தில் குழந்தை பெற்றுக் கொண்டு ஒரு பரபரப்பை ஏற்படுத்தினார். நயன்தாராவிற்கு குழந்தை பாக் கியம் இல்லாமல் போனதற்கான காரணத்தையும் சில பத்திரிகைகள் ரகசி யமாக வெளியிட்டன.

அதை ரகசியமாகவே நானும் உங்களுக்கு சொல்லுகிறேன். நீங்களும் ரகசியமாகவே வைத்துக்கொள்ளுங்கள்.

அதாவது பல தட வைகள் நயன்தாரா 'அபோஷன்' செய்தி ருந்ததால் கர்ப்பப்பை சிதைந்து குழந்தை பெறும் வாய்பை இழந்து விட்டதாம்.

இப்படித்தான் அந்த பத்திரிகைகள் தகவல் வெளியிட்டிருந்தன.

எஸ்.எஸ்.மது, வவுனியா.

கேள்வி:படப்பிடிப்பு தளத்தில் அடிக்கடி குழப்பம் விளை விக்கி றாராமே ஒரு நடிகை. யார் அந்த "சர்ச்சை"நடிகை?

பதில்பி: வாசு இயக்கத்தில் சூப்பர் ஸ்ட்டார் ரஜினிகாந் நடித்து வெளியாகி மெகா ஹிட்டான திரைப்படம் 'சந்திரமுகி' இப்பொ முது இதன் இரண்டாம் பாகத்தை எடுத்து வருகிறார் பி.வாசு. அந்தப்படத்தில் ரஜினி வேட்டை யன்' என்ற கதாபாத்திரத்தில் தத்ரூபமாக நடித்திருப்பார். இப்பொழுது இதன் இரண்டாம் பாகத் தில் 'வேட்டையன்' என்ற கதாபாத்தி ரத்தில் ராகவா லோரன்ஸ் நடிக்கிறார். இந்தப்படத்தில் சந்திரமுகியாக கங்கனா ரனாவத் நடித்து வருகிறார். இப்பொழுது இந்த நடிகையால் படப்பிடிப்பு தளத்தில் ஏதாவது ஒரு பிரச்சினை ஏற்பட்டு வருகிறதாம். இவர் எங்கே போனாலும் எப்பொ முதுமே ஒரு கூட்டத்துடன்தான் போவாராம். இப்படி படப்பிடிப்பிற் கும் ஜிம்போயிஸ், கமா மேக்கப் மேன் என இவர் கூடவே இந்த கூட்டத்தையும் ஏற்பாடு செய்து அழைத்து வருவாராம்.

அதுமட்டுமல்லாமல் இவரின் பாதுகாப்பிற்காக வீரர்கள் என்று நான்கு பேர் துப்பாக்கி உடன் எப்பொழுதுமே இவரை சுற்றி இருப்பார்கள். இதெல்லாம் பார்த்த படக் குழுவினர் விசாரிக்கும் போது எல்லாமே இவருடைய ஏற்பாடு தான் என்று தெரியவந்தது. இந்த ஏற்பாட்டின் பின்னணி என்ன வென்று ஆராய்ந்தால் சர்ச்சைக ளுக்கு பெயர்போன இவர் நிறைய பிரச்சினைகளை தானே தேடிப் போய் மாட்டிக் கொள்வாராம். அதனால் இவரின் பாதுகாப்புக் கருதி துப்பாக்கி வீரர்களுடன் படப்பி டிப்புக்கு வந்து கொண்டிருக்கிறார். இதனால் படக் குழுவில் நிறைய குளறுபடிகள் நடந்து வருகிறது. இதனால் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் படக்குழுவினர் முழித்துக் கொண்டிருக்கிறார்க ளாம்.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

கீர்த்தி சுரேஷுக்கு திருமணம்

திருமணம் குறித்த வதந்திக்கு விளக்கமளித்துள்ளார் நடிகை கீர்த்தி சுரேஷின் தாயார் மேனகா. நடிகை கீர்த்தி சுரேஷ் திருமணம் குறித்து அவ்வப்போது கிசுகிசுக்கள் வந்த வண்ணம் உள்ளன. சில தினங்களுக்கு முன்பு அவரது திருமணம் குறித்து புதிய தகவல் வலைத்தளத்தில் பரவியது. அதில் கீர்த்தி சுரேஷ் தனது பள்ளி காலத்து நண்பரை காதலிப்பதாகவும், கடந்த 10 வருடங்களாக இந்த காதலை தொடர்வதாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. இவர்கள் காதலை இரு வீட்டு பெற்றோர்களும் ஏற்றுகொண்டு விட்டனர் என்றும், அடுத்த வருடம் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டு உள்ள னர் என்றும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த தகவலை கீர்த்தி சுரேஷ் தரப்பில் அவரது தாயாரும், நடிகையுமான மேனகா மறுத்துள்ளார். அவர் கூறும்போது, "திருமணம் குறித்து வெளியான தகவல் பொய்யானது. பரபரப்புக் காக இதை செய்கிறார்கள். இது தொடர்பாக பேச எதுவும் இல்லை" என்றார். கீர்த்தி சுரேஷ் நடிப்பில் சாணி காயிதம் படம் சமீபத்தில் வந்தது. உதயநி தியுடன் மாமன் னன், தெலுங்கில் நானியுடன் தசரா படங்களில் நடித்து முடித்துள்ளார். இந்த படங்கள் விரைவில் திரைக்கு வர உள்ளன.

தி கிரேட் இந்தியன் கிச்சன்

தி கிரேட் இந்தியன் கிச்சன் மலையாளத்தில் வெளியாகி மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்ற தி கிரேட் இந்தியன் கிச்சன் திரைப்படம் அதே பெயரில் தமிழில், ஆர்.கண்ணன் ரீமேக் செய்து வருகிறார். இதில், ஜஸ்வர்யா ராஜேஷ், ராகுல் ரவீந்திரன் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார்கள்.

தலைக்கூத்தல்

சமுத்திரக்கனி, கதிர் நடித்துள்ள திரைப்படம் தலைக்கூத்தல். ஜெயபிரகாஷ் ராதா கிருஷ்ணன் இயக்கத்தில் உருவாகி உள்ள இப்படத்தில், சமுத்திரக்கனி, கதிர், வசுந்தரா மற்றும் பலர் நடித்துள்ளனர். ஒய் நாட் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்த படத்திற்கு கண்ணன் நாராயணன் இசையமைத்துள்ளார்.

பார்ட்டிக்கு செல்லும் பழக்கம் இல்லை

ராஷ்மிகா பார்ட்டி, பப் போன்றவற்றுக்கு செல்லும் பழக்கம் இல்லை என்கிறார் நடிகை ராஷ்மிகா. தமிழில் கார்த்தி ஜோடியாக சுல்தான் படத்தில் அறிமுகமான ராஷ்மிகா மந்தனா வாரிசு படத்தில் விஜய் ஜோடியாக நடித்த மகிழ்ச்சியில் இருக்கிறார். தெலுங்கு, இந்தி படங்க ளிலும் நடிக்கிறார். ராஷ்மிகா அளித்துள்ள பேட்டியில், "எனக்கு காலை சிற்றுண்டியில் ஆம்லெட் இருக்க வேண்டும். உணவில் காய்கறிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பேன். அரிசி சாதம் குறைவாக சாப்பிடுவேன். தோசை என்றால் ரொம்ப பிடிக்கும். மதிய உணவில் கூடான ரசத்துடன் சாதம் கலந்து ஒரு பிடி பிடிப்பேன். சவுத் இந்தியன் தாலிக்கு முக்கியத்துவம் கொடுப்பேன். இரவு உணவு கொஞ்சமாக இருக்கும். வள்ளி கிழங்கு, தக்காளி, கேப்ஸிகம் என்றால் எனக்கு அலர்ஜி. எல்லா விஷயங்களிலும் ஒழுக்கமாக இருக்கும் நான் சீக்கிரமாக தூங்கி அதிகா லையில் எழுந்து விடுவதை மட்டும் இன்னும் பழக்கப் படுத்திக்கொள்ளவில்லை. படப்பிடிப்பு இருந்தால் மட்டும் காலையிலேயே எழுந்து ஏழு மணிக்கு எல்லாம் செட்டில் இருப்பேன். பார்ட்டி, பப் போன்றவற்றுக்கு செல்லும் பழக்கம் இல்லை. இரவு தாம தமாக தூங்குவதற்கு காரணம் ஓ.டி.டி.தான். ஏதாவது வெப் தொடர் பார்த்தால் அது முடியும் வரை தூக்கம் வராது'' என்றார்.

எண்ணத்தில்தான் வலிமை இருக்கிறது - சமந்தா

நடிகை சமந்தா தற்போது 'சாகுந்தலம்' திரைப்ப டத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் வருகிற பெப்ரவரி 17ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. தமிழ் திரையுலகின் முன்னணி நடிகை யான சமந்தா சமீபத்தில் மயோசிடிஸ் என்ற நசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு மீண்டும் நடிக்க வந்துள்ளார். தற்போது இவர் சரித்திர கதையம்சம் கொண்ட படமாக உரு வாகியுள்ள 'சாகுந்தலம்' படத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற பிப்ரவரி 17ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக வுள்ளது. மேலும், சில படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ள நடிகை சமந்தா உடற்பயிற்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது உடற்பயிற்சி செய்யும் வீடியோவை சமந்தா தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட் டுள்ளார். இதனுடன் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "கஷ்டமான நேரத்தில் என்னை உடற்பயிற்சி செய்ய ஊக்குவித்த பயிற்சியாளருக்கு நன்றி. கடுமையான உணவு கட்டுப்பாட்டை பின்பற்றி வருகிறேன். சாப்பிடுவதால் மட்டும் வலிமை வராது, நாம் சிந்திக்கும் எண்ணத்தில்தான் வலிமை இருக் கிறது என்று இப்போது கற்றுக்கொள்ள முடிந்துள்ளது'' என்று பகிர்ந்துள்ளார். இந்த பதிவு அனைவரையும் கவர்ந்துள்ளது. மேலும், இவர் நடிக்கும் வெப் தொடரில் சண்டை காட்சிகள் உள்ளன என்றும், அதில் நடிக்கவே கடும் உடற்ப யிற்சியில் ஈடுபட்டு உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

நகத்தை சேதப்படுத்தாமல் நகப்பூச்சை நீக்கலாம்...

கை விரல்களுக்கு மகுடமாக இருப்பது நகங்கள். அவற்றை பராமரிப்பதில் பெண்கள் தனி ஆர்வம் காட்டுவார்கள். அணியும் ஆடைகளுக்கு ஏற்ற நிறத்தில் நகங்களுக்கு சாயம் பூசுவார்கள். அதை நீக்குவதற்கு நெயில் பாலிஷ் ரிமூவர் எனும் ரசாயனத்தை உபயோகிப்பார்கள். இதைத் தொடர்ந்து பயன்படுத்தும்போது நகங்களிலும், அதைச் சுற்றியுள்ள சருமத்திலும் பாதிப்பை உண்டாக்கும். இதைத் தவிர்த்து, எளிய முறையில் வீட்டில் உள்ள பொருட்களை வைத்தே நகங்களின் பளபளப்பை சேதப்படுத்தாமல் நகப்பூச்சை நீக்க முடியும். அதற்கான வழிகள் இங்கே...

எலுமிச்சை: எலுமிச்சையில் இருக்கும் அமில மூலக்கூறுகள் நகப்பூச்சுக்குள் ஊடுருவும் தன்மை கொண்டது. சில துளிகள் எலுமிச்சை சாறினை நகங்களில் விட்டு தேய்ப்பதன் மூலம் நகப்பூச்சை நீக்க முடியும். எலுமிச்சை சாறுடன் சிறிதளவு சோப் அல்லது வினிகர் கலந்தும் பயன்படுத்தலாம்.

பற்பசை: பற்பசையில் எத்தில் அசிடேட் எனும் ரசாயன கலவை உள்ளது. இது நெயில் பாலிஷ் ரிமூவர் தயாரிப்பிலும் பயன்படுகிறது. சிறிதளவு பற்பசையை எடுத்து நகங்களில் தடவி, ஐந்து நிமிடம் கழித்து மெதுவாக துடைத்து எடுப்பதன் மூலம் நகப்பூச்சை எளிதாக நீக்க முடியும்.

சானிடைசர்: சானிடைசர் தற்போது அனைவரது வீட்டிலும் பயன்படுத்துகிறோம். அதை நகப்பூச்சை நீக்குவதற்கும் உபயோகிக்கலாம். நகங்களின் மீது சிறிதளவு சானிடைசரை தெளித்து பஞ்சு கொண்டு துடைத்து எடுக்கலாம்.

ஹேர் ஸ்பிரே: நெயில் பாலிஷ் ரிமூவருக்கு பதிலாக ஹேர் ஸ்பிரே வையும் பயன்படுத்த முடியும். கிண்ணத்தில் சிறிதளவு ஹேர் ஸ்பிரேவை ஊற்றி அதில் பஞ்சினை நனைத்து, நகங்களை அழுத்தி துடைப்பதன் மூலம் நகப்பூச்சை நீக்கலாம். டியோடரண்டும் இதற்கு உதவும். வாசனை திரவியம்:

டிஷ்யூ பேப்பர் அல்லது பஞ்சில் சிறிது வாசனை திரவியத்தை தெளித்து அதைக் கொண்டு நகங்களை அழுத்தித் துடைப்பதன் மூலமும் நகப்பூச்சை நீக்க முடியும்.

வெந்நீர் மற்றும் சோப்பு: வெந்நீரில் சிறிதளவு சோப்பைக் கலந்து அதில் நகங்களை சிறிதுநேரம் வைத்திருங்கள். பின்னர் நகவெட்டியில் உள்ள தேய்ப்பானை பயன்படுத்தி நகப்பூச்சை நீக்கலாம்.

★ நகங்களுக்கான பராமரிப்புகளை தினமும் செய்ய வேண்டுமா?

உங்கள் நகங்கள் வலுவாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு தினமும் அவற்றை சுத்தம் செய்து மாய்ஸ்சுரைசர் பூச வேண்டும். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை டிரிம் செய்ய வேண்டும்.

★ நகங்களுக்கு பெட்ரோலியம் ஜெல்லி பூசலாமா?

நகங்கள் வறண்டு போவதைத் தடுக்க தினமும் இரவு தூங்கச் செல்வதற்கு முன்பு பெட்ரோலியம் ஜெல்லியை நகங்களின் மீது பூசலாம்.

★ கர்ப்பிணி பெண்கள் நகப்பூச்சு பூசலாமா?

உடல் ஆரோக்கியத்துக்கு தீங்கு உண்டாக்கும் ரசாயனக் கலவைகள் சேர்க்காத நகச்சாயங்களை பயன்படுத்தலாம்.

★ நகங்களை கடிப்பது அவற்றுக்கு சேதம் ஏற்படுத்துமா? நகம் கடித்தல் சுகாதாரம் இல்லாத பழக்கமாகும். இது நடத்தைக் கோளாறாகக்கூட இருக்கலாம். நகக்கணுக்கள் பாதிக்கப்படும்போது நகத்தின் ஆரோக்கியத்தில் பிரச்சினை ஏற்படலாம்.

புதிதாக மேக்கப் போடுபவர்களா நீங்கள்...

மேக்கப் செய்வதற்கு முன், முகத்தை நன்றாக கழுவவேண்டும். முகத்தில் பரு, சிறுசிறு துளைகள் இருந்தால் அதை 'பிரைமர்' எனப்படும் பூசு பொருள் கொண்டு சரிசெய்த பிறகு, 'பவுண்டேஷன்' பூச வேண்டும்.

நம்முடைய நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷன்களை தேர்வு செய்வது கடினம் என்றாலும், அதில் அதீத கவனம் செலுத்தினால் மேக்கப் செய்திருப்பதே தெரியாத அளவிற்கு 'நீட்'டாக இருக்கும்.

எண்ணெய் பசை தன்மை கொண்டவர்கள், 'காம்பாக்ட் பவுடர்' பயன்படுத்துவது நல்லது. கண்களுக்கு கீழ் இருக்கும் கருவிழிகளை 'கன்சீலர்' கொண்டு சீராக்கலாம். மேக்கப்பை கூடுதல் பொலிவாக்க, 'பிரான்சர்' கொண்டு ஜொலிக்க வைக்கலாம்.

'கான்டர்' என்பதை பயன்படுத்துவதன் மூலம் குண்டாக தெரியும் முகத்தை கூட, ஒல்லியாக காட்டமுடியும். மேக்கப் விஷயத்தில் கண் மற்றும் புருவம் மிக முக்கியமானது. ஏனெனில் கண் புருவங்கள்தான், முக அழகை நிர்ணயிக்கக்கூடியவை.

அதை அழகாக்க 'ஐ புரோ பவுடர்', 'ஐ லைனர்', 'மஸ்காரா' போன்றவை புழக்கத்தில் இருக்கின்றன. இறுதியாக உதடுகளை 'லிப் பாம்', 'லிப் லைனர்', 'லிப்ஸ்டிக்' கொண்டு அழகாக்கலாம்.

மேக்கப்பை கலைப்பதற்கு என பிரத்தியேக லோஷன் இருக்கிறது. இல்லாத பட்சத்தில் தேங்காய் எண்ணெய் தேய்த்து, மேக்கப்பை கலைக்கலாம். இரவு தூங்க செல்லும் முன், கட்டாயமாக மேக்கப்பை கலைக்க வேண்டும். ஏனெனில் மேக்கப் கிரீம் பூசுவதால் அடைக்கப்பட்டிருக்கும் சரும துளைகள் அதற்கு பிறகுதான் சுவாசிக்க ஆரம்பிக்கும்.

தினை கருப்பட்டி அல்வா

தேவையான பொருட்கள் :

தினை அரிசி 200 கிராம்,
கருப்பட்டி 175 கிராம்,
முந்திரி 30 கிராம்,
திராட்சை 30 கிராம்,
பாதாம் 20 கிராம்,
பிஸ்தா 20 கிராம்,
நெய் 100 கிராம்,
தண்ணீர் 200 மி.லி.,
ஏலக்காய் தூள் 1/4 டீஸ்பூன்,
சுக்கு பொடி 1 டேபிள் ஸ்பூன்

செய்முறை :

தினை அரிசியை 6 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும்.

கருப்பட்டியை நன்றாக பொடித்து கொள்ளவும். பொடித்த கருப்பட்டியில் சிறிது தண்ணீர் சேர்த்து அடுப்பில் வைத்து கருப்பட்டி கரைந்ததும் வடிகட்டி மீண்டும் அடுப்பில் வைத்து பாகு காய்ச்சி கொள்ளவும்.

ஊற வைத்த அரிசியை நைசாக அரைத்து பால் எடுக்கவும். எடுத்த பாலை கிண்ணத்தில் மாற்றி 15 நிமிடம் தெளிய விடவும். 10 நிமிடம் கழித்து மேலே வந்த நீரை எடுத்து விடவும்.

ஒரு வாணலியில் 200 மி.லி. தண்ணீர் ஊற்றி தினை மாவு மற்றும் கருப்பட்டி பாகு சேர்த்து நெய் ஊற்றி அல்வா நன்றாக சுருண்டு வாணலியில் ஒட்டாமல் அல்வா பதம் வரும் வரை நன்றாகக் கிளறவும்.

பின்பு ஒரு டிரேயில் நெய் தடவி பாதாம், பிஸ்தா, முந்திரி தூவி சூடான அல்வாவை அதன் மேல் பரத்தவும். அல்வா முழுவதுமாக ஆறியவுடன் சிறு துண்டுகளாக வெட்டி பரிமாறவும்.

சூப்பரான தினை கருப்பட்டி அல்வா ரெடி.

செல்ஃபி உலா

Praneeth Sadvi

Hinduja, Hindu

பிரணவ் ஹாரன், யிஷா

ரங்கநாதன் ராஜமுரளி

சந்தியா அழகராஜா

ஆர். ரிஷிகா


Ranjani Suresh

எம்ஜிஆர் கமல் ராஜ்

ஆனந்தன் சிவா

சரண்யா விஸ்தன்

சரண்யா

காரையன் சுதன்

அகில இலங்கை கிராமிய கலைஞர் சங்கத் தலைவர் விஜே

சஷிகலா பிரதீப்

நிறம் தீட்டுங்கள்

வழிகாட்டுங்கள்

தொடர்பு படுத்துங்கள்



05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

கூட்டல்



நான் ரொம்ப பிஸி...

'வேராகிப்போன மனிதர்கள்' என்ற நாவலைத் தந்த மூதூரைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எஸ்.உபைத்துல்லா

வேராகிப்போன மனிதர்கள்' என்ற நாவலைத் தந்தவர் மூதூரைச் சேர்ந்த கலாபூஷணம் ஏ.எஸ். உபைத்துல்லா.

கொடக்கே நிறுவனத்தினால் 2021 ஆம் ஆண்டு தேசிய ரீதியில் நடத்திய நாவல் பிரதியாக்கப் போட்டியில் வெற்றி பெற்ற "வேராகிப் போன மனிதர்கள்" என்ற நாவலைத் தந்த கலாபூஷணம் ஏ. எஸ். உபைத்துல்லா, பல்வேறு துறைகளில் தனது ஆளுமையை அடையாளப் படுத்தி வருகின்ற ஒருவர். அவருடனான நேர்காணலின் தொகுப்பை இன்றைய நாள் பகிர்ந்து கொள்கிறேன்.

மூதூரில் சாதாரண விவசாய குடும்பம் ஒன்றில் பிறந்த கலாபூஷணம் ஏ.எஸ். உபைத்துல்லா மூதூர் தி /அல் ஹிலால் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்று இடை நிலைக்கல்வியை மூதூர் தி/ புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் பயின்று பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை பூர்த்தி செய்து, ஆசிரியராக 20 வருடங்களும் அதிபராக 16 வருடங்களும் பணியாற்றி ஓய்வு பெற்றவராகும்.

மூதூர் பிரதேசத்தின் வனப்பை மண்வாசனையுடனும் மிக எளிய நடையில் மக்களின் அன்றாட பிரச்சினைகளை பதிவாக்குவதுதான் இவரது எழுத்தின் பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படும் எழுத்தாளராக திகழ்கின்றார்.

ஆக்க இலக்கியத்தில் சிறுகதையின் ஊடாகவே எழுத்து பணியைத் தொடங்கிய இவர் 1978 ஆம் ஆண்டு மாணிக்கம் என்னும் சஞ்சிகையில் 'ஊர்வலம்". என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய பரப்பிற்குள் பிரவேசித்தார். இதுவரையில் 75க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதி உள்ள இவருக்கு "ஜலசமாதி" சிறுகதையே அதிக புகழைத் தேடித் தந்த ஒரு சிறுகதையாகும்.இக்கதை இதுவரையில் எட்டு இடங்களில் மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சிறுகதை மூதூர் படகு விபத்தைப் பற்றிய கதையாகும்,இச் சிறுகதைக்காக கனக செந்தி நாதன் கதா விருது 2004 இல் இவருக்கு கிடைக்கப்பெற்றது.

பொதுவாக சிறுகதை, நாவல், நாடகம், விமர்சனம், கட்டுரை போன்ற துறைகளில் தனது எழுத்துப் பணியினை ஆற்றி வரும் இவர் இலகு வழித் தமிழ் (இலக்கணம் 1990) தமிழ் வளர்த்த பெரியார்கள் (கட்டுரை தொகுப்பு 1992) கங்கைக் காவியம் (கவிதைத் தொகுப்பு 1997) ஜல சமாதி (சிறுகதைத் தொகுப்பு 2008) நிழலைத் தேடி சிறுகதைத் தொகுப்பு (2017 வேராகிப் போன மனிதர்கள் (நாவல் 2021) ஆகிய நூல்களை வெளியீடு செய்துள்ளார்.

அண்மைக்காலத்தில் இருந்து நமது நாட்டில் நாவல் எழுதும் பணியில் ஈடுபடுவோர் தொகை வெகுவாக குறைந்து கொண்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. அதிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் எழுத்தாளர்கள் நாவல் எழுதுவது மிக மிகக் குறைந்து காணப்படுகின்ற இந்த வேளையில் "வேராகிப்போன மனிதர்கள்" என்ற நாவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் கவிஞர் மூதூர் முகைதீனின் தலைமையில்



இவ்விழா நடைபெற்றபோது மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் ஏ.ஆர். றிபான் வரவேற்புரையை நிகழ்த்தவும் ஓய்வு நிலை நிருவாக சேவை அதிகாரி கலாபூசணம் எம்.சீ.எம். ஷெரீப் நூலின் அறிமுகத்தினை வழங்கவும் நூலில் நயவுரையினை எம். கே. எம் . மன்சூர் நிகழ்த்திடவும் பேராசிரியர் பால சுகுமார் மதிப்புரையை நிகழ்த்தியமையும் அதன் சிறப்பு நிகழ்வாகக் கொள்ளலாம்.

எழுத்தாளரின் நீண்டகால இலக்கிய செயற்பாட்டுக்காக

கனக செந்திநாதன் கதா விருது (2004), வித்தகர் விருது 2016), கலாபூஷண விருது (2016), துரைவி விருது (2016), கொடக்கே தேசிய சாகித்திய விருது (2018, 2021) ஆகிய விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் தான் இவரால் அதிகமாக எழுத முடிந்தது எனவும் அதிபர் பதவிக்கு வந்த பின்னர் அதிகரித்த வேலைப்பளு நிருவாக நடவடிக்கைகள் போன்றவற்றால் அதிகமாக அவரால் எழுத முடியவில்லை ஆயினும் அவ்வப்போது வேலைப்பளுகளுக்கு மத்தியிலும் தேவைக்கேற்ப சிறுகதை கட்டுரை, விமர்சனம் போன்றவற்றை எழுதியதோடு இந்த நாவல் கூட அதிபர் பணியில் இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவரிடமிருந்து தெரியவந்தது.

நாடறிந்த மூத்த படைப்பாளி அமரர் வ. அ. இராசரத்தினத்துடனான தனக்குள்ள தொடர்பு பற்றியும் மனம் திறந்தார்.

மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்தில் படிக்கும் காலத்தில் வ.அ.இராசரத்தினம் எனக்குத் தமிழ் கற்பித்தவர். இலக்கியத்தில் மீது எனக்குள்ள ஆர்வத்தைக் அவர் கண்டு என்னை எழுத்துத் துறையில் ஊக்குவித்தார். அவருடன் பல வருட காலமாக நட்பைப் பேணி வந்திருக்கின்றேன். அவருடைய எழுத்தின் தாக்கம் என்னுள்ளும் இருக்கிறது. எனது முதலாவது சிறுகதை தொகுப்பான ஜலசமாதியை அவருக்கு நான் சமர்ப்பணம் செய்துள்ளேன். இன்று வரையும் அவர் குடும்பத்துடனான தொடர்பைப் பேணிவருவதாகவும் கூறினார்.

மேலும் சமகால எழுத்துக்கள் சார்ந்த கருத்துக்களயும் இவர் கூறும்போது

நவீன இலக்கியத்துடன் கடந்த கால இலக்கியங்களையும் படிக்க வேண்டும்.

முதலில் ஏன் எழுத வேண்டும்? எதற்காக எழுத வேண்டும்? எப்படி எழுத வேண்டும்? எதை எழுத வேண்டும் ? என்ற அடிப்படை வினாக்களை எழுப்பிக்கொண்டு எழுதும்போது ஒரு காத்திரமான படைப்பாளியாக வர முடியும் .

கடந்த காலங்களை விட நம் நாட்டில் எழுதுவோர் தொகை அதிகரித்து காணப்படுகின்றது. எழுதப்படுவது எல்லாம் தரமானது என்றோ, இலக்கியத் தரம் வாய்ந்தது என்றோ கூறி விட முடியாது. ஆயினும் புதிய தலைமுறையினர் பலதளங்களில் தங்களது இலக்கியப் பணியினை மேற்கொண்டு வருவது மகிழ்ச்சியளிக்கின்றது. படைப்புகள் பெருகிய போதிலும் வாசிப்பு கலாசாரம் நம் மத்தியில் குறைந்து வருவது மிகுந்த கவலையளிக்கிறது. நிறைய வாசிக்க வேண்டும். நிறைய எழுத வேண்டும் அப்போதுதான் நமது படைப்பின் இலக்கியத் தரம் அதிகரிக்கும் என்ற அனுபவமிகு விடயங்களைத் தந்த எழுத்தாளரை வாழ்த்துவோம்!

ஏ.எம்.கஸ்புள்ளா
கவிச்சுடர்

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

ஒரு நானுக்குள் மிதக்கும் இன்னுமொரு நான்

'காலம், உதிரம் வடிக்கும்போது கவிதை அமுதம் வடிக்க முடியாது'' என்று கூறும் வெலிமடை ரபீக் கவிதைகள் 'ஒரு நானும் இன்னும் ஒரு நானும்'' வெள்ளாப்புவெளி பதிப்பாக வந்திருக்கிறது. எண்பதுகளிலிருந்து கவிதைப் புலத்தில் நன்கு அறியப்பட்ட ரபீக், உணர்வற்றதும் இறுக்கமானதுமான மந்திரச் சொற்களால் கவிதை நதியை உருவாக்குபவர். அதனாற்தான் ரபீக்கின் கவிதையில் உயிரோட்டமான நீரோட்டம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நீரோட்டத்தில் வாசகன் மிதக்கிறான்ளமூழ்கிறான். எழுகிறான். மகிழ்கிறான். சிலபோது அதிர்கிறான். வாசகன் அதிருமிடத்தில் ரபீக்கின் கவிதை உணர்ச்சியலையில் பொங்குகிறது.

ரபீக்கின் கவிதைகளிலிருந்து ஏதோவொன்று வாசக மனசில் ஒட்டிக் கொள்ளாமல் விடுவதில்லை. அந்த ஏதோவொன்று ஒரு நானுக்குள் இருக்கும் இன்னுமொரு நான்தான்.

அஷ்ரஃப் சிஹாப்தீன் அணிந்துரையில் சொல்வது போல் ரபீக் கவிதைகளில் எல்லா உணர்வுகளையும் இங்கிதமாய் வெளிப்படுத்துவார். அவரது கவிதை வெளிவரும் போது தனித்துவ அழகு பெறுகிறது. அவரது கவிதைகளில் குறைந்த சொற்களும் அவற்றில் மிதக்கும் அழகியலும் அற்புதமானது.

'என் இரவில் நான் இருக்கிறேன். கண்ணுறக்கத்தைக் காணவில்லை. என் அநாதைகள் கனவுகளுக்காய் அலைகின்றன. என் அநாதைகள் கனவுகள் அழுகின்றன.... எனப் பேசத்தொடங்கும் வெலிமடை ரபீக் கவிதைகளில் ஒருவித தனிமை, ஏக்கம், அலைவு மிதக்கிறது. 'சூரியோதயத்தின் பின்னும் இருண்டிற்று. என் சுந்தர ஞாயிறு நத்தையானேன். கண்களின் சூர்யனை கடல் விழுங்கிற்று. முகம் கழன்று நிலத்தில் வீழ்ந்து நொறுக்கிப் புதைந்திற்று.

ரபீக்கின் கவிதையை வாசிக்கும் போது நமது மனமும் முகமும் உணர்வில் புதைந்து போகிறது.

ரபீக்கின் கவிதைப் பிரதி முழுதும் ஒரு வகை உணர்வு விரவி நிற்கிறது. அவரது கவிதைகளைச் சேகரிக்கும் வாசக மனசில் மொழியும் உணர்வும் பிசைந்தப்பிய ஒருவித கவிதை ஓவியம் எஞ்சுகிறது. அல்லது மனசில் ஒட்டி நிற்கிறது. பின் குறிப்பில் மரீனா இல்யாஸ் ஷாபி சொல்வது போல் காலத்தின் எல்லாக் காயங்களையும் கவிதையாக்குபவர் கவிஞர் வெலிமடை ரபீக். மானுடநேயம் ததும்புவன அவரது கவிதைகள். தன் கண்ணீரைத் தானே துடைத்துக் கொண்டு எல்லோருக்கும் ஒரு புன்னகையைத் தர விரும்புபவரின் மானுட நேயத்தைப் போற்றுவோம்.

இனி வெளிவர இருக்கும் வெலிமடை ரபீக்கின் புல்லாங்குழல் பறவைகள் கவிதைகளில் சிறகெடுத்துப் பறக்கும். அல்லது இசையாகி மிதக்கும்.

மீன் வடிவுக்காரி

நீந்தும் அழகு
மெல்லிய நீல நீரில் சலனமெழுப்பும்
அதன் மூச்சு குமிழிகள்
கண்களில் ஒற்றியெடுக்கிறேன்
அழகு
இளமஞ்சள் வால் அசைவு லாவண்யம்
திசை
திரும்பி நெளிந்து
வளைந்து நீந்தும் இதத்தில்
ஒளிர்கிறது அதன் காலம்
தொட்டி சிறையென்று எண்ணியிரா
நீந்தலது
நான்
நான்கு சுவருக்குள்
மிதக்கிறேன் அலைகிறேன் பறக்கிறேன்
திசையெடுக்கிறேன்
தீய்ந்து போகிறேன்
என் நீல நிற அறையில்
நீந்தல் அழகென்று
யார் சொல்வார்

ஓவியன் கவிதை

மௌனத்தின் மானுடை

நேர் காண்பவள், அழகி. அழகி என்பதை விட அழகுபடுத்தப்பட்டிருக்கிறாள். முகப் பூச்சுகள் காயவில்லை. புன் முறுவலின்; சொற்களை இலாவகமாகக் கலக்கினாள். சொற்கள் வாயிலிருந்து மட்டும் வருவதில்லை. உடல் மொழிக்காரி அவள். கமெரா ஏ அவளைக் குளோசப்பில் பிடித்தது.

கையில் பேனா. எழுதுவதற்காக வல்ல. சுட்டிச் சொல்ல அவள் பெயர் கூட அழகு. தேன்மொழி போல.

வாக்கியங்களுக்கிடையில் அல்லது சொற்களுக்கிடையில் இடைவெளி விட்டபடி அடுக்கினாள் அல்லது ஏவினாள். அவளைப் பொறுத்தவரை சொல்லித்தந்த கேள்விகளை ஒப்பித்துவிட வேண்டியது மட்டும்தான் அவளது வேலை. ஆனாலும் அதனை அலங்கரித்து சொல்ல வேண்டும் என்று நினைப்பவர். மற்றப்படி துறை ஆர்வம் அல்லது மீயறிவு என்ப தொன்றும் கிடையாது.

ஆனால் நேர்முகத்தைச் சுற்றி எழுப்பப்படும் வினாச்சுவர் பலமானதுதான்.

ஒன்று கேட்டாள். ஒரேயொரு விடயம் தான் பதில். ஆனால் கேட்க எடுத்த நேரத்தில் கமெரா ஏ அவளையே திரையில் விழுத்திக் கொண்டிருந்தது. கமெரா பிக்கு நேரே நானிருந்தேன். நான்தான் நேர்காணலின் நாயகன். மையப் புள்ளி. கமெரா இரண்டு மூன்று கோணங்களில் என்னைத் திரையில் காட்டியது.

நான் இன்னும் பேசத் தொடங்கவில்லை. தண்ணீர் கிளாஸ், பூ வாஸ், மூன்று பனுவல்கள் மேசையில் இருந்தன. சொகுசு இருக்கையில் புதைந்திருத்தேன் அல்லது சிதைந்திருந்தேன்.

புன்முறுவலோடு என்னை அறிமுகம் செய்யத் தொடங்கினாள். அறிமுகத்துக்கு வெளியே என்னை விட்டிருந்தாள். என் பதில் நேரத்திலாவது எப்படியாவது என்னை உள்ளெடுத்திடலாமென நம்பினேன்.

பொன்மீரா...

கேள்வியை இப்படித்தான் தொடங்கினாள். தொடங்கினாள் என்ன. தொடங்க எத்தனித்தாள். அவள் பேசுவதென்ன என்பது அவளுக்கே புரியாதென திரைக்கு முன்னிருந்த கோடிப்பேரும் உணர்கின்றனர். எனக்கு எப்படிப் புரியுமென புதிரோடு இருக்கின்றனர்.

இது நேரலை. என் அபிமானமான பலரும் திரைக்கு முன் காத்திருக்கின்றனர். அவள் தேன்மொழி, ஒருவாறு என்னை அறிமுகப்படுத்தினாள்.

தொடரும்

முயலாடு முன்றில் 07

முயலோடு முயலாகித் துள்ளி விளையாடும் குழந்தையுலகு அழகானது. மென்மையானது. உணர்வு பொங்கி வழிவது.

குழந்தைகளின் ஊக்கல் குறித்து மக்டூகல் விபரிப்பார். அவற்றிலொன்று திரட்டூக்கம் சேகரிக்கும் ஆர்வம் சிறு மனதில் துள்ளிக் குதிக்கும் சிறுவர்களின் மனம் முயலாடு முன்றிலை உயிர்ப்பூட்டும்.

குழந்தைகள் அன்புள்ளம் கொண்டவர்கள். கருணை நெஞ்சம் பூண்டவர்கள். உயிர்களிடத்தில் அன்பு, இரக்கமிக்கவர்கள். அதனாற்தான் அவர்கள் உயிர்களை நெருங்குகிறார்கள், நேசிக்கிறார்கள்.

சிறுவர்கள் வண்ணத்துப்பூச்சியாகிப் பறப்பார்கள். சிறு குருவியாகிக் குதூகலிப்பார்கள். கிளியாகி இன் மொழி பேசுவார்கள். கோழிக் குஞ்சாகிக் கொக்.... கொக்..... இசைப்பார்கள். புறாவாகிப் பறப்பார்கள். பூனைக்குட்டியாகி மியாவ்..... மியாவ் ஆவார்கள். நாய்க்குட்டியுமாகி நன்றி வளர்ப்பார்கள். ஆட்டுக்குட்டியாகி துள்ளியோடுவார்கள். முயலுமாகி முயலுவார்கள்.

சிறுவர்களின் உலகு விந்தையானது. எந்தவொரு சிறாரும் உயிரினங்களோடு ஒன்றியிருப்பதைக் காணுகிறோம். அவற்றை வளர்ப்பதோடு தாமும் வளர்வார்கள். ஒருவகையில் திரட்டூக்கத்தின் விளைவு ஒழுங்குதான் சிறுவர்கள் பறவைகளோடும், விலங்குகளோடும் தம் சிறு பொழுதுகளையே பெரும் பொழுதாக்கிடுவர்.

முயலாடு முன்றிலில் முயலோடு துள்ளி விளையாடும் சிறுவனின் வதனத்தில் வழிந்தோடும் ஆனந்தத்திற்கு அளவில்லை.

அதனோடாகி அதுவுமாகி விடுவார்கள். கிளிக்கும் பழம் கொடுத்து உண்டு மகிழ்ந்து கதை பேசும் குழந்தை மனம் விசாலமானது.

அந்தக் கிளிக்கு காலில் அடிபட்டால் இவர்களே காலிழந்து போவார்கள்;. சிறகில் காயம் பட்டால் இவர்களே சிறகொடிந்து போய்விடுவார்கள்.

செல்லப்பிராணி வளர்க்கும் சிறுவரிடம் ஒரு தொகை அனுபவமும், கதைகளும் உண்டு. கனவும் கற்பனையுமுண்டு. அவற்றால் இழைக்கப்பட்டது முயலாடு முன்றிலெனும் குழந்தை மனம்.

அங்கம் 19

முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

யேல் பல்கலைக்கழக மாணவர்கள் அண்ணாவிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு அண்ணா அளித்த பதில்களையும் பார்ப்போம். தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைப்பதைப் பற்றி அம்மாணவர்கள் அறிந்து வைத்திருந்தனர். எனவே அவர்கள் அண்ணாவிடம் "காங்கிரஸ் உங்களை ஆட்சி பீடத்திலிருந்து அகற்ற முற்படுவதாக கூறுகிறார்களே! இது உண்மையா?" என்று கேட்டனர். அதற்கு அண்ணாவும் "இல்லை! நாங்கள் ஆட்சியில் இருப்பதைவிட ஆட்சியில் இல்லாமல் இருப்பதுதான் அவர்களுக்கு தலைவலி!" என்று பதிலளித்தார்.

பிறகு அடுத்த கேள்வியாக மாணவர்கள் "காங்கிரஸ் ஆட்சி ஏன் அகற்றப்பட்டது?" என்று கேட்டனர். உடனே அண்ணா "நீண்ட நாட்களாக பதவியில் இருந்து விட்டதால் அதன் ஆட்சியை மக்கள் அகற்றி விட்டார்கள்!" என்று பதிலளித்தார்.

அடுத்து மாணவர்கள் "உங்கள் மாநிலத்தில் மாணவர்கள் போராட்டம் அதிகரித்து வருகிறதே?" என்று கேட்டனர். உடனே அண்ணா "எங்கள் நாட்டில் மட்டுமா மாணவர் போராட்டம் நடைபெறுகின்றது. நேற்று உங்கள் பத்திரிகை ஒன்றை படித்து கொண்டிருந்தேன். கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்கள் நீக்ரோவுக்கு சம உரிமை தரவேண்டும் என்று கூறி கல்லூரியில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கூடவே கல்லூரி தலைவரை வெளியே வரா தபடி அறையில் வைத்தும் அடைத்திருக்கிறார்கள். மாணவர்கள் போராட்டம் எங்கும்தான் உள்ளது" என்று பதிலளித்தார். மாணவர்கள் திடீரென்று அண்ணாவிடம் "வட் இஸ் யூனியன் " என்று கேட்டனர். அதற்கு அண்ணா "ஒனியன் இஸ் யூனியன் " என்று பதிலளித்தார். அதாவது யூனியன் என்பது உரிக்க உரிக்க ஒன்றுமில்லாத வெங்காயம் போன்றது என்னும் கருத்தில் அவர் பதிலளித்தார். அண்ணாவின் அறிவாற்றல் பல்வேறு நாட்டைச் சேர்ந்த யேல் பல்கலைக்கழக மாணவர்களை மட்டுமின்றி, பேராசிரியர்களையும் வியக்கச் செய்தது. யேல் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு அண்ணா புறப்படத் தயாரானார். அப்போது வெளியுறவு அதிகாரி ஒருவர் அண்ணாவிடம் ஒரு பொது அறிவு புத்தகம் ஒன்றை அளித்து "பொது அறிவு பற்றிய பல செய்திகள் இப்புத்தகத்தில் உள்ளன. இதனை படித்தால் உலகின் பல்வேறு செய்திகளை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்" என்று கூறினார். புத்தகத்தை வாங்கி பார்த்த அண்ணா இந்த புத்தகத்தை நான் ஏற்கெனவே படித்துவிட்டேன் என்று கூற அந்த அதிகாரி வியப்புற்றார். அண்ணா உலகின் அனைத்து வரலாறு, அறிவியல், பொருளாதாரம் குறித்த நூல்களையும் கற்றவர் என்பதை இதன் மூலம் நாம் அறிந்து கொள்ள முடியும். அண்ணா அமெரிக்க நாட்டில் இருந்த போது பல்வேறு பத்திரிகைகளில் அவரைப் பற்றிய செய்திகளும் கட்டுரைகளும் வெளியாகின. அண்ணாவின் பேட்டி ஒன்றும் வானொலியிலும் ஒலிபரப்பானது. அண்ணாவின் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக அமைந்தது.

அண்ணா தம்பிமார்களுக்கு பத்து கட்டளைகளை இட்டார். 1. ஊதியம் பெறா ஓய்வு நேரப்பணி ஆற்றல். 2. தன்னலங்கருதாத பொதுப்பணி பேணல். 3. தன் மதிப்பையும் தன்னம்பிக்கையையும் வளர்த்தல். 4. உழவும் தொழிலும் வளர உறுதுணையாய் நிற்றல் 5. கல்வி அறிவும் பொது அறிவும் வளர வகை செய்தல். 6. அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல். 7. அன்பு வழியாக சமூகக்கேடுகளை களைதல். 8. திக்கற்றவர்களுக்கு துணை புரிதல். 9. தீண்டாமை கொடுமைகளை அகற்றுதல். 10. பொதுநலம் காண துப்புரவு பணி மேற்கொள்ளுதல்.ஆகியனஅறிஞர் அண்ணாராணி அம்மாள் தம் பதியினருக்கு குழந்தைகள் இல்லை. எனவே அண்ணா தனது ஒன்றுவிட்ட சகோதரியின் மகளான நாகரத்தினத்தின் பேரக்குழந்தைகளான பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு ஆகிய பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்தார்.

(தொடரும்)

கலாபூஷணம்
பரீட் இக்பால்...✍
யாழ்ப்பாணம்

உடல்மொழியில் உணர்வுகளை கடத்திய மகா கலைஞன்

வசன உச்சரிப்பு ஒரு நடிகருக்கு மிக அவசியம். முக பாவனைகள் மிக மிக அவசியம். எல்லாவற்றுக்கும் மேலாக பாடி லாங்வேஜ் எனும் உடல்மொழி ரொம்பவே அவசியம். வசனம் பேசி, முகத்தில் உணர்ச்சியைக் காட்டி, உடல்மொழியிலும் அந்த உணர்வுகளை நமக்குக் கடத்துகிற நடிகர்கள்... கலைஞர்கள். மகா கலைஞர்கள். அப்படியான உன்னதக் கலைஞன்... நாகேஷ். ஒல்லியான தேகம்தான். வேலை பார்த்துக்கொண்டே நாடகம், நாடகத்தில் நடித்தபடியே சினிமாவில் வாய்ப்பு தேடுதல்... என தொடர்ந்த முயற்சிகளும் முயற்சிகளின் போது பட்ட அவமானங்களும் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் நாடகத்தில் அங்கே ஒன்று இங்கே ஒன்று என வாய்ப்புகள் வந்தன.

கவிஞர் வாலியும் நாகேஷும் நண்பர்கள். ஓர் அறையில் இருவரும் தங்கியிருந்தார்கள். 'டேய் ரங்கராஜா. உன் கைக்கு இந்த வாட்ச் நல்லா இல்லடா. கழட்டிரு' என்பாராம் நாகேஷ். அவரும் கழற்றித் தருவார். பிறகு அந்த வாட்ச் அடகுக்கடைக்குச் சென்று பணமாகி, ஹோட்டலுக்கும் சினிமாவுக்குமாகப் பயன்படுத்தப்படும். நாகேஷ் பாக்கெட்டில் காசு இருந்தால், அது வாலிக்கானது. வாலியிடம் இருந்தால் அது நாகேஷின் பணம்.

சினிமா தேவதை, நாகேஷை இருகரம் கொண்டு வரவேற்றாள். படங்கள் வரத்தொடங்கின. நாகேஷின் நடிப்புத் திறனைக் கண்டு வியந்த கே.பாலசந்தர், தன் முதல் படத்தை இயக்கினார். நாடகங்களில் வாய்ப்பு தந்த பாலசந்தர், திரைத்துறையிலும் பயன்படுத்தினார். தன் முதல்படமான 'நீர்க்குமிழி' படத்தில் நாகேஷை நடிக்கவைத்தார். நாகேஷ் தான் நாயகன். 'நீர்க்குமிழி' படத்தில் நாகேஷின் நடிப்பைக் கண்டு திரையுலகமே வியந்து மிரண்டது. இதைத் தொடர்ந்து பாலசந்தர் தன் படங்களில், விதம்விதமான பாத்திரங்களைக் கொடுத்தார் நாகேஷுக்கு. அது சின்ன கேரக்டரோ... பெரிய கேரக்டரோ... ஆனால் அங்கே அசத்தலான நடிப்பில் நம்மையெல்லாம் அசரடித்திருப்பார் நாகேஷ்.

எம்ஜிஆருக்கு நண்பன், சிவாஜிக்கு நண்பன், ஜெமினிக்கு நண்பன், முத்துராமனுக்கு நண்பன், பிறகு ஜெய்சங்கருக்கு நண்பன் என்றெல்லாம் நடித்து வந்த நாகேஷ், 'தில்லுமுல்லு' படத்தில் ரஜினிக்கு நண்பனாகவும் 'பாமா ருக்மணி' படத்தில் பாக்யராஜுக்கு நண்பனாகவும் கூட நடித்திருப்பார்.

அந்தக் காலத்தில், ஏவிஎம் படமாக இருந்தாலும் சரி, தேவர் பிலிம்ஸ் கம்பெனியாக இருந்தாலும் சரி, பத்மினி பிக்சர்ஸ் பி.ஆர்.பந்துலுவாக இருந்தாலும் சரி... ஏபி.நாகராஜனாக இருந்தாலும் சரி... முதலில் நாகேஷ் கால்ஷீட்டை வாங்கிவிடுவார்கள். பிறகுதான் நடிகர்களுக்கு கதை சொல்லுவார்கள். 'நாகேஷ் கால்ஷீட்டை வாங்கிட்டீங்களா. அப்ப படத்தோட வெற்றிக்கு நாப்பது சதவிகிதம் கியாரண்டி' என்று எம்ஜிஆரே சொல்லிப் புகழ்ந்த சம்பவங்கள், வேறு எந்த நகைச்சுவை நடிகருக்கும் இல்லாத புகழாரம். 'எங்க வீட்டு பிள்ளை' படம் முழுக்க, ஒவ்வொரு முறை பேசும்போதும், வார்த்தையை மாற்றி மாற்றிப் பேசி காமெடி பண்ணுவார். 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் வைத்தி எனும் கேரக்டரும் 'திருவிளையாடல்' படத்தின் தருமி கதாபாத்திரமும் சாதாரணன் மிகப்பெரிய நடிகனாகிற 'சர்வர் சுந்தரம்' படமும் சினிமாப்

படமெடுக்கிற ஓஹோ புரொடக்ஷன்ஸ் 'காதலிக்க நேரமில்லை' செல்லப்பாவும் கற்பனையில் இருந்து நிஜமாகவே உருவெடுத்து உலவவிட்டதில் நாகேஷின் நடிப்புக்கும் உடல்மொழிக்கும் பெரும் பங்கு இருக்கிறது. 'பாமா விஜயம்' 'அனுபவி ராஜா அனுபவி' என நாகேஷ் முத்திரை பதிக்காத படங்களே இல்லை. மாடிப்படி மாது (எதிர்நீச்சல்)வை எவராலும் மறக்கவே முடியாது. 'வேட்டைக்காரன்', 'பாமா விஜயம்', 'கலாட்டா கல்யாணம்', 'நூற்றுக்கு நூறு', 'ஊட்டி வரை உறவு' என நடித்த படங்களைப் பட்டியலிடுவது அசாதாரணம். ஒருகட்டத்துக்குப் பிறகு, மீண்டும் நடிப்பில் பிஸியானார் நாகேஷ். நகைச்சுவை நடிகராக, குணச்சித்திர நடிகராக நடித்தவர் இந்த முறை வில்லனாக நடித்தார். அதிலும் வில்லன்களுக்கெல்லாம் பெரிய வில்லன் இவர் தான். அதுதான் 'அபூர்வ சகோதரர்கள்'. இதைத் தொடர்ந்து, 'இந்திரன் சந்திரன்', 'மைக்கேல் மதன காமராஜன்', 'நம்மவர்', 'அவ்வை சண்முகி', 'பஞ்ச தந்திரம்' என அடுத்த ரவுண்டிலும் சிக்ஸர் சிக்ஸராக அடித்து வெளுத்து வாங்கினார் நாகேஷ். அதிலும் 'நம்மவர்' படத்தில் இவர் நடித்ததெல்லாம் வேற லெவல். மகளைப் பறிகொடுத்து அவர் புலம்புகிற அந்தப் பத்துநிமிடங்களும் நம்மை உலுக்கிப் போட்டுவிடுவார். 'பீம்பாய் பீம்பாய்' அதுவொரு ரகம் காமெடி. 'மேகின்னா ஸ்டெப்னியா?' என்று கேட்கும் 'பஞ்ச தந்திரம்' காமெடி வேறு வகை சரவெடி. 'மகளிர் மட்டும்' படத்தில் பிணமாக நடித்ததைப் பார்த்து, பிணமே எழுந்து வாய்விட்டுச் சிரிக்கும். எந்தக் கதாபாத்திரமாக இருந்தாலும் அதில் தன் முத்திரையைப் பதித்துவிடுகிற, தனி முத்திரை பதித்துவிடுகிற மகா கலைஞன், நகைச்சுவை நாயகன் நாகேஷ்... சாகாவரம் பெற்ற கலைஞன். பூமியும் வானமும் உள்ளவரை, பூமிக்கும் வானுக்குமாக விஸ்வரூபமெடுத்து நின்றிருப்பார் நாகேஷ். மக்கள் மனங்களின் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பார். அடைமொழி கூடிய சினிமா உலகம். இரண்டு படங்கள் நடித்தாலே பெயருக்கு முன்னே பட்டம் வைத்துக் கொள்கிற உலகில், நாகேஷுக்கு எந்த அடைமொழியும் இல்லை என்பது ஆச்சரியம்தான். ஆனால் என்ன... நகைச்சுவையின் இன்னொரு பெயர்... நாகேஷ் என்கிறது சினிமா அகராதி.

1933ம் ஆண்டு பிறந்த நாகேஷுக்கு ஜனவரி 31ம் திகதி நினைவுநாள். 2009ம் ஆண்டு மறைந்துவிட்டாலும் மறைந்து 14 ஆண்டுகளாகிவிட்டாலும் நாகேஷ் எனும் கலைஞனுக்கு காலநிர்ணயமெல்லாம் இல்லை. காலங்களைக் கடந்தும் நாகேஷின் புகழ் இருந்து கொண்டே இருக்கும்.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...✍
கம்பளை

"அஹச மீடியா" நிறுவனத்தின் விஷ்வ கலா அபிமானி 2023 விருது வழங்கும் நிகழ்வு

''அஹச மீடியா" நிறுவனத்தின் விஷ்வ கலா அபிமானி 2023 விருது வழங்கும் நிகழ்வு (31) மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அஹச மீடியா நிறுவத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

படங்கள்: தெஹிவளை கல்கிசை தினகரன் நிருபர் அஷ்ரப் ஏ சமத்

திரு. திருமதி கந்தசாமியின் "தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள்" நூல் வெளியீடு

கொழும்பு தமிழ்ச் சங்க பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி மற்றும் திருமதி கந்தசாமி ஆகியோர் இணைந்து எழுதி வெளியிட்ட "தமிழர் செவ்வியல் இசைப்பா வடிவங்கள்" என்ற தமிழிசை பாடல் நூலின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ் சங்கத்தில் நடைபெற்ற போது முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். படங்கள்: தெஹிவளை கல்கிசை தினகரன் நிருபர் அஷ்ரப் ஏ சமத்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.